மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

**Directorate of Distance and Continuing Education**

# அயலக தமிழ் இலக்கியம்

## முதுகலை முதலாமாண்டு முதற்பருவம்

## விருப்பப்பாடம் II

முனைவர் கோ. ஜெஸிறோஸ்,
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தெ.தி. இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்.

# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## திருநெல்வேலி

### தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

# அயலக தமிழ் இலக்கியம்


| பாட எண். | பாடங்கள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | அலகு -1<br>உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியம் | 1 |
| 2 | அலகு -2<br>இலங்கையில் தமிழ் இலக்கியம் | 16 |
| 3 | அலகு - 3<br>மலேசியாவில் தமிழ் இலக்கியம் | 97 |
| 4 | அலகு - 4<br>சிங்கப்பூரில் தமிழிலக்கியம் | 118 |
| 5 | அலகு - 5<br>புலம்பெயர்வும் இலக்கியங்களும் | 141 |
| | வினாத்தாள் மாதிரி | 157 |

# அயலக தமிழ் இலக்கியம்

## கற்றல் நோக்கங்கள்

- அயல்நாடுகளில் தமிழர்கள் - இலங்கையில் தொல்குடியாக வாழும் நிலை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் முதலியோராகப் புலம்பெயர்ந்து இலங்கை மலையகம், மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் வாழ்தல் - போர்ச் சூழலால் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழ்தல் - கல்வி வேலைவாய்ப்பு நோக்கில் அயல்நாடுகளில் வாழ்தல் - அயல்நாடுகளில் தமிழ்க்கல்வி, தமிழ் ஆய்வு தமிழ் இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும் - குறித்து அறிதல்.
- உலகளாவிய நிலையில் இன்று தமிழிலக்கியம் பன்முகப் பரிமாணங்களோடு படைக்கப்பட்டு வரும் நிலையினை அறிதல்.
- தமிழர்கள் தொல்குடியாக ஈழத்தில் விளங்கிய வரலாற்றையும் ஈழத்தமிழிலக்கியத்தின் வரலாற்றையும் வளத்தையம் வகைகளையும் தனித்தன்மைகளையும் அறிதல்.
- தமிழர்கள் மலேசியாவிற்கும் சிங்கப்பூருக்கும் புலம்பெயர்ந்த வரலாற்றையும் மலேசிய, சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தையும் குறித்து அறிதல்.
- உலகளாவிய நிலையில் தமிழர்கள் புலம்பெயர்ந்த வரலாறு - தொழிலாளர்களாகப் புலம்பெயர்ந்தமை - போரால் புலம்பெயர்ந்தமை - புலம்பெயர்ந்த தமிழர்கள் படைத்த இலக்கியங்கள் - வகைகள், வளம் - வாழ்க்கைத் துயரும் நெருக்கடிகளும் புதிய நிலச்சூழல்களும் இலக்கியப் பதிவாதல் - இலக்கியத் தகுதிப்பாடு முதலியவற்றைப் பயலல்.

## கற்றல் பயன்கள்

- உலகளாவிய நிலையில் தொல்குடி நிலையிலும் புலம்பெயர்ந்த நிலையிலும் தமிழர்கள் விளங்குதலை அறிதல்.
- ஈழத் தமிழ் இலக்கியம், மலையக இலக்கியம் ஆகியவற்றின் வரலாற்றையும் வளர்ச்சியையும் அறிதல்; இவ்விலக்கியங்களின் தனித்தன்மைகளையும் இலக்கியத்தகைமையையும் சமூகப் பிரதிபலிப்புகளையும் அறிதல்; வகை மாதிரியாக இலக்கியங்கள் பயிலல்.
- மலேசியா, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியங்கள் குறித்து அறிதல்; வகை மாதிரியாக இலக்கியங்கள் பயிலல்.

❖ புலம்பெயர்வும் இலக்கியங்களும் குறித்து ஆழமாக அறிதல்; ஈழத் தமிழர் புலம்பெயர்வின் விளைவாகப் படைக்கப்பட்டுள்ள இலக்கியங்களைக் குறித்து உணர்தல்.

❖ அயல்நாடுகளில் தோற்றம் பெற்றுள்ள தமிழ் இலக்கிய நலன்கள், புலம்பெயர்வின் வலி, வலிக்கிடையிலும் இல்ககியத்தில் தமிழர்கள் புரிந்துள்ள தலைசிறந்த இலக்கிய ஆக்கங்கள் முதலியன குறித்து ஆழமாக அறிதல்.

**அலகு -1**

உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியம்

**அலகு -2**

இலங்கையில் தமிழ் இலக்கியம்

**அலகு - 3**

மலேசியாவில் தமிழ் இலக்கியம்

**அலகு - 4**

சிங்கப்பூரில் தமிழிலக்கியம்

**அலகு - 5**

புலம்பெயர்வும் இலக்கியங்களும்

**பாடநூல்கள்**

❖ தாயகம் கடந்த தமிழ்

❖ இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்

❖ கவிதை : ஈழத்துக் கவிதைக் கனிகள், தொகுப்பு: சிலோன் விஜயேந்திரன்

❖ அயலகத் தமிழ் இலக்கியம் - தொகுப்பு : சா. கந்தசாமி

❖ சிங்கப்பூர்ப் பொன்விழாச் சிறுகதைகள்

❖ புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பனுவல்களும் மதிப்பீடுகளும்- பா.ஆனந்தகுமார்.

# அலகு -1

## உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியம்

### கயல் பருகிய கடல்

**- மாலன்**

இன்று தமிழிலக்கியம் என்பது தமிழ்நாட்டில் எழுதப்படும் இலக்கியம் மட்டுமல்ல. ‘வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்’ என்று பனம்பாரனார் வகுத்த எல்லைகளை என்றோ தமிழ் தாண்டிவிட்டது. இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு மட்டுமே தெளிவாக ஐநூறு ஆண்டுகால வரலாறு இருக்கிறது. பாரம்பரியமாகத் தமிழ் பேசப்படும் ஆசிய நாடுகளான இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் மட்டுமல்ல, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, நார்வே போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் கனடா, அமெரிக்கா ஆகிய வட அமெரிக்க நாடுகளிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் இன்று தமிழ்ப் படைப்புகள் வெளியாகின்றன. ஆங்கில இலக்கியம், அமெரிக்க இலக்கியம், லத்தீன் - அமெரிக்க இலக்கியம், ஆஸ்திரேலிய இலக்கியம், இந்திய இலக்கியம், மூன்றாம் உலக நாடுகளின் இலக்கியங்கள், கறுப்பின இலக்கியம் எனப் பலவாய் ஆங்கில இலக்கியம் கிளைத்து நிற்பதைப்போல இன்று தமிழ் இலக்கியம் உலகின் பல திசைகளிலிருந்தும் செழுமைப்படுத்தப்படுகிறது. கால தேச எல்லையைக் கடந்த மின்வெளியிலிருந்தும் அது கொடைகள் பெறுகிறது. தேச எல்லையைக் கடந்ததைப் போலவே அது இன்று பால் பேதத்தையும் கடந்து நிற்கிறது.

காலனி ஆதிக்கத்தின் காரணமாகக் கிடைத்த அரசியல் அதிகாரத்தையும், பின் அது சார்ந்த பொருளியல் வளர்ச்சியால் கிடைத்த மேலாண்மையையும் கொண்டு ஆங்கிலம் உலகம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. ஆங்கில மொழியின் பரவலுக்கு ஆங்கிலேயர்களின் அரசியலும், அமெரிக்கர்களின் பொருளாதாரமும் காரணிகளாக அமைந்தன. ஆனால் தமிழர்கள் அரசியல் அதிகாரம் பெறாத நிலையிலும், பொருளாதார வெற்றிகளைப் பெரிதாக ஈட்டாத நிலையிலும் தமிழ் உலகெங்கும் பரவிக் கிடக்கிறது.

தமிழர்கள் தாங்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் தங்கள் மொழியையும் இலக்கியத்தையும் எடுத்துச் சென்றார்கள். அதற்குக் காரணம் மொழி தமிழர்களுக்கு வெறும் தகவல் தொடர்புக்கருவி மட்டுமல்ல, அது அவர்களது கலாசார அடையாளம்.

மொழி சார்ந்த அடையாளமும், உலகு தழுவிய பார்வையும், ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்பதற்குச் சங்கத்தமிழ் இலக்கியங்கள் சான்று. சங்கத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பல சிந்தனைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில், உலகில் ஒரு பகுதியில் ஒரு குறிப்பிட்ட மொழி பேசி வாழ்ந்த சமூகத்திற்கு மாத்திரம் பொருத்தமுடையனவாக நின்றுவிடவில்லை. எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சமூகத்திற்கும், எல்லா மொழியினருக்கும் பொருந்துவனவாக இருப்பது தமிழ்மொழி தரும் ஆச்சரியங்களில் ஒன்று, 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று சொன்ன கணியன் பூங்குன்றன், 'செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பம் எனினே தப்புந பலவே' என்று எச்சரித்த மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரன், 'கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே' என்று சுட்டிக் காட்டிய ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், 'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான் எல்லோரும் உவப்பது' என்று புத்தி சொன்ன நரிவெரூ உத்தலையார், 'யானை வேட்டுவன் யானையும் பெறுமே, குறும் பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே' என்று யதார்த்தம் பேசிய கோப்பெருஞ்சோழன், 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்று வியந்து அதற்குக் காரணமான மனிதர்களை அடையாளம் காட்டிய கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்று பலர் என்றும் பொருந்தும் வாழ்வியல் உண்மைகளைச் சொல்லிக் கொண்டிருப்பதைச் சங்க இலக்கியத்தில் படிக்கிறோம்.

திருக்குறளில் காணப்படும் அறம் பற்றிய கருத்துக்கள், அரசியல் நிர்வாகம் பற்றிய யோசனைகள், மனிதர்களின் பண்புகள் குறித்த சிந்தனைகள் இன்றும் உலகு முழுக்கப் பொருந்தத்தக்க பொதுத்தன்மை கொண்டிருப்பது (Universality) மற்றுமொரு சான்று.

உலகப் பயணம் செல்லும் பயணிபோல் ஆவலும் உற்சாகமும், குறுகுறுப்பும் ததும்ப இந்தக் கேள்விகளுக்கு விடை காணப் புறப்படுகிறேன். கடற்கரையில் சிப்பி பொறுக்கும் குழந்தை போல அகப்படுவதையெல்லாம் அள்ளிச் சேகரிக்கிறேன். என் கையில் வைரத்தில் பிழை பார்க்கும் பூதக் கண்ணாடி இல்லை. குங்குமப்பூவை எடை போடும் நுட்பம்கொண்ட தராசு

இல்லை. ஆனால் மனதில் மனிதர்கள் மீது பிரியமும், மொழியின் மீது நம்பிக்கையும் நிறைந்து கிடக்கிறது. அந்த வெளிச்சத்தில் எனக்குக் கிடைத்ததை ஆராய முற்படுகிறேன்.

இன்றையத் தமிழ் இலக்கியம் உலகு தழுவிய பார்வை கொண்டிருக்கிறதா? குறைந்தபட்சம், உலகெங்கும் வாழ்கிற தமிழ் சமூகத்தின் பொதுப் பிரச்சினைகளைக் கருக் கொண்டிருக்கிறதா? என்று தேடப் புகுந்தபோது நினைவிற்கு வந்தது 'தேடல்' என்ற அந்தக் கதை. அது எழுதப்பட்டு 14 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதை எழுதிய நா.கோவிந்தசாமியும் நெடுநல் உளனொருவன் என்னும் வாக்கிற்கேற்ப இன்றில்லை, ஆனால் அந்தக் கதை பேசும் பிரச்சினைகள் இன்றும் உயிர்த்திருக்கின்றன. அப்படி என்ன சொல்கிறது அந்தக் கதை?

'தனி மனித வழிபாடு மந்தைக் கூட்டத்தை உருவாக்குமே தவிர சிந்தனைவாதிகளை உருவாக்காது.'

தமிழ்நாடு, இலங்கை இவற்றின் அரசியலை அணுகிப் பார்த்தால், அவை இந்தக் கருத்தை ஆமோதித்துத் தலை அசைக்கும். துன்பங்கள் எல்லாம் நொடிப் பொழுதில் ஒரு தனிமனிதனால் தீர்ந்து போவதாகக் காலங்காலமாகத் தமிழ் சினிமா காட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறது. அறிவுலகம் என்று நம்பப்படும் எழுத்துலகிலும் வீர வணக்கத்திற்குக் குறைவில்லை. நவீன எழுத்துலகம் ஏற்படுத்தித் தந்திருக்கும் மடங்களும், பீடாதிபதிகளும் ஏராளம்.

'தனிமனித வழிபாட்டுச் சிந்தனையிலிருந்து விடுபட்டு ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் ஒரு பக்குவத்தை' தமிழ் சமூகம் அடையவில்லை என்பது உண்மை. சிங்கப்பூர் சூழல் என்பதை மறந்துவிட்டுப் படித்தால், அந்தக் கதை உலகெங்கும் வாழுகிற தமிழர்களுக்கு ஏதோ ஒருவகையில் பொருந்துகிற விஷயத்தை முன்வைக்கிறது.

சிங்கப்பூரின் இலக்கிய வரலாற்றின் நெடுகிலும் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைக் கதைகளாக வடித்தெடுக்க நடந்த முயற்சிகள் நிறையவே காணக் கிடக்கின்றன. சிங்கப்பூர் தமிழிலக்கியத்தின் பொற்காலமாகிய ஐம்பதுகளில் துவங்கி இன்றுவரை வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கதையாகப் பதிவு செய்யும் கதைகள் அநேகம். அந்தச் சம்பவங்களை வெறும் சம்பவங்களாகப் பார்ப்பதோடு நின்றுவிடாமல் அதன்பின் உள்ள சமூக ஓட்டங்களையும் சிந்தித்து, அந்த சிந்தனைகளை இலக்கியப் புனைவில் ஊற்றித் தந்த இராம.கண்ணப்பன், நா.கோவிந்தசாமி, மா.இளங்கண்ணன், புதுமைதாசன்

போன்ற நல்ல படைப்பாளிகளை சிங்கப்பூர் எழுத்துலகம் தமிழுக்குத் தந்திருக்கிறது. இவர்கள் பெரும்பாலும் சிங்கப்பூர் வாழ் தமிழர்களின் பிரச்சினைகளை, வாழ்க்கை அனுபவங்களை எழுதினார்கள். இராம. கண்ணப்பனின் பீடம் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'வாழ்வு' என்ற கதை சிங்கப்பூரில் தமிழ் பயிற்றுவிப்பதில் உள்ள சிரமங்களைச் சொல்லி அதற்கான தீர்வுகளைச் சிந்திக்கிறது. கோவிந்தசாமியின் கேள்வி, கோவில்களுக்கு ஏராளமான பணம் செலவழிக்கத் தயாராக இருக்கும் சிங்கப்பூர் தமிழர்கள் ஏன் கல்விக்குச் செலவழிக்க முன்வர மாட்டேன் என்கிறார்கள் என்று ஆராய்கிறது. இவை சிங்கப்பூர் மண்ணிற்கே உரிய பிரச்சினைகள். இவை நிச்சயம் எழுதப்பட வேண்டிய, விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள். அவற்றைப் பதிவு செய்ய வந்த எழுத்தாளர்கள் நன்றியுடன் நினைக்கப்படத்தக்கவர்கள்.

மலேசிய மண்ணில் எழுதப்படும் தமிழ் இலக்கியம் தனக்கென்று ஒரு போக்கை உருவாக்கிக் கொண்டுவிட்டது. 1930களில் 'பாரத மித்ரன்', 'திராவிட கேசரி' போன்ற மலேசியப் பத்திரிகைகள், 'ஆனந்த விகடன்', 'மணிக்கொடி', 'கலைமகள்' போன்ற தமிழகப் பத்திரிகைகளில் பிரசுரமான கதைகளை எடுத்து மறுபிரசுரம் செய்து வந்தன. பின்னர் இரண்டாம் உலகப் போரின்போது, 1942ல் சிங்கப்பூரும் மலேயாவும் ஜப்பானியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தபோது, அங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகள் யாவும் மூடப்பட்டன. சிங்கப்பூரில் நேதாஜி அமைத்த சுதந்திர இந்திய அரசின் ஆதரவில் வெளியான, 'சுதந்திர இந்தியா', 'ஜெயமணி', 'சந்திரோதயம்', 'யுவ பாரதம்' ஆகிய இதழ்கள் முழுக்க முழுக்க இந்திய விடுதலையை முதன்மைப்படுத்தும் கதைகளையும் கவிதைகளையும், வெளியிட்டு வந்தன. இந்திய விடுதலைக்காகத் தமிழ் மக்கள் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த போதிலும் அவற்றைத் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் எழுத முன்வராத சூழ்நிலையில் மலேயாவில் இருந்த எழுத்தாளர்கள் அந்தப் போராட்டங்கள் குறித்து எழுதியதை நன்றியுடன் நினைத்துப் பார்க்க தமிழ்நாட்டு எழுத்துலகம் கடமைப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட பெரும்பாலான எழுத்துக்கள் (ந.பழனிவேலு, திருமதி. ராஜாம்பாள் போன்ற ஓரிருவர் விதி விலக்கு) - தமிழ்நாட்டை மனதில் கொண்டு எழுதப்பட்டனவாகவே இருந்தன. அந்தக் காலகட்டத்தில், 'தமிழ் நேசன்' ஆசிரியர் திரு. ஆதி.நாகப்பன் எழுதியதைப் போல அங்கு, 'தமிழ் எழுத்தாளர்களே இல்லை'. அந்தத் தலையங்கத்தைப் படித்துச் சினம் கொண்ட இரண்டு நாராயணன்களால்

(சுப.நாராயணன், பைரோஜி நாராயணன்) துவக்கப்பட்ட கதை வகுப்பு காரணமாகவும், 'தமிழ் நேசன்' ஆசிரியராகப் பணியாற்றிய கு.அழகிரிசாமியின் இலக்கிய வட்டம் காரணமாகவும் 1950களில் ஒரு பொற்காலத்திற்கு விதையூன்றப்பட்டது. இன்று தமிழ் இலக்கியம் அங்கு தனக்கென ஓர் தனிப்பாணியில் வேர் கொண்டு நிற்கிறது.

மலேசியாவில் தமிழர் சமுதாயத்தை மையமாக வைத்து எழுதும் போக்கு முதல் தலைமுறை எழுத்தாளரான மா. இராமையா காலத்திலேயே மாறத் துவங்கி விட்டது. பறிபோட்டு மீன் பிடித்து வாழும் மாலயக்காரர் ஒருவரைப் பற்றிக் கூட அவர் எழுதுகிறார். தோட்டத் துண்டாடல் பிரச்சினையை அடிப்படையாக வைத்து முரசு நெடுமாறன், 'துண்டாடல் கொடுமை' என்றொரு கதை எழுதினார். தோட்டப்புறத்தில் ஏழையாகப் பிறந்த குணசேகரன் டத்தோவாகத் திரும்பும் கனவை, 'வானத்து வேலிகளில்' என்ற கதை வழியாக எழுதினார் ரெ.கார்த்திகேசு. ஆனால் தோட்டப்புறத் தமிழர்கள் கல்வி பயிலும் போது ஏற்பட்ட துன்பங்களை எதிர்கொள்ளும் யதார்த்தத்தை, 'கண்ணன் ரிமூவ் வகுப்பில் படிக்கிறான்' என்ற கதையில் சி.வடிவேலு எழுதுகிறார். இது 1974ல் எழதப்பட்ட கதை. எழுபதுகளுக்கு முன்னதாகவே இந்தியாவை உதறிவிட்டு மலேசிய எழுத்தாளர்கள் தங்கள் பிரச்சினைகளை எழுதத் துவங்கி விட்டார்கள்.

ஆனால் அவர்களால் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் செழுமைப்படுத்திய வடிவங்களை எளிதில் உதற முடியவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வைப் பற்றி எழுதும்போது எம்.ஏ.இளஞ்செல்வன், ஜெயகாந்தனைப் போல அந்த மக்களின் பேச்சு வழக்கை அற்புதமாகக் கையாள்கிறார். சில ஆண்டுகளுக்கு முன் மலேசிய நண்பனில், சை.பீர் முகமது எழுதிய சர்ச்சைக்குரிய நாவலான, 'பெண்குதிரை'யில், நா.பார்த்தசாரதியின் பாணி பளிச்சிடுகிறது.

'தனி மனித உணர்சிகளையே பெரிதுபடுத்தி எழுதும் ஜெயகாந்தனை விட சமுதாய நடவடிக்கைகளையே தன் கதைகளுக்குக் கருவாகக் கொள்ளும் பார்த்தசாரதிகளே நமக்கு நல்ல வழிகாட்டிகளாக இருக்க முடியும் என எனக்குத் தோன்றுகிறது' என்று ஓரிடத்தில் எழுதுகிறார் ரெ.கார்த்திகேசு. ஆனால் இப்போதெல்லாம், அவை வடிவத்தில் கூட இந்தியக் கதைகளைப் பின்பற்றுவதில்லை. இதற்கு வீ.செல்வராஜ் எழுதியுள்ள, 'பிரதமர் ஆடினால்...' ஒரு நல்ல உதாரணம். அரசியல் விமர்சனத்தை உள்ளடக்கமாகக் கொண்டு கதைகள் எழுதப்படுவது மலேசியாவில் இருந்துவரும் ஒரு மரபுதான்.

மலேசிய இந்தியர்கள் தேர்தல் முயற்சிகளில் ஈடுபட்டதை விமர்சித்து மா.இராமையா 'முடிவு' என்றவொரு கதை எழுதினார். குடியுரிமை கிடைக்காத தமிழர் ஒருவர் அங்குள்ள அரசியல் கட்சியின் அசிரத்தையைக் குறிப்பிட்டு வருந்துவதாக இளஞ்செல்வன் ஒரு கதை எழுதியிருக்கிறார். எனவே கதைகளின் மூலம் அரசியல் விமர்சனம் என்பது மலேசியாவுக்குப் புதிது அல்ல.

ஆனால் செல்வராஜின் கதை இவற்றிலிருந்து சற்று வேறுபட்டது. கதையில் கோபக்கனல் கிடையாது. புலம்பல் கிடையாது. சுயபச்சாதாபம் கிடையாது. நுட்பமான அங்கதம் இருக்கிறது. நேரடியான விமர்சனம் எதுவும் கிடையாது. ஆனால் ஆங்கிலத்தில் between the lines என்று சொல்வார்களே, அதைப்போல சொல்லாத சொற்கள் மூலம் கதை சொல்லப்படுகிறது. வாசகன் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து எழுதப்பட்டுள்ள இந்தக் கதையைத் தமிழ்நாட்டில் உள்ள ஒருவருடன் விவாதித்தபோது, இப்படியெல்லாம் கூட அங்குக் கதைகள் வருகிறதா? என்று வியந்து போனார்.

அவர் வியப்பதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. அங்குள்ள எழுத்து சுதந்திரம் பற்றி இந்தியப் பத்திரிகையாளர்கள் நன்கறிவார்கள். ஆனால் அது மட்டுமல்ல வியப்பிற்குக் காரணம். 'மலேசிய தமிழ்ச் சிறுகதைகளின் கதைப் பொருள் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்தால், அதில் முதலிடம் பெறுவது தோட்டப்புற சமுதாயமாகவே இருக்கும். அந்த அளவிற்குத் தோட்டப்புறத் தமிழ் சமுதாயத்தின் குடும்ப அமைப்பு, எண்ணப் போக்குகள், கல்வி நிலை, குடியுரிமைப் பிரச்சினைகள், முதலாளி, கங்காணி, கிராணிமார்களின் அடக்குமுறை, சாதிப்பிடிப்பு, சீர்திருத்தத்திற்கு இடம்தராத பழமைப்பிடிப்பு, குடிப்பழக்கம் முதலியவை மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் கதைப்பொருட்கள் ஆகியுள்ளன' என்று டாக்டர்.இரா.தண்டாயுதம் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இப்போது மலேசியச் சிறுகதைகள் புதிய கதைக்கருக்களை எழுதிப் பார்க்கின்றன. அறிவியல் புனைகதை பாணியில் வீ.செல்வதுரை என்பவர், 'காய கல்பம்' என்ற கதையை ஆரம்பிக்கிறார். உளவியல் காரணங்களைச் சொல்லி முடிக்கிறார். வரும் நாட்களில் மலேசிய மண்ணிலிருந்து அறிவியற் புனைகதைகளை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. திருமணமாகாலேயே, 40 வயதில் மாதவிடாய் முற்றுப் பெறும் மெனோபாஸை அடைந்து விடும் ஒரு முதிர்கன்னியின் கதையை நாட்குறிப்புப் பாணியில் எழுத முற்படுகிறார்.

யாப்பிலமைந்த கவிதைகளைத் தமிழகம் அநேகமாக கைவிட்டுவிட்டது. பொங்கல் கவியரங்கங்களில் கூட அவற்றைக் கேட்க முடியவில்லை. நல்ல யாப்புக் கவிஞர்களான அப்துல் ரஹ்மான், தமிழன்பன் போன்றவர்கள் கூட ஹைக்கூ, சென்ரியூ போன்ற இலக்கணம் தளர்ந்த குறும்பா வடிவங்களுக்கு வந்து விட்டார்கள். ஆனால் மலேசியா இன்னும் மரபுகளில் எழுதிப் பார்க்கிறது. களி துள்ளும் சந்தத்தில் சில தமிழ்க் கவிதைகளைப் பதிவு செய்யும் முரண் சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது.

“காடுவெட்ட ரோடுவெட்டக் கண்ணீர் விடச் செந்நீர் விட
நாடு விட்டு நாடு வந்தார் தமிழர்கள் - இவர்
பாடுபட்டுப் பாடுபட்டுப் பத்து நூறாய் வேறுபட்டுப்
போடுகிறார் கூட்டங்கள்!

கூட்டத்திலே தீர்மானங்கள் போட்டுப் போட்டுப் பெட்டியிலே
பூட்டிவிட்டுப் போய்விடுவார் பாருங்கள் - இதை
ஓரிடத்தில் சொல்லிச் சொல்லி ஓலமிட வேண்டுமென
நானிருந்தேன் வந்தது நல் நாளுங்க!

பத்து லட்சம் தமிழர்க்குள்ளே பத்து லட்சம் பிரிவினைகள்
பத்தாதென சிவப்பு நீலக் கார்டுகள் - இந்தத்
தொத்து நோய்கள் தீர்வதற்கு எத்தனை நாளா குமெனச்
செந்தமிழர் தலைவர்களே கூறுங்கள்!

எல்லார்க்கும் ஒரே நிறம், எல்லார்க்கும் ஒரேயுருவம்
எல்லோர்க்கும் எல்லாந்தந்த ஆண்டவன் - இந்த
நல்லான் தமிழனுக்கு நான்குகுண நிறமமைத்து
நாலுமூலை நிற்க வைத்தான் பாருங்கள்!

இது ‘தமிழ்நேசன்’ நாளேட்டில் வந்த சங்கு சண்முகம் என்பவரது கவிதையாகும்.

வேற்றுமைகளால் செழித்த ஓர் இலக்கியம் இலங்கைத் தமிழ் இலக்கியம். தமிழர்களுக்குள்ளேயே அங்கு சிறுபான்மை, பெரும்பான்மை உண்டு. மதம் சார்ந்து அடையாளம் காணப்படும் தமிழர்கள் உண்டு. இடம் சார்ந்து அடையாளம் காணப்படும் தமிழர்கள் உண்டு. எல்லாத் தமிழ் சமூகத்திலும் இருப்பதைப் போன்று சாதிகள் உண்டு. வர்க்கங்கள் உண்டு.

இன்று இலங்கை தமிழிலக்கியம் சில தனி அடையாளங்களோடு திகழ்வதற்குத் தாய்த் தமிழகத்தின் இலக்கியத்திலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டிக்கொள்ள விரும்பி அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளே காரணமாகும். அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இந்த முயற்சிகள் தொடர்ந்து வருகின்றன.

மலேயா, சிங்கப்பூர் போல் இல்லாமல், சங்க காலத்திலிருந்தே இலங்கையில் தமிழ் இலக்கியம் எழுதப்பட்டு வந்திருக்கிறது. சங்கப் புலவர் வரிசையில், ஈழத்து பூதன்தேவனார் என்று ஒரு பெயர் காணப்படுகிறது. ஆனால் இலங்கையின் ஆரம்ப கால இலக்கியப் படைப்பாளிகள் தமிழ்நாட்டிலிருந்துதான் படைப்பூக்கம் பெற்றார்கள். தேவார மூவரைப் போல, முப்பதுகளில், இலங்கை சிறுகதை வளர்ச்சிக்குக் காலூன்றியவர்கள், சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், க.தி.சம்பந்தன் என்ற மூவர். இவர்கள் முப்பதுகளில் தமிழ்நாட்டில் வெளிவந்து கொண்டிருந்த 'மணிக்கொடி' இதழையே முன் உதாரணமாகக் கொண்டிருந்தார்கள். 'மணிக்கொடி' பத்திரிகையின் புதிய பாணி இலங்கையர்கோனை முழுக்க முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டது என்று குறிப்பிடும் சி.வைத்தியலிங்கம், 'நான் சிறுகதை எழுதுவதற்கு ஆதர்ச புருஷனாக அவரே எனக்கு உத்வேகம் கொடுத்தார்' என்று கு.ப.ராவைப் பற்றியும் குறிப்பிடுகிறார். மணிக்கொடிக் குழுவினரோடும் அவர்களது இலக்கியக் கொள்கைகளோடும் நேரடித் தொடர்புகொண்டிருந்த சோ.சிவபாத சுந்தரம், 1938ம் ஆண்டு, 'ஈழ கேசரி' வார இதழில் பொறுப்பாசிரியராகப் பணி ஏற்றபோது, 'மணிக்கொடி'யின் தரத்தில் கதைகள் வெளியிட முயற்சித்தார். அதற்கு உதவியாக, வளரும் பருவத்திலிருந்த சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை எழுத்தாளர்களாகப் பயிற்றுவித்தார். முன்னணி எழுத்தாளர்களாக இலங்கை சிறுகதை வரலாற்றில் பேசப்படும் அ.செ.முருகானந்தன், கனக.செந்தில்நாதன், அ.ந.கந்தசாமி, வரதர் ஆகியோர் இந்த 'ஈழ கேசரிப் பண்ணை'யில் தோன்றியவர்கள்தான். இந்திய செல்வாக்கின் நேரடித் தாக்கமாகவே ஈழத்தில் வடிவப் பிரக்ஞையோடு சிறுகதை எழுதப்பட்டது என்று பேராசிரியர் சிவத்தம்பியும் குறிப்பிடுகிறார்.

ஐம்பதுகளின் இறுதியிலிருந்து அறுபதுகளின் நடுப்பகுதி வரை இலங்கை இலக்கிய உலகின் போக்கை முற்போக்குக் கொள்கைகள் தீர்மானித்தன. இலங்கையின் முக்கிய இலக்கியப் படைப்பாளிகளான, கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், காவலூர் ராசதுரை,

எஸ்.பொன்னுத்துரை, மு.தளையசிங்கம், அ.முத்துலிங்கம், நந்தி, செ.யோகநாதன் போன்றவர்கள் முற்போக்கு இலக்கியக் கொள்கையின் விளைவாக அல்லது அதன் எதிர்விளைவாகத் தோன்றிய இலக்கியக் கொள்கைகளின் காரணமாக எழுதியவர்கள். ஏ.ஜே.கனகரத்னா, கனகசெந்தில்நாதன், க.சிவத்தம்பி போன்ற விமர்சகர்கள் தோன்றவும் அந்த இலக்கியப்போக்கு காரணமாக இருந்தது.

இலங்கையில் கடந்த பதினைந்து இருபது ஆண்டுகளில் பெண்கள் அதிகம் எழுதத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பது தமிழ்நாட்டிலக்கியத்தின் ஆரோக்கியமான அடையாளம். அவர்கள், அவர்களுக்கு முந்திய தலைமுறையைப் போல் அல்லாது, பாலினம் சார்ந்த அடையாளங்களைத் தவிர்த்து கருத்து சார்ந்த அடையாளங்களையே சூட விரும்புகிறார்கள் என்பது மற்றொரு மகிழ்ச்சியான செய்தி. ஆனால் தமிழ்நாட்டுப் பெண்கள் எழுதத் தேர்ந்தெடுக்கும் பொருள்களில் இன்னமும் உறவுகள்தான் முதன்மையாக இருக்கிறது. கணவன் இறந்த பின் நலிவுற்று வாழ்வதை விட உடன்கட்டை ஏறுவது நல்லது என்று எழுதினாள். பூதப்பாண்டியன் தேவி, பெருங்கோப்பெண்டு அன்பைவிடப் பணம்தான் பெரிது, என நம்மை விட்டுவிட்டு, அதைத் தேடி வெளிநாடு போகிற ஆண் பிள்ளைக்கு, தான் கெட்டிக்காரன், மனத்திடம் நிறைந்தவன் என்று நினைப்பு, அவனே கெட்டிக்காரனாகவும் திட மனதுடையவனாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். நாம் முட்டாள்களாக, பலவீனமானவர்களாகவே இருந்து தொலைவோம் என்று சினமும் அழுகையும் நிறைந்த சங்ககாலப் பெண்ணைப் பதிவு செய்தான் கோப்பெருஞ்சோழன் தன் குறுந்தொகைப் பாடலில்,

"அருளும் அன்பும் நீங்கி, துணை துறந்து
பொருள் வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்,
உரவோர் உரவோர் ஆக!
மடவம் ஆக, மடந்தை நாமே!"

ஆனால் நவீனத் தமிழ்ப்பெண் இப்படி சுயபச்சாதாபம் கொள்வதில்லை. மட மாதராக இருக்க அவளுக்குச் சம்மதம் இல்லை. அவள் வைக்கும் கேள்விகள் அனல் போன்று சூடும் சுடரும் நிறைந்தவை. சுபத்ரா என்றொரு தமிழ்நாட்டுக் கவிஞர் எழுதுகிறார்.

"ஒரு நிமிடம்
ஓங்கிய கை
என் கன்னத்தில் பதியும் முன் ஒரு நிமிடம்

வேலைக்குப் போகுமிடத்தில்
எட்டு மணி நேரத்திற்கும் மேலாகவே
வேலை வாங்கி உன்னை உறிஞ்சும்
முதலாளிக்கு முன் நீ கை ஓங்கவில்லையே!

எட்டுத் தேர்தல் திருவிழா நடத்தி
எத்தனையோ கோடி வாக்குறுதி தந்து
அத்தனையும் காற்றாய்ப் பறக்க விட்ட
பெருந்தலைக்கு எதிராய் நீ கை ஓங்கவில்லையே!

நாகரிகம் பெற்ற நன்மையெல்லாம்
காட்டுமிராண்டிகளாக்கிக் காது குத்தும்
சினிமா வியாபாரி முன் நீ கை ஓங்கவில்லையே!

ஒரு குவளை காபி
ஆறிப்போனதற்காய்
கை ஓங்குகிறாய்?"

ஆனால் அப்படிக் கொதித்து, கொட்டி விடுகிற வாழ்க்கை எல்லோருக்கும் வாய்த்து விடவில்லை. இயற்கைக் காட்சிகள், வரதட்சணைக் கொடுமை, பால்ய விவாகம், மறுமணம் இவை குறித்து எழுதும்போது பெண்களுக்குப் பெரும்பாலும் பிரச்சினை வருவதில்லை. காதல் பற்றி எழுதும் பெண் அவள் கன்னியோ, மணமானவளோ, சந்தேகத்தோடு பார்க்கப்படுகிறாள். செக்ஸ், மதம் சார்ந்த அடக்குமுறைகள், அரசியல் இவை பற்றிக் கேள்விகள் எழுப்பும்போது பிரச்சினைகள் எழுகின்றன. வன்முறை மூலமோ அல்லது அன்பின் மூலமோ பெண்களின் எழுத்துக்குத் தணிக்கைகள் விதிப்பதாக 2001 ஜூலையில் ஹைதராபாத் நகரில் நடந்த பெண் எழுத்தாளர்களின் தேசிய மாநாட்டில் பல பெண் எழுத்தாளர்கள் தெரிவித்தார்கள்.

'என் படைப்பிலக்கிய உணர்வு ஒரு மழைக் கோட்டைப் போல் உள்ளது. வீட்டிற்குள் நுழையும் வினாடியில் அதை ஆணியில் மாட்டியே தீர வேண்டியிருக்கறது. அந்த மழைக் கோட் தோலாக மாறிவிட நான் காத்திருக்கிறேன். ஆனால் இதுவரை அது நடக்கவில்லை' என்று அந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஒரு கன்னடப் பெண் கவிஞர் கூறியது தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் பொருந்தும்.

தமிழ்நாட்டுக்கு வெளியிலிருந்து தமிழில் இலக்கியம் படைக்க முன்வருவோர் இன்று தமிழ் நாட்டிலிருந்து கற்றுக்கொள்ள ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் முன் இரு பெரும் கடமைகள் நிற்கின்றன.

ஒன்று, தங்கள் நாட்டை, வாழ்வை, வாழ்வு சார்ந்த பிரச்சினைகளை, தேடல்களை முன் வைத்து தேசிய இலக்கியங்கள் படைப்பது. இரண்டு, அந்த தேசிய இலக்கியங்கள் மூலம், எந்தச் சமூகத்திற்கும், எக்காலத்திற்கும் பொருந்தத்தக்க வாழ்வியல் உண்மைகளைத் தொட்டுக் காட்டுவது. சங்க இலக்கியம் போல.

இது மிகப் பெரிய சவால்தான். ஆனால் இலக்கியம் என்பது வெறும் அழகியல் சார்ந்தது என்ற பிரமைகளில் இருந்து விடுபடும்போது இது இயல்பானதாகிவிடும். அழகியலை மாத்திரம் சார்ந்து எழுதுவது என்பது ஒற்றைக் கண்ணால் உலகைப் பார்ப்பதைப் போல. அறவியலும் எழுத்திற்குத் தேவை. அழகியலும் அறவியலும் சேரும்போது முழுமையான பார்வை வாய்க்கும்.

# உலகளாவியத் தமிழ் இலக்கியம்

**- ரெ. கார்த்திகேசு**

உலகளாவிய தமிழ் இலக்கியம் என்ற தலைப்பில், முனைவர் ரெ.கார்த்திகேசு அவர்கள், “இன்றைய அறிவியல் தொழில் நுணுக்கச் சூழ்நிலையில் தமிழின் புழக்கம் மிகத் தீவிரமாக அதிகரித்திருக்கிறது என்பது கண்கூடு” என்று ஆரம்பிக்கிறார்.

மேலும், “உலகத் தமிழ் இலக்கியம் பற்றியும் அயலகத் தமிழ் இலக்கியம் பற்றியும் மீண்டும் சிந்திக்கும் வாய்ப்பை சிங்கப்பூரில் நடந்த மாநாடும், இப்போது கோவையில் நடைபெறும் மாநாடும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளன. ஆகவே உலகத் தமிழ் இலக்கியத்தை ஒருங்கிணைத்து இலக்கியவாதிகளுக்கும் ஆர்வலர்களுக்கும் அளிக்கும் ஐயரின் முன்னோடி முயற்சியை மேலும் முழுமைப்படுத்துவது பற்றிச் சிந்தித்துப் பார்க்கலாம் என்கிறார்.

திரு ரெ.கா, அவர்களின் சிந்தனைகள்

1. ஆண்டுக்கு ஒரு முறை அயலகத் தமிழ் இலக்கியப் படைப்புகளை தொகுப்பாகக் கொண்டுவரும் முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும்.
2. இதில் இந்தியாவுக்கு வெளியே நாடுதோறும் உள்ள தமிழ்ப் படைப்பாளர்களுக்கு வாய்ப்பு தரப்படவேண்டும்.
3. பதிப்புக் குழு நியமிக்கப்பட வேண்டும். தொகுப்பாசிரியரும் படைப்புகள் தேர்வு செய்யும் குழுவும் நியமிக்கப்பட வேண்டும்.
4. இந்தத் தொகுப்பைத் தமிழ் இலக்கியச் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இலவசமாகவே வழங்கலாம்.
5. இதற்கான நிரந்தர நிதி ஆதாரம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அன்று தன் கட்டுரையின் மூலமாக இக்கருத்துகளை முன்வைக்கிறார்.

## ஐரோப்பிய அமெரிக்க தமிழ் இலக்கியம்

**- நாகரத்தினம் கிருஷ்ணா**

'ஐரோப்பிய அமெரிக்க தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில், பிரான்சு எழுத்தாளர் நாகரத்தினம் கிருஷ்ணா அவர்கள், "வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் தமிழிலக்கிய வெளியில் பெரும்பாய்ச்சலைக் காண்கிறோம். அப்பாய்ச்சலுக்கு இருவகையான காரணங்களை முன்வைக்கலாம்" என்று கூறுகிறார்.

முதலாவதாக இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம். பாதிக்கப்பட்டவர்கள் புகலிடம் தேடியபொழுது அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் அகதிகளுக்கான கொள்கை மற்றும் மேம்பாடான வாழ்க்கை அவர்களை உலகின் பிற்பகுதிகளைக் காட்டிலும் அதிகம் ஈர்த்தது. எனவே பெரும் எண்ணிக்கையில் இந்நாடுகளுக்குப் புலம் பெயர முடிந்தது. இன்றளவும் அது தொடர்கிறது. விளைவுகள் தமிழ் மொழிக்குப் பெரிதும் சாதகமாக அமைந்ததெனில் மிகையில்லை. தமிழ்த்தேசிய உணர்வுடன் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் இந்நாடுகளில் கொண்டுவந்தார்கள்.

இரண்டாவதாகக் கணினித் துறையில் ஏற்பட்ட அசுர வளர்ச்சி, ஊடகமும், இதழ்களும் விரல்முனைக்கு வந்திருக்கின்றன. எண்ணற்ற வலைத் தலங்கள், வலைப்பூக்கள், அவற்றில் பல்வேறுவகையான வகைமைகள் எனப் பெருகியுள்ளன. உலகமெங்கும் பரவி வாழ்கிற தமிழர்களை ஒன்றிணைக்கவும், அவர்கள் உணர்வுகளை ஒருமுகப்படுத்தவும் கணினி காரணமானது.

இன்றைக்கு எழுதும் ஆர்வத்தை இளைஞர்களிடம் ஊக்குவித்திருப்பதே இக்கணினி அறிவுதான். ஐரோப்பிய மொழிகளுக்கு ஈடாக இன்றைக்கு கணினியில் தமிழ் இடம் பெற்றிருக்கிறது. இதில் வட அமெரிக்க மற்றும் ஐரோப்பியத் தமிழர்களின் பங்கு கணிசமானது. கவிஞர் கோ.இராஜாராமை பொறுப்பாசிரியராகக் கொண்ட தமிழின் முதல் இணைய இதழ் 'திண்ணை' இன்றளவும் தீவிர இலக்கியப் பங்களிப்பினை அளித்து வருகிறது. நன்கு அறியப்பட்ட மூத்த தமிழ் எழுத்தாளர்கள் தொடங்கி, புதிய எழுத்தாளர்கள் வரை எழுதுகிறார்கள். ஜெயமோகன், பாவண்ணன், வே.சபாநாயகம், எஸ்.ஷங்கரநாராயணன், வெங்கட் சாமிநாதன், ஜோதிர்லதாகிரிஜா ஆகியோர் தொடர்ந்து இவ்விணைய இதழில் பங்களிப்பு செய்கிறார்கள்" என்று தன் கட்டுரையில் கூறுகிறார்.

# மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்புலகம்

**- டாக்டர்.கிருஷ்ணன் மணியம்**

மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்புலகம் குறித்து தம் கருத்துகளைப் பகிர்ந்துள்ள டாக்டர்.கிருஷ்ணன் மணியம், "தமிழ்த் தொழிலாளர்கள் தங்களுடைய இரப்பர் தோட்டங்களில் தொடர்ந்து வேலை செய்யவேண்டும் என்பதால் தோட்ட முதலாளிகள் தமிழ்ப்பள்ளிகளைத் தங்கள் தோட்டங்களில் அமைக்கச் சம்மதம் தெரிவித்தனர். அத்துடன் இந்தியாவில் அப்பொழுது அமைந்த சுயராஜ்ய பரீட்சார்த்த அரசு மலாயாவில் தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்ற புகாரைப் பெற்ற பிறகு உண்மையைக் கண்டறிய ஆய்வுக்குழு ஒன்றினை அனுப்பி வைத்தது. அக்குழுவினரின் பரிந்துரையின் பேரில் உருவான தமிழ்ப்பள்ளிகள் பற்றிய குறிப்புகள் 1923 ஆம் தொடக்கம் தொழிலாளர் சட்டவிதியில் ஒரு தோட்டத்தில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பார்களேயானால் தமிழ்ப்பள்ளியை அந்தத் தோட்ட நிர்வாகம் அமைக்க வேண்டும் என வற்புறுத்தின. தோட்ட நிர்வாகிகள் பலர் சட்டத்திற்குப் பயந்து தமிழ்ப்பள்ளியை ஆரம்பித்தனர். அப்பள்ளிகளுக்குக் கல்வியியல் பயிற்சி பெறாதாவர்களையும், தோட்டத்தில் வேலை செய்யும் கிராணியர்களும், கோயில் பூசாரிகளும், தமிழாசியர்களாக நியமனம் பெற்றனர். அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட பள்ளிகள் பெரும்பாலும் நகர்ப்புறப் பகுதிகளில் அமைந்தன.

தொண்ணூறுகளின் பிற்பகுதி தொடங்கி மலேசியாவில் ஒரு புதிய இலக்கியப் போக்கினைக் காண முடிகிறது. சண்முகசிவாவின் நுழைவும், ரெ.கார்த்திகேசு, சை.பீர்முகமது, சாமிமூர்த்தி, அருசு. ஜீவானந்தன், அன்புச் செல்வன் போன்றோரின் உக்கிரமான மறுபிரவேசமும் எழுத்துப் போக்கிலே புதிய வரவுகளைக் கொணர்ந்தன. இவர்கள் தமிழகத்தில் அறிமுகமான காத்திரமான எழுத்துக்களைத் தங்களுடைய வாசிப்புகளுக்குக் கொண்டு வந்தனர் என்கிறார்.

# சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம்

**- முனைவர் சீதா லட்சுமி**

'சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் தம் கருத்துக்களைப் பதிவிட்டிருக்கும் முனைவர் சீதா லட்சுமி அவர்கள், சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் இன்னும் 50 ஆண்டுகளில் எப்படி இருக்கப் போகிறது என்று கணித்திருப்பது சிந்திக்கத்தக்கது.

"இங்கு மட்டுமன்றி தமிழர்கள் வாழும் இடங்களிலும் தமிழ் இலக்கியம் இருக்கும். ஆனால் அது தொடர்ந்து தன்னைத் தக்க வைத்துக்கொள்ளுமா? என்பது சந்தேகம். இப்போது யாரும் எழுதலாம், யாரும் பதிப்பிக்கலாம் என்ற நிலை உள்ளது. நல்ல எழுத்தாளராக ஒருவர் வரவேண்டுமென்றால் அவர் நிறைய எழுத வேண்டும், நிறைய படிக்க வேண்டும். எழுதுவதற்கு அயராத முயற்சி வேண்டும்; அற்புதமான ஆற்றல் வேண்டும். ஒரு புத்தகம் எழுதினாலும் போதும், ப.சிங்காரம் எழுதிய நாவல் போல் எழுத வேண்டும். இப்போது வரும் படைப்புகளில் ஆழம் இலை, திடம் இல்லை" என்ற லதாவின் கருத்தை முன்வைக்கிறார்.

தாம் ஒரு தமிழாசிரியர், படைப்பாளர் என்ற முறையில் நம்பிக்கையுடன் பதில் தர விரும்புவதாகத் தெரிவிக்கும் கண்ணபிரான், "எதிர்காலத்தில் தமிழ் இலக்கியம், தமிழ் மொழி இரண்டும் நன்றாக இருக்கும். ஆங்கிலத்தில் சொல்வதென்றால், The glass is half full of water and half empty. இதை நான் நம்பிக்கையுடன் பார்க்கும்போது பாதி முழுமையாக உள்ளது என்றுதான் கூறுவேன்" என்கிறார்.

# அலகு - 2

# இலங்கையில் தமிழ் இலக்கியம்

## இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்

### கவிதை

இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்க்கவிதை என்று பேசும்போது நவீனத் தமிழ்க் கவிதையையே நாம் பிரதானமாகக் கருதுகின்றோம். 'நவீன தமிழ்க்கவிதை' அல்லது 'தற்காலத் தமிழ்க்கவிதை' என்ற ஒரு தொடரை இப்போதெல்லாம் நாம் அடிக்கடி பயன்படுத்துகின்றோம். பழைய, பண்டித மரபு வழிப்பட்ட நிலப்பிரபுத்துவ வாழ்க்கை அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்ட பிரபந்த இலக்கிய வகைகளிலிருந்து மாறுபட்டு, நிகழ்கால வாழ்க்கை நிலைமைகளையும், அதன் அடிப்பிறந்த வாழ்க்கை நோக்குகளையும் கருத்தோட்டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளையே நவீன கவிதை என்ற தொடர் குறிக்கின்றது. நவீன உள்ளடக்கத்துக்கு ஏற்ப அதன் வடிவ அமைப்பிலும் சொற்கள், சொற் சேர்க்கைகள், ஓசை ஒழுங்கு, வெளிப்பாட்டு முறை போன்றவற்றிலும் - இக் கவிதை முறை பழைய செய்யுள் இலக்கியங்களிலிருந்து எவ்வளவோ மாறியுள்ளது என்பதையும் நாம் காண்கின்றோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இப்புதிய கவிதை மரபு, ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டுள்ளது. இப்புதிய கவிதை மரபை அங்குத் தோற்றுவித்து வலுப்படுத்தியவன் பாரதியே என்பது இப்போது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் உண்மை.

'தற்காலத் தமிழ்க்கவிதை' என்று இனங்காணப்படுகின்ற இக்கவிதை மரபு தமிழ்நாட்டில் அங்குள்ள நிலைமைக்கு ஏற்ப தோன்றி வளர்ச்சி அடைந்ததைப் போன்றே, ஈழத்திலும் அந்நாட்டுக்கு உரிய சில தனிப் பண்புகளையும், பாதிப்புகளையும் கொண்டதாக வளர்ச்சியடைந்துள்ளதை நாம் இப்போது தெளிவாக இனம் கண்டு கொள்கின்றோம். ஈழத்தைப் பொறுத்தவரை இக்கவிதை மரபு சுமார் நாற்பது ஆண்டு கால வரலாற்றையே கொண்டுள்ளது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் 'மறுமலர்ச்சிக் காலம்' என்று சொல்லப்படுகின்ற

1940 ஆம் ஆண்டுகளிலேயே இப்புதிய கவிதை மரபு தோன்றி வளர்ச்சியடையத் தொடங்கியது.

19ஆம் நூற்றாண்டின் மரபு வழிப்புலவர்கள் சிலர் இந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் வாழ்ந்தனர். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், க. மயில்வாகனப் புலவர், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார், அருள்வாக்கி அப்துல்காதிறுப் புலவர் முதலியோர் இவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவர்கள். ஆயினும் இவர்கள் அனைவரையும் சென்ற யுகத்தின் பிரதிநிதிகளாகவே கருதவேண்டும். இந்த நூற்றாண்டின் கவிதை மரபுடன் இவர்களைத் தொடர்புறுத்த முடியாது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த, பாரதியின் சம காலத்தவரான பாவலர் துரையப்பாபிள்ளை, சோமசுந்தரப்புலவர், விபுலானந்த அடிகள் ஆகியோரும் இந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் அநேக கவிதைகளைப் படைத்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலச் சிந்தனைப்போக்குகள் சில இவர்களது கவிதைகளில் காணப்படினும் இன்றைய அர்த்தத்தில் இவர்கள் ஈழத்து நவீன கவிதையின் முன்னோடிகள் என்று கருதப்படுபவர்கள் அல்லர். பழைய மரபுக்கும் புதிய மரபுக்கும் இடைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

1940 ஆம் ஆண்டுக்குப்பின் குறிப்பாக 1942ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சில இலக்கிய ஆர்வம் உடைய இளைஞர்கள் சேர்ந்து 'மறுமலர்ச்சி சங்கம்' என்ற ஒரு இலக்கிய ஸ்தாபனத்தை அமைத்ததைத் தொடர்ந்து பாரதிதாசன், கலைவாணன் போன்ற அக்காலத்து தமிழ்நாட்டு முன்னணிக் கவிஞர்களின் செல்வாக்கினால் தூண்டப்பட்ட சில இளம் கவிஞர்களின் முயற்சியினாலேயே இங்கு நவீன கவிதைப் பாணி உருவாகி வளர்ச்சி அடையத் தொடங்கியது. நாவற்குழியூர் நடராசன், சோ.நடராசன், அ.ந.கந்தசாமி, மகாகவி, சாரதா, செ.கதிரேசபிள்ளை, யாழ்ப்பாணன் முதலியோர், இக்காலப் பகுதியில் கவிதை எழுதத் தொடங்கினர். இவர்களுள் நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி, மகாகவி ஆகிய மூவரும் இக்காலப்பிரிவில் தோன்றிய குறிப்பிடத்தக்க கவிஞர்களாவர்.

நாவற்குழியூர் நடராசன் மனோரதியப் பாங்கான கவிதைகளையே அதிகம் எழுதினார். பொருளைவிட ஓசைநயத்துக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்தார். அவரது கவிதைகள் சில 'சிலம்பொலி' என்ற பெயரில் நூல்வடிவம் பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழ்க்கவிதையில் இடதுசாரிச் சிந்தனைப் போக்கை முதலில் பிரதிபலித்தவர் அ.ந.கந்தசாமியே ஆவர். 'கவீந்திரன்' என்ற புனைபெயரிலும் இவர் கவிதைகள் எழுதிவந்தார். ஏராளமாக எழுதாவிட்டாலும் வில்லூன்றி மயானம், துறவியும் குஸ்டரோகியும் போன்ற இவரது சில கவிதைகள் குறிப்பிடத்தக்கன.

இம்மூவருள்ளும் இலங்கைத் தமிழ்க்கவிதையில் அதிக பாதிப்பையும் பங்களிப்பையும் செய்தவர் மஹாகவியே ஆவர். 1971 ஆம் ஆண்டு அவர் மரணிக்கும்வரை சுமார் முப்பது ஆண்டு காலம் கவிதை எழுதி வந்தார். பல நூற்றுக்கணக்கான கவிதைகளும் சேனாபதி, பொய்மை, சிற்பி ஈன்ற முத்து, கோலம், திருவிழா, அடிக்கரும்பு முதலிய வானொலி நாடகங்களும், கோடை, புதியதொரு வீடு, முற்றிற்று முதலிய மேடைப் பா நாடகங்களும், கல்லழகி, சடங்கு, கந்தப்பசபதம், கண்மணியாள் காதை, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் முதலிய காவியங்களும் மானிலத்துப் பெரு வாழ்வு எனும் தலைப்பில் அமைந்த இசைப்பாடல்களும் பொருள்நூறு என்னும் சிறு கவிதைகளும் பிஞ்சுப் பாடல்கள் என்னும் சிறுவர் கவிதைகளும் அவரது படைப்புக்களாக உள்ளன. வள்ளி, குறும்பா, கோடை, கண்மணியாள்காதை, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், வீடும் வெளியும், இருகாவியங்கள் ஆகிய அவரது ஏழு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. நூல்வடிவம் பெறாதவை பல.

மஹாகவி, யாழ்ப்பாணத்துக் கிராம மக்களின் வாழ்வையே தனது கவிதைப் பொருளாகக் கொண்டார். யதார்த்த நெறியைக் கவிதையில் கையாண்டார். பழைய யாப்பு வடிவங்களைப் பேச்சோசைப் பாங்கில் எளிமைப்படுத்தினார். கிராமிய வழக்குச் சொற்களைக் கவிதையில் தாராளமாகப் பயன்படுத்தினார். மனித வாழ்க்கையில் ஒரு ஆழமான நம்பிக்கையையும் மனிதாபிமானத்தையும் அவர்தன் கவிதைகளில் பிரதிபலித்தார். தனக்குப்பின் வந்த பல கவிஞர்களில் அவர் கணிசமான பாதிப்பைச் செலுத்தினார். இக்காரணங்களால் ஈழத்து நவீனக் கவிதையில் ஒரு பெரிய ஆளுமையாக பல விமர்சகர்களால் மஹாகவி கருதப்படுகின்றார்.

1950 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் முக்கியமான காலப் பிரிவாகும். கிடைத்த சுதந்திரத்தைப் அர்த்தமுள்ளதாக்குவதற்கான முயற்சிகளும் போராட்டங்களும் இக்காலப் பிரிவிலேயே தொடங்கின. தேசியம்

பற்றிய பிரக்ஞை பொதுமக்கள் மயமாகத் தொடங்கிய காலப்பிரிவும் இதுவே. தேசிய இனப் பிரச்சினை பெரிய அரசியல் சிக்கலாக மாறிய காலமும் இதுவே.

இக்காலப் பகுதியில் இலங்கைத் தமிழ்க்கவிதையில் பல புதியவர்களையும் சில புதிய போக்குகளையும் நாம் காண்கின்றோம். உண்மையில் இக்காலப் பகுதியிலேயே இலங்கையின் நவீன தமிழ்க்கவிதை வீறுடன் எழுச்சி பெற்றது எனலாம். நாம் முன்னர் குறிப்பிட்ட கவிஞர்களும் இக்காலப் பகுதியிலேயே முதிர்ச்சி பெற்றனர். முருகையன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன், ராஜபாரதி, புரட்சிக்கமால் அண்ணல் முதலியோர் இக்காலப் பகுதியில் அதிகம் எழுதிப் பிரபலம் பெற்றவர்கள். ஆயினும் தங்கள் நோக்கிலும் போக்கிலும் இவர்கள் தனித்தன்மைகளைக் கொண்டிருந்தனர்.

விஞ்ஞானப் பட்டதாரியான முருகையனின் கவிதைகளில் சிந்தனைக்கதியே பிரதான அம்சமாகும். விஞ்ஞான அறிவின் செல்வாக்கை இவரது பல கவிதைகளில் காணலாம். கவிதைகளாகவும் பா நாடகங்களாகவும் காவியங்களாகவும் இவரது படைப்புகள் அதிகம் உள்ளன. நெடும்பகல் இவரது காவியமும் கவிதைகளும் அடங்கிய தொகுப்பு நூலாகும். வந்து சேர்ந்தன; தரிசனம், கோபுரவாசல் ஆகியன பாநாடக நூல்களாகும். ஆதிபகவன் என்ற காவிய நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. கடூழியம் என்னும் குறியீட்டுப் பாங்கான இவரது பாநாடகம் சமீபகாலத்தில் இலங்கையில் மேடையேற்றப்பட்ட முக்கியமான நாடகங்களுள் ஒன்றாகும். மஹாகவியுடன் இவர் சேர்ந்து எழுதிய 'தகனம்' குறிப்பிடத்தக்க ஒரு பரிசோதனைக் காவியமாகும். 'ஒருவரம்' இவர் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆங்கிலக் கவிதைகளின் தொகுப்பாகும்.

50களில் எழுதத் தொடங்கிய நீலாவணன் 1975 ஜனவரியில் மரணித்தார். அதுவரை அவர் ஏராளமான கவிதைகளையும் சில பா நாடகங்களையும் வேளாண்மை என்ற முடிவுறாத ஒரு காவியத்தையும் படைத்துள்ளார். ஆரம்பத்தில் அழகிய காதல் கவிதைகள் பலவற்றை எழுதிய நீலாவணன் 1960களில் கிழக்கிலங்கைச் கிராமங்களின் வாழ்க்கை முரண்பாடுகளைத் தனது கவிதைகள் பலவற்றில் சித்திரமாக்கினார். ஆயினும் இவரது பிற்காலக் கவிதைகள் பலவற்றில் ஆன்மீக உணர்வே வெளிப்பாடு பெற்றுள்ளது. 'வழி' இவரது முக்கியமான கவிதைகள் சிலவற்றை உள்ளடக்கிய கவிதைத் தொகுப்பாகும்.

சில்லையூர் செல்வராசன் (தான்தோன்றிக் கவிராயர்) அங்கதப் பாணியிலான கவிதைகள் எழுதுவதில் வல்லவராக விளங்கினார். பிரதானமாக

இவர் ஒரு மேடைக்கவிஞரே எனலாம். கவியரங்குகளில் இவரது கவிதைகள் அதிகம் வரவேற்பைப் பெற்றன. பிற்காலத்திலே இவர் சிலேடை போன்ற மொழி வித்தைகளிலும் அக்கறை காட்டியுள்ளார். இவரது கவிதை நூல்கள் எதுவும் வெளிவரவில்லை.

இராஜபாரதி, அண்ணல் ஆகியோர் பிரதானமாகக் காதல் கவிஞர்களே. ஓசைநயமும் உவமைச் சிறப்பும் மிக்க பல காதல் கவிதைகளை இவர்கள் எழுதியுள்ளனர். தீயுண்ட வீரமுனை என்ற இராஜபாரதியின் சிறு கவிதை நூல் இனக்கலவரம் ஒன்றில் பாதிக்கப்பட்ட வீரமுனை என்ற கிராமத்தைப் பற்றியது. அண்ணலின் 'அண்ணல்' கவிதைகள் என்ற தொகுப்பும் வெளிவந்துள்ளது. ஐம்பதுகளில் வளர்ச்சியடைந்த முக்கியமான கவிஞர்களில் ஒருவரான புரட்சிக்கமால் பிற்காலத்தில் முற்றிலும் இஸ்லாமிய மரபுணர்ச்சிக் கவிஞராக மாறினார். 'புரட்சிக்கமால் கவிதைகள்' தொகுப்பாக வந்துள்ளது.

1950களில், பரமஹம்சதாசன், பார்வதிநாதசிவம், திமிலைத்துமிலன், அம்பி, சக்தி அ.பாலையா, எம்.சி.எம்.சுபைர், யுவன் போன்ற இன்னும்பல குறிப்பிடத்தகுந்த கவிஞர்களும் வளர்ச்சி அடைந்துள்ளனர். ஆயினும் மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகிய மூவருமே 50 களிலும் 60 களிலும் கூட ஈழத்தின் பிரதான மூத்த கவிஞர்களாக விளங்கினர்.

1950ஆம் ஆண்டுகளின் 'பின்பகுதி' அரசியல் ரீதியாக இலங்கைத் தமிழ்கவிதையில் பெரிதும் செல்வாக்கு செலுத்திய காலப்பிரிவாகும். இக்காலப் பகுதியே அரசியல் கவிதையின் தொடக்கக் காலமும் ஆகும். தென் இலங்கையில் சிங்களம் மட்டும் என்ற அரசியல் கோசத்தின் எதிரொலியாக தமிழ் மக்கள் மத்தியில் மொழி உணர்வும் இனரீதியான அரசியல் எழுச்சியும் தீவிரம் அடைந்தன. இயல்பாகவே மொழி உணர்வுடைய, ஆனால் அரசியல் ரீதியாக வெறுமையாக இருந்த பெரும்பாலான தமிழ்க்கவிஞர்கள் 'தமிழ் அரசு' இயக்கத்தால் எளிதில் ஈர்க்கப்பட்டார்கள். இன, மொழி உணர்வை உள்ளடக்கமாகக் கொண்ட நூற்றுக்கணக்கான கவிதைகள் இக்காலப் பகுதியில் எழுந்தன. தமிழரசுக்கட்சி சார்பான சுதந்திரன் பத்திரிகை இத்தகைய கவிதைகளின் பிரதான வெளியீட்டுக் களமாக அமைந்தது. செந்தமிழ்ச் செல்வம், உயிர்தமிழுக்கு, தமிழ் எங்கள் ஆயுதம் முதலிய தொகுப்பு நூல்களாகவும் தமிழ் இயக்கக் கவிதைகள் வெளிவந்தன. இந்த அரசியல் அலையில் இருந்து ஒதுங்கி நின்ற கவிஞர்கள் மிகச்சிலரே.

எனினும் 1958ஆம் ஆண்டின் இனக்கலவரம் இக்கவிதைப் போக்கை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. இனரீதியான அரசியல் எழுச்சியின் விளைவுகளை மனிதாபிமானம் மிக்க இக்கவிஞர்கள் நேரடியாகக் கண்டனர். பலர் அதில் இருந்து விடுபட்டனர். சிலர் புதியதொரு அரசியல் போக்குக்கான தேடலில் ஈடுபட்டனர். எனினும் தீர்த்து வைக்கப்படாத தேசிய இனப் பிரச்சினை, பெரும்பான்மை இன ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்க வேட்கை ஆகியவற்றின் விளைவாக இன்றுவரை இக்கவிதைப்போக்கு சிறுபான்மையாக நீடித்து நிலவக் காணலாம். கவிஞர் காசி ஆனந்தன் இப்போக்கின் சிறந்த பிரதிநிதியாக இருந்து வருகின்றார்.

1960ஆம் ஆண்டுகள் இலங்கைத் தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரை பிறிதொரு வகையில் முக்கியமான காலப்பிரிவாகும், சமூக பிரக்ஞையும் முற்போக்குச் சிந்தனையும் தமிழ்க்கவிதையின் பிரதான போக்காக மாறிய காலப்பிரிவு இதுவே. 50ஆம் ஆண்டுகளில் குறிப்பாக 1956ஆம் ஆண்டின் அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து நாவல், சிறுகதை, விமர்சனத்துறைகளில் முற்போக்குச் சிந்தனை பிரதான இடம் பெறத் தொடங்கியது. ஆனால் கவிதையைப் பொறுத்தவரை 1965ஆம் ஆண்டுக்குப் பின்னரே முற்போக்குச் சிந்தனை முதன்மைபெறத் தொடங்கியது. எல்லோரும் இல்லை எனினும் ஒரு கணிசமான தொகைக் கவிஞர்கள் முற்போக்குச் சிந்தனையால் பாதிக்கப்பட்டனர். இவர்களுள் பலர் அரசியல் இயக்கங்களிலும் நேரடியாக ஈடுபட்டனர்.

பசுபதி, சுபத்திரன், புதுவை இரத்தினதுரை போன்றோர் நேரடியான பிரச்சாரப் பாங்கான அரசியல் கவிதைகள் எழுதினர். எம்.ஏ.நு.ஃமான், சண்முகம், சிவலிங்கம் ஆகியோர் அன்றாட வாழ்க்கை நிலைமைகளைச் சித்திரிப்பதன் ஊடாகக் கலாபூர்வமாக அரசியல் உணர்வை வெளிப்படுத்த முனைந்தனர். மௌனகுரு, ஈழவாணன், கி.சிவானந்தன், மருதூர்க்கனி, பண்ணாமத்துக்கவிராயர், கலைவாதி கலீல் போன்றோரும் தம் கவிதைகளில் முற்போக்குச் சிந்தனைகளைப் பிரதிபலித்தனர். மேற்காட்டியவர்கள் எல்லாரும் ஏதோ ஒருவகையில் முற்போக்கு அரசியல் சித்தாந்தங்களுடன் உறவு உடையவர்களாவர்.

இக்காலப் பிரிவில் முற்போக்குச் சித்தாந்தங்களுடன் தம்மை இனம் காட்டிக்கொள்ளாத சீர்திருத்தவாதப் போக்குடைய அல்லது ஆன்மீக நோக்குடைய பல கவிஞர்களும் உள்ளனர். 60ஆம் ஆண்டுகளின் கவிதை முயற்சியில் இவர்களின் பங்களிப்பும் கணிசமானதாகும். ஜீவா.ஜீவரத்தினம்,

வி.கந்தவனம், காரை சுந்தரம்பிள்ளை, பாண்டியூரன், மு.சடாட்சரன், பஸீல் காரியப்பர், ஏ.இக்பால், அன்பு முகையதீன், சா.வெ.பஞ்சாட்சரம், பா.சத்தியசீலன், மு.பொன்னம்பலம், குமாரசாமி போன்றோர் இப்போக்குகளின் குறிப்பிடத்தகுந்த பிரதிநிதிகளாவர். இவர்களுள் சிலரின் பிற்காலக் கவிதைகளில் முற்போக்குச் சிந்தனையின் தாக்கத்தையும் காணலாம். இவர்களுள் சிலர் 60க்கு முன்னரே கவிதை உலகில் பிரவேசித்தவர்கள் எனினும் 60ஆம் ஆண்டின் பின்னரே முதிர்ச்சியும் பிரபலமும் பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதியில் எழுதத் தொடங்கிய கவிஞர்கள் சிலரின் கவிதை நூல்கள் சில வெளிவந்துள்ளன. பசுபதியின் 'பசுபதி கவிதைகள்', சுபத்திரனின் 'இரத்தக்கடன்', இரத்தினதுரையின் 'காலம் சிவக்கிறது', 'ஒரு தோழனின் காதல் கடிதம்', எம்.ஏ.நு.்.மானின் 'தாத்தாமாரும் பேரர்களும்', ஈழவாணனின் 'அக்கினிப்பூக்கள்', இ.சிவானந்தனின் 'கண்டறியாதது', ஜீவா ஜீவரத்தினத்தின் 'வாழும் கவிதை', வி.கந்தவனத்தின் 'ஏனிந்தப் பெருமூச்சு', 'இலக்கிய உலகம்', 'கவியரங்கில் கந்தவனம்', காரை சுந்தரம்பிள்ளையின் 'தேனாறு', 'சங்கிலியம்', சா.வே.பஞ்சாட்சரத்தின் 'எழிலி', பா.சத்தியசீலனின் 'பா', மு.பொன்னம்பலத்தின் 'அது', அன்புமுகையதீனின் 'நபிகள் வாழ்வில் நடந்த கதை' ஆகியன குறிப்பிடத்தக்கன.

1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைத் தமிழ்க் கவிதையில் ஒரு புதிய அலை தோன்றியது. இக்காலப் பகுதியில் ஏற்பட்ட அரசியல் இலக்கிய விழிப்புணர்வும், தென் இந்தியப் புதுக்கவிதைகளின் செல்வாக்கும் நூற்றுக்கணக்கான இளைஞர்களை கவிதை உலகுள் இழுத்துவிட்டன. புதிய சமுதாய மாற்றத்துக்காகக் குரல் கொடுக்கும் புரட்சிகரச் சிந்தனை உடையோரே இவர்களுள் அதிகமாகக் காணப்பட்டனர். இவர்கள் யாவரும் தங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளியிடுவதற்குப் புதுக்கவிதை ஒரு இலகுவான சாதனம் எனக் கண்டனர். 1970க்கு முன்பும் ஈழத்துக் கவிதை உலகில் புதுக்கவிதை அல்லது வசனகவிதைப் போக்கு இருந்தது. இன்று தென்னிந்திய இலக்கியத்துடன் தன்னை முற்றிலும் இணைத்துக்கொண்ட புதுக்கவிதையாளர் தருமு சிவராமு ஈழத்தவரே. 60 க்களில் மு.பொன்னம்பலம், கே.எஸ். சிவகுமாரன், தா. ராமலிங்கம் முதலியோரும் புதுக்கவிதைகள் எழுதினர். இவ்வகையில் சொந்த அனுபவ வெளிப்பாட்டுக்கு முதன்மை கொடுக்கும் அ.யேசுராசா, சமூக அரசியல் உணர்வுகளுக்கு முதன்மை கொடுக்கும்

வ.ஐ.ச.ஜெயபாலன், சிவசேகரம் ஆகியோர் கலை உணர்வுடன் எழுதும் குறிப்பிடத் தகுந்த புதுக்கவிதையாளர்கள் ஆவர்.

மு.கனகராசனின் ‘முட்கள்’, அன்பு ஜவகர்ஷாவின் ‘காவிகளும் ஒட்டுண்ணிகளும்’, திக்வல்லைக்காமலின் ‘எலிக்கூடு’, மேமன் கவியின் ‘யுகராகங்கள்’, சௌமினி சிவம் ஆகியோரின் ‘கனவுப்பூக்கள்’, பேனா மனோகரனின் ‘சுமைகள்’, மூதூர் முகையதீனின் ‘முத்து’, லோகேந்திரலிங்கத்தின் ‘போலிகள்’, செந்தீரனின் ‘விடிவு’, பூநகர் மரியதாஸின் ‘அறுவடை’ முதலிய புதுக்கவிதைத் தொகுப்புக்கள் 1970க்குப் பின்னர் வெளிவந்துள்ளன. தொகுப்புகள் எதுவும் வெளியிடாதபோதிலும் சபா-ஜெயராசா, சாருமதி, ஜவாத் மரைக்கார் முதலிய அனேகர் இங்கு புதுக்கவிதை எழுதிவருகின்றனர். அன்பு ஜாவகர்ஷா தொகுத்த பொறிகள், சரவணையூர் சுகந்தன் தொகுத்த ‘சுவடுகள்’ ஆகிய புதுக்கவிதைத் தொகுப்புகளில் ஐம்பதுக்கு அதிகமான கவிஞர்களின் படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து நவீன கவிதையின் வளர்ச்சிப் போக்குகள் பற்றிக் கவனித்தோம். இதே காலப் பகுதிகளில் பழைய தலைமுறையைச் சேர்ந்த சிலரும் தொடர்ந்து எழுதி வந்துள்ளனர். இவர்கள் சமய மரபை இறுக்கமாகப் பேணுபவர்கள்; கவிதையைச் சமய சார்பான சிந்தனைகளுடன் இணைப்பவர்கள். செந்நெறிப்பாங்கான செய்யுள் நடையை இவர்கள் கையாண்டனர். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் ‘பகவத்கீதை வெண்பா’ இவ்வகையில் விதந்து குறிப்பிடத்தக்கது, புலவர் ஆ.மு. ஷரிபுத்தீன் எழுதிய ‘நபிமொழி நாற்பது’, இ. இரத்தினத்தின் ‘முருகு’, சிவன் கருணாலய பாண்டியனாரின் ‘அழகியது’ ஆகிய நூல்களும் குறிப்பிடத்தக்கன.

கவிஞர் அப்துல்காதர் லெவ்வை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோர் முற்றிலும் இவர்கள் வரிசையைச் சேர்ந்தவர்கள் அல்லர் எனினும் நவீனக் கவிஞர்களாகக் கருதப்படுபவர்களும் அல்லர். மொழிபெயர்ப்பாகவும் சொந்த ஆக்கமாகவும் அப்துல்காதர் லெவ்வையின் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவரது ‘செயினம்பு நாச்சியார் சதகம்’ ஒரு வகையில் தேசிகவிநாயகம்பிள்ளையின் ‘மருமக்கள்வழிமான்மியத்’துடன் ஒப்புநோக்கத்தக்கது. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ‘தூவுதூஉம் மலரே’, ‘காதலி ஆற்றுப்படை’ ஆகிய நூல்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இவ்வரிசையில் வித்துவான் வேந்தனாரின் ‘கவிதைப் பூம்பொழில்’ பண்டிதர் வீரகத்தியின் ‘செழுங்க மலச் சிலம்பொலி’ ஆகியனவும் குறிப்பிடத்தக்கன.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை பற்றிப் பேசுகையில் மொழிபெயர்ப்பு முயற்சிகளைத் தனியாகக் குறிப்பிடுவது பொருத்தமாகும். பல்வேறு மொழிகளில் இருந்து ஏராளமான கவிதைகள் இக்காலப் பகுதியில் இலங்கைக் கவிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கலைநோக்கில் இருந்து சமூகநோக்குவரை ஈழத்துத் தமிழ்க்கவிதை பரிணமித்ததை மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் நாம் காணலாம்.

1940ஆம் 50ஆம் ஆண்டுகளில் குறிப்பிட்ட சமூக நோக்குபற்றிய பிரக்ஞையின்றி இலக்கியச் சுவையின் அடிப்படையில் பிறமொழிக் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டன. 1960ஆம் ஆண்டுகளிலும் ஓரளவு இப்போக்கு நீடித்தது எனலாம். இத்தகைய முயற்சிகளில் சுவாமி விபுலானந்தர் ஒரு முன்னோடியாக அமைகின்றார். சேக்ஸ்பியரின் நாடகப்பகுதிகள் பலவற்றைக் கம்பீரமான, செந்நெறிப் பாங்கான மொழிநடையில் (Classical Style) அவர் பெயர்த்துள்ளார். காளிதாசனின் 'மேகதூதம்' என்ற நூலும், சிங்களப்பிரபந்தமான 'செலஹினி சந்தேசய' என்பது 'பூவைவிடுதூது' என்ற பெயரிலும் திரு.சோ. நடராசாவினால் மொழி பெயர்க்கப்பட்டு நூல் உருப்பெற்றுள்ளன. கவிஞர் அப்துல்காதர் லெவ்வை 'இக்பாலின் கவிதைகள்' சிலவற்றை மொழிபெயர்த்து 'இக்பால் இதயம்' என்ற பெயரில் தொகுப்பாக வெளியிட்டார். அவரே பின்னர் உமர்கயாமின் 'ருபாய்யாத்' தையும் மொழி பெயர்த்தார். இதே நூல் சி.கதிரவேலுப்பிள்ளையாலும் இலங்கையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பாரசீகக் கவிஞரான மௌலானா ரூமியின் சில கவிதைப் பகுதிகளை 'மஸ்னவி மலர்கள்' என்ற தலைப்பில் எம்.ஏ.நு.ஃ.மான் தமிழ்ப்படுத்தினார். 'மௌலானா றூமியின் சிந்தனைகள்' என்ற பெயரில் ஏ.இக்பால் ஒரு கவிதை நூலை வெளியிட்டார். 'வேட்ஸ்வேர்த், ஜோன்டன், கீற்ஸ்' போன்ற ஆங்கில மனோரதியக் கவிஞர்களின் மொழிபெயர்ப்புக் கவிதைகள் அடங்கிய நூல் ஒன்றை 'ஒருவரம்' என்ற பெயரில் முருகையன் வெளியிட்டார். 'தேன்மொழி' 'நோக்கு' ஆகிய கவிதைப் பத்திரிகைகளிலும் இலக்கியச்சுவையின் அடிப்படையில் பல பிறமொழிக்கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டன. நோக்கின் ஓர் இதழ் முழுவதும் சேக்ஸ்பியரின் மொழிபெயர்ப்புகளுக்காக ஒதுக்கப்பட்டது. ஆன்மீக நோக்கின் அடிப்படையில் பரமஹம்சதாசன், கவி தாகூரின் 'கனிகொய்தல்' என்ற நூலைத் 'தீங்கனிச்சோலை' என்ற பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

சிறுவர்களுக்கான கவிதை முயற்சி பற்றியும் இங்குக் குறிப்பிட வேண்டும். சோமசுந்தரப் புலவரே இங்கு முதன்முதல் சிறுவர்க்கான பாடல்கள் பலவற்றை எழுதியுள்ளார். அவரது பாடல்கள் பல சிறுவர் பாட நூல்களில் இடம்பெற்றுள்ளன. இவருடன் மு.நல்லதம்பி, யாழ்ப்பாணன் ஆகியோரும் இத்துறையில் குறிப்பிடற்குரியர். ஆயினும் 60 ஆம் ஆண்டுகள் வரை சிறுவர்க்கான கவிதை முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடையவில்லை.

60ஆம் ஆண்டுகளில் இத்துறையில் பலர் முயன்றார்கள். வித்துவான் வேந்தனாரின் பல பாடல்கள் சிறுவர் பாடநூல்களில் இடம் பெற்றன. மஹாகவி பிஞ்சுப்பாடல்கள் என்ற பெயரில் சில சிறுவர் பாடல்களை எழுதினார். அம்பி, அம்பிப்பாடல்கள் என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். எம்.சி.எம். சுபைரின் மலரும் உள்ளம், பா. சத்தியசீலனின் பாட்டு, மழலைத் தமிழ் அமுதம், புத்தியால் வென்ற நத்தையார் ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன. சாரணாகையூம், சி.மௌனகுரு ஆகியோரும் இத்துறையில் முயன்றுள்ளனர். ஆயினும் சிறுவர்களின் வயது, மனோவளர்ச்சி, மொழியாற்றல் ஆகியவற்றுக்கேற்ப படிமுறையாகச் சிறுவர் பாடல்கள் எழுதப்படுகின்றன என்று சொல்வதற்கில்லை. அம்பி, சத்தியசீலன் ஆகியோரிடம் இப்பிரக்ஞை இருப்பதாகத் தெரிகின்றது.

கவிதை வளர்ச்சிப் போக்கின் ஓர் அம்சமாக கவிதைக்காக மட்டும் நடத்தப்பட்ட சிறு சஞ்சிகைகளும் இங்கு தோன்றின. அதுபற்றியும் இங்குக் குறிப்பிடுவது பொருந்தும். 1955 ஆம் ஆண்டு 'தேன்மொழி' என்னும் ஈழத்தின் முதலாவது கவிதைச் சஞ்சிகையை மஹாகவியும் வரதரும் சேர்ந்து வெளியிட்டார்கள். தேன்மொழி பதினாறு பக்கங்கள் கொண்ட சிறு சஞ்சிகையாக மாதம் தோறும் வெளிவந்தது. ஆறு இதழ்களே வெளிவந்தன எனினும் இருபது வருடங்களுக்கு முந்திய இலங்கைத் தமிழ்க் கவிதைப் போக்குகளை இனம் காட்டும் ஒரு சிறந்த பிரதிநிதியாக அது அமைந்தது.

தேன்மொழியை அடுத்து எட்டு ஆண்டுகளின் பின் 1964 முதல் 'நோக்கு' என்ற சஞ்சிகையை முருகையன், இ. இரத்தினம் ஆகிய இருவரும் சேர்ந்து காலாண்டுக்கு ஒருமுறை வெளியிட்டனர். தாய்மொழிக் கவிதை, கவிதை மொழிபெயர்ப்பு, கவிதை விமர்சனம் ஆகிய மூன்றையும் வளர்ப்பது நோக்கமாக இருந்தது. மொழி பெயர்ப்புக்கு நோக்கில் அதிக இடம்

கொடுக்கப்பட்டது. புதுமைக்கும் பழமைக்கும் ஒரே காலத்தில் அது தளமாக அமைந்தது. நோக்கும் மொத்தம் ஆறு இதழ்களே வெளிவந்தன.

1969 முதல் எம்.ஏ. நு.்.மான், சண்முகம் சிவலிங்கம் ஆகிய இருவரும் சேர்ந்து 'கவிஞன்' என்னும் காலாண்டு இதழை வெளியிட்டனர். கவிதையின் சமூகப் பெறுமானம், கலைத்தரம் ஆகிய இரண்டு அம்சங்களைக் கவிஞன் முக்கியமாக வலியுறுத்தியது. முன்னைய இரு கவிதை இதழ்களையும் போலவே கவிதை மொழிபெயர்ப்பின் அவசியத்தை கவிஞனும் உணர்ந்திருந்தது. கவிதை விமர்சனத்துக்கும் முக்கிய இடம் கொடுத்தது. கவிஞன் மொத்தம் நான்கு இதழ்களே வெளிவந்தன.

70க்குப் பின்னர் தோன்றிய புதுக்கவிதைப் போக்கின் வெளியீட்டுக் களமாக இக்காலப் பகுதியில் சில புதுக்கவிதை இதழ்களும் தோன்றின. 1973 ஆம் ஆண்டில் நீள்கரைநம்பி, அத்துல் சத்தார் ஆகிய இருவரும் க-வி-தை என்ற புதுக்கவிதை ஏடு ஒன்றை வெளியிட்டனர். அது தொடர்ந்து வெளிவரவில்லை. 1975 இல் கவிஞர் ஈழவாணன் 'அக்னி' என்ற புதுக் கவிதை ஏட்டை வெளியிட்டார். ஐந்து இதழ்களுடன் அதுவும் நின்றுவிட்டது. முன்னைய கவிதை இதழ்களைப் போல் சுய ஆக்கம், மொழிபெயர்ப்பு, விமர்சனம் ஆகியன அக்னியிலும் இடம் பெற்றன. இவை தவிர புதுக் கவிதைக்கு முதன்மை கொடுத்து பொன்மடல், நவயுகம் ஆகிய இரு சஞ்சிகைகள் வெளிவந்தன. அவையும் இரண்டொரு இதழ்களுடன் நின்றுவிட்டன. அச்சகச்செலவு அதிகரிப்பும் - வாசகர் குறைவும் கவிதை இதழ்களின் அற்ப ஆயுளுக்குக் காரணமாக அமைந்தன.

## நாவல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையிலும் இந்தியாவிலும் நிலவுடைமைச் சமூக அமைப்பில் ஏற்பட்ட சீர்குலைவுகள், முதலாளித்துவச் சமூகமைப்பின் தோற்றம், பிரித்தானியர் அறிமுகப்படுத்திய ஆங்கிலக்கல்வி, மேலைநாட்டு இலக்கியப் பரிச்சயம் முதலியவை தமிழ் இலக்கியப் போக்கில் பெரிய மாற்றங்கள் ஏற்படக் காரணிகளாயின. நாவல், சிறுகதை முதலிய நவீன இலக்கிய வடிவங்களின் தோற்றம் இவற்றிலொன்றாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்ற நாவலிலக்கியம் இன்று பல்வேறு வளர்ச்சிப் போக்குகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத்துக்குச் சுமார் ஒரு நூற்றாண்டு கால வரலாறுண்டு. சித்திலெப்பையினால் எழுதப்பட்டு 1885-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அஸன்பேயுடைய கதையே ஈழத்தின் முதல் நாவலாகக் கொள்ளப்படுகிறது. ஈழத்தவரால் எழுதப்பட்டதாயினும் இந்நூல் சென்னையிலேயே வெளியிடப்பட்டது. மிஸர் தேசத்து அரசகுமாரனான அஸன்பேயின் வாழ்க்கை நிகழ்ச்சிகளினூடாக இஸ்லாமியக் கலாச்சாரத்தின் பெருமையை நிலைநாட்ட ஆசிரியர் முனைந்திருக்கிறார் எனலாம். அஸன்பேயுடைய கதைவெளிவந்து பத்து ஆண்டுகளின் பின்னர் திருகோணமலையைச் சேர்ந்த த.சரவணமுத்துப் பிள்ளை எழுதிய மோகனாங்கி என்ற நூல் வெளியாயிற்று. இந்நூல் தஞ்சை நாயக்கர் வரலாற்றில் இடம்பெறும் ஒரு சிறு சம்பவத்தைக் கருவாக வைத்து கற்பனை கலந்து எழுதப்பட்டதாகும்.

இவ்வாறு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து ஈழத்தவர் புதியதொரு இலக்கிய வடிவத்தைப் படைப்பதில் ஈடுபட்டனர். எனினும் வசனத்திலமைந்த நீண்ட கதைகளாய் இவை அமைந்தனவே தவிர நாவல் என்ற நவீன இலக்கிய வடிவத்தின் பண்புகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. சமகால வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கருவாகக் கொள்ளாமல் இதிகாச அல்லது கற்பனைக் கதைகளையே வசனத்தில் இந்நூல்கள் கூற முனைந்தன. இந்நிலைமைக்கு இன்னோர் சிறந்த உதாரணமாக சி.வை. சின்னப்பபிள்ளையின் விஜய சீலத்தைக் (1916) குறிப்பிடலாம். விஜயன் இலங்கைக்கு வந்தமை குவேனியை மணந்தமை ஆகிய இதிகாச நிகழ்ச்சிகளை மையமாக வைத்து இக்கதை எழுதப்பட்டது. சி.வை. சின்னப்ப பிள்ளையின் வேறு இரு நூல்கள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளிவந்துள்ளன. வீரசிங்கன் கதை அல்லது

சன்மார்க்க ஜெயம் (1905) உதிரபாசம் அல்லது இரத்தினபவானி (1915) ஆகிய அவரது நூல்கள் சமகாலப் பாத்திரங்களைக் கொண்டவைபோன்று அமைந்திருப்பினும் கற்பனையான கதைகளே. இக்கற்பனைக் கதைகளில் அக்காலத் தன்மைகள் சில இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக வீரசிங்கன்கதையில் அதன் கதைத்தலைவன் அனுராதாபுரம், திருகோணமலை முதலிய பல இடங்களுக்குப் போவதாகக் கூறப்படுகிறது. ஆயினும் அவ்வவ்விடங்களுக்குரிய இயல்பு, அங்குள்ள வாழ்க்கை யதார்த்தம், அதற்கும் கதைத்தலைவனின் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு அக்குறிப்பிட்ட சூழலில் பிறக்கும் மனித குணாம்சங்கள் ஆகியவை நாவலில் இடம்பெறவில்லை. யாழ்ப்பாணத்திலிருப்போர் உத்தியோகத்துக்காகவும் பிற தொழில்களுக்காகவும் ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லுதல் 20 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட ஒரு புதிய நிலைமையாகும். இந்நிலைமையை வெறும் நிகழ்ச்சியாக இவ்வாசிரியர்கள் கண்டனரே தவிர அந் நிலைமைகள் தனிமனித, சமூக வாழ்க்கையில் ஏற்படுத்திய புதிய பரிமாணங்களைத் தமது எழுத்தில் சிறைப்பிடிக்க முனைந்தாரல்லர். இதனாலேயே இந்'நாவல்கள்' யதார்த்தத்தை இழந்த கற்பனைக் கதைகளாகின. இக்கதை கொழும்பில் நிகழ்ந்தாலும் கோலாலம்பூரில் நிகழ்ந்தாலும் ஒன்றாகவே அமையும் விபரீதத்திற்குள்ளாகிறது. இந்நிலைமை இந்நூற்றாண்டின் பிற்பாதி வரை தொடர்ந்து நாவலுலகில் நிலவி வந்துள்ளது. கதைகளினூடாக நல்வழி உபதேசம் செய்யும் பண்பே இருபதாம் நூற்றாண்டின் முன்புவரைப் பகுதியில் அச்சேறி வந்துள்ளது எனலாம். சமூகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள், ஒழுக்கப் பிறழ்வுகள் அனைத்தையும் அறக்கண் கொண்டே நாவலாசிரியர் நோக்கினர்.

இப்பண்பு இந்நூற்றாண்டின் பிற்பாதி வரை எழுந்த கதைகளில் காணப்படும் பொது நிலைமையாயினும் அவற்றுள் காணப்படும் சில சாயை வேறுபாடுகளையும் வேறு பண்புகளின் தோற்றத்தையும் கருதி அவற்றை மூன்று உட்பிரிவுகளாக நோக்குதல் இக் காலப் பகுதி நாவல் இலக்கிய வரலாற்றைத் தெளிவாக்க உதவும்.

1) 1915 ஆம் ஆண்டு வரை நீண்டதும் வசன ரூபத்தில் அமைந்தனவுமான கற்பனைக் கதைகளே முதன்மை பெறுகின்றன. அஸன்பேயுடைய கதை, மோகனாங்கி, உதிரபாசம், விஜயசீலம், வீரசிங்கன்கதை ஆகிய மேலேபார்த்த நூல்கள் இக்காலத்தில் வெளிவந்தவையாகும். இவற்றின் பொதுப் பண்புகளை மேலே பார்த்தோம். இவற்றை நாவல்கள் என அழைப்பதை விட ரொமான்ஸ் எனக் கூறுவதே பொருத்தமானது.

2) 1915-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகளவு சமூக நிலைமைகளைக் கவனத்திற் கொள்ளும் போக்கு நாவல் உலகில் அரும்பத் தொடங்குகிறது. பாத்திர உருவாக்கம், பாத்திர உரையாடல் ஆகியவற்றிலோ, கதைப்பின்னலிலோ ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்தாவிடினும் அக்காலத்துச் சமூக நிலைமைகள் சமூகத்தில் நிலவிய கருத்தோட்டங்கள் ஆகியவற்றைச் சிறிதளவாவது தமது நாவல்களில் பிரதிபலித்துள்ளனர். வெறும் கதை கூறும் போக்கிலிருந்து விடுபட்டு சமூக உணர்வுடன் நாவல்கள் எழுதப்பட்டமைக்கும் அக்காலச் சமூக நிலைமைகட்கும் தொடர்பிருந்தது. ஆங்கிலேயர் இலங்கையில் ஏற்படுத்திய பொருந்தோட்டப் பயிர்ச்செய்கை, விருத்தி செய்த வர்த்தகம், அறிமுகப்படுத்திய ஆங்கிலக்கல்வி, அதுசார்ந்த பதவிகள் ஆகியவை நாட்டில் புதிய நிலைமையைத் தோற்றுவித்தன. பணம் சம்பாதிப்பதில் மக்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர். அத்துடன் கிறிஸ்தவ மிசனரிமாரின் தீவிரமான மதமாற்ற முயற்சிகளும் இடம்பெற்றன. சுருங்கக் கூறின் பாரம்பரிய சமூக அமைப்பினுள் ஏற்பட்ட சலனங்கள் மக்கள் நடைமுறைகளையும் கருத்துகளையும் பாதித்தன எனலாம். இக்காலப் பகுதியில் மக்களின் மனோபாவங்களிலும் நடைமுறைகளிலும் ஏற்பட்ட மாறுதல்களைக் கூர்ந்து அவதானித்திருந்த பாவலர் துரையப்பாபிள்ளை 'Ceylon National Review' என்ற பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"கவனத்தை ஈர்க்கும் மாறுதல் இப்போது நம் மக்களிடை ஏற்படத் தொடங்கியுள்ளது. மக்கள் நடை முறையில் அக்கறையுடையோராகவும் பணம் உழைப்பதில் கவனம் செலுத்துவோராகவும் காணப்படுகின்றனர். அவர்கள் சமூக விழாக்கள், விளையாட்டுகள், பொழுது போக்குகள் என்பவற்றைச் சிறுபிள்ளைத்தனமாகக் கணிக்கின்றனர்."

இப்புதிய நிலைமைகளில் காணப்பட்ட மனித ஒழுக்கலாறுகள் இலக்கிய கர்த்தாக்களின் சிந்தையைக் கிளறும் விஷயங்களாயமைந்தன. மக்களிடையே காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகள், சீர்கேடுகள் ஆகியவற்றுக்கு பரிகாரம் கூறும் நோக்குடன் அறவியல் சமய அடிப்படையில் இவர்கள் எழுதினர். மங்களநாயகம் தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம் (1914) தேம்பாமலர் (1929) தம்பிமுத்துப்பிள்ளையின் சுந்தரன் செய்த தந்திரம் (1918) ம.வே. திருஞானசம்பந்த பிள்ளையின் காசிநாதன் நேசமலர் (1924) கோபாலநேசரத்தினம் (1927) துரைரத்தினம் நேசமணி (1927) இடைக்காடரின் நீலகண்டன் அல்லது ஒரு சாதி வேளாளன் (1925) ஆகியவை இப் பண்புக்கு உதாரண விளக்கங்களாகும்.

சுந்தரன் செய்த தந்திரம், காசிநாதன் நேசமலர், துரைரத்தினம் நேசமணி, நீலகண்டன் ஆகிய நூல்களில் அக்கால யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் நிலவிய சீர்கேடுகள் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றன. சாதி காரணமாக மக்களிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகள், உயர்சாதியினரிடை காணப்படும் ஊழல்கள், சீதன வழக்கத்தினால் ஏற்படும் தீமைகள், மதுபானப் பழக்கத்தால் ஏற்படும் கேடு ஆகியவை இவற்றுள் பிரதானம் பெற்றன. மக்கள் நல்லாசாரங்களைக் கைக்கொள்வதன் மூலம் சமூகத்தில் இவற்றைக் களைந்துவிடலாம் என்பது இந்நாவல்களை எழுதியோரின் கருத்தாகவிருந்தது. சமூகக் குறைபாடுகளைத் தனிமனிதக் குறைபாடுகளாகக் கண்டதின் விளைவே இதுவெனலாம். இக்குறைபாடுகளுக்குரிய சமூகவியல் காரணிகளை இந் நாவலாசிரியர்கள் கருத்தில் கொள்ளவில்லை. கடவுள் நம்பிக்கை, தர்ம விருப்பு, கல்வி அறிவினால் உண்டாகும் மன விசாலிப்பு ஆகியவை ஏற்பட முழுச் சமூகமுமே மேற்கூறிய குறைபாடுகளிலிருந்து நீங்கும் என இவர்கள் எண்ணினர்.

3) 1930ஆம் ஆண்டையடுத்து மீண்டும் எண்ணிக்கையில் அதிகமாகக் கற்பனைக் கதைகள் நாவல் என்ற பெயரில் வெளிவரத் தொடங்கின. சமூக நிலைமைகள் எவற்றையும் கவனத்திற் கொள்ளாமல் வெறும் கற்பனாரீதியில் அமைந்த இவை குறிப்பிடத்தக்க நீளமும் உடையனவாயிருந்தன. மக்களிடையே விருத்தியடைந்த வாசிப்புப் பழக்கமும், தினசரிப் பத்திரிகையின் தோற்றமும் இத்தகைய நூல்கள் தோன்ற வழிவகுத்தன எனலாம். இது தொடர்பாக 1931 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வீரகேசரி பத்திரிகை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் அதன் ஆசிரியராகவிருந்த எச்.நெல்லையா இப் பத்திரிகையில் தொடர்ந்து கதைகளை எழுதினார். இவரது நூல்களாக சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி (1934), இரத்தினாவளி அல்லது காதலின் மாட்சி (1938), காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி (1938), பிரதாபன் அல்லது மகாராஷ்டிர நாட்டு மங்கை (1941), சோமாவதி அல்லது இலங்கை இந்திய நட்பு (1940) ஆகியவை வெளிவந்துள்ளன. நெல்லையாவுக்குப் பின்னர் வீரகேசரி ஆசிரியராகவிருந்த கே.வி.எஸ். வாஸும் இவ்வகை நாவல்கள் பலவற்றை எழுதியுள்ளார். ரஜனி என்ற புனைபெயரில் குந்தளப் பிரேமா, நந்தினி, பத்மினி, தாரிணி, மலைக்கன்னி, உதய கன்னி ஆகியவற்றை இவர் வீரகேசரியில் எழுதினார். 1949 - 55 காலப் பகுதியில் இவை வீரகேசரியில் தொடராக வெளிவந்தன. இவற்றை விட வேறும் பல நூல்களும் வெளிவந்துள்ளன. இராசம்மாள் எழுதிய சரஸ்வதி அல்லது காணாமல் போன பெண்மணி (1929), ஏ.சி.இராசையாவின் அருணோதயம் அல்லது சிம்மக்கொடி (1933), பவளகாந்தன் அல்லது கேசரி விஜயம் (1932),

சிவராமலிங்கம் பிள்ளையின் பூங்காவனம் (1930), சி.வே. தாமோதரம்பிள்ளையின் காந்தமலர் அல்லது கற்பின் மாட்சி (1936), வே.க. நவரத்தினத்தின் செல்வரத்தினம் (1935), எம். செல்லப்பாவின் சந்திரவதனா அல்லது இன்பக் காதலர் (1937) முதலியன இவற்றுட் சில.

இந்நாவல்களில் பாத்திரங்களின் வீரசாகசச் செயல்களும், மர்ம நிகழ்ச்சிகளும் நிறைந்திருக்கும். கொலை, கொள்ளை ஆகியவை தாராளமாக இடம்பெறும் எனினும் இறுதியில் தர்மமே வெல்லும் என்ற கருத்து வற்புறுத்தப்படும்.

“மக்கள் செய்யும் நல்வினைத் தீவினைப் பயன்கள் அவர்களைத் தொடர்ந்து சென்று இறுதியில் அதன் பலாபலனை அனுபவிக்கச் செய்கிறது என்ற உண்மையை இச் சரிதை தெளிவாயெடுத்து விளக்குகிறது. ஒவ்வொருவரையும் மக்களின் ஈடேற்றத்திற்காகவும் தேச முன்னேற்றத்திற்காகவும் உழைத்து வரும்படி இது தூண்டி விடுகிறது. நல்லொழுக்கங்களிலிருந்து தவறி நடப்போரை இந்நாவல் இரக்கமின்றித் தண்டிக்கிறது.”

மேற்கண்டவாறு அருணோதயம் அல்லது சிம்மக்கொடி என்ற புதினத்தின் ஆசிரியர் வரணியூர் ஏ.சி. இராசையா குறிப்பிடுவது மேற்கூறிய அறவியற் பண்புக்கு ஓர் உதாரணமாகும்.

இவ்வாறு அறவியல் நோக்கும், கதைச் சுவைக்காகத் திடுக்கிடும் சம்பவங்களும் கொண்ட நாவல்கள் தோன்றுவது முக்கிய போக்காக இருந்த அதே சமயம் அதற்குச் சமாந்தரமாக இன்னோர் போக்கும் காணப்பட்டது. குடும்ப உறவுகளையும் அவற்றில் தோன்றும் உணர்ச்சிப் போராட்டங்களையும் முக்கிய பொருளாகக் கொண்டு புதினங்கள் எழுதும் இப்போக்கு நாற்பதாம் ஆண்டுகளில் காணப்பட்டது. க.தி. சம்பந்தனின் பாசம், 1947 ஆம் ஆண்டு ஈழகேசரிப் பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. க. சச்சிதானந்தனின் அன்னபூரணி ஈழகேசரியில் 1942 இல் தொடராக வந்தது. சு.வேலுப்பிள்ளையின் மன நிழல் என்ற நாவல் 1948 ஆம் ஆண்டு வெளிவந்தது. க. சிவகுருநாதனும் கசின் என்ற புனைபெயரில் ஈழகேசரியில் தொடராக நாவல்களையும் குறுநாவல்களையும் எழுதினார். சகட யோகம் (1949), இதய ஊற்று (1951), குமாரி இரஞ்சிதம் (1952) முதலியன இவற்றுட் சில. அ.செ. முருகானந்தம் பத்திரிகைத் தொடராக யாத்திரை என்ற நாவலையும் எழுதினார். கனக செந்திநாதனின் விதியின் கை (1953), வெறும் பானை (1956) ஆகியவையும் ஈழகேசரியில் தொடராக வெளிவந்தது. இவற்றுள் விதியின் கை 1977-ல் வீரகேசரிப் பிரசுரமாக, நூல்வடிவம் பெற்றது. வ.அ. இராசரத்தினத்தின்

கொழுகொம்பு நாவலும் ஈழகேசரிப் பத்திரிகைத் தொடராக (55-56) வெளிவந்து பின்னர் 1959-ல் நூலுருவம் பெற்றதாகும்.

மேற்கூறிய நாவல்களின் பண்புகளை ஒன்று திரட்டி நோக்கும் போது அவை தனிமனித உறவுகளையும் உணர்ச்சிப் போராட்டங்களையும் கூறுவனவாக இருப்பதைக் காணலாம். காதல், நட்பு, பாசம் என்ற உறவு நிலைகளையும் அவற்றால் ஏற்படும் பிரச்சினைகளையும் இவை எடுத்துக்காட்டுகின்றன. எனினும் இவ்வுறவுகளையும் உணர்ச்சிகளையும் காட்டும் பாத்திரங்கள் யதார்த்தமான சமூக நிலையிற் காலூன்றாத "மனவெளி மனிதர்களா"கவேயமைந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். விதியின் கை, கொழு கொம்பு போன்ற சிலவே இந்நிலைக்கு விதிவிலக்காயமைந்து சற்றேனும் ஈழநாட்டுப் பின்னணியைக் கொண்டிருந்தன. விதியின் கை யாழ்ப்பாணக் கிராமமொன்றினையும், கொழுகொம்பு கிழக்கிலங்கையையும் மலைநாட்டையும் பின்னணியாகக் கொண்டவையாகும்.

1950-களின் பிற்பகுதியிலிருந்து ஈழத்துப் நாவல்களின் புதியதொரு சகாப்தம் அரும்புகிறது எனலாம். நாவல் இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட இம் மாற்றத்துக்கும், நாட்டு நிலைமையில் ஏற்பட்ட மாற்றம் முக்கிய காரணமாயமைந்தது. 1956-ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவின் தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியமை தேசிய முதலாளித்துவம் அதிகார முதன்மை பெற்றதைக் குறிப்பதாகும். இக் காலத்திலேயே தேசியம் என்ற கோட்பாடும் வலுப்பெற்றது. தேசிய மரபுகளும் பண்பாட்டம்சங்களும் பேணப்பட்டன. ஈழத்துத் தமிழரைப் பொறுத்தும் இது ஒரு முக்கியமான காலகட்டமே. நாட்டின் பொதுவான தேசிய எழுச்சியால் அவர்கள் பாதிக்கப்பட்டது மட்டுமன்றி இக் காலத்தில் தோன்றிய தமிழ் - சிங்கள இனப் பிரச்சினையாலும் பாதிக்கப்பட்டனர். தமிழர் ஈழத்தின் தேசிய இனம் என்ற கருத்தும், ஈழத்தவர் என்ற முறையில் அவர்களுக்கெனத் தனிப் பிரச்சினைகள் உண்டென்ற உணர்வும் எற்பட்டன. இவை மட்டுமன்றி இக்காலப் பகுதியை அடுத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் முதன்மை பெற்ற ஸ்தாபனமாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயற்பட்டது. இடதுசாரி அரசியல் சித்தாந்தத்தைப் பொதுவாகச் சார்ந்திருந்த இச் சங்கம் இலக்கியத்தில் தேசியப் பிரச்சினைகள் இடம்பெறவேண்டும் என்பதை வற்புறுத்தியது. அறுபதுகளில் எமது இலக்கிய உலகில் பிரதானம் பெறும் எழுத்தாளர்களிற் பெரும்பாலோர் இச் சங்கத்தைச் சார்ந்திருந்தோரே. இளங்கீரன், டானியல், நீர்வை பொன்னையன்,

காவலூர் இராசதுரை, செ. கணேசலிங்கன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, டொமினிக் ஜீவா முதலியோரை உதாரணங்களாகக் கூறலாம்.

மேலே பார்த்த தேசியம் என்ற கோட்பாட்டின் வளர்ச்சி இடதுசாரி அரசியல் சித்தாந்த செல்வாக்கு ஆகியவை ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து ஈழத்து நாவல் உலகில் ஏற்பட்ட பொருள் மாற்றத்துக்குரிய பிரதான காரணிகளாகின. சாதாரண மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளும் அன்றாட அனுபவங்களும் இலக்கியத்தில் தயக்கமின்றி இடம் பெற்றன. நாவலுக்கு மட்டுமின்றிச் சிறுகதை இலக்கியத்திற்கும் இது பொதுப் பண்பாயிற்று. ஆரம்பத்தில் அறவியல் நோக்குடன் சமூகப் பிரச்சினைகளை நோக்கிய நாவல்களைப் போலல்லாது அப் பிரச்சினைகளைச் சமூகவியல் நோக்கில் இக்காலப் நாவல்கள் அணுகின. இலக்கியத்தில் யதார்த்தம் பற்றிய உணர்வு இக்கால நாவல்களில் தலைகாட்டத் தொடங்கியது. யதார்த்தவாதத்தை எழுத்தாளர் சித்தாந்த ரீதியாக ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி செயலிலும் பரிசீலிக்கத் தொடங்கியிருந்த இக்காலத்திலேயே நாவல் நவீன இலக்கிய வடிவம் என்பதன் அர்த்தம் தெளிவாகத் தொடங்கியது.

1959-ஆம் ஆண்டு நூலுருவில் வெளிவந்த இளங்கீரனின் நீதியே நீ கேள் என்ற நாவல் மேற்கூறிய புதிய பண்பின் தொடக்கத்தைக் குறிக்கின்றது. யாழ்ப்பாணத்து நகரமொன்றின் கடைச் சிப்பந்தியை பிரதான பாத்திரமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாவலில் சமூக வர்க்கங்களுகிடையேயுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும், அவ்வேற்றத்தாழ்வுகளால் மனித உறவுகள் பாதிக்கப்படுதலும் காட்டப்படுகின்றன. இளங்கீரனது நாவல்கள் பலவும் பத்திரிகைத் தொடர்கதைகளாக வந்தவையே. தென்றலும் புயலும், சொர்க்கம் எங்கே, மண்ணில் விளைந்தவர்கள், இங்கிருந்து எங்கே, அவளுக்கு ஒரு வேலை வேண்டும் முதலியன இவரது குறிப்பிடத்தக்க படைப்புக்கள் எனலாம்.

மார்ச்ஸீய சமூகவியல் நோக்கில் சமூக நிலைமைகளை அவதானித்து அவற்றை நாவல்களின் பொருளாகக் கொண்டோரில் செ.கணேசலிங்கம் முக்கியம் பெறுகிறார். அறுபதாம் ஆண்டின் பிற்பகுதியில் இவரது நாவல்கள் தொடர்ச்சியாக வெளிவந்தன. நீண்ட பயணம் (1965), சடங்கு (1966), செவ்வானம் (1967), தரையும் தாரகையும் (1968), போர்க்கோலம் (1969), மண்ணும் மக்களும் (1970) ஆகியவை இவரது நாவல்களாகும். நீண்ட பயணம் யாழ்ப்பாணத்துச் சாதியடக்குமுறைக்கு இலக்காகும் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்தைச் சித்திரிக்கிறது. போர்க்கோலமும் இதே கருவைக் கொண்டதாகும். சாதி வேறுபாடுகளை வர்க்க வேறுபாடுகளின் வெளிப்பாடாகவே

காணும் ஆசிரியர் அவற்றில் யாழ்ப்பாணத்துச் சமூக வர்க்க அமைப்பில் ஏற்படும் மாறுதல்களும், அங்கு பரவிய அரசியற் கருத்துகளும் ஏற்படுத்திய தாக்கத்தையும் காட்ட முனைகிறார். செவ்வானம் 63 - 64ம் ஆண்டு அரசியலைப் பின்னணியாகக் கொண்டதாகும். அக்காலப் பிரச்சினைகள் சமூக வர்க்கங்களைப் பாதிக்குமாற்றையும் அதில் மனிதர்களின் இயக்கப்பாட்டையும் இந்நாவலில் தெளிவுபடுத்த முயன்றார் கணேசலிங்கன். தரையும் தாரகையும் மத்தியதர வர்க்க மாந்தரின் திரிசங்கு நிலையைச் சித்தரிப்பதாகும். இந்நாவலின் மூலம் உயர் வர்க்கத்தினைப் பார்த்து ஏங்கும் மத்தியதர வர்க்க மாந்தர் அவ்வர்க்கத்தினர் போல உயர முடியாதென்பதையும் தொழிலாள வர்க்கத்தினருடன் இணைந்து போராடுவதே வழி என்பதையும் ஆசிரியர் காட்டுகிறார்.

அடிநிலை மக்களின் வாழ்க்கையையும் பிரச்சினைகளையும் எழுத்தில் வடிக்கும் முயற்சியில், தமிழ் மக்களிடையே அடக்குமுறையின் வடிவமாக இருக்கும் சாதிப் பிரச்சினைகளையும் நாவல்களில் இடம் பெற்றன. குறிப்பாக அறுபதுகளில் யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், ஆலயப் பிரவேச இயக்கங்கள் ஆகியவை இலக்கியத்திற்கும் உந்துதலை அளித்தன. இத்தொடர்பில் செ.கணேசலிங்கனின் நீண்ட பயணம், போர்க்கோலம் ஆகியவை பற்றி மேலே கூறப்பட்டது. கே.டானியலின் பஞ்சமர் நாவலும் (1972) இப் போராட்ட அனுபவங்களின் அடிப்படையில் எழுந்ததாகும்.

அடிநிலை மக்களைச் சார்ந்து இலக்கியம் படைத்தோரில் பெனடிக்ற் பாலனும் இடம் பெறுகிறார். அவரது சொந்தக்காரன் மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளரின் அவலமிக்க வாழ்க்கையையும், போராட்டத்தையும் சித்தரிப்பதாகும். இந் நாவலுக்குச் சில ஆண்டுகள் முன்னர் வெளிவந்த நந்தியின் மலைக்கொழுந்தும் (1964) இதே பிரச்சினையைத் தொட்டதெனினும் நந்தியின் அணுகுமுறை மனிதாபிமானக் கண்ணோட்டம் கொண்டதாகும். கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சை (1964) நாவலும் மலைநாட்டுத் தொழிலாளர் பற்றியது. இந்தியாவிலிருந்து தொழிலாளர் இலங்கைக்கு வரத் தொடங்கிய காலத்திலிருந்து அடுத்த மூன்று தலைமுறை காலத்தைப் பின்னணியாக்கி இயற்பண்புடன் தொழிலாளரின் அவலநிலையைச் சித்தரித்தது இது. இத் தொடர்பில் தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை என்ற நாவலையும் சேர்த்துக் கொள்ளலாம்.

சி. சுதந்திரராஜா, செ. யோகநாதன், எஸ். அகஸ்தியர் ஆகியோரும் இடதுசாரி அரசியல் சித்தாந்தத்தால் கவரப்பட்ட எழுத்தாளர்களாவர். இவ்வகையில் சுதந்திரராஜாவின் 'மழைக்குறி'யும் யோகநாதனின் சில குறுநாவல்களும் குறிப்பிடத்தக்கன.

ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத்தில் ஏற்பட்ட மாறுதலும் புதிய போக்கும் இதுவரை சுட்டப்பட்டது. அடிநிலை மக்களைக் கதாபாத்திரங்களாகக் கொண்டது மட்டுமல்லாது அவர்களது வாழ்க்கையையும் போராட்டத்தையும் மார்க்சீய அரசியல் கண்கொண்டு நோக்கிய இப்புதிய பண்பானது எழுபதின் முற்பாதியிலும் கூட நாவலிலக்கியத்தின் பிரதான போக்காகவேயிருந்தது.

இதே காலப்பகுதியில் இப் போக்குக்குப் புறம்பான சில நாவல்களும் வெளிவந்துள்ளன. எஸ்.பொன்னுத்துரையின் தீ (1961) சடங்கு (1971) ஆகிய நாவல்கள் குறிப்பிடத்தக்கன. எழுத்தாற்றல் கைவரப்பெற்ற எஸ்.பொ. வின் தீ பொருளிலும் வடிவிலும் ஏனைய ஈழத்துப் நாவல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். எனினும் பாலியலைத் துணிச்சலுடன் வெளிப்படையாகக் கையாண்டது என்பதைத் தவிர இந் நாவல் எவ்வகையிலும் இலக்கிய முதிர்ச்சியை வெளிக்காட்டவில்லை. அவரது சடங்கு யாழ்ப்பாணத்துக் கீழ்மத்தியதர மாந்தரின் மனோ விகாரங்களை இயற்பண்புடன் அணுகியதாகும். அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்துவிட்டது (1973) பலரது பாராட்டுதல்களையும் பெற்ற நாவல். எழுபதுக்குப் பின் நாவலிலக்கியத் துறையில் புகுந்தவரான அருள் சுப்பிரமணியம், சிங்களப் பெண்ணைக் கலப்பு மணம் புரிந்த பாத்திரமொன்றைக் கதாநாயகனாகக் கொண்டு அதன் பின்னணியையும் பிரச்சினைகளையும் நேர்த்தியாகச் சித்திரித்துள்ளார். அண்மையில் வெளிவந்த அக்கரைகள் பச்சையில்லை அன்னிய நாட்டுக் கப்பல்களில் வேலை செய்யும் தமிழ் இளைஞர்களின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டது என்ற வகையில் முற்றிலும் புதியதோர் பொருளை அறிமுகப்படுத்தினும் நடைமுறைக்கு ஒத்துவராத நிகழ்ச்சிகள் நாவலின் யதார்த்தத்திற்கு ஊறு விளைவிக்கின்றன. இவரது இன்னொரு நாவலான நான் கெடமாட்டேன் இவருக்குத் தோல்வியையே தந்தது. முதல் நாவல் சிறந்த படைப்பாயிருக்க அதற்குப் பிந்தியவை தரமிழந்து போவது கவனிக்கத்தக்கது.

ஈழத்துத் தமிழ் நாவலிலக்கிய வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் பிரதான காரணிகளில் முதன்மையானது பிரசுர வசதிக் குறைவாகும். பிரசுர நிறுவனங்கள் வளர்ச்சி பெறாத நிலையிலும், புத்தக வெளியீட்டுச் செலவு

உயர்ந்திருக்கும் நிலையிலும் இலக்கிய ஆர்வம் கொண்ட எழுத்தாளர் சிலர் சொந்தப் பணத்திலேயே நாவல்களை வெளியிட்டுள்ளனர். தரமான நாவல்களை வெளியிட முன்வந்த நிறுவனங்கள் கூட நிதிப்பலம் அற்றவையாகவிருந்தன. இன்றுள்ள நிலையில் வீரகேசரி நிறுவனம் ஒன்றே வெற்றிகரமாகப் பல நாவல்களை வெளியிட்டு விற்பனை செய்து வருகின்றது. 1971-ஆம் ஆண்டு தென்னிந்திய சஞ்சிகைகள், நூல்கள் ஆகியவற்றின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டின் விளைவாக இந் நூல்வெளியீட்டு நிறுவனம் 72-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்றுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட நாவல்களை வெளியிட்டுள்ளது. அண்மைக்காலத்தில் எழுத்துலகிற்கு அறிமுகமாகிய பாலமனோகரன், கே.விஜயன், ஞானசேகரன், ஞானரதன், கே.ஆர்.டேவிட், வை. அகமத் முதலியோரது நாவல்களை இந் நிறுவனமே வெளியிட்டது. எனினும் வியாபாரத்தையே முதல் நோக்கமாகக் கொண்ட நிறுவனம் இலக்கியத் தரத்திலோ பொருளிலோ எத்தகைய அக்கறை செலுத்தும் என்பது ஐயப்பாட்டிற்குரியது. தூரத்துப்பச்சை, காட்டாறு, நான் சாகமாட்டேன், போராளிகள் காத்திருக்கின்றனர் முதலிய குறிப்பிடத்தக்க நூல்களை இந் நிறுவனம் வெளியிட்டிருப்பினும் அதன் சாய்வு சுவைமிகுந்த கதையம்சம் கொண்ட நாவல்கள் பக்கமே என்பது தெளிவு. இந்நிறுவனம் வெளியிட்ட நா.பாலேஸ்வரி, கமலா தம்பிராசா, அன்னலட்சுமி இராசதுரை, இந்துமகேஸ், உதயணன் முதலியோரது நாவல்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். வாசக ரசனையை குறிப்பிட்ட ரீதியில் உருவாக்குவனவாகவும். எழுத்தாளரைக் கட்டுப்படுத்துவனவாகவும் இத்தகைய நிறுவனங்கள் அமைந்துவிடும் அபாயம் எப்போதும் உண்டு. இதுமட்டுமன்றி நூல் வெளியீட்டுச் செலவுகள் மேன்மேலும் உயரும் நிலையிலும், இறக்குமதிக்கட்டுப்பாடு சமீபகாலத்தில் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து தென்னிந்திய சஞ்சிகைகள் நூல்கள் ஆகியவற்றின் போட்டியை எதிர்நோக்க வேண்டிய நிலையிலும் நாவலிலக்கிய வளர்ச்சி மட்டுமன்றி ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சியே தேக்கமடையும் அபாயம் ஏற்படக்கூடும். எழுத்தாளர் பரந்த கொள்கை அடிப்படையில் இணைந்து செயல்படுவதற்கான அவசியத்தை இந்நிலமை வற்புறுத்துகிறது.

## சிறுகதை

சிறுகதை, கைத்தொழில் நாகரீகத்தால் நவீனப்பட்டுவரும் சமூகத்துக்குரிய ஒரு புதிய இலக்கிய வடிவமாகும். 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் மேலைத் தேசங்களில் தோன்றி வளர்ந்த இவ்விலக்கிய வடிவம், ஆங்கிலேயர்களின் தொடர்பினாலும் அவர்களின் ஆதிக்கத்தினாலும் நவீன மாற்றங்களுக்குள்ளாகி வந்த தமிழர் சமூகத்தில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தோன்றியது. 1920ஆம் ஆண்டுகளில் பாரதியார் மொழிபெயர்த்த தாகூரின் சிறுகதைகளும், மாதவையா, வா.வே.சு.ஐயர் ஆகியோரின் சிறுகதைகளுமே தமிழில் இவ்விலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்தன. 1930ஆம் ஆண்டுகளில் புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், பிச்சமூர்த்தி, பி.எஸ். இராமையா, மௌனி முதலிய எழுத்தாளர்கள் தமிழில் சிறுகதைக்கு ஒரு பூரண வடிவத்தைக் கொடுத்தனர்.

இலங்கையைப் பொறுத்தவரை 1930ஆம் ஆண்டுகளின் பின் அரைவாசியிலேயே சிறுகதை தோன்றி வளரத் தொடங்கியது. சுமார் ஒன்றரை நூற்றாண்டு கால ஆங்கில ஆட்சியின் பயனாக நமது சமூகத்தில் எற்பட்டு வந்த மாற்றங்களின் விளைவே இது எனலாம்.

“பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட பண்பாட்டுத்துறை விழிப்பின் காரணமாக, மதத்துறை இலக்கியமே தமிழ், சிங்கள மொழிகளில் முக்கிய இடத்தைப் பெற்றுவந்தது. ஆனால், குடியேற்ற நாட்டாட்சி இலங்கையின் அரசியல், பொருளியல் வாழ்க்கையை நன்கு பீடித்திருந்தமையால், ஆங்கில மொழி மூலம் மேனாட்டு நாகரிகம் பரவிக்கொண்டே வந்தது. விவசாயப் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்பட்டு, ஆங்கிலக் கல்வியே ஊதியமூலமாக அமைந்த யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இம்மாற்றம் மற்றத் தமிழ்ப் பகுதியாம் மட்டக்களப்பிலும் பார்க்க வேகமாகப் பரவிற்று. ஆங்கிலக் கல்வியுடன் புனைகதையும் பரவிற்று” என, கலாநிதி கா.சிவத்தம்பி இது தொடர்பாகத் “தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்” என்னும் நூலில் கூறுவது இங்கு கவனிக்கத்தக்கது.

புதிய சமுதாய மாற்றமும் ஆங்கிலக்கல்வியும் மட்டுமன்றி, தமிழக சஞ்சிகைகளினதும் சிறுகதை எழுத்தாளர்களினதும் செல்வாக்கும் இலங்கையில் சிறுகதை தோன்றுவதற்கான முக்கிய காரணியாக இருந்துள்ளது. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவரான சி.வைத்தியலிங்கம் தனது சகாவான

இலங்கையர்கோனை நினைவுகூர்ந்து எழுதிய, "இலங்கையர்கோனும் நானும்" என்னும் கட்டுரையில் குறிப்பிடும் பின்வரும் செய்திகள் இவ்வுண்மையை நன்கு தெளிவு படுத்துகின்றன.

"உன்னதமான லட்சியங்களும் கனவுகளும் எங்கள் வாழ்க்கையில் நிரம்பி இருந்த நாட்கள் இவை. இலக்கியத்தைப் படிப்பதிலும், நாடகங்களைப் பார்ப்பதிலும், சங்கீத ரசனையிலும் எங்கள் இருவருக்கும் எப்பொழுதுமே பெரிய ஆர்வம். எழுதவேண்டும் ஏதாவது சிருஷ்டிக்க வேண்டும் என்ற உணர்ச்சி என்றும் சிறகடித்துக்கொண்டிருக்கும் சோ. சிவபாதசுந்தரம், சோ. நடராஜா, திருநீலகண்டன், இலங்கையர்கோன், நான் எல்லோருமே சேர்ந்து இலக்கியங்களை விமர்சனம் செய்வதிலும் அக்காலத்தில் எழுத்துலகில் பிரபலமாகி இருந்த சிறுகதையாசிரியர்களின் சிருஷ்டிகளைப் பற்றி ஆராய்வதிலும் கவனம் செலுத்தி வந்தோம். மணிக்கொடி பத்திரிகையின் புதிய பாணி இலங்கையர்கோனை முழுக்க முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டது. சினிமாவுக்கு வசனம் எழுதி இப்போது பிரபல்யம் அடைந்திருக்கும் இளங்கோவனின் எழுத்துகளை அவர் எப்பொழுதும் புகழ்ந்து கொண்டே இருப்பார். அவருடைய வசனங்களையும் வருணனைகளையும் மனனம் செய்து எங்களுக்கு ஆவேசத்துடன் அடிக்கடி சொல்லி வருவார். அவ்வளவு தூரம் இளங்கோவனின் எழுத்து அவரைக் கவர்ந்திருந்தது. இந்த வெறியுடன் தான் இலங்கையர் கோன் எழுத்தில் மும்முரமாக ஈடுபட்டார் என்று நினைக்கின்றேன்." இலங்கையர்கோன் மட்டுமன்றி அவரது சமகாலத்தவர் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் தமிழகப் பத்திரிகைகளாலும் எழுத்தாளர்களாலும் தூண்டுதல் பெற்றவர்களே எனலாம்.

இத்தகைய பின்னணியிலே 1930களின் பிற்பாதியில், சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், க.தி.சம்பந்தர், சோ.சிவபாதசுந்தரம் முதலியோர் இலங்கையில் பிரக்ஞை பூர்வமாக சிறுகதைத்துறையில் ஈடுபட்டார்கள். இவர்களுள் முதல் மூவரும் முக்கியமாகக் குறிப்பிடத்தகுந்தவர்கள். இவர்களே ஈழத்துச் சிறுகதையின் முன்னோடிகள், அல்லது முதல்வர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். 'இலட்சியக் கனவுகளும் எதையாவது எழுத வேண்டும் என்ற ஆர்வமும்' இவர்களது படைப்பு முயற்சிகளுக்கு உட்தூண்டுதலாக அமைந்தன. கலைமகள், கிராம ஊழியன், சூறாவளி, மணிக்கொடி, ஆனந்த விகடன் முதலிய தென் இந்தியச் சஞ்சிகைகளில் இவர்களது சிறுகதைகள் வெளிவந்தன. ஈழகேசரியும் இவர்களது எழுத்து முயற்சிக்குக் களமாக அமைந்தது.

வைத்தியலிங்கம், சம்பந்தர், இலங்கையர்கோன் ஆகியோர் சமகாலத்தவர்கள் எனினும் முதல் இருவரும் 1940ம் ஆண்டுகளுக்குப் பின்னர் அதிகம் எழுதியதாகத் தெரியவில்லை. இலங்கையர்கோன் சிலகாலம் சிறுகதைத்துறையை விட்டு விலகி இருந்தாலும் தனது மரணத்துக்கு முந்திய சில ஆண்டுகளில் குறிப்பாக 1960-1961ம் ஆண்டுகளில் சிறுகதைப் படைப்பில் முழுமூச்சாக ஈடுபட்டவர். அந்த வகையில் ஏறத்தாழ முப்பது ஆண்டு கால இலங்கைச் சிறுகதை வரலாற்றோடு அவருக்கு உறவு உண்டு என்பதையும் நாம் மனம் கொள்ள வேண்டும்.

சி.வைத்தியலிங்கம் சுமார் இருபத்தைந்து கதைகள் வரை எழுதினார் என்று தெரிய வருகின்றது. அவரது தொகுப்பு நூல்கள் எவையும் இதுவரை வெளிவராதிருப்பது ஈழத்து இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை துரதிஷ்ட வசமானதே. ஆயினும் மூன்றாம் பிறை, கங்கா கீதம், பாற் கஞ்சி ஆகிய கதைகள் சில தொகுப்பு நூல்களில் வெளிவந்துள்ளன. நெடுவழி, பிச்சைக்காரர், அழியாப் பொருள், உள்ளப் பெருக்கு, இப்படிப் பல நாள், விதவையின் இருதயம், தியாகம், பைத்தியக்காரி, களனி கங்கைக் கரையில், மின்னி மறைந்த வாழ்வு, என் காதலி, நந்த குமாரன், டிங்கிரி மெனிக்கா, பூதத்தம்பி கோட்டை முதலியன அவர் எழுதிய வேறு சில கதைகள்.

க.தி.சம்பந்தரும் சுமார் இருபது கதைகள் வரை எழுதியுள்ளார் என்று தெரிய வருகின்றது. அவரது கதைகள் எதுவும் தொகுப்பு நூலாக இதுவரை வெளிவரவில்லை. எனினும் 1967இல் இவரது ஐந்து சிறுகதைகள் விவேகி சஞ்சிகையில் ஒன்றாக வெளியிடப்பட்டன. விதி, மனிதன், புத்தரின் கண்கள், தாராபாய், துறவு, கூண்டுக்கிளி, தூமகேது, மனித வாழ்க்கை, சபலம், சலனம், அவள், இரண்டு ஊர்வலங்கள், கலாஷேத்திரம், மகாலட்சுமி முதலியன இவர் எழுதிய சில கதைகள்.

இலங்கையர்கோனின் பதினைந்து சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்று வெள்ளிப்பாதசரம் என்ற பெயரில் 1962ம் ஆண்டு அவரின் மனைவியின் முயற்சியால் வெளியிடப்பட்டது. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவரின் படைப்புகளை மொத்தமாகத் திரட்டித்தரும் ஒரே நூல் இதுவே. இத் தொகுப்பில் இடம்பெறாத இவரின் வேறு சில கதைகளும் உள்ளன. வஞ்சம், சமாதானம், கடற்கரைக் கிளிஞ்சல், தேவலோகக் காதல், கடலிலே ஒரு மீன், அந்தத் தந்தி, தேவியும் தவமிருந்து, செங்காந்தள் முதலியன அவற்றுள் சில.

ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளான இம் மூவரின் கதைகளிலே அவர்களுக்கே உரிய தனித் தன்மைகளும், வேறுபாடுகளும் காணப்படுகின்றன எனினும் சில பொதுப்பண்புகளும் உள்ளன.

வரலாற்று இதிகாச நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கதைகள் புனைதல் இக்காலப் பகுதிக்குரிய ஒரு பொதுப்போக்காகக் காணப்படுகின்றது. இலங்கையர்கோனே இத்தகைய கதைகளில் அதிக ஈடுபாடு காட்டினார் எனினும் ஏனையவர்களும் இதற்குப் புறம்பானவர்கள் அல்லர். இலங்கையர்கோனின் அனுலா, மரியா மதலேனா, மேனகை, தாய், யாழ்பாடி, சிகிரியா, தேவலோகக் காதல், மணப்பரிசு, கடற்கோட்டை முதலிய கதைகள் வரலாற்று, இதிகாச நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவையே. வைத்தியலிங்கத்தின் நந்தகுமாரன், தியாகம், பூதத்தம்பி கோட்டை, சம்பந்தரின் புத்தரின் கண்கள் முதலியனவும் இத்தகைய படைப்புகளே, சில வேளைகளில் இவர்களது வரலாற்றுக்கதைகள் சிறுகதை உருவத்துக்குள் பிடிபடாத வரலாற்றுச் செய்திகளாகவே அமைந்து விடுகின்றன. இலங்கையர்கோனின் சிகிரியா, அனுலா, மரியா மதலேனா முதலியவை இவ்வாறு சிறுகதை வடிவ அமைப்புக்குப் புறம்பானவையாக உள்ளன.

தனி மனித இன்னல்களை அல்லது உணர்வு நிலைகளை சமுதாயப் பின்னணியில் வைத்து நோக்கும் யதார்த்தப் பண்பு பொதுவாக இவர்களது கதைகளில் காணப்படுவதில்லை. இலங்கையர்கோன், வைத்தியலிங்கம் ஆகியோரின் சில கதைகளிலே நடப்பியல் வாழ்வுடன் ஒட்டிய யதார்த்தப் பண்பு ஓரளவு காணப்படுகின்றது எனினும் பொதுவாக இவர்கள் ஒரு கற்பனையான கனவுச் சூழலிலேயே தங்கள் பாத்திரங்களை உலாவ விடுகின்றனர். சம்பந்தர் யதார்த்தப் பண்பை கொள்கை ரீதியாகவே நிராகரிப்பவராகவும் காணப்படுகின்றார்.

"யதார்த்தச் சித்திரிப்பால் நமது மனம் தூய்மையடைவதற்குப் பதிலாக மேலும் மோசம் அடைகின்றது. யதார்த்தம் என்பது பைத்தியக்காரத்தனம். இத்தகைய யதார்த்தப் பண்பில் எழும் தேசிய இலக்கியங்கள் சர்வதேசிய இலக்கியங்களுக்கு ஒவ்வாதது-தேவை இல்லாதது." என்ற சம்பந்தரின் கூற்றுக்கு ஏற்பவே அவரது கதைகளும் யதார்த்தத்துக்குப் புறம்பான அழகிய கற்பனைச் சித்திரங்களாக உள்ளன. வைத்தியலிங்கத்தின் மூன்றாம் பிறை, உள்ளப் பெருக்கு, புல்லுமலையில் முதலிய கதைகளும் கற்பனையான உணர்வுப் பின்னல்களே. இலங்கையர்கோனின் வரலாற்று

இதிகாசக் கதைகளும், நாடோடி, சக்கரவாகம், கடற்கரைக் கிளிஞ்சல் போன்றவையும் இத்தகையனவேயாகும். ஆயினும் மற்ற இவருடனும் ஒப்பு நோக்குகையில் நடப்பியலோடு ஒட்டிய யதார்த்தப் பண்பு, இலங்கையர்கோனிடம் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது எனலாம். ஆரம்பகாலக் கதைகளான முதற்சம்பளம், வெள்ளிப்பாதரசம், தந்தைமனம் முதலியவையும் பிற்காலத் கதைகளான மச்சாள், அனாதை, தாழைநிழலிலே போன்றவையும் இத்தகையன. இவற்றுள் பிந்திய மூன்றும் 1960 ஆம் ஆண்டில் எழுதப்பட்டவை என்பதையும் மனம்கொள்ள வேண்டும்.

ஆண்பெண் உறவு அல்லது பால் உறவையே இவர்கள் பெரிதும் தங்களின் கதைப்பெருளாகக் கொண்டனர். சம்பவங்களை அல்லது பாத்திரங்களின் இயக்கங்களை விபரிப்பதைவிட உணர்வுநிலைக்கே அதிக அழுத்தம் கொடுத்தனர். அந்த வகையில் உணர்ச்சி மிகைப்பு இக்காலக் கதைகளில் ஒரு பொதுப் பண்பாகவும் உள்ளது. உணர்ச்சி மிகைப்பை வெளிப்படுத்துவதற்கு காவியப்பாங்கான அலங்கார மொழிநடை அவசியமாகும். இக்காலக் கதைகள் பெரிதும் இத்தகைய மொழிநடையிலேயே அமைந்துள்ளன. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோரின் சில கதைகளிலே வழக்குத்தமிழ் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது எனினும் அது அவர்களின் பிரக்ஞைபூர்வமான இலக்கியக் கொள்கையின் வெளிப்பாடு என்று கருதுவதற்கில்லை. இக்காலத்தில் எழுந்த பெரும்பாலான கதைகளில் விபரணத்திலும் உரையாடலிலும் காவியப்பாங்கான மொழிநடையே பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஈழத்துச் சிறுகதையின் இரண்டாவது தலைமுறை 1940ஆம் ஆண்டுகளில் உருவாகியது. இக்காலத்தில் இலக்கிய ஆர்வம் உடைய ஓர் இளைஞர் குழு யாழ்ப்பாணப் பகுதியில் தோன்றியது. ஈழகேசரி இவர்களின் முதன்மை வெளியீட்டுக் களமாகவும் அமைந்தது. இவர்களுள் சிலர் ஒன்றிணைந்து, 'மறுமலர்ச்சி' என்ற ஒரு சஞ்சிகையையும் வெளியிட்டனர். அதைச் சுற்றி ஓர் இலக்கியக் குழுவாகவும் உருவாகினர், ஈழத்து முன்னோடி எழுத்தாளர்கள் இவர்களுக்கு ஆதர்சமாக அமைந்தனர். தமிழகச் சஞ்சிகைகளும் அவற்றில் வெளிவந்த படைப்புக்களும் இவர்களின் எழுத்தார்வத்துக்கு தூண்டுகோலாக அமைந்தன.

இக்காலப்பகுதியில் சிறுகதை உலகில் புகுந்த எழுத்தாளர்களுள், அ.செ.முருகானந்தம், தி.ச.வரதராசன், அ.ந.கந்தசாமி, கனக செந்திநாதன்,

தாழையடி சபாரத்தினம், சொக்கன், சு.வேலுப்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் பலர் 50, 60களிலும் தொடர்ந்து எழுதினர். சிலர் இன்னும் எழுதுகின்றனர். சிலர் 50, 60களில் தான் குறிப்பிடத்தக்க கதைகளையும் எழுதினர். ஆயினும் இவர்கள் இலக்கிய உலகில் பிரவேசித்த காலத்தில் இவர்களிடம் உருவாகி அமைந்த பண்புகள் தொடர்ந்தும் நீடித்து வந்திருப்பதை நாம் காணலாம். இதே காலப்பகுதியில் இலங்கையர்கோன் வைத்தியலிங்கம் சம்பந்தன் முதலியோரும் தொடர்ந்து எழுதி வந்தனர் என்பதையும் நாம் மனம் கொள்ள வேண்டும்.

இக்காலப்பகுதியில் தோன்றிய எழுத்தாளர்களுள் அ.செ.முருகானந்தம் படைப்புகளின் எண்ணிக்கையாலும் தரத்தினாலும் முதல் இடம் பெறுகின்றார். சுமார் நூறு கதைகள் இவரால் எழுதப்பட்டன என்று தெரியவருகின்றது. இவரது வண்டிச் சவாரி, மனிதமாடு, எச்சில் இலை வாழ்க்கை முதலிய கதைகள் ஈழத்து விமர்சகர்களால் சிலாகித்துப் பேசப்படுகின்றன. இவ்வளவு கதைகளை எழுதிய இவரது தொகுப்பு நூல் ஒன்று கூட வெளிவராதிருப்பது வருந்தத்தக்கதாகும்.

1940இல் ஈழகேசரியில் வெளியான கல்யாணியின் காதல் என்ற கதையுடன் சிறுகதை உலகில் நுழைந்தவர் தி.ச.வரதராசன். வரதர் என்ற புனைபெயரில் தொடர்ந்து கதைகள் எழுதி வந்துள்ளார். அவரது பன்னிரெண்டு கதைகள் கொண்ட கயமை மயக்கம் என்ற தொகுப்புநூல் ஒன்றும் வெளிவந்துள்ளது.

ஈழத்து இலக்கியத்தில் இடதுசாரிச் சிந்தனையை அறிமுகப் படுத்திய அ.ந. கந்தசாமி சுமார் அறுபது கதைகள் வரை எழுதி இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆயினும் இவரது கதைகளும் தொகுப்புநூலாக வெளிவரவில்லை. இரத்த உறவு, நாயிலும் கடையர் போன்ற இவரது கதைகளை ஈழத்துத் விமர்சகர்கள் புகழ்ந்து பேசுவர். இக்காலப்பகுதியில் எழுதத் தொடங்கிய கனக செந்திநாதனின் வெண்சங்கு, சொக்கனின் கடல், சு.வேலுப்பிள்ளையின் மண்வாசனை, தாழையடி சபாரத்தினத்தின் புதுவாழ்வு ஆகிய சிறுகதைத் தொகுதிகள் 1960, 70-களில் வெளி வந்துள்ளன. கனக செந்திநாதன், சொக்கன், சு.வே. ஆகியோரின் தொகுப்புகளில் உள்ள கதைகள் பெரும்பாலும் 1950, 60ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்டவை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

பண்பு அடிப்படையில் இக்காலப் பகுதியில் தோன்றிய எழுத்தாளர்கள் முந்திய தலைமுறை எழுத்தாளர்களில் இருந்து அதிகம் வேறுபட்டவர்கள் அல்லர். 1930ஆம் 40ஆம் ஆண்டுகளில் ஈழத்துச் சமுதாய அரசியல் போக்குகளில் அதிக மாற்றங்கள் இன்மையே இவர்களில் காணப்படும் ஒற்றுமைக்கான அடிப்படை எனலாம். அவ்வகையில் 30ஆம் 40ஆம் ஆண்டுச் சிறுகதைகளை ஒருசேர நோக்குவதும் பொருந்தும். ஆயினும் கிராமியப் பண்பாட்டுப் பிரக்ஞை முந்திய தலைமுறை எழுத்தாளர்களைக் காட்டிலும் இவர்களிடம் முனைப்பாகக் காணப்படுவதை நாம் அவதானிக்க முடியும். அ.செ.மு., கனக செந்திநாதன், சொக்கன், சு.வெ.போன்றோரின் பலகதைகளிலே யாழ்ப்பாணக் கலாச்சாரக் கூறுகள் பலவற்றை நாம் காணலாம். இவர்கள் மூலமே யாழ்ப்பாணக் கிராமியப் பண்பாடு பரவலாகச் சிறுகதைகளில் இடம்பெறத் தொடங்கியது. எனினும் முந்திய தலை முறையைச் சேர்ந்த எழுத்தாளர்களைப் போலவே சமூக நடைமுறைகளை ஆழமாக நோக்கும் பார்வை விசாலம் இவர்களிடமும் காணப்படவில்லை. வழிவழி வந்த பண்பாட்டுணர்வும், மனிதாபிமானமும் இவர்களின் பொதுப்பண்பு எனலாம். அதற்கேற்றவகையில் சீர்திருத்த நாட்டமும் இவர்களின் கதையில் இழையோடக்காணலாம். புதிய மாற்றங்களை அங்கீகரிக்காது, பழமைக் கனவுகளில் ஆழும் மனோபாவமும் இவர்களுட் சிலரின் கதைகளில் காணப்படுகிறது. கனக செந்திநாதன், குறிப்பாக இப்போக்கின் சிறந்த பிரதிநிதி எனலாம். தனது வெண்சங்கு தொகுப்புக்கு அவர் எழுதிய முன்னுரையில்,

"அன்பு, முயற்சி, கலை, போலித்தன்மையில் வெறுப்பு, விதியின்பிடி, பணஆசை என்ற நிலைத்துநிற்கும் பொருள்களை வைத்து ஓரளவு பழமையுடனும் சமயச் சூழலுடனும் சித்திரிக்க முயன்றிருக்கின்றேன். பழைய யாழ்ப்பாணக் கலாச்சாரம் இப்புதிய சிறுகதைகளுக்கு வலுவான பகைப்புலமாக அமைந்திருக்கின்றது... யாழ்ப்பாணப் பழமை, சமயச் சூழல். பழமையான கதை சொல்லும் உத்தி என்ற என் தனித்துவத்தை நான் இழந்துவிடத் தயாராக இல்லை" என்று கூறுகின்றார். அவரது தொகுப்பில் உள்ள பல கதைகள் இப்போக்கை நன்கு பிரதிபலிக்கின்றன.

1950 ஆம் ஆண்டுகள் ஈழத்துச் சமுதாய, அரசியல் வரலாற்றில் முக்கியமான காலக்கட்டமாகும். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதாயினும் தேசிய நலனை முன்வைத்த உண்மையான போராட்டம் 1950 ஆம் ஆண்டுகளில் தான் ஆரம்பித்தது. சமுதாய முரண்பாடுகளும்,

போராட்டங்களும் கூர்மையடைந்து அரசியல் வடிவம் பெறத் தொடங்கின. 1953 இல் நிகழ்ந்த ஹர்த்தால் கஷ்டப்பட்ட மக்களின் எழுச்சிக் குரலாக அமைந்தது. 1956 ஆம் ஆண்டின் அரசியல் மாற்றத்துக்கும் அது வழி கோலியது. தேசியச் சக்திகள் அரசியல் அரங்கில் ஆதிக்கம் பெற்றன. தேசியப் பண்பாட்டுணர்வு, சோஷலிச சிந்தனை என்பன பொதுமக்கள் மயமாகத் தொடங்கின. அதேவேளை சிங்களத் தேசியவாதிகளின் தீர்க்கதரிசனமற்ற, சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக்கைகளால் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாகியது. தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத பெரும் சிக்கலாக இது மாற்றியது. 1958 இல் நாடு பரந்த இனக்கலவரத்துக்கு இது வழியமைத்தது. ஒருபுறம் பொதுவுடைமை, தேசிய ஐக்கியம் முதலிய கருத்துகள் வளர்ச்சியடைய மறுபுறம் இன உணர்வு, இனவிடுதலைக் கொள்கை என்பன வலுப்பெறத் தொடங்கின.

இத்தகைய சமுதாய அரசியல் பின்னணியிலேயே ஈழத்துச் சிறுகதை இலக்கியத்தின் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் உருவாகினர். வ.அ.இராசரத்தினம், செ.கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, கே.டானியல், எஸ்.பொன்னுத்துரை, காவலூர் ராசதுரை, நீர்வை பொன்னையன், என்.கே.ரகுநாதன், பித்தன், அ.ஸ.அப்துஸ்ஸமது, என்.எஸ்.எம். இராமையா, நந்தி, மு.தளையசிங்கம், கே.வி.நடராசன், அ.முத்துலிங்கம், இ.நாகராஜன், அகஸ்தியர், தெளிவத்தை ஜோசப் முதலியோர் இக் காலப் பகுதியில் சிறுகதை உலகில் பிரவேசித்தவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்களாவர். 60, 70களில் இவர்களது சிறு கதைகள், பல தொகுப்பு நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

1950ஆம் ஆண்டுகளில் தான் அரசியல் சார்பான இலக்கியப் பிரிவுகள் இலங்கையில் தோன்றின. இக்கால எழுத்தாளர்களை அவர்களின் அரசியல், இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையில் இரண்டு பிரிவுக்குள் அடக்கலாம். சமுதாய அரசியல் போராட்டங்களுடன் இலக்கியம் பிரிக்கமுடியாத உறவுடையது என்று கருதுவோர் ஒரு சாரார். இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் இடையே உள்ள உறவினை மறுப்பவர்கள் அல்லது அது பற்றிய பிரக்ஞையற்றோர் மறுசாரார்.

செ.கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, டானியல், ரகுநாதன், காவலூர் ராசதுரை, நீர்வை பொன்னையன், அகஸ்தியர் முதலியோர் முதலாவது பிரிவுள் அடங்குவர். இவர்கள் மார்க்ஸீய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்ற வகையில் சமுதாய அரசியல் பிரக்ஞை இவர்களின் கதைகளில்

முனைப்பாகக் காணப்படுகின்றது. சமுதாய ஏற்றத் தாழ்வு, தொழிலாளர் போராட்டம், சாதி அடக்குமுறை, தீண்டாமை, வறுமை, சுரண்டல் ஆகியன இவர்களின் சிறு கதைகளில் காணப்படும் பொதுப் பொருள்களாகும். சுருக்கமாகச் சொல்வதானால் சமுதாய வர்க்கங்களுக்கிடையே நடக்கும் போராட்டமே இவர்களது கதைப் பொருளாக உள்ளது.

அடிநிலை மக்களின் துயர் நிறைந்த வாழ்வும் ஆளும் வர்க்கம் அவர்களைச் சுரண்டும் விதங்களும், புதுவாழ்வு ஒன்றினைப் போராடி வென்றெடுக்கும் வகையில் அவர்கள் விழிப்படைந்து வருவதும் இவர்கள் கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவர்களது கதைகளில் சமுதாய சீர்திருத்த நோக்குக்குப் பதிலாக சமுதாய அமைப்பை முற்றாக மாற்றி அமைக்கும் புரட்சிகர உணர்வே பொதுவாக வெளிப்பாடு பெற்றுள்ளது எனலாம். செ.கணேசலிங்கனின், சங்கமம், ஒரே இனம், நல்லவன்; டொமினிக் ஜீவாவின் பாதுகை, தண்ணீரும் கண்ணீரும், சாலையின் திருப்பம்; கே.டானியலின் டானியல் கதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன; ரகுநாதனின் நிலவிலே பேசுவோம்; நீர்வை. பொன்னையனின் மேடும் பள்ளமும், உதயம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளிலே உள்ள பெரும்பாலான கதைகள் இதற்கு உதாரணங்களாகும். ஆயினும் சில வேளைகளில் இவர்களது அரசியல் உணர்வு கலாபூர்வமான வடிவ அமைதி பெறத் தவறி விடுவதையும் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாகக் கணேசலிங்கனின் பிற்காலக் கதைகளிலே இதை வெளிப்படையாகக் காணலாம். அவரது கொடுமைகள் தாமே அழிவதில்லை என்ற தொகுப்பில் உள்ள கதைகள் உருவச் சிதைவு அடைந்த பிரச்சாரமாகவே அமைந்துள்ளன.

காவலூர் ராசதுரை முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்தவர் எனினும் அவரது கதைகள் ஏனைய முற்போக்கு எழுத்தாளர்களின் கதைகளில் இருந்து ஒரு வகையில் வேறுபட்டவை எனலாம். இவரது பெரும்பாலான கதைகள் நகர்ப்புற மத்தியதர வர்க்கத்தின் வாழ்க்கை அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்டவை. அவர்களது மனப் போக்குகளையும் நடத்தைகளையும் துல்லியமாகச் சித்திரிப்பவை. இரு கூறுபட்ட வர்க்க முரண்பாடுகள் இவரது கதைகளில் அதிகம் இடம் பெறுவதில்லை. அந்த வகையில் ஏனையோர் கதைகளில் காணப்படுவது போல் இவரது கதைகளில் அரசியல் அம்சம் வெளிப்படையாகத் தெரிவதில்லை. இவருடைய குழந்தை ஒரு தெய்வம், ஒருவகை உறவு ஆகிய தொகுதிகளில் குறிப்பிடத் தகுந்த பல கதைகள் உள்ளன.

இரண்டாவது பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்களுள் பல்வேறு சிந்தனைப்போக்கு உடையவர்கள் உள்ளனர். வ.அ.இராசரத்தினம், நந்தி, முத்துலிங்கம், கே.வி.நடராசன் முதலியோர் திட்டவட்டமான அரசியல் சிந்தனைப் போக்குகளைத் தங்கள் சிறுகதைகளில் வெளிக்காட்டாத போதிலும் சமுதாயவாழ்வின் பல்வேறு உள் முரண்பாடுகளையும் கலாசார அம்சங்களையும் மனிதாபிமான உணர்வுடன் அவற்றில் பிரதிபலித்துள்ளனர். வ.அ.வின் தோணி, நந்தியின் ஊர் நம்புமா, முத்துலிங்கத்தின் அக்கா, கே.வி.நடராசனின் யாழ்ப்பாணக் கதைகள் முதலிய சிறுகதைத் தொகுதிகள் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்த நூல்களாகும்.

50ஆம் ஆண்டுகளில் எழுதத் தொடங்கிய எஸ். பொன்னுத்துரை, மு. தளையசிங்கம் ஆகியோர் 60, 70களில் முற்போக்கு இலக்கியத்தின் பிரதான எதிர் விமர்சகர்களாகவும் வளர்ச்சியடைந்தனர். எஸ்.பொ. ஈழத்துச் சிறந்த சிறுகதையாசிரியர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர். உள்ளடக்கத்தைவிட உருவ பரிசோதனைக்கே இவர் முதல் இடம் கொடுப்பவர். பால் உணர்வின் வக்கரிப்பினையே (Sexual Perversion) இவர் தன் கதைகளில் அதிகம் சித்திரித்துள்ளார். வீ என்ற பெயரில் வெளிவந்துள்ள இவரது சிறுகதைத் தொகுப்பில் புனைகதை எழுதுவதில் இவரது பல்வேறுவகையான ஆற்றல்களை வெளிக்காட்டும் நோக்கில் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. தளையசிங்கத்தின் கதைகளில் பால் உணர்வும் ஆன்மீகத் தேடலும் பிரதான இடம் பெறுகின்றன. உருவச் செழுமை மிகுந்த பல கதைகளை இவர் படைத்துள்ளார். க.்.ப்கா, ஹெமிங்வே போன்ற மேலைத்தேச எழுத்தாளர்களின் செல்வாக்கு இவரிடம் உண்டு என இவரே குறிப்பிட்டுள்ளார். இவரது புதுயுகம் பிறக்கிறது ஈழத்தில் வெளிவந்த நல்ல சிறுகதைத் தொகுதிகளுள் ஒன்றாகும். 1960 - 65 காலப்பகுதிகளில் இவர் எழுதிய கதைகளே இத்தொகுதியில் உள்ளன.

பித்தன், அ.ஸ. அப்துஸ்ஸமது ஆகியோர் கிழக்கிலங்கை முஸ்லீம்களின் வாழ்க்கைப் பின்னணியில் பல கதைகள் எழுதியுள்ளனர். பித்தன் குறைவாக எழுதி பிற்காலத்தில் எழுத்துலகில் இருந்து முற்றாக ஒதுங்கியபோதிலும் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த ஒருவராகக் கருதப்படுகின்றார். மதவாதிகளின் ஆசாடபூதித்தனத்தைக் குத்திக்காட்டும் இவரது பாதிக்குழந்தை ஒரு நல்ல சிறுகதையாகும். அப்துஸ்ஸமதின் எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. என்.எஸ்.எம். ராமையா, தெளிவத்தை ஜோசப் ஆகியோர்

மலைநாட்டு மக்களின் வாழ்க்கையை உள்ளடக்கமாகக் கொண்டு பல நல்ல சிறுகதைகளை எழுதியுள்ளனர். 30 ஆம், 40ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பிரதேசத்தவர்களால் மட்டும் எழுதப்பட்ட சிறுகதை 50ஆம் ஆண்டுகளில் இவ்வாறு நாடுபரந்த ஓர் இலக்கிய வடிவாக வளர்ச்சியடைந்தது.

50ஆம் ஆண்டுகளில், இலங்கைத் தமிழர்கள் மத்தியில் வளர்ச்சியடைந்த இன உணர்வு கவிதைத் துறையில் செல்வாக்குச் செலுத்தியதுபோல் வசன இலக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தியதாகக் கூறமுடியாது. இனக்கலவரகால நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பல சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன எனினும் அவை இன உணர்வைத் தூண்டும் விதத்தில் அன்றி மனிதாபிமான உணர்வைக் கிளறும் முறையிலேயே எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாகக் கூறுவதானால் தேசியரீதியிலான சமுதாய அரசியல் இயக்கத்தின் இலக்கிய வெளிப்பாடாகவே இக்காலச் சிறுகதைகள் அமைந்தன எனலாம். தேசிய இலக்கியம் என்ற கோட்பாடு இக்காலப்பகுதியிலேயே வளர்ச்சியடைந்தது. வைத்தியலிங்கம், சம்பந்தன் முதலிய ஆரம்பகால எழுத்தாளர்கள் கால இடப் பிரக்ஞை அற்றும் இந்தியச் சூழலில் இந்தியக் கதாபாத்திரங்களைக் கொண்டும் கதைகள் எழுதியுள்ளார்கள். மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர்களும் பிரக்ஞைபூர்வமான தேசிய உணர்ச்சி கொண்டவர்கள் அல்லர். ஆனால் 50-களிலேதான் நமது மக்கள், நமது பிரச்சினைகள், நமது கலாச்சாரம், நமது மொழி என்பன இலக்கியத்தில் இடம் பெறவேண்டும் என்ற எண்ணம் கோட்பாட்டு ரீதியான வடிவம் பெற்றது. தேசிய இலக்கியம், மண்வாசனை இலக்கியம், முற்போக்கு இலக்கியம் என்ற கொள்கைகள் ஆதிக்கம் பெறத் தொடங்கின. இதுவே 50க்கு பிற்பட்ட ஈழத்து இலக்கியத்தின் பிரதான பொதுப் போக்காகவும் அமைந்தது. இவ்வாறு 1950 ஆம் ஆண்டுகளில் தோன்றிய எழுத்தாளர்களால் தான் ஈழத்துச் சிறுகதைகளில் யதார்த்தம் பூரண வடிவம் பெற்றது. பேச்சு மொழி பிரக்ஞைபூர்வமாகக் கையாளப்பட்டது. உருவஉத்திப் பரிசோதனைகள் இடம் பெற்றன. சிறுகதையின் உள்ளடக்கமும் உருவமும் வளம்பெற்றன.

1950ஆம் ஆண்டுகளின் சிறுகதைப் போக்குகள் 60ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து வளர்ச்சி அடைவதைக் காணலாம். உண்மையில் 50களில் அரும்பிய போக்குகள் 60களில் முதிர்ச்சி அடைந்தன என்று கொள்வதே பொருத்தம். 50களில் தோன்றிய எழுத்தாளர்கள் பலர் 60களிலேயே அதிக

ஆற்றலுடன் எழுதத் தொடங்கினர். புதிய எழுத்தாளர்கள் பலர் எழுத்துலகில் புகுந்தனர்.

1956 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து இடதுசாரிச் சிந்தனைப் போக்கின் செல்வாக்கு 60ஆம் ஆண்டுகளில் ஆழமாகவும் பரவலாகவும் ஈழத்து எழுத்தாளர்கள் மத்தியில் இடம் பெறத் தொடங்கிற்று. இதேகாலப் பகுதியில் சர்வதேச ரீதியில் கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஏற்பட்ட சித்தாந்தப் பிளவு இலங்கையையும் பாதித்தது. 'சமாதானம் மூலம் சமூகமாற்றம்' என்ற திரிபுவாதக் கருத்தை எதிர்த்து 'புரட்சியின் மூலம் சமூகமாற்றம்' என்ற புரட்சிகரக் கருத்தை முன்வைத்தவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து தனியாகப் பிரிந்து சென்றனர். முற்போக்கு எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் அவர்களுடன் சேர்ந்தனர். பல்கலைக் கழகங்களில் சோஷலிசப் படிப்பு வட்டங்கள் உருவாகின. 1956க்குப் பின் நடைமுறைக்கு வந்த சுயமொழிக் கல்வியினால் உருவாகிய பட்டதாரி மாணவர்கள் பலர் இவ்வியக்கங்களால் ஈர்க்கப்பட்டனர். அவர்களுள் சிலர் சிறுகதை ஆசிரியர்களாகவும் உருவாகினர். செ. யோகநாதன், யோ. பெனடிக்ற்பாலன், செ. கதிர்காமநாதன், முத்து சிவஞானம் போன்றோர் இவ்வாறு பல்கலைக் கழகத்தில் இருந்து புரட்சிகர இடதுசாரிச் சிந்தனைப்போக்கின் செல்வாக்குடன் வளர்ச்சியடைந்த சிறுகதையாசிரியர்களாவர். செம்பியன் செல்வன், செங்கையாழியான் பவானி ஆழ்வாப்பிள்ளை முதலியோரும் பல்கலைக்கழகத்தில் இருந்து இக்காலப் பகுதியில் உருவாகியவர்களே. மருதூர்க் கொத்தன், மருதூர்க் கனி, சண்முகம் சிவலிங்கம், புலோலியூர் சதாசிவம் போன்ற வேறு சிலரும் 60 களில் சிறுகதைத் துறையை வளப்படுத்தினர்.

ஆரம்பத்தில் சிறுகதைகளே எழுதிய யோகநாதன் பிற்காலத்தில் குறுநாவல்களில் அதிக அக்கறை காட்டியுள்ளார். இவரது யோகநாதன் கதைகள் என்ற நூல் குறிப்பிடத் தகுந்த சிறுகதைத் தொகுப்பு ஆகும். காவியத்தின் மறுபக்கம், ஒளி நமக்கு வேண்டும் ஆகிய குறுநாவல் தொகுப்புகளும் வெளியிட்டுள்ளார். உண்மையில் இவற்றுள் சில சிறுகதைகளாகவே கருதப்பட வேண்டியன. அண்மையில் கண்ணீர் விட்டே வளர்த்தோம் என்ற இவரது சிறுகதைத் தொகுப்பும் வெளிவந்துள்ளது. யோ. பெனடிக்ற் பாலனின் சிறுகதைகள் நூல் உருவம் பெறவில்லை. ஒரே லயக் காம்பராவில் என்ற இவரது கதை மலையகத் தோட்டத் தொழிலாளரின்

வாழ்க்கை நெரிசலைத் தாக்கமான முறையில் சித்திரிக்கின்றது. இக் கதையே இவரது சொந்தக்காரன் நாவலின் வித்து எனலாம். கருத்துகளை அழுத்திச் சொல்வதற்குச் சிறுகதையை விட குட்டிக்கதை சிறந்த வடிவம் என்று கருதுவதால் போலும் இவர் பிற்காலத்தில் அதிகமாகக் குட்டிக் கதைகளே எழுதியுள்ளார். இவரது குட்டிக் கதைகள் தனிச்சொத்து என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளன.

செ. கதிர்காமநாதன் சுயமாக எழுதியது மட்டுமன்றி பிரபல இந்திய முற்போக்கு எழுத்தாளர் கிஷன்-சந்தரின் சில சிறுகதைகளை மொழி பெயர்த்தும் உள்ளார். ஆற்றல் உள்ள சிறுகதைப் படைப்பாளியான இவர் இளம் வயதிலேயே இறந்து போனது இலங்கைச் சிறுகதைத் துறைக்கு ஒரு நஷ்டமேயாகும். இவரது கொட்டும் பனி சிறந்த சிறுகதைத் தொகுப்பு. கிஷன்-சந்தரின் மொழி பெயர்ப்புக் கதையை உள்ளடக்கிய நான் சாக மாட்டேன் என்பதும் குறிப்பிடத் தகுந்த ஒரு நூல் ஆகும்.

செம்பியன் செல்வன், செங்கையாழியான், புலோலியூர் சதாசிவம் ஆகியோர் யாழ்ப்பாணக் கிராமிய மக்களின் வாழ்க்கையை உள்ளடக்கமாகக் கொண்ட பல கதைகளைப் படைத்துள்ளனர். செங்கையாழியான் பிற்காலத்தில் நாவல்களிலேயே அதிகக் கவனம் செலுத்தியுள்ளார். இவரது கதைகள் செங்கையாழியான் கதைகள் என்ற பெயரில் நூல் உருப் பெற்றுள்ளன. செம்பியன் செல்வனின் அமைதியின் இறகுகள், சதாசிவத்தின் யுகப்பிரவேசம், பவானியின் கடவுளருளும் மனிதரும் ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன. மருதூர்க் கொத்தன், மருதூர்க்கனி ஆகியோர் மருதமுனைக் கிராமத்து முஸ்லீம்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கதைகள் படைத்துள்ளனர். மருதூர்க் கொத்தன் இக்காலப்பகுதியில் தோன்றிய சிறந்த சிறுகதையாசிரியர்களுள் ஒருவராவர். இவரது கதைகள் இன்னும் நூல்உருப் பெறவில்லை. சண்முகம் சிவலிங்கம் மிகக் குறைவாக எழுதி அதிக கவனத்தைக் கவர்ந்த ஒரு படைப்பாளி. இவரது கதைகள் பெரும்பாலும் சுயதரிசன வெளிப்பாடாக உள்ளன. ஈழத்துச் சிறுகதையுலகில் இத்தகைய படைப்புக்கள் மிக அபூர்வமாகும். இவ்வகையில் இவரது மழை, நீக்கம் முதலிய கதைகள் குறிப்பிடத் தக்கன.

1970ஆம் ஆண்டுகளில் மேலும் ஒரு புதிய இளம் தலைமுறையினர் சிறுகதை உலகில் புகுந்தனர். அ. யேசுராசா, குப்பளான் சண்முகம், ஐ.சாந்தன், அ.லெ.முருகபூபதி, திக்வல்லை கமால், எம்.எல்.எம்.மன்சூர், டானியல் அன்ரனி,

நந்தினி சேவியர், முத்துராசரத்தினம், எஸ்.எல்.எம். அனிபா, மண்டூர் அசோகா, சிறிதரன், சட்டநாதன் தெணியான், உமா வரதராசன் முதலியோர் குறிப்பிடத்தகுந்த சமகாலச் சிறுகதையாசிரியர்களாவர். இவர்களிற் சிலரின் படைப்புகள் மூலம் இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் உருவம், உள்ளடக்கம், மொழிநடை ஆகியவற்றில் சில புதிய போக்குகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

நகரமயமாதலின் அல்லது முதலாளித்துவ சமுதாய முதிர்ச்சியின் அடிப்படையில் ஏற்படும் தனிமனித அக உளைச்சல்களும், அன்னிய மாதலும் (alienation) இக்காலப் பகுதியில் தோன்றிய சில சிறுகதைகளில் சிறப்பாக வெளிப்பாடு பெற்றுள்ளன. யேசுராசாவின் ஓர் இதயம் வறுமை கொண்டிருக்கிறது. குப்ளான் சண்முகனின் எல்லைகள், இலுப்பமரமும் இளம்சந்ததியும்; மன்சூரின் முரண்பாடுகள், சிறிதரனின் நிர்வாணம் முதலிய கதைகள் இப்பண்புக்குச் சிறந்த உதாரணங்களாகும். இக்கதைகளில் சமூகத்தோடு, அல்லது வீட்டோடு ஒட்டமுடியாது அன்னியப்பட்டுச் செல்லும் இளைஞர்களைக் காண்கிறோம். இது ஈழத்துச் சிறுகதையின் ஒரு புதிய பரிமாணம் எனலாம்.

மரபு ரீதியான சிறுகதை வடிவத்தில் இருந்து வேறுபட்ட கதைகளையும் இவர்களில் சிலர் புனைந்துள்ளனர். சாந்தன் யேசுராசா ஆகியோரின் பல கதைகள் இத்தகையன. அவை பெரும்பாலும் அளவில் சிறிய நினைவுச் சித்திரங்களாக அல்லது அனுபவ வெளிப்பாடாக அமைந்துவிடுகின்றன. தென் இலங்கை முஸ்லீம்களின் வாழ்வும் பேச்சு வழக்கும் இக்காலப் பகுதியிலேயே சிறுகதையில் இடம் பெறத் தொடங்கின. திக்வல்லைக் கமால் போன்றோரின் சிறுகதைகள் மூலம் ஒரு புதிய வாழ்க்கைப்புலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமாகியது. இக்கால எழுத்தாளர்களின் படைப்புகள் சில தொகுப்புக்களாகவும் வெளிவந்துள்ளன. யேசுராசாவின் தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும், சாந்தனின் ஒரே ஒரு ஊரிலே, சண்முகனின் கோடுகளும் கோலங்களும், முருகபூபதியின் சுமையின் பங்காளிகள், மண்டூர் அசோகாவின் கொன்றைப் பூக்கள் முத்துஇராசரத்தினத்தின் சிலந்தி வயல் என்பன அவற்றுட் சில.

## ஈழத்துக் கவிதைகள்

### ஈசன் உவக்கும் இன்மலர்கள்

**- அருள்திரு. விபுலானந்த அடிகளார்**

“வெள்ளை நிற மல்லிகையோ,
    வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
    வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
    வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
    உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ,
    கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு
    வாய்த்த மலரெதுவோ?
காபவிழ்ந்த மலருமல்ல
    கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி
    கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ,
    பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்ட முறாதவற்கு
    வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல
    பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி
    நாயகனார் வேண்டுவது.”

## தமிழ்க் கவிப்பித்து

**- க.சச்சிதானந்தன்**

"பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை - என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை
மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை - அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை.

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா - உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமேயடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா - தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா!.

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை - ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை
மண்ணில் ஒரு பிடியும் வேண்டியதில்லை - இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை!.

பாட்டில் ஒருவார்¢யைத் தின்றுகளிப்பேன் - உயிர்
பாயும் இடங்களிலே என்னை மறப்பேன்
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன் - அங்குக்
காயுங் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்!.
மாட மிதிலைநகர் வீதிவருவேன் - இள
மாதர் குறுநகையில் காதலுறுவேன்
பாடியவர் அணைக்கக் கூடி மகிழ்வேன் - இளம்
பச்சைக் கிளிகளுடன் பேசிமகிழ்வேன்!.

கங்கை நதிக்கரையில் மூழ்கியெழுவேன் - பின்பு
காணும் மதுரைநகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டு மகிழ்வேன் - அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டு வருவேன்!.

செம்பொற் சிலம்புடைத்த செய்தியறிந்து - அங்குச்
        சென்று கசிந்தழுது நொந்து விழுவேன்
அம்பொன் உலகமிர்து கண்டனேயடா - என்ன
        ஆனந்தம் ஆனந்தம் கண்டனேயடா!.

கால்கள் குதித்துநட மாடுதேயடா - கவிக்
        கள்ளைக் குடித்தவெறி ஏறுதேயடா!
நூல்கள் கனித்தமிழில் அள்ளிடவேண்டும் - அதை
        நோக்கித் தமிழ்ப் பசியும் ஆறிடவேண்டும்.
தேவர்க் கரசுநிலை வேண்டியதில்லை - அவர்
        தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவில் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்
        சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்!.

பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும் -அங்கு
        பைந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும்
ஓடையிலே என்சாம்பல் ஓடும்போதும் -கொஞ்சு
        ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்.

## உள்ளமிசைக்குது காவியம்

**- ராஜ பாரதி**

“முத்தொளி வீசும் முறுவலை - உயர்
        முத்தமிழ் பேசும் இதழ்களை - நிறை
சித்திரை மாதத்துப் பூரணை - மதி
        சிந்தும் நிலவு நிறத்தினை - ஒளிர்

பத்தரை மாற்றுயர் பொற்சிலை - செய்ய
        பட்டுத் துகில்கிற மேனியை -
ஒத்தே இருக்கும் அழகினைக் - கண்டு
        உள்ள மிசைக்குது காவியம்!

பாண்டிய ராசனின் வீச்சுவாள் - எறி
        பட்டொளி தேங்கு விழிகளை - உளக்
கூண்டை உருவிட வீசுவாய் - தமிழ்க்
        கூத்து முறைகளை ஆடுவாய் - என்

வேண்டுதல் ஏற்றிசை பாடுவாய் - கலை
        வெள்ளம் மடைதிறந்தோடிட - உயிர்
தாண்டவ மாடுந் தமிழிலே - மனம்
        தாவி யிசைக்குது காவியம்!

நீலக்கார் முகிற் கூட்டமோ? - என்
        நெஞ்சம் புதைந்த பின்னலோ? - உன்
கோலக் கூந்தற் பரப்பிலே - கொடி
        குலவு மல்லிகை பூத்திட - பூஞ்

சோலைக் காட்சி வெறுக்குது - கால்
        சுற்றி உலவ மறுக்குது - என
ஆழ நெஞ்செனும் பூங்குயில் - பண்
        அயரப் பாடுது காவியம்!

காந்தட் கரங்களை ஆட்டுவாய் - என்
        கற்பனைத் தேரைப் பூட்டுவேன் - பின்
தாந்தத் திங்கண தோமென - இணைத்
        தாள் சிலம்பொலி கூட்டுவாய் - மற

வேந்தர் காத்த தமிழிலே - இதய
        வீணை இசையை மீட்டுவேன் - மலர்
ஆய்ந்து கோத்த செந்தமிழ் - மணி
        ஆர மாகுது காவியம்!”

## இதோ கவிதை

- இ. முருகையன்

“காரிருள் துண்டு படும்படி பண்பு
கனன்றதொர் இக்கவிதை
காலை மலர்ந்தது போல எழுந்தது;
காண்க. இவன் கவிஞன்!
கூறிய இன்ப நறும்பதம் என்பன
கொண்டு தமிழ் வனையக்
கோகில கானம் எனும்படி பண்கள்
குழைந்து விளைந்தமையால்!

வான விளிம்பு, மரம், புனல், ஆறு,
வளைந்த மதிக்குழவி
வாவி குளங்கள், மலர்க்கொடி, ஆழி,
மடங்கி எழும் நுரைகள்,
மோன வரம்பிவை எங்கும் அலைந்து
முடிந்த அவ்வெல்லையிலே
மூளும் அருங்கவி நாளும் மனங்களின்
மோகனம் என்பதனால்!

‘போன பழம்வழி போக இருந்தது
போக விட்டேன்’ எனவே
புத்துணர் வொன்றறி வித்தமை யால்எழில்
பெற்ற தமிழ்க்கவிதை

தேனை வெலும்படி செய்தவன் ஆவி
திறந்து தமிழ் பிழிவான்
சீரிய வாசக வீரியம் எங்கள்
சிரத்தை நிமிர்த்திய தால்!

காவியம் என்பவை நீள்புவி கண்டது;
காலநெடுங்கன வின்

காரண காரியம் ஊடுருவும் கவி
காசினி கொண்டது; பொன்
ஓவியம் என்று புகழ்ந்திடு மாறும்
உயர்ந்தன சொல்லிணைகள்,
ஓசையி லேசுதி பேசிய பாடல்
ஒழுங்கு பிறந்தமையால்!

நாடு, நறுந்தமிழ், ஞான விருந்துகள்
நாளும் நடந்தவைகள்,
நாவில் இருந்த அவ்வாணி மொழிந்தவை,
நாத நயந்திகழ் சீர்
வீடி தெனும்படி மேய செழுங்கவி
வீறு சிறந்தமையால்,
வேக மிகுந்து கனிந்த பதங்களில்
வீரம் இருந்தமை யால்!

## நெருப்புப் பழம்

**- காசி. ஆனந்தன், மட்டக்களப்பு**

“நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

அன்னைத் தமிழ் ஈழம்
என்றன் உயிர்த்தாயகம்
தன்னை வென் தொட்டான்?
தமிழா எழுக! என
மின்னை இடியைப்
புயலைத் தமிழ்செய்தேன்...
என்னைக் கொடுங்கவிஞன்
என்றார் நிறையிட்டார்...
நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

ஓங்கு நெடுமதில்கள்
        உள்ளே இருட்கோலம்
தாங்க முடியா நோய்
        தாகம் பசிக்கொடுமை
தீங்கு படைக்கும்
        கொடியர் சிறைக்கோட்டம்
ஏங்கி ஒரு தமிழன்
        இங்கு மடிகின்றேன்...
                நெருப்புப் பழம் ஒன்று
                நெஞ்சில் கனிகிறது...!

என்னே இவ்வையம்!
        எனைப்போல் ஒரு மனிதன்
மண்ணாள இங்கே
        வளைந்துயான் அம்மனிதன்
சொன்னடி கைகள்
        கட்டித் தொழும்பியிற்றும்
பொண்ணைப் பயலானேன்...
        போதும்! இதுபோதும்!
                நெருப்புப் பழம் ஒன்று
                நெஞ்சில் கனிகிறது...!

வானில் கிளி பறக்கும்...
        வண்ணக் கொடிமுல்லை
தான் நினைந்த பக்கம்
        தழுவிப் படர்ந்திருக்கும்
மாநிலத்தே யான்
        அட! இம் மதில் நடுவில்
ஏனிப்படி இருந்தேன்?
        என்ன பிழை செய்தேன்?
                நெருப்புப் பழம் ஒன்று
                நெஞ்சில் கனிகிறது...!

பட்டு நிலா வான்
  மிசை எழப் பாரெங்கும்
கொட்டு முழவிசையில்
  கூத்தாட வையத்தின்
எட்டுத் திசையும்
  மகிழத் தமிழன்யான்
மட்டும் துயர் தாங்கி
  மாளப் பிறந்தேனா?
    நெருப்புப் பழம் ஒன்று
    நெஞ்சில் கனிகிறது...!

“நானோ அடிமை?”
  என நா விளிக்கிறது!
கூனோ டிருக்கும்
  உடலம் கொதிக்கிறது!
தேனோ மரணம்
  என நெஞ் சொலிக்கிறது!
ஏனோ விழியில்
  இரத்தம் பனிக்கிறது
    நெருப்புப் பழம் ஒன்று
    நெஞ்சில் கனிகிறது...!

## பாதி நாடெங்களுக்காக என்று எழுகவே

**- மகாகவி**

“ஆண்ட வெள்ளையர்கள்நேர் அறவறி தவறினார்
அசடருக் கழகியை அடகு வைத்தனர்; இப்
பூண்டுகள் தமிழை யோர் புறமொதுக்கிடுகிறார்
பொலி வழிந்தவள் தரைப் புழுதியிற் புரள்கிறாள்
மூண்டெழுந்திடுக போர் முதுமொழிக்குரிமைகள்
முழுமையும் பெறுக; இன்றேல் முடிந்தொழிக; இந்
நீண்ட நெல் வயல் நிலம் நினது காண் தமிழனே
நிசமடா நினது தோள் வலியும் நின் புகழமே!

மாற்றலார் ஆட்சியின் மதுவையுண்டரசியல்
மறைமறந்தெமை வெறு மடையரே எனநினைந்(து)
ஆற்ற வந்தவைகளை யார் பொறுத்திடுவரே?
அரிவரிச் சிறுவரும் அடவிடென்றெழுகவே!
காற்சிலம்பலற வெங்கனல் விழிச் சிதற, ஆ
கடையர் கை இடை உடைகளைய நின்றலைபவள்
பாற் சுரந்தெமயிர் காத்தவள் - பல்கலை
பயில் வைத் துயர் வளித்தவள் பழந்தமிழடா!

நாவிழந் துணவடும் நதிகள் வந்துதவிடும்
நாடு தான் எதிரிபால் நழுவவும் நலிகிறாள்

ஆவி நொந்தழுகிறாள் அன்னை செந்தமிழடா
அவளை ஒரு சரி ஆசனத்தமர வை!
கூவுநம் இளைஞரைக்; கொடுமையர் படையினால்
குலைவுறக் கூடுமோ, குமறிடும் மற உளம்?
சாவரின் மகிழ்க! நம் சந்ததிக் கெமதுமுற
றந்தை தந்தையர் தந்ததைத் தருவதெம் கடனடா!

வெடி வெடித்திடில் எதிர் வீழ்க; நாம் வாழ அவ்
விலை கொடுத்திடல் தகும்; வீணரோ எங்களைக்
குடிஎழுப்பவும், அயற்கடலிடைத் தள்ளவும்
குறி எடுத்திடுபவர்? கொடுபதில்? கொடிய கோல்
கடகடத் தரசினர் கவிழ வைத்திடு;
விதிகளை உடைத்திடுகவே - வரி மறுத்திடுக! பார்
விடியலுற்றது சமர் தொடுவதற்கெழவு முன்
வெலவெலத் தொழியுது - விசையொடித் திழிபகை!

கறையிலாத் தமிழ் தெருக்கணிகை மாதென வெறிக்
கயவரின் தயவிலாக் காலிடைப்படுவதா?
முறையிலா வழிகளில் முரடர் எம்
முடிவையே முயல, நாம் மூடியோர் மூலையில் துயில்வதா?

பறையெலாம் அதிர்க! நம் பலமெலாம் திரள்கமே!
பாதி நாடெங்களுக்காக வென்றெழுகவே!
அறமெலாம் ஒரு கறைப்படின் அவர் வெல்லுதல்
அணுப்பிளந் தெறியினும் ஆவதொன் றல்லவே!

## கடல் நடுவே ஒரு களம்

**- பிருமிள் சிவராம், திருகோணமலை**

"கடல்களைத் தாண்டி கேட்கிறது
வீறிட்டசிசுக்குரல்
காப்புடைந்தபெண்ணின் கதறல்
கனன்றெரியும் வீட்டின் குமுறல்.

சமரசப் பேச்சின் அலங்காரவளைவுக்குள்
எதிரெதிர் இனத்து மகனும் மகளும்
முகூர்த்தவேளையில்
சிரசறுபட்டு அலறிவிழும் ரணகளம்!

இனம் மொழி மதம் என்று
ஊர்வலம் எடுத்த
மூளையின் தாதுக்கள் மோதி
சங்கமம் பிறழ்ந்து
சிக்கெடுத்தது ஒரு முடிச்சு.

முடிச்சு இனி
வேஷ்டிக்கும் முந்தானைக்குமல்ல,
முஷ்டிக்கும் பொறிவில்லுக்கும்!
அமைதியின் அனுஷ்டானங்களும்.
ஆரவாரம் ஒடுங்கி ஸ்தம்பித்தன.

கல்லும் உருகி
அலையெடுக்கிறது
எரிமலைப் பிழம்பு!
மரணம் மட்டுமே என்றானபின்

மரணம் தான் என்ன..?
அழிவது உடலின்
கற்பூர நிர்தத்துவம்;
அழியாததுவோ உயிரின்
ஆரத்திச் சுடர்.

## புத்தரின் படுகொலை

**- எம்.ஏ.நு.்.மான்**

“நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
‘எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?’
என்று சினந்தனர்.

‘இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்...
என்றனர் அவர்கள்.

‘சரி சரி,
உடனே மறையுங்கள் பிணத்தை’
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.

தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது!.

## பூமி புத்திரர்

**- வ.ஐ.ச. ஜெயபாலன்**

"அந்திப் பொழுதே நள்ளிரவு இறங்கி வரும்
கொட்டும் மழைநாள்.
ஓடுவதும் நடப்பதும் நிற்பதும்
வெள்ளமென
வெறிச்சோடிப் போய்க்கிடந்த வீதியிலே
சிறுகுடையும் தலை புதைத்துத் தலை புதைத்து
நடந்து வந்தோம்.

கோழி நனைந்து குராவிக் கிடப்பதுபோல்
செயல் முடங்கிப்போன கடைகள்
இருமருங்கும்.
நன்றி மழைக்கென்றான் ஒருவன்,
முறுவலித்தோம்.
ஆமைகள் போன்ற
எதிரிப்படைகளின் கூடாரங்கள் தம்
காக்கித் தலைகளை இழுத்துக் கொண்டன.
பிள்ளைகட்காய் இயற்கை அன்னை
போர்க்களத்தல் பாதிப் பணி முடிப்பாள்.
என்பதறிந்தே இருந்தோம் நாம்.

சென்ற மழைநாள் நம்மோடு நடந்த சிலர்
புற்போர்வை மூடத் துயில்கின்றார்
நாமோ,
ஓடுகின்ற வெள்ளத்தில்

நீர்க்குமிழியாலே
வாழ்வின் கவிதை எழுதி நடக்கின்றோம்.

உதைபட்டோம்
லண்டனென்றும் பரீசென்றும்
ஓடுகளைத் தாங்கி ஒப்பாரி வைத்தபடி
பொக்கிசங்கள் உள்ளவர்கள் போனார் பரதேசம்.

எங்கே
ஏழைத் தமிழர்கள் நாம் செல்வோம்?
புறங்காட்டில் பாம்பு கழித்துவிட்ட சட்டையைப் போல்
நாறுவதே எங்கள் விதியாகிப் போனாலும்
மனித இறப்புக்கு
ஏதுமோர் அர்த்தம் இருக்கட்டும்

எங்கள் மண் இதுவெண் றெழுந்தோம்
ஓடுகின்ற வெள்ளத்தில் நீர்க்
குமிழியாலே
வாழ்வின் கவிதை எழுதி நடக்கின்றோம்."

## இரண்டாவது சூரிய உதயம்

**- சேரன்**

"அன்றைக்குக் காற்றே இல்லை.
அலைகளும் எழாது செத்துப்போயிற்று
கடல்.
மணலில் கால் புதைத்தல் என
நடந்து வருகையில்,
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.
இம்முறை தெற்கிலே.
என்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது.
எனது மக்கள் முகங்களை இழந்தனர்.
எனது நிலம் எனது காற்று
எல்லாவற்றிலும்

அன்னியப் பதிவு.

கைகளை பின்புறம் இறுக்கிக்கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது நெருப்பு
தன் சேதியை எழுதியாயிற்று
இனியும் யார் காத்துள்ளனர்?
சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து
எழுந்து வருக.

## விழிப்பு

**- சன்மார்க்கா**

“சமையல் செய்யும் இயந்திரமாக
ஆண்டுகள் பல தூங்கிக் கிடந்தாய்
உன்சிறு வீடே உனதுலகானது
உப்பும் புளியுமே பிரச்சனையானது
உனது வாழ்நாள் இவ்வாறாக
உழுத்துப் போனது -
உன்னைச் சுரண்டி வாழ்ந்தது உலகம்
உன்னை நினத்து அழுதவர் கொஞ்சம்.

அனால்-
தாயே! நீ இன்று விழித்துக் கொண்டாய்
தெருவில் இறங்கி ஊர்வலம் வந்தாய்
அன்னையருடன் அணி
திரண்டு விட்டாய்

அகப்பை பிடித்த கைகளில் பதாகை;
போதும் கொடுமைகள் என்ற முடிவு
பிள்ளைகள் பற்றி நெஞ்சில் ஏக்கம்
கண்களில் சோகம்
நடையில் வேகம்
இறுதியில் வெற்றி உனக்கே தாயே!

உலகில் பாதி பெண்கள் ஆனதால்
உங்கள் பலத்தை உணர்ந்து விட்டீர்கள்
நித்திரை செய்த காலம் முடிந்து
நீதியக் கேட்கும் காலம் வந்தது.
வீட்டுக்கு வீடு அன்னையர் வந்தனர்
உன்பலம் உணர்ந்து
நீ நிமிர்ந்த வேளை
தாயே எமக்கு விடிவு வந்தது!".

## இன்று நான் பெரிய பெண்

**- அ.சங்கரி**

"நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பனியாய் உறைந்த நீர்,

பூவைப் போலவும்
காற்றைப் போலவும்
நீரைப் போலவும்
குதித்துத் திரிந்து
சுற்றிய பருவத்தில்

காலை உதைத்து
வீரிட்டு அழவும்
கல கல என்று
கைதட்டிச் சிரிக்கவும்
கோபம் வந்தால்
கொப்பியைக் கிழிக்கவும்
முடிந்த காலம்.

மரத்தில் ஏறவும்
மாங்காய் பிடுங்கவும்
பக்கத்து வீட்டுப்
பிள்ளைகளுடனே

கிட்டி அடிக்கவும்
ஒளித்துப் பிடிக்கவும்
ஒன்றும் பேசிலர் எவரும்.

இன்று
நான் பெரிய பெண்
உரத்துச் சிரித்தல் கூடாது,
விரித்த புகையிலை
அடக்கம்; பொறுமை;
நாணம்
பெண்மையின் அணிகலம்,
கதைத்தல்; சிரித்தல்
பார்த்தல்; நடத்தல்;
உடுத்தல்
எல்லாம் இன்னபடி என்றெழுதி

நான்
கல்லாய்
பாறையாய்
பனியாய்
பெண்ணாய். . . ”

# அயலகத் தமிழ் இலக்கியம் - கதைகள்

## சக்கரவாகம்

**- இலங்கையர்கோன்**

"வேலுப்பிள்ளை, நாடி நல்லாய் விழுந்து போச்சு. வயதுமோ பின்னிட்ட வயது; இன்னும் இரண்டு மணித்தியாலத்திற்குள் எல்லாம் முடிந்து போய்விடும். மனதைத் தேற்றிக்கொள்."

இந்தக் கொடிய தீர்ப்பைத் தன் இளம் வயதிற்கு உரிய யோசனை யின்மையோடு அநியாயமாக வீசிவிட்டு, அதன் விளைவைப் பார்க்க விரும்பாதவன் போல் வைத்தியன் சால்வையை உதறித் தோளிற் போட்டுக்கொண்டு வீட்டு வாசலைக் கடந்து வேகமாக நடந்தான்.

வேலுப்பிள்ளை அசந்துபோய்த் திண்ணையிற் சாய்ந்தான்... மனத்தின் உந்துதல் இல்லாமலே அவனுடைய கை அருகில் கிடந்த காம்புச் சத்தகத்தை எடுத்து யந்திரம் போலப் பனை ஓலைச் சட்டங்களை வார ஆரம்பித்தது. உள்ளே அவள் - அவனுடைய மனைவி வாங்குக் கட்டிலின் மேல், உடலின் பலம் எல்லாம் குன்றி, முகம் களையிழந்து, கண்கள் பஞ்சாடிக்கிடந்தாள். எந்தக் கஷ்டமான வேலையாயினும் பின்வாங்காமல், நாற்பது ஆண்டுகளுக்கு மேல் பம்பரம் போலச் சுழன்று கொடுத்த அவளுடைய 'வரிச்சுத்' தேகம் இன்று அசந்துபோய்க் கிடந்தது. அவளுடைய பிராணன் கொஞ்சம் கொஞ்சமாகப் போய்க் கொண்டிருந்தது. அதை அறிந்து கொள்வதற்கு வைத்தியன் தேவையில்லை. வேலுப்பிள்ளையின் வீட்டில், அவனுடைய பாதுகாவலின் கீழ் அவன் மனைவியினுடைய உயிரை யமன் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துக் கொண்டிருந்தான். யமனுடைய சோரத்தை அறிந்தும் அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. . .

அவளுடைய மக்களும் அறுவர் வாங்குக் கட்டிலைச் சுற்றி வளைத்துக் கொண்டு செயலற்று நின்றனர். அவளுக்கு - ஈன்று வளர்த்த அன்னைக்கு - சாவதற்கு உதவி செய்யத்தான் அவர்களால் முடிந்தது. ஒருத்தி நெஞ்சைத் தடவி விட்டாள், இன்னொருத்தி வாயில் பால் வார்த்தாள்... யார் இருந்து என்ன?

அடுத்த வீட்டு அன்னமுத்து வண்ணான் கொண்டு வந்தபடி ஒரு சேலை உடுத்து, கழுத்தில் புதிதாக மினுக்கிய அட்டியலும் கையில்

காப்புகளும், எண்ணைய் தேய்த்து வாரி முடித்த கொண்டை முதுகில் புரள அசைந்து அசைந்து வந்தாள். வேலுப்பிள்ளைக்கு அவளைக் காண ஆத்திரமாக வந்தது. சாகமுன்னுக்கே செத்தவீடு கொண்டாட வாறாள் இந்தத் தேவடியாள்!'

"அம்மான், மாமிக்கு எப்படி?"

"அப்பிடித்தான் போய்ப்பார்" என்று அலுத்துவிட்டு, வேலுப்பிள்ளை தன் புடலங்காய் போன்ற கால்களை மடக்கி நாடியின் கீழ் வைத்துக் கொண்டு மறுபடி தன்னுள் ஆழ்ந்தான்...

திடீரென்று நாற்பது வருடங்களுக்கு முன் தெய்வானை மணப் பெண்ணாய் முதல் முதல் 'தாறு பாய்ச்சிச்' சேலை உடுத்து மருளும் கருவிழிகளால் அவனையும் நிலத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு, நாணிக் கோணி நின்ற காட்சி அவனுக்கு ஞாபகம் வந்தது. அன்று முதல் இன்று வரை அவன் அவளாய், அவள் அவனாய் ஒன்று பட்டு, உழைப்பு நிறைந்த ஒரு கஷ்ட ஜீவனத்தின் ஒவ்வொரு அலுவலிலும் சமபங்கு எடுத்துக் கொண்டு வாழ்ந்த வாழ்வு!

காதல் என்ற வார்த்தை அவர்களுக்குத் தெரியாது. விவாகரத்து, கர்ப்பத்தடை முதலியனவற்றைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டதே இல்லை... ஆனால் வாழ்க்கை , கொடிய வறுமையிலும் செம்மையாய், பிணக்குகள் தடி அடிச்சண்டைகளுக்கிடையிலும் ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் கொண்டதாய், பூவுலக மோட்சமாய்ப் பரிமளித்தது... நாற்பது வருஷம் - நாற்பது நாள்!

"அப்பு, ஆச்சிக்கு ஒருமாதிரிக்கிடக்கு, வந்து பாரெணை" என்று அவனுடைய இளைய மகள் பர்வதம் வாசலில் வந்து சொன்னாள்.

"ஐயோ! வந்திட்டுது, முடியப்போகுது" என்று நினைத்துக் கொண்டு வேலுப்பிள்ளை எழுந்து உள்ளே போனான். தெய்வானையின் கால்கள் நேராக நீட்டப்பட்டு, கைகள் மார்பின் மேல் பொருத்தப் பட்டிருந்தன, சாவுக்கு ஆயத்தமாய். "அன்னமுத்தியின் வேலை" என்று அவன் நினைத்தான். செயலற்றுக் கிடக்கும் மனைவியின் உடலை உற்றுப் பார்த்தான்.... மூச்சு வேகமாக வந்து கொண்டிருந்தது. கழுத்துக் குழியிலே ஏதோ படபடத்தது. 'ஐயோ ஐயோ' என்று அவன் உள்ளம் செயலற்று அலறியது. மறுகணம் 'தெய்வீ தெய்வீ' என்று கெஞ்சியது...

தெய்வானையின் கண்கள் பாதி மூடியபடி கூரையில் பதிந்திருந்தன. அந்தகாரமான இருட்கடலின் மத்தியில் எப்பொழுதோ இறந்துபோன அவளுடைய

தாயின் முகம் சொல்லொணா இளமையும் அழகும் கொண்டு புன்னகை புரிந்தது. அந்த இருட்கடலைத் தாண்டி அந்த முகத்தைப் பிடித்துவிட வேண்டுமென்று தெய்வானை தவித்தாள். அவளுடைய ஒடுங்கும் சிந்தையில் ஏதோ அர்த்தமற்ற வார்த்தைகள் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தன. "ஆச்சி பூச்சி அம்பட்ட வளவில் முள்ளுச்சூப்பி... ஆச்சி பூச்சி"

மூவுலகும் கொள்ளாத ஒரு கருணை தேங்கி நின்ற அன்னையின் முகம் தன்னுடன் ஒரு ஒளி வட்டத்தையும் கொண்டு இருட்கடலைத் தாண்டித் தெய்வானையை நோக்கி வந்துகொண்டிருந்தது. "...ஆச்சி பூச்சி அம்பட்ட வளவு...."

வேலுப்பிள்ளை தனக்குத் தெரிந்த ஒரு திருவாசகத்தைப் பாட ஆரம்பித்தான். மனிதர் சாகும் தறுவாயில் தேவாரம் திருவாசகம் பாடவேண்டும் என்பது அவனுக்கு ஞாபகம் வந்தது.

"அம்மையே அப்பா" ... அவனுடைய குரலிலே சிந்த முடியாத ஒரு கண்ணீர்க் கடல் தேங்கி நின்றது.

தெய்வானைக்குத் தன்னை மறந்த ஒரு ஆனந்தம். "ஆச்சி" பூச்சி....! இதோ அன்னை மிக அருகில் வந்துவிட்டாள். இருட்கடல் மறைந்து முழுவதும் ஒளிக்கடலாயது.

"ஆச்சி ஆச்சி... என்ரை ஆச்சி" அன்னையின் கண்கள் தெய்வானையை அகன்று மருட்டி அழைத்தன... இதோ...

"ஆச்சி!"

"என்ரை ராசாத்தி போட்டியோ!" என்று வேலுப்பிள்ளை புரண்டழுதான். "ஆச்சி ஆச்சி" என்று மக்கள் கதறினர். அன்னமுத்து தான் மனப்பாடம் செய்து வைத்திருந்த ஒப்பாரி வரிசைகளைக் கண்ணீர் இல்லாமல் ராகத்துடன் எடுத்துவிட்டாள்.

தெய்வானைக்கு அறிவு தெளிந்த பொழுது திடீரென்று விலங்குகள் தெறித்து, சிறைச்சாலைக் கதவுகள் தகர்ந்து விடுதலை கிடைத்து விட்டது போல் தெரிந்தது. ஆ! என்ன விடுதலை! அவள். தான் நினைத்தபடி மனோ வேகமாக எங்கும் போக முடிந்தது. அவளுடைய உடல் காற்றாகிவிட்டதோ? அல்லது உடலே இல்லையா? அவளுக்கு இரவு பகல் தெரியவில்லை . அவளுக்குக் குன்றாத இளமையும், வற்றாத ஊக்கமும், எதையும் கிரகித்து அறிந்து கொள்ளும் அகன்ற மனமும் வாய்த்து விட்டது போலத் தெரிந்தது. தன்னுள்ளே ஒரு எல்லையற்ற ஆனந்த சுதந்தர உணர்ச்சி ததும்பி வழிந்து கொண்டிருந்தது...

எண்ணரிய யோசனை தூரத்திற்கு அப்பால், பூவுலகில் இருந்து ஒரு தீனமான குரல் அவளுடைய இன்பத்தினிடையில் வந்து புகுந்து அவளுடைய நிம்மதியை குலைத்தது. "தெய்வீ தெய்வீ" என்று அலறும் அந்தக் குரலில் நிறைந்திருந்த நம்பிக்கை இழந்த ஏக்கம் அவளுக்கு பூலோக வாசனையை ஊட்டி பிரிவுத்தாக்கத்தைத் தோற்றுவித்தது. தன்னுடைய கணவன் துணையிழந்து நாதியற்றுக் கலங்குகிறான். தன்னை நினைத்து ஏங்குகின்றான் என்பது அவளுடைய பரந்த மனதில் தெளிவாகப்பட்டது. ஓடிப்போய் அவனை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவள் உள்ளம் துடித்தது. ஆனால் அவளால் அவனை அணுக முடியவில்லை. அவன் மனித உடற் பிணிப்பிலே கட்டுண்டு கிடந்தான்...

கனவுகளில் மட்டும் அவன் தன்னை அறிந்து கொள்ளும்படி செய்ய முடிந்தது. ஆனால் அவைகளினால் அவளுடைய தாகம் அடங்கவில்லை . வைக்கோல் அடைத்த உயிரற்ற கன்றின் உடலைக் கண்டு இரங்கும் பசுப்போல் ஒரு ஊமைத்துயரம் அவளை வாட்டியது. அவன் என்று தன்னுடன் வருவான் என்பதே அவளுக்குச் சதா ஆவல். அவனது துணை இன்றி எந்த இன்பமும் நில்லாது என்று அவள் கண்டுகொண்டாள்.

தெய்வானை இறந்த தினத்தில் இருந்து வேலுப்பிள்ளை வாழ்விலே பிடிப்பை இழந்து விட்டான். "தெய்வீ தெய்வீ" என்று உள்ளூர எந்நேரமும் அலறிக் கொண்டிருந்தான். அவளுடன் தான் வாழ்ந்த வாழ்க்கையை முதலில் இருந்து நினைத்து,, நினைத்து ஏங்குவதே அவனுக்குத் தொழிலாய்ப் போய் விட்டது. "தெய்வீ தெய்வீ." இடையிடையே அவளைக் கனவிற்கண்டு படிப்படியாக அவன் ஏக்கம் அதிகரித்தது.

"அப்பு என்னோடை வந்து கொஞ்ச நாளைக்கு இரென். எனக்கும் துணையாய் இருக்கும். உனக்கும் பிராக்காய் இருக்கும்" என்று அவனுடைய இரண்டாவது மகள் வள்ளியம்மை அழைத்தாள். இடம் மாறினால் ஒருவேளை அவனுடைய ஏக்கம் குறையலாம் என்று அவள் நினைத்தாள்.

"வேண்டாம் மேளே, நான் இங்கினைதான் கிடக்கப் போறேன்" என்று அவன் மறுத்துவிட்டான். நாளடைவில் அவன் எதிலும் பற்று அற்று ஒரு நடைப்பிணம் ஆகிவிட்டான்... மூன்று மாத காலத்திற்குள் அவனுடைய அறுபது வயது தொண்ணூறு வயதாகியது...

"கிழவன் படுக்கையாய் விழுந்திட்டுது அதுகும் போகப் போகுது போலை" என்று அன்னமுத்து தன் கணவனுக்குச் சோறு பரிமாறிக் கொண்டே சொன்னாள்.

“ஓமாக்கும் என்ன இருந்தாலும் கிழவனும் கிழவியும் நல்ல ஒற்றுமையாய் இருந்தவை...” என்று பொன்னம்பலம் இழுத்தான்.

வேலுப்பிள்ளை பிரக்ஞை இல்லாமல் அதே வாங்குக்கட்டிலிற் கிடந்தான். அவனுடைய மக்கள் அறுவரும் மீண்டும் வந்து கூடினர். “வாத ஜன்னி - தள்ளாத வயது இன்றோ நாளையோ” என்று வைத்தியன் கையை விரித்துவிட்டான். அன்னமுத்து கழற்றி வைத்திருந்த அட்டியலை மினுக்கி அணிந்து கொண்டு வந்து சேர்ந்தாள்.

கனவோ உண்மையோ என்று சொல்ல முடியாதபடி தெய்வானையின் உருவம் அவ்வளவு தெளிவாக வேலுப்பிள்ளையின் கண்ணெதிரில் மின்னிக் கொண்டிருந்தது. தன் உடலை அவனுக்கு முதல் அர்ப்பணம் செய்த பொழுது அவள் முகத்திலும் உடலிலும் காணப்பட்ட சோக - நாண - மகிழ்ச்சி இப்பொழுது காணப்பட்டது. கைகளை நீட்டி அவளை அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும் போல் வேலுப்பிள்ளைக்குத் தோன்றியது. அவனுடைய இடக்கைச் சுட்டுவிரல் மட்டும் மெதுவாக ஒரு லயத்திற்கு அசைந்து கொண்டிருந்தது. உடலில் வேறெவ்வித அசைவும் இல்லை.

அவனுடைய இளைய மகன் ராமலிங்கம் திருவாசகம் பாடினான். வள்ளியம்மை திருநீற்றை அள்ளி வேலுப்பிள்ளையின் நெற்றியில் பூசினாள்.

சட்டென்று வேலுப்பிள்ளையின் கண்ணெதிரில் கோரமான இருள் சூழ்ந்தது. தெய்வானையைக் காணவில்லை... அவன் வாய்விட்டு அலறினான்.

“தெய்வீ...!” என்று ஒரே பாய்ச்சலில் இருட் கடலைத் தாண்டிவிட்டான்!

அவனுடைய பெண் மக்கள் “அப்பூ ஊ! அப்பூ ஊ!” என்று அலறினர். அன்னமுத்து சாவதானமாகப் பிணத்தின் கால்களை நீட்டிப் பெருவிரல்களைச் சேர்த்துக் கட்டிவிட்டு, “கண்டியிலே காத்தடிக்க, கைவிளக்கு நூந்தல்லோ ஓ ஓ ஓ!” என்று ஆரம்பித்தாள்.

# தோணி

**- வ.அ. இராசரத்தினம்**

கரு நீலமாகப் பரந்து கிடக்கும் வங்காள விரிகுடாவைப் பார்த்தவாறு எங்கள் கிராமம் இருக்கிறது. கிராமம் என்றா சொன்னேன்? பூமி சாத்திர, சமூக சாத்திர நியதிப்படி, கிராமம் என்றால் எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. சோழகக் காற்றுச் சரசரத்துக் கொண்டிருக்கும் தென்னை மரங்களடியிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏறக்குறைய முப்பது ஓலைக்குடிசைகள் இருக்கின்றன. ஒரு குடிசையிலிருந்து மற்றக் குடிசைக்குப் போகப் பெண்களின் தலைவகிடு போல ஒற்றையடிப் பாதைகள் செல்கின்றன. இந்தக் குடிசைகள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கிராமம் என்று சொல்கிறேன். சரியோ பிழையோ? உங்கள் பாடு.

எங்கள் குடிசைக்கு முன்னால் தென்னை மரங்கள் இரண்டைச் சேர்த்து நீண்ட கம்பு ஒன்று எப்போதும் கட்டப்பட்டிருக்கும். அதிலேதான் தூண்டிற் கயிறுகளையும் தோணியைச் செலுத்த உதவும் சவளையும் என் தந்தையார் வைப்பது வழக்கம். அதன் கீழே தென்னை மரத்தினடியிற் பென்னம் பெரிய குடம் ஒன்று இருக்கும். அந்தக் குடத்திலே தண்ணீர் எடுப்பதற்காக ஒற்றையடிப்பாதை வழியாக அம்மா அடுத்த குடிசைக்குப் போகும்போதெல்லாம் நானும் கூடப்போயிருக்கிறேன்.

அநேகமாகக் காலை வேளையில் அம்மாவும் அப்பாவும் வீட்டில் இருக்கமாட்டார்கள். அப்பா கோழி கூவும் போதே எழுந்து கடலுக்குப் போய்விடுவார். அம்மாவிற்கு வெளியே என்ன வேலை இருக்குமோ, என்னால் ஊகித்துக் கொள்ள முடியாது. ஆனால், அம்மா வீட்டிற்கு வரும்போதெல்லாம் பனையோலைப் பெட்டியில் அரிசியும், மரவள்ளிக் கிழங்கும், தேங்காயும் கொண்டு வருவதை நான் பார்த்திருக்கிறேன். அம்மா வீட்டுக்கு வந்து சிறிது நேரத்திற்கெல்லாம், அப்பாவும், தூண்டிற்கயிறுகளோடும், சவளோடும், மீன் கோவையோடும் வீட்டுக்கு வந்துவிடுவார்.

அப்பாவும் அம்மாவும் வீட்டிலில்லாத நேரங்களில் ஒரே குஷிதான்! ஏறுவெய்யிலின் மஞ்சட்கிரணங்கள் சரசரக்கும் தென்னோலைகட்கூடாகவும், துள்ளிப் பாய்ந்து நிலத்தில் வெள்ளித் துண்டுகளைப் போல வட்ட வட்டமாக ஒளியைச் சிந்தும். அந்த வட்ட ஒளியை நான் என் கையால் மூட, அந்த ஒளி என் புறங்கையில் விழ, அடுத்த கையால் நான் அதை மறைக்க, அவ்வொளி

அடுத்த கையிலும் விழ, நான் கைகளை ஒளி விழுமாறு உயர்த்தி உயர்த்திக்கொண்டே போவது எனக்குப் பிடித்தமான விளையாட்டாக இருக்கும். ஆனால் கூரைக்கூடாக ஒளி பாய்ந்துவரும் துவாரம், என்னால் எட்ட முடியாத உயரத்தில் இருக்கிறபடியால் நான் என் விளையாட்டை முடித்துக்கொள்வேன்.

குடிசைக்கு வெளியே வந்தால், அங்கே பக்கத்து வீட்டிலிருந்து என் நண்பன் செல்லனும் வந்திருப்பான். செல்லன் என்னைவிட நோஞ்சான். பாய்மரக் கம்புபோல நீளமாக இருப்பான். இன்னமும் ஐந்தாறு வருடம் சென்றால் அவன் தென்னைமரத்து வட்டைத்தொட்டு விடுவான் என்று என் அம்மாகூட அவனைப் பரிகசிப்பதுண்டு.

செல்லன் வந்ததும், நான் எங்கள் வீட்டுப் படலையை இழுத்துச் சாத்திவிட்டு, அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே ஆற்றங்கரைக்கு ஓடுவேன்.

ஆற்றங்கரை, வீட்டிலிருந்து அதிக தூரத்திலில்லை. வங்காளக் கடல் சிறிது உள்ளே தள்ளிக்கொண்டு வந்து ஒரு சிற்றாறாக எங்கள் கிராமத்திற்கூடாகச் சென்று கொண்டிருந்தது. அந்த ஓடையில் பூரணையன்று வெள்ளம் வரும்போது தண்ணீர் எங்கள் வீட்டு முற்றத்திற்கே வந்து விடும்.

அந்த ஆற்றங்கரையின் ஓரமாக, ஆற்றில் நீண்டு வளர்ந்த கோரைப்புற்கள் சடைத்துக் கிடக்கின்றன. அந்தப் புற்களினடியில் நீருக்குள் ஓசைப்படாமல் இரு கைகளையும் கூட்டிவைத்து இறால் பிடிப்பதில் எங்கட்குப் பரம திருப்தி என்றாலும் இந்த விளையாட்டில் எங்கட்கு அலுத்துப் போய்விடும். அதன்பின் தாங்கள் நேரடியாகக் கடற்கரைக்கே போய்விடுவோம்.

கடற்கரையில் கச்சான் காற்று சுழற்றிச் சுழற்றி அடிக்கும். அந்தக் காற்றில் இராவணன் மீசைகள் எல்லாம் நிலத்தில் பட்டும் படாமலும் உருண்டு உருண்டு பந்தயக் குதிரைபோல வேகமாக எங்களை நோக்கி ஓடி வரும். அவைகளைத் துரத்திப் பிடிப்பதற்காக தானும் செல்லனும் எங்கள் அரையில் கட்டியிருக்கும் துண்டைக் கழற்றிக் கழுத்தை வளைத்துப் போட்டுக்கொண்டு கோவணத்தோடு ஓடுவோம். இரண்டு மூன்று இராவணன் மீசைகளைத் துரத்திப் பிடித்தபின் அந்த விளையாட்டிலும் எங்கட்கு அலுப்பு ஏற்பட்டுவிடும்.

அதன் பின்னால், நாங்கள் இருவரும் கடற்கரை வெண்மணலில், மதாளித்துப் படர்ந்து கிடக்கும் அடம்பன் கொடிகளின் மேல் குந்திக் கொள்வோம். பதை பதைக்கும் வெய்யிலில் அந்த அடம்பன் கொடி மெத்தை

எங்களுக்குக் ‘கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரு’வாகத்தான் இருக்கும். அந்தப்பட்டு மெத்தையின் மேல் வீற்றிருந்துகொண்டு எதிரே கடவுளைப்போல ஆதியும் அந்தமும் அற்றுப் பரந்து கிடக்கும் கருநீலக் கடலிலே அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாய் விரித்தாடும் பாய்த்தோணிகளைப் பார்த்துக் கொண்டிருப்போம். கடற்பரப்பிலே வெள்ளைச்சீலைப் பாய்கள் வட்ட வட்டமாக, வண்ணத்திப் பூச்சிகளைப் போல அழகாக இருக்கும். அவைகளில் ஏதோ ஒன்றில்தான் தகப்பனார் இருப்பார். ஆனால், எதிலே அவர் இருக்கிறார் என்று திட்டமாக எனக்குத் தெரியாது. எனினும், ஏதாவது ஒரு தோணியைக் குறிப்பிட்டு, அதில்தான் அவர் இருப்பதாக எண்ணிக் கொள்வேன். அந்த நம்பிக்கையில், முகத்தில் ‘சுள்’ என்றடிக்கும் சூரியக் கிரணங்களை நெற்றிப் பொட்டில் கைகளை விரித்து மறைத்துக்கொண்டு அந்தத் தோணியையே பார்த்துக் கொண்டிருப்பேன் அந்தச் சமாதி நிலையில், என்னுள்ளே இன்பகரமான கனவுகளெல்லாம் எழும். இன்னும் சில நாட்களில் நான் பெரியவனாகி விடுவேன்; அப்போது, அப்பாவிற்குப் போல, எனக்கும் ஒரு தோணி சொந்தமாகக் கிடைத்து விடும். அந்தத் தோணிக்கு வெள்ளை வெளேரென்று அப்பழுக்கில்லாத ஒரு பாயைப் போட்டுக்கொண்டு நான் கடலிற் செல்வேன்; ஒரு தென்னைமர உயரத்திற்கு எழுந்து வரும் கடல் அலைகளில் என் தோணி தாவித்தாவி ஏறி இறங்கிக்கொண்டே செல்லும். எல்லாத் தோணிகளையும்விட வேகமாக ஓடுவதற்காக என் தோணியின் பாய் பெரியதாக இருக்கும். அந்தப் பாய்க்குள் சோழகக் காற்றுச் சீறியடித்துக் கொண்டிருக்கையில், என் தோணி கடற்பரப்பில் ‘விர்’ரென்று பறந்து செல்லும். நான் பின்னணியத்தில் தலைப்பாகைக் கட்டோடு தைரியமாக நின்று சுக்கானைப் பிடித்துக்கொள்வேன்; செல்லன் முன்னணியத்தில் நின்று எனக்குத் திசை காட்டுவான். எங்கள் தோணி முன்னே முன்னே ஏறிச் சென்று, கடைசியாய், கடல் வானத்தைத் தொடும் இடத்திற்குப் போய்விடும். அங்கே அம்மா இராத்திரி சொன்ன கதையில் வரும் ஏழு தலை நாகத்தைக் காண்பேன்….

தூரத்தே நான் குறி வைத்திருந்த தோணி சமீபித்துவிட்டது. அதிலே என் தகப்பனார்தான் இருந்தார். தோணி கரையை அடைந்ததும், அவர் பாயைக் கழற்றி வைத்துத் தோணியை ஓடை வழியாக இழுத்துச் சென்றார். நானும் அவரோடு சேர்த்து கொண்டேன். பிறகு, நாங்கள் எங்கள் வீட்டின் முன்னால் தோணியைக் கரையில் கொறகொற என்று இழுத்து வந்தோம். அப்பா தூண்டிற் கயிறுகளை வளையமாக்கி சவளில் போட்டு என்னிடம் கொடுத்தார். தோணிக்குள் இருந்த பழஞ்சோற்றுப் பானையையும், மீன் கோவையையும்,

நங்கூரத்தையும் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு அப்பா பின்னே வர, நான் சவளைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு, சப்த சமுத்திரங்களையும் கடந்துவந்த வீரனைப்போல முன்னே நடந்தேன்.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. பசித்தவன் விருந்துண்ணக் கனாக் காண்பது போல நானும் தோணியைப் பற்றியே கனாக் கண்டேன். எங்கள் வீட்டுக்கு முன்னாலுள்ள ஓடையில் ஐந்து புத்தம் புதிய தோணிகள் இருந்தன. நான், முன்னணியம் உயர்ந்து சவாரிக் குதிரை போல இருந்த தோணியின் மேல் ஏறிக்கொண்டேன். வாடைக்காற்றானபடியால் எல்லோருடைய தோணிகளும் முன்னேற முடியாமல் கரையை நோக்கியே வருகின்றன. என்னுடைய தோணி மட்டும் எரிந்துவிழும் நட்சத்திரம் போலக் கனவேகமாகக் காற்றை எதிர்த்துப் போகிறது. கலங்கரை விளக்கின் ஒளிகூடக் கண்ணுக்குப்படாத அத்தனை தூரத்திற்கு ஆழ்கடலின் நடுமையத்திற்கே என் தோணி போய் விடுகிறது…

நான் திடீரென்று விழித்துக்கொண்டேன். காலையில் எழுந்தபோது கூட எனக்குத் தோணியின் நினைவு மாறவில்லை. அன்று நான் ஓடைக் கரையில் பழுது பார்க்க இழுத்து வைக்கப்பட்டிருக்கும் தோணி ஒன்றைத் தள்ளிக் கொண்டு கடலிற்குப் போவது எனத் தீர்மானித்துக் கொண்டேன். செல்லனைக் கூட்டிக் கொண்டு போய், இருந்த தோணியை எங்கள் பலத்தையெல்லாம் கூட்டித் தள்ளிப் பார்த்தேன். தோணி அசையமாட்டேன் என்றது. அப்படியானால் நான் தோணி விடவே முடியாதா? சப்த சமுத்திரங்களையும் என்னால் தாண்ட முடியாதா?

நான் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்கையில் ஓடையில் முருக்க மரத்துண்டு ஒன்று மிதந்து வந்தது. அதைக் கண்டதும் எனக்கு ஒரே சந்தோஷமாகப் போயிற்று. ஆம்; எனக்கென்று ஒரு தோணி கிடைத்துவிட்டது! அந்த முருக்கங்கட்டையை முன்னாலும் பின்னாலும் கொடுவாக்கத்தியினால் செதுக்கி உள்ளே குடைந்து தோணி ஒன்றைச் செய்தேன். பின்னர், அந்தத் தோணியில் செல்லனையும் ஏற்றிக் கொண்டு, என் ஆசை தீருமட்டும் ஓடையில் தோணிவிட்டு விளையாடினேன்.

மதியம் திரும்பிவிட்டது. என் தந்தை கடலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். தோணிவிட்டு விளையாடிக் கொண்டிருந்த என்னைக் கண்டதும், “அடே பயலே! தோணி விடுறியா? அப்படி யெண்டா நாளைக்கு என்னோட கடலுக்கு வா” என்றார்,

அதைக் கேட்டதும் எனக்குச் சந்தோஷம் தாங்க முடியாமற் போய்விட்டது. “சரியப்பா, நாளைக்கு நானும் வருகிறேன்” என்று சொல்லிக் கொண்டே, சவளைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்தேன். பெரிய தோணியில் போகப்போகிற ஆனந்தத்தில் என் முருக்கந் தோணியை மறந்துவிட்டேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. தென்னோலைச் சரசரப்பும் சிள் வண்டுகளின் கீச்சுக் குரலும் எனக்குக் கேட்டுக் கொண்டேயிருந்தன. படுக்கையிற் புரண்டு கொண்டே ஆனந்தக் கனவுகள் கண்டு கொண்டிருந்தேன். கடைசியாய் எங்கோ ஒரு சேவல் கூவிற்று. அதைத் தொடர்ந்து எங்கள் கிராமத்துச் சேவல்களெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு கூவின. அம்மா எழுந்து கை விளக்கைக் கொளுத்திக்கொண்டு சமையல் செய்யத் தொடங்கினாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த குடிசைகளிலிருந்து ஒருவர் மற்றவரைக் கூவியழைக்கும் சப்தம் கேட்டது. கடைசியாய் அப்பாவும் எழுந்து, “தம்பி, டேய்!” என்று என்னை எழுப்பினார். நான் சுட்ட பிணம் போல வளைந்து நெளிந்து உட்கார்ந்து கொண்டேன். இரா முழுவதும் தூக்கம் இல்லாததனால் கண்ணிமைகள் கல்லாய்க் கனத்து அழுத்தின. ஆனாலும் உற்சாகத்தோடு எழுந்திருந்தேன். அப்பா சோற்றுப் பானை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துக்கொண்டு நங்கூரம், தூண்டில் கயிறு சகிதம் வெளிக் கிளம்பினார். நானும் சவளைத் தோளில் வைத்துக்கொண்டு புறப்பட்டேன்.

படலையைத் திறந்து வெளியே வந்ததும், முகத்தில் வாடைக் கடுவல் ஊசி குத்துவதைப் போலச் சுளீர், சுளீரென்று அடித்தது. எனக்கு உடம்பெல்லாம் நடுக்கமெடுத்தது. மேல் துண்டை முகத்தை வளைத்துக் கட்டிக் கொண்டு முன்னால் விறுவிறு என்று நடந்தேன். தூரத்தே குடிசைக்குள் இருந்த அகல் விளக்குகள் இருளைக் ‘குத்து குத்’தென்று குத்தின.

ஓடைக் கரையை அடைந்தபோது ஆறு, பரமார்த்த குருவின் ஆறு சீடர்கள் கண்ட ஆற்றைப் போலத் தூங்கிக் கொண்டிருந்தது. கண்டல் இலைகள் பொட்டுப் பொட்டென்று ஆற்றில் எங்கே போகிறோம் என்ற பிரக்ஞையே அற்ற வண்ணம் போய்க்கொண்டிருந்தன, கோரைப் புற்களின் மேலே சிலந்தி வலை போலப் பனிப் படலம் மொய்த்துக் கிடந்தது.

அப்பா கரையில் இருந்த தோணியை ஓடையிலே தள்ளினார். அதற்குள்ளே சோற்றுப் பானையையும் மற்றைய சாமான்களையும் வைத்தார். உடனே தோணியை ஆற்றிலே விட்டுவிட்டுக் கோரைப் புற்களினடியில்

‘அத்தாங்கை’ வீசி இறால் பிடிக்கத் தொடங்கினார். நான் வெடுவெடுக்கும் குளிரில் வள்ளத்தின் முன்னணி யத்தில் ஒடுங்கிப் போய் குந்திக் கொண்டிருந்தேன். கிழக்கே கூரையில் தொங்கும் புலிமுகச் சிலந்தியைப் போல, வானத்தில் விடிவெள்ளி நடுங்கிக் கொண்டிருந்தது. இன்னமும் கீழே கிழக்கு வெளுக்கத் தொடங்கியது. பறி நிறைய இறால் பிடித்ததும் அப்பா வள்ளத்தில் ஏறிக்கொண்டார். வள்ளமும் சமுத்திரத்தை நோக்கி ஓடத் தொடங்கிற்று. பளாரென்று விடிந்த போது வள்ளம் நடுச் சமுத்திரத்தையே அடைந்துவிட்டது. அப்பா நங்கூரத்தைத் தண்ணீரில் எறிந்துவிட்டுத் தூண்டிலில் போட்டுக் கொண்டிருந்தார். சமுத்திராதேவி நிர்க்கதியான தன் குழந்தைகளைத் தன் அலைக்கரங்களை எறிந்து எறிந்து தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

வெய்யில் ஏறிக்கொண்டே வந்தது. முதுகுத்தோலை உரித்துவிடுவது போலச் சுளீரென்று அடிக்கும் வெய்யிலுக்கு ஆற்றாமல் அப்பா தன் சட்டையில் கடல் தண்ணீரை அள்ளி அள்ளி ஊற்றிக்கொண்டேயிருந்தார்.

மதியத்தை அண்மிய போது, நாங்கள் ஆளுக்கு ஐந்து ‘கருங்கண்ணிப் பாரைகள்’ பிடித்துவிட்டோம். என் உழைப்பைக் கண்டு எனக்கே திருப்தி ஏற்பட்டுவிட்டது. அந்தத் திருப்தியில் பழஞ்சோற்றைக் கரைத்துக் குடித்த தண்ணீர் எனக்குத் தேவாமிர்தமாகத் தான் பட்டது. வயிறு நிறைந்ததும், நங்கூரத்தைத் தூக்கி வைத்து, தோணியைத் திருப்பத் தொடங்கினோம். வள்ளம் ஓடிக் கொண்டிருக்கையில் என் உள்ளம் பகற்கனாக் காணத் தொடங்கியது. ‘இந்தப் பத்துக் கருங்கண்ணிப் பாரைகளைக் கண்டதும் அம்மா சந்தோஷப்படுவா. பக்கத்துப் பட்டினத்துச் சந்தைக்கு அதைக் கொண்டு போனால் பத்து ரூபாய்க்கு விற்கலாம். சந்தையிலே எதிரே வரும் பொங்கலுக்காகக் கமுகம் பூப் போன்ற பச்சையரிசியும், பாசிப்பயறும், சர்க்கரையும், முட்டி நிறையப் பாலும் வாங்கிக் கொள்ளலாம். ‘எங்கள்’ வீட்டுத் தென்னை மரத்தின் கீழே புதுப்பானை ‘களக்களக்’ என்று பொங்கும் போது நான் புது வேட்டியை உடுத்து, கரும்பைக் கடித்துக் கொண்டு….

வள்ளம் கரையை அண்மிவிட்டது. கடற்கரையிலே புத்தம் புதிய பைசிக்கிளிற் சாய்ந்தவாறு ஒருவர் நின்று கொண்டிருந்தார். சூரிய கிரணங்கள் பைசிக்கிள் தகடுகளின் மேற்பட்டு ஜொலித்தன. அப்பா ஏதோ மந்திர சக்தியால் கட்டுண்டவரைப் போலத் தோணியை அங்கே திருப்பினார்.

தோணி கரையை அடைந்ததும் மீன்களை யெல்லாம் பைசிக்கிள் காரரிடம் போட்டுவிட்டுத் திரும்பவும் வீட்டை நோக்கித் தோணியை விட்டார்.

எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

தோணி வந்து கொண்டிருக்கையில் நான் கேட்டேன்: “ஏன் அப்பா மீன்களை எல்லாம் அங்கே போட்டுவிட்டு வருகிறீர்கள்?”

அப்பா சொன்னார், “அவர்தான் தம் முதலாளி. இந்தத் தோணி - எல்லாம் அவருடையதுதான். நாம் மீனைப் பிடித்து அவருக்குத்தான் கொடுக்க வேண்டும்.”

“நமக்குக் காசு தரமாட்டாரா?”

“தம் கடனிலே கழித்துக்கொள்வார் விலையை. நமக்குச் சாப்பாட்டிற்காக மேலும் கடன் தருவார்.”

“அப்படியானால் நாம் ஒரே கடன்காரராகத்தானே இருக்க வேண்டும்?”

“என்னமோ அப்பா; நானும் தலை நரைக்குமட்டும் உழைத்துவிட்டேன். கடனை அடைக்க முடியவில்லை. நமக்கென்று புதிதாக ஒரு தோணி வாங்கவும் முடியாது.”

“எல்லாத் தோணிகளும் அந்த முதலாளியுடையதுதானா அப்பா?”

“ஆம், ஓடைக்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் எல்லாமே அவருடைய தோணிகள் தான்.”

வெள்ளம் ஓடைக்கரையை அடைந்துவிட்டது. நாங்கள் தோணியைக் கரையில் இழுத்து வைத்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தோம். என்னுள்ளே ஒரு பயங்கரமான உண்மை புலனாகியது. இந்தத் தோணி எனக்குச் சொந்தமில்லை. ஆம், தூண்டிற்காரனுக்குத் தோணி சொந்தமில்லை; அப்படியே உழுபவனுக்கு நிலம் சொந்த மில்லை; உலகில் உழைப்பவனுக்கு எதுவும் சொந்த மில்லை.

அன்றிலிருந்து தோணி எனக்குக் கனவுப் பொருள் ஆகிவிட்டது. எப்படியாவது கஷ்டப்பட்டு உழைத்து, ஆகக் குறைந்து ஒரு தோணியாவது சொந்தமாக் வாங்கிக்கொள்ள வேண்டும். அதன்பின் மீன் பிடித்தால் சந்தையில் கொண்டுபோய் நம் இஷ்டத்திற்கு விற்கலாம். பொங்கலுக்குக் கரும்பும், பாலும், பச்சையரிசியும், சர்க்கரையும் வாங்கலாம்.... பிடித்த மீனையெல்லாம் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு திரும்பிவரத் தேவையில்லை...

நாட்கள் கடந்துவிட்டன. நான் பெரியவனாகி விட்டேன். சொந்தத் தோணி இன்னமும் வெறுங் கனவாகவே இருந்து வந்தது. தகப்பனார் வாழ்ந்துவரும் அதே பாதையிற்றான் என் வாழ்வும் போய்க்கொண்டிருந்தது. இந்த வாழ்வில், எனக்கு நேரகாலத்தில் கல்யாணம் முடித்து வைத்துவிட வேண்டும்

என்பது அம்மாவின் ஆசை.

ஒரு நாட் சாயந்திரம் ஓடைக்கரையில் இராட்டினத்தில் நூல் முறுக்கிக் கொண்டிருந்தேன். மேலே நீல நிறமான ஆகாயம் ஓடையின் தெளிந்த தண்ணீரிலும் விழுந்து பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஓடை முகத்துவாரத்தில் இருந்த மணல் தீவில் கடற்புட்கள் கூட்டங்கூட்டமாக வந்து விழுந்து கொண்டிருந்தன.

“தண்ணீர் எடுத்துக்கொண்டு வருகிறேன்” என்று வீட்டுக்குப் போன அம்மாவை இன்னமும் காணவில்லை. எனக்குத் தாகமாயிருந்தது. வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தேன். கனகம் செம்பிலே தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள்.

கனகம் எங்கள் கிராமத்துப் பெண் தான். நீரின் இடைமட்டத்தில் ஆடும் பாசிக் கொடியைப் போல எப்போதும் மென்மையாக ஆடிக்கொண்டுதான் அவள் நடப்பாள். கற்பாரில் நிற்கும் செம்மீனைப் போலச் செக்கச் செவேலென்று அழகாக இருப்பாள். வண்டலிலே மின்னும் கிளிஞ்சல்போல் இருக்கும் அவள் கண்களை இன்றைக்கு முழுவதுமே பார்த்துக்கொண்டிருக்கலாம்.

அவள் அருகால் வந்தபோது, “கொஞ்சம் தண்ணி தந்திட்டுப் போறியா?” என்று கேட்டேன் நான்.

கனகம் ஒன்றும் பேசாமல் என்னிடம் செம்பை நீட்டினாள்.

நான் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கும் போது, அம்மாவும் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து விட்டாள். அம்மாவைக் கண்டதும், கனகம் ஏதோ செய்யத்தகாத காரியத்தைச் செய்தவள் போல வெட்கப்பட்டுக்கொண்டு போய்விட்டாள்,

அம்மா சொன்னாள் “என்ன வெட்கமாம் அவளுக்கு. நாளைக்கு அவளைத்தானே நீ கல்யாணம் முடிக்கப் போகிறாய்?”

“போ அம்மா, எனக்கென்று ஒரு தோணி இல்லாமல் எனக்குக் கல்யாணமே வேண்டாம்” என்றேன் நான்.

“ஏண்டா! அவள் அப்பாவிடம் ஒரு தோணி சொந்தமாக இருக்கிறது. அதை உனக்கே கொடுத்து விடுவார் அவர்” என்றாள் அம்மா.

நான் யோசித்தேன். எனக்குக் கல்யாணத்திலோ கனகத்திடமோ அக்கறை இல்லாவிட்டாலும் தோணி கிடைக்கப் போகிறதே! தோணி மட்டும்

கிடைத்துவிட்டால் என் உழைப்பின் பயனை நானே அனுபவிக்க முடியும். என் குடும்ப வாழ்வும் இன்பமாகவே இருக்கும்...

அதன் பிறகெல்லாம் நான் கனகத்துடன் தைரியமாக நெருங்கியே பழகினேன். மனோகரமான மாலை வேளைகளில், ஓடைக்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் தோணி மூலையில் குந்திக்கொண்டு நானும் கனகமும் எவ்வளவோ கதைத்திருக்கிறோம்! கனகம் எப்பொழுதுமே தன் தோணியைப் பற்றிப் பெருமைப்பட்டுக்கொள்வாள். அந்தத் தோணி அவள் தகப்பனாரின் சொந்தமாக இருக்கிறபடியாற்றான் கனகம் நல்ல சேலை கட்டியிருக்கிறாளாம். கையில் தங்கக் காப்புப் போட்டிருக்கிறாளாம்! ‘அவள் என்றைக்குமே அப்படி இருக்க வேண்டும்’ என்று என் மனதுள் எண்ணிக்கொள்வேன்.

ஆனால், இரண்டு வாரத்துள் அந்தத் துக்ககரமான செய்தி கிடைத்தது. கிராமமே பரபரப்படைந்தது. கனகத்தின் தந்தை மீன் பிடிக்கப் போனவர் புயலில் அகப்பட்டு மாண்டுபோனார். தோணியும் திரும்பி வர வில்லை...

என் இருதயத்தில் சம்மட்டியடி விழுந்தது போன்றிருந்தது எனக்கு. பாவம்! எனக்குத்தான் சொந்தத் தோணி இல்லையென்றாற் கனகத்திற்குக்கூடவா இல்லாமற் போகவேண்டும்?

இரண்டு மூன்று நாட்கள் கழித்துக் கனகம் கடற்கரைக்கு வந்தபோது அவளை நிமிர்ந்து பார்க்கவே என்னால் முடியவில்லை. அவள் கண்கள் கலங்கியிருந்தன. என்னைக் கண்டதும் அழுகை பொத்துக்கொண்டு வந்து விட்டது அவளுக்கு. விம்மி விம்மி அழத்தொடங்கினாள், என் மடியிற் தலையைப் புதைத்துக் கொண்டு கனகம் என்னிடம் எதை எதிர்பார்த்தாள்?

கனகத்தை மடியில் வைத்துக்கொண்டே நான் எண்ணினேன். என்னிடமோ தோணி கிடையாது. இந்த நிலையில் அவளை நான் சுகமாக வாழ்விக்க முடியாது. என் தகப்பனாரைப்போல நானும் தலைநரைக்கும் வரை உழைத்து, உழைத்துச் சாகவேண்டியது தான். என்னோடு சேர்ந்து கனகமும் ஏன் சாகவேண்டும்? பாவம் கனகம்...

எனவே கனகத்தை யாராவது சொந்தத் தோணியுள்ள ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும். என் கண் முன்னால் அவள் அழகான சேலையும், தங்கக் காப்பும் அணிந்து கொண்டு என்றென்றைக்கும் ஆனந்தமாக வாழவேண்டும். அவள் வாழ்வுதான் எனக்கும் ஆனந்தம்...

நான் எண்ணியது சரியாகப் போய்விட்டது. அமாவாசையன்றிரவு, புங்கை மரத்தின் கீழே இருந்த வைரவர் கோவிலடியில் கனகத்துக்கும் செல்லனுக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்தன்று பேசிப் பார்க்கவே எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. என் கையில் இருந்த அரும்பொருள் இன்னொருவனுக்குப் போய்விட்டது... ஆனாலும் என் கண் முன்னால் அவள் ஆனந்தமாகவே வாழ்வாள். செல்லனிடம் ஒரு தோணி இருக்கிறது. அவன் என்னைப்போலக் கடன்காரனல்ல. செல்லனோடு கனகம் என்றென்றைக்கும் ஆனந்தமாக வாழட்டும். எனக்கென்று தோணி ஒன்று கிடையாமல் நான் எந்தப் பெண்ணின் வாழ்வையும் பாழாக்கப் போவதில்லை...

ஆனால், இன்னமும் தோணி எனக்குக் கனவுப் பொருளாகத்தான் இருக்கின்றது. அதனாலென்ன? உயர்ந்த கனவு செயல்மிக்க நனவின் ஆரம்பந்தான். எப்போதாவது ஒரு நாளைக்குக் காலம் மாறத்தான் போகிறது. அன்றைக்கு எனக்கு மட்டுமல்ல, என் நண்பர்கள் எல்லோருக்குமே சொந்தத் தோணி இருக்கும். எங்கள் தோணிகள் சப்த சமுத்திரங்களிலும் சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்கும். அந்த மீன்களைச் சந்தையில் பகிரங்கமாக விற்போம். விற்ற பணத்திற்குச் சந்தையில் அரிசி வாங்குவோம். அரிசி வாங்கும் பணம் என்னைப்போன்ற உழைப்பாளியான ஒருவனுக்கு நேரடியாகக் கிடைக்கும்! அப்போது உழவனுக்கு நிலமும் சொந்தமாக இருக்கும் அல்லவா?

## கொடும்பாவி

**- கே. டானியல்**

வாழ்க்கையிலே நடப்பவைகள் எல்லாம் மனதிலே நிற்பதில்லை. குறிப்பிடக்கூடிய ஒன்றோ இரண்டோ சம்பவங்கள் அடிமனதோடு ஒட்டிப்போய் நின்றுவிடுகின்றன. அநேக சம்பவங்கள் மனதின் விளிம்பிலே சில நாள் நின்றுவிட்டு, அதற்கப்புறம் மெதுவாக நகர்ந்துபோய் விடுகின்றன.

இந்த நியதி எனக்கு மட்டும் விதிவிலக்காக இருக்கமுடியுமா? இதற்குட்பட்ட கொடும்பாவிச் சின்னான் என் மனதிலே ஒட்டிபோய்க் கிடக்கிறான்.

சின்னானை நினைக்கும்போது அவனின் பெண்வேடம், தேர்ப்பாடையிலே வளர்த்தப்பட்டிருக்கும் வைக்கோற்பாவை, இளவட்டங்களின் தலையிலே குந்தியிருக்கும் 'கிச்சின் லைட்டு' எல்லாமே சேர்ந்து மனக்கண் முன் வந்துவிடுகின்றன.

மரத்தாலான நான்கு சில்லுகளின் மேல், தேர்போலப் பாடைகட்டி, அதன் நட்டுக்கு நடுவே ஆடை அலங்காரங்கள் செய்யப்பட்ட வைக்கோற்பாவையை வைத்து, அதற்கு நீறிட்டு, பொட்டியிட்டு, புனிதப்படுத்தி, வீதி வீதியாக, வீடு வீடாக இழுத்துச் சென்று அதைச் சுற்றி மாரடித்து, ஒப்பாரி வைத்துக் கட்டியழும் ஒரு காட்சியை இப்போது தத்ரூபமாகச் செய்து காட்டினால் "இப்படியுமொரு பைத்தியகாரத்தனமா!" என்ற எண்ணம் ஏற்படும்.

ஆவணி மாதத்தில் நெல்வயல்களின் விதைப்பை முடித்துக்கொண்டு, கமக்காரர்கள் மழைக்காகக் காத்திருப்பார்கள். இடையிடையே சிறு அளவில் மழை பெய்து புழுதி நிலத்தை நனைக்க வேண்டும். அப்போதுதான் நெல்மணி முளைவிடும். அதற்குப் பின் மூன்றிலை, நான்கிலைப் பயிராக இருக்கும்போது மழை சற்று அதிகமாகி நிலமட்டத்தோடு நீர் நிற்க வேண்டும். அதற்கு மேல் மழை அதிகரித்து பயிர் வட்டுவரை நீர் பெருகி நிற்க வேண்டும். அப்போதுதான் கமக்காரர்கள் பூரண சாந்தியடைவார்கள். சில வேளைகளில் வானம் எல்லோரையுமே ஏமாற்றிவிடும்.

ஊரில் கொடுமைகள் அதிகரித்ததுதான் மழை பெய்யாததற்குக் காரணமென்ற நம்பிக்கை ஊர்ஜிதமாகும் போது, கொடும்பாவி கட்டி அழுது அந்த கொடும்பாவியைச் சுடலைவரை இட்டுச் சென்று சாம்பலாக்கி, காடுமாத்தி, கருமாதியும் செய்துவிட்டார்களானால் மழை வந்துவிடுமாம்.

ஊரில் உள்ள கொடுமைகளை மொத்தமாகக் திரட்டி, அதற்குக் கொடும்பாவி என்ற உருவம் கொடுத்து, அந்தக் கொடுமைகள் சுட்டெரிக்கப்படும் போது. . .

கயிறு போன்ற உடற்கட்டுடைய சின்னான் இயல்பான நீண்ட தலைமுடியை நடு வகிடு வைத்து வாரி, அள்ளு கொண்டை போட்டுக் கொள்வானாயின், இப்போதைய நாகரிக யுவதி, கறுப்பு வலைக்குள் சிகையைத் தொங்கவிட்டுத் தூக்கி நிமிர்த்தியிருப்பது போலவே இருக்கும்.

முகத்துக்கு முத்து வெள;ளையும், கண் புருவத்துக்கு குங்கும மசியும் தடவிக் கொண்டு, காதுக்கடுக்கனுக்குப் பதிலாக காக்காப் பொன் - நெருப்பு வர்த்தித் தொங்கட்டானும் அணிந்து கொண்டு, சின்னான் ஒயிலாகக் கைவீசி நடந்து வந்து, ஒப்பாரி வைக்கத் தொடங்குவானாயின் ஈடுகொடுக்க யாருக்கு முடியும்?

கொடும்பாவி எட்டுப் பாத்து நாட்களாக வீடு வீடாக இழுத்து வரப்பட்டு, இறுதியில் சுடலையை வந்தடையும். இந்த எட்டுப் பத்து நாட்களும் ஆள்மாறி அழுபவர்கள் பலர் வருவார்கள். முதல் நாள் அழுதவர்களுக்கு மறுநாள் தொண்டை அடைத்துப் போய்விடும். ஆனால் சின்னான் மட்டும் தொடர்ச்சியாக அழுதுகொண்டே போவான். அவனுக்குத் தொண்டை அடைப்பதுமில்லை. அலுப்பு சலிப்பு வருவதுமில்லை.

இந்தக் கலத்தையப் பெண்களுக்குப் புதுப்புது விதக் கொண்டை கட்டிக் கொள்வதில் அலாதி ஆசை ஒவ்வொரு கொண்டை அமைப்பும் தங்கள் கைபட்டு புதுபுதுசான மோஸ்தர் அடைகிறது என்பதனால் பெருமை! சின்னானின் கொடும்பாவிக் கொண்டை வகைகளைக் கண்ணால் பார்ப்பவர்கள் இக்காலக் கொண்டைகள் புதுசென ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள்.

ஒருநாள் சின்னான் குதிரைவால் போல மயிரை உச்சிக்குச் சமீபமாகப் பிடித்துத் துணியால் முடிச்சுப் போட்டுக் கொள்வான்.

இன்னொரு நாள் கரப்பு போல வரும்படி செய்து கொள்வான்.

வேறொரு நான் திருகணை போல வைத்துக் கொள்வான்.

அதற்கு மறுநாள் திருகி முறுக்கி வளைத்து அநாயாசமாகச் செருகிக் கொள்வான்.

கண்ணாடி நைலோன் சேலை உடுத்திக்கொள்வதில் இக்காலப் பெண்களுக்குப் பெருமை. தங்களுக்காகவே இச்சேலை புதுமையாகத் தயாரிக்கப்பட்டதாக இவர்கள் நினைப்பு.

அப்போது சின்னான் நார்ப்பட்டுச் சேலையை உடுத்திக் கொண்டிருப்பான். இந்தக் கிளாஸ் நைலோன் அந்த நார்ப்பட்டின் தாத்திற்கும், காசாக் கச்சுக்கும் எம்மாத்திரம்.

சின்னான் குரலெடுத்து அழுதால் மெதுமெதுப்புக் காணாத உள்ளங்களும் கனிந்து கரைந்துவிடும். கண்ணீர் வடிவத்தவர்களும் உண்டு. அவனுக்காக வானமும் இரங்கி விடுகிறது.

கதிரவேற்பிள்ளைக் கமக்காரனின் நிலத்தில் பல்லாண்டு காலமாகச் சாகுபடி செய்தவர்களெல்லாம் இந்தத் தடைவ வெறுங்கையோடு நின்றனர்.

தூக்குமரக் காட்டுச் சுடலையிலிருந்து முக்கிராம்பிட்டி தாண்டி, மாட்டொழுங்கை வரையில் விரிந்து கிடக்கும் நிலப்பரப்பு கதிரவேற்பிள்ளையினுடையது. இந்தப் பகுதியில் சொல்லப்பட்ட காணிக்காரர் என்று பெயரெடுத்தவர் கதிரவேற்பிள்ளை ஒருவரேதான்! அவருடைய நிலத்தை நம்பி சுமார் ஐம்பது குடும்பங்கள் வாழ்வு நடத்தி வருகின்றன… நட்டுவ மேளம் அடித்துவிட்ட ஒரு குற்றத்திற்காகக் கதிரவேற்பிள்ளைக்கும் இந்தக் குடும்பத்தினருக்கும் அபிப்பிராய பேதம் வளர்ந்து வந்து கடைசியில் அத்தனை உயிர்களினதும் வாழ்க்கையையே அடித்துவிட்டது.

கோவில் தகராறிலிருந்து கதிரவேற்பிள்ளைக்கு வந்துவிட்ட கோபமோ மிகவும் பொல்லாதிவிட்டது. இதனால் அவர் நிலத்தையே இம்முறை மலடாக வைத்து விட்டார். குத்தகைக்காரர்களையே நிலத்தில் காலடி வைக்காமல் தடுத்து நிறுத்திவிட்டார். வருடா வருடம் பச்சைப் பசேலென்று கிடக்கும் நிலப்பரப்பு இம்முறை புழுதிபட்டு கோர்வை படர்ந்து மலடாகிக் கிடக்கிறது.

நடுநிலையானவர்கள் சிலர் பேசிப் பார்த்தார்கள். கதிரவேற்பிள்ளை யாராவது பேசுவதற்கே அனுமதி மறுத்துவிட்டார்.

அதிகாலையோடு மாட்டெழுங்கை வீதி நீளத்திற்கு நின்று உதித்துவரும் சூரிய ஒளிக்கூடாகக் கண்களைப் புதைத்துக் கொண்டு, அந்தப் புழுதிநிலத்தைப் பார்த்துப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சுவிடும் விவசாயிகளைப் பார்க்கும் போது மனித உணர்ச்சியுள்ளவர்களின் நெஞ்சுகளே வெடித்துப்

போய்விடும். பூமித்தாயின் நெஞ்சைக் கிழித்துக் கிழித்துப் பழகிப் போய்விட்ட அந்த மனிதர்களின் கரங்கள் தினவெடுத்துத் துடிப்பதை ஒரு தடவையேனும் கவிஞர்களால் பார்க்க முடிந்தால் கதிரவேற்பிள்ளையின் குடும்பத்தையே அறம்பாடி வீழ்த்தி விட்டிருப்பார்கள்.

முகம் வற்றிச் சுருங்கிப் போய் பிரேதக் களை எடுக்க வயற்பரப்பின் பெரும் வரம்புகளில் நடந்து சென்று, பெருமூச்சுகளால் அந்த மண்ணையே சுருங்கிக்கொண்டிருந்த பெண்களை, ஊத்தைச் சீலை போர்த்தப்பட்ட எலும்புச் சட்டைகளை உருவகப்படுத்தித் தங்கள் இலக்கியங்களைச் செறிவுபடுத்தக் கூடிய இலக்கியப் பேராசான்கள் அந்தப் பூமியில் பிறக்கவில்லை. இரண்டொரு இலக்கியப் பிள்ளைப்பூச்சிகள்தான் ஊருக்குள் பேருடனும் புகழுடனும் இருந்தார்கள். அவர்கள் காசுக்காக எழுதுபவர்கள். தசை நார்களில் இழிந்த உணர்ச்சிகளுக்குத் தெய்வீகத்தன்மை தருவதற்கு தங்கள் மனப் பசிக்குத் தீனி போட்டு முடிந்துவிட்டால் மயங்கித் தூங்கிப் போய்விடுவார்கள். சேணமிட்ட குதிரை நேராகப் பார்த்துக் கொண்டு ஓடுகிறது. அதற்கப் பக்கப் பார்வை தேவையில்லை.

இந்த ஆண்டு கொடும்பாவிக்கு அழுவதில் யாருக்குமே உற்சாகமிருக்கவில்லை. உள்ளூர் விவசாயிகளில் பாதிக்குப் பக்கமான பேர்கள் வாழ்வின்றித் தவிக்கும்போது மற்றவர்களுக்கு மட்டும் மழை என்ன வேண்டியிருக்கிறது? இருந்தும் சொற்ப பேருக்காக உலகத்தில் எல்லோருமே கஷ்டத்திற்குள்ளாவதா? என்ற பெரிய மனசு, கொடும்பாவிக்கு அழுதுதான் தீரவேண்டுமென்ற முடிவையே ஏற்படுத்திற்று. தங்களின் கொடும்பாவிக் கூக்குரலுக்கு வருண பகவான் வந்திறங்கிவிடுவார் என்பதில் அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை!.

கொடும்பாவி கட்டப்பட்டுவிட்டது. முத்துமாரி அம்மன் கோவிலிலிருந்து தொடக்கவிழா நடத்த நாளும் குறிப்பிட்டாயிற்று. அழுகைக்காரர்களெல்லாம் தங்களைத் தடல்புடல் படுத்திக்கொண்டபோது சின்னான் மட்டும் வீட்டோடு ஒட்டிப் போய்க் கிடந்தான்.

பெண்சாதியா, பிள்ளையா, தாயா, தகப்பனா? எதுவுமேயில்லாத அந்தத் தனிக் கட்டையை இந்தக் கொடும்பாவிக்காகத் தேடுவதைத் தவிர வேறெடுப்போது அவசரப்பட்டுத் தேடப் போகிறார்கள்?

‘சின்னான் அழ மறுக்கிறான்’ என்ற செய்தி ஊருக்குள் பரவவே எல்லோரும் அசந்து போய்விட்டனர். இந்தக் காரியத்திற்குக் கச்சை

கட்டிக்கொண்டு முன்னுக்கு நிற்கும் சின்னான், இப்படிப் பிகு பண்ணியது எல்லோரையுமே அசந்துபோக வைத்துவிட்டது.

'சின்னானில்லாத கொடும்பாவியும் ஒரு கொடும்பாவியா!' என்று மொத்தமாக எல்லோருமே கூறிக் கொண்டனர்.

ஒருநாள் ஊரே திரண்டுபோய்ச் சின்னாவின் குடிலைச் சுற்றிவிட்டது. நிலத்தை இழந்துவிட்டவர்கள் கூடப் பெரிய மனசு வைத்து வந்து வற்புறுத்துவதைப் பார்க்க சின்னானுக்குத் தன்னாலேயே மனது கரைந்துவிட்டது.

சின்னான் ஒப்புக்கொண்டுவிட்டான்.

எல்லோருக்கும் உற்சாகம் பிறந்தது; பழையபடி தடல்புடலும் வந்துவிட்டது.

முத்துமாரி அம்மனுக்குப் பலி கொடுத்து சம்பிரதாயங்கள் முடிந்து கொடும்பாவி புறப்பட்ட போது சின்னான் இரண்டு தடைவ குரல் வைத்தான். அதற்கப்புறம் அவன் உற்சாகங்குன்றி ஒதுங்கிக் கொண்டான்.

இரண்டாம் நாளும் இரண்டு குரல். மூன்றாம் நாளும் இரண்டோ மூன்றோ குரல்.

நான்காம் நாளும் அப்படி.

ஐந்தாம் நாள், ஆறாம் நாள், கடைசியாக ஏழாவது நாள். . .

இன்று கொடும்பாவி தகனம் செய்யப்படுவதாக முடிவு.

காலையிலிருந்து வானமும் இருண்டு கிடக்கிறது.

மாலையானபோது காற்றும் உறங்கி அடிவானமும் மின்னி முழங்கி வந்தது.

இரவு, மணி பன்னிரெண்டுக்கு மேல்!

சுடலைக்குப் போகும் வழியில், தென்னந்தோப்பில் இருப்பது கதிரவேற்பிள்ளையின் வீடு.

கதிரவேற்பிள்ளையின் வீட்டிற்குப் போவோமா விடுவோமா என்பதில், கொடும்பாவிக்காரர்களிடையே இப்போதுதான் அபிப்பிராய பேதம் நிலவத் தொடங்கியது. 'போவதில்லை' என்ற அபிப்பிராயம் ஆரம்பத்தில் மேலோங்கித்தான் நின்றது. ஆனால் 'ஊருக்கெல்லாம் பொதுவான காரியத்தில் ஒதுக்கல் கூடாது' என்ற பொதுநீதி, பொதுவில் இழையோடவே, கடைசியில்

போகத்தான் வேண்டுமென்பது முடிவாயிற்று. ஆனாலும், சின்னானால் இந்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவன் பிடிவாதஞ்செய்தான். பலர் பலவிதமாகச் சொல்லிப் பார்த்தும் சின்னானால் மனசை மாற்ற முடியவில்லை.

அவன் மட்டும் ஏன் இப்படிப பிடிவாதமாக நிற்கிறான்?

பலரிடையே இது பெருங் கேள்வியாக நின்றாலும் அதை எதிர்த்து முடிவான முடிவை ஏற்படுத்த யாருக்கும் துணிவில்லை. கடைசியில் ஒரு நடுவான முடிவை எல்லோருமே ஏற்றுக்கொண்டனர். எல்லோருமே ஏற்றுக்கொண்ட முடிவுகூட அவனைத் திருப்திப் படுத்தவில்லை. ஆயினும் அரைமனதோடு அதை ஏற்றுக்கொண்டு விட்டான்.

'உள்ளே போகாமல் வீட்டுப் படலையோரமாக நின்று அழுவது' என்ற முடிவுக்கமைய கொடும்பாவி கதிரவேற்பிள்ளையின் தலைவாயில் முன்பாக நிறுத்தப்பட்டது.

கதிரவேற்பிள்ளையின் வீட்டுப் படலை மூடியே கிடக்கிறது. யாருமே படலையைத் திறக்கவில்லை.

அரை மணிக்கு மேலாகிவிட்டது. உள்ளே மனித நடமாட்டம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. ஆனால் கொடும்பாவிக்காகப் படலைக்கு வருபவர்கள் மட்டும் காணோம்.

கதிரவேற்பிள்ளை வீட்டுக் குடும்ப எண்ணிக்கை, பேரப் பிள்ளைகள் கூடிப் பதினான்கு. இந்தப் பதினான்கில் ஒன்றுதன்னும் படலையோரம் வரவில்லை. இரும்புக் கதவு இறுக்கி மூடப்பட்டிருக்கிறது.

அரை மணிவரை அழுதுதீர்த்த பின் எல்லோருக்குமே அலுப்பும் கோபமும் வந்துவிட்டது.

சின்னான் அழுகுரலில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நிற்கிறான். கதிரவேற்பிள்ளை இப்படிச் செய்வாரென்று அவனுக்கு முன்னமே தெரிந்திருக்கிறது. இந்த அழுகைக்காரார்கள் நிச்சயமாகத் தோற்றுப் போவார்கள் என்று அடிமனத்துக்குள் அவனுக்கு நினைப்புத் தோன்றி வந்தது.

நேரம் நகர்ந்துகொண்டே போகிறது.

சின்னானுக்கு மனசு கருவத் தொடங்கிவிட்டது.

'இந்த அற்பன் படலையைத் திறக்காமல் பிடிவாதம் செய்கிறானே!' என்ற ஏக்க நிலையிலிருந்து 'கதவு திறக்காமல் இருக்க இவனால் முடியுமா?' என்ற கேள்வி ரூபமான கொந்தளிப்பு மேலோங்கிக் கொண்டே வந்தது.

அலுத்துப் போனவர்கள் பாடையை இழுத்துக் கொண்டு தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராகி விட்டார்கள்.

சின்னானுக்கு உடலெல்லாம் வெடவெடக்கிறது. கோபக் கொதிப்பேறிய இரத்தம் சிரசுவரை ஏறிச் செல்லவே, அவன் முகம் சிவந்து இரத்தம் போலாகி விட்டது.

கொடும்பாவிப் பாடைக்கு முன்னால் சின்னான் தாவிப் பாய்ந்து 'மளார் மளா'ரென்று நெஞ்சில் குத்தி அழத்தொடங்கி விட்டான்.

அவனை ஆவேசம் கவ்விப் பிடித்திருக்க வேண்டும். சின்னான் கொடும்பாவிப் பாடையை ஓடி ஓடி வலம் வந்து விட்டான்.

எல்லோருமே திகைத்துப் போய்விட்டார்கள்.

சின்னான் இப்படி என்றும் நடந்ததில்லை.

தன்னந் தனியாக அவன் இப்படிச் செய்கிறான்.

'கோரக் கொடும்பாவி. . .'

இப்படி ஆரம்பித்த அவனின் குரல் எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று நாதக் கனல் கக்குகிறது.

பணக்காரர்களின் அசுத்த நினைவுகளைச் சின்னான் சொல்லாமல் சொல்கிறான்!

'நிலத்தை உடையவனே நீசனாய்ப் போய்விட்டாயே. . .'

நாதக் கனல் மேலெழுந்து சுடர் விட்டுத் தனது நாக்குகளைக் காட்டி நெளிந்து லளிதமிடுகிறது.

கதிரவேற்பிள்ளையின் வாழ்க்கையிலே வந்துபோய்விட்ட கர்ணகடூரச் செயல்களைச் சின்னான் குத்திக் கிழிக்கின்றான்!

'பஞ்சத்தை இழைத்தவனே பழிகாரப் பாவியனே, கொடும்பாவி கட்டியல்லோ உன்னை. . .'

நாதக்கனல் ஆகாச வெளியெங்கும் நிறைந்து நிறைவாகிப் பொலிந்து, தனது தீ நாக்குகளை அங்குமிங்குமாகத் துழாவி மனிதர்களைத் தழுவிக் கொள்ளத் துடியாய்த் துடித்துக் கோரமடைகிறது. . .

சின்னானுக்கு ஆவேசமா?

கதிரவேற்பிள்ளையின் இரும்புப் படலை படாரென்று திறக்கப்பட்டது.

முன்னே கதிரவேற்பிள்ளை, அவருக்குப் பின்னால் அவரின் குடும்பத்தின் பரிவாரங்கள்!

'டேய் நாய்ப்பயல்களே, நாய்க்குப் பிறந்த பிண்டங்களே. . .!'

கதிரவேற்பிள்ளை, விரிசடைக் கடவுளாகத் தலையை உயர்த்தி அசைத்து, உடம்பை உலுப்பிப் போர்க்குரல் புரிகிறார்.

சின்னானின் ஆவேசக் கோலம் இன்னும் உக்கிரமடைகிறது.

படலையைத் தாண்டிக்கொண்டு பாய்ந்தோடி வந்த கதிரவேற்பிள்ளைக்கு உடல் நடுங்கித் தலை சுழன்று, கால்கள் தடம்புரண்டு போக, அவர் தரையை நோக்கிச் சரிந்து போகிறார்.

பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எல்லோரும் பெருங்குரல் வைத்து அவரைத் தூக்கி எடுத்துக்கொண்டு உள்ளே போகின்றனர்.

வழக்கமாக அவருக்கு வரும் இரத்தக் கொதிப்பு வந்துவிட்டது.

கதிரவேற்பிள்ளையின் நிலைக்குப் பரிதாபப்பட்ட சிலர் உள்ளே போக முயற்சிக்கின்றனர். அவர்களின் முயற்சி வெற்றி பெறவில்லை. சின்னான் வழிமறித்துக்கொண்டு. . .

சின்னானுக்கு மயக்கம் வந்துவிட்டது.

முகமெல்லாம் வியர்த்துக்கொட்ட, தலையைச் சுழற்றி அவன் அப்படியே இருந்த இடத்தில் சரிந்துவிட்டான்.

சின்னானை மடியில் வைத்துக்கொண்டு காற்றுவர எல்லோருமே ஒத்துழைக்கின்றனர்.

வானத்திலே இடி கேட்கிறது.

'சோ'வென்று கொட்டிய மழையின் குளுகுளுப்பில் சின்னான் உணர்வு பெற்றுவிட்டான்.

அவசர அவசரமாகக் கொடும்பாவி தூக்குமரக் காட்டுச் சுடலையை நோக்கி இழுத்துக் கொண்டு செல்லப்படுகிறது.

சின்னான் பாடைக்குப் பின்னே அசந்து தளர்ந்து நடந்து போகிறான்.

மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருக்கிறது.

கொடும்பாவியைத் தகனஞ்செய்து சாம்பலை எடுத்துக் கடலில் கொட்டிவிட்டு, அந்த மனிதக் கட்டைகளெல்லாம் திரும்பும்போது விடிவெள்ளி காலித்துவிட்டது.

மழை ஓய்ந்து போயிற்று

கதிரவேற்பிள்ளையுன் புழுதி நிலம் புதுவெள்ளத்தால் தெம்பிப் போய்க் கிடக்கிறது.

எல்லோருமே மலாடகிக் கிடக்கும் அந்த நிலப்பரப்பில் கண்களை இலயிக்க விட்டுக் கொண்டு நடந்து செல்கின்றனர்.

கொட்டிக் கிடக்கும் மழைநீர், மலட்டுத் தனம் பயனற்றுக் கிடக்கிறதே! அந்த நிலை அவர்களின் ஈர குலைகளை உலுப்பிவிட்டிருக்க வேண்டும்.

கூனிக் குறுகிக் கொண்டு அவர்கள் நடந்து வருகிறார்கள்.

குடியிருப்புப் பகுதிக்கு அவர்கள் வந்தபோது கதிரவேற்பிள்ளை வீட்டில் மனித குரல்களின் பிரலாபம் வர நோக்கித் தாவிக் கொண்டிருந்தது.

## கட்டுரை

# இலங்கையின் மலையகத் தமிழ் இலக்கியம்

**- க. அருணாச்சலம்**

மலையகத்தைப் பொறுத்தவரையில் பத்திரிகையின் தோற்றத்தின் பின்னரே பல நாவல்கள் தொடர்கதைகளாக வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் தேசபக்தன் (1924-1929) பத்திரிகையில் 'மூலையில் குந்திய முதியோன்' அல்லது 'துப்பறியுந்திறம்' என்ற தொடர்நாவலைக் கோ. நடேசையர் எழுதியிருக்கிறார். சத்தியமித்திரன் (1926) என்ற பத்திரிகையில், 'சரஸ்வதி' அல்லது 'காணாமற்போன பெண்மனி' என்ற தொடர் நாவலைத் து.தொ.சு. இராசம்மாள் எழுதியுள்ளார். பத்திரிகை ஆசிரியர் என்ற பதவியைப் பயன்படுத்திக் கொண்டு தொடர்நாவல்கள் பலவற்றை எழுதியவர்கள் எச். நெல்லையா, கே.வி.எஸ். வாஸ் போன்றோர். எச். நெல்லையா பிரதாபன் (1931), சந்திரவதனா (1934), இரத்தினாவளி அல்லது காதலின் மாட்சி (1938), சோமாவதி அல்லது இலங்கை இந்திய நட்பு (1939), காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி (1940) போன்ற நாவல்களையும் இவரைத் தொடர்ந்து வந்த கே.வி.எஸ். வாஸ் ரஜனி என்ற புனைபெயரில் எழுதிய குந்தளப் பிரேமா, நந்தினி, தாரிணி, பத்மினி, உதயகன்னி, மலைக்கன்னி போன்றவற்றை எழுதினார்.

1937இல் 'சாமளா' அல்லது 'காதல் போதனை' என்ற நாவலைக் கண்டியிலிருந்து எஸ். செல்வநாயகம், 1938இல் சுந்தரமீனா அல்லது காதலின் வெற்றி என்ற நாவலை மஸ்கெலியா குயீன்ஸ்லேண்ட் தோட்டத்தில் ஆசிரியராகக் கடமைபுரிந்த ஏ. போல் என்பவரும், 1940இல் கண்ணனின் காதலி என்ற நாவலை இரத்தினபுரி, மத்வாகெல தோட்டத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்த ஜி.எஸ்.எம். சாமுவேல். . . எனப் பலர் எழுதிய நாவல்களைச் சாரல்நாடன் தம் நூலில் தொகுத்துத் தந்துள்ளார். இவை 1924ஆம் ஆண்டுத் தொடக்கம் 1950ஆம் ஆண்டுவரை எழுதப்பட்டவையாகும். மேற்குறிப்பிட்ட வரலாற்றினை உற்றுநோக்கும்போது மலையகத் தோட்டத் தொழிலாளர்களே இவற்றைப் பாதுகாக்காமல் கைவிட்டமைக்குப் பல காரணங்களைக் கூறலாம்.

பத்திரிகைகளின் விற்பனையை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் கல்வியறிவு நிரம்பிய தோட்டத்தொழில் செய்யாத "இந்தியத் தமிழர்" என்ற போர்வையில் ஒன்றுபட்ட நகரங்களை அண்டிய மத்தியதர வர்க்கத்தினரால் எழுதப்பட்டமை.

பத்திரிகைகளின் பக்கங்களை நிறைப்பனவாகவும் ஆவலைத் தூண்டுவனவாகவும் உண்மை வாழ்க்கைக்குப் புறம்பான கற்பனைகளைக் கொண்டதாகவும் சில வேளைகளில் முடிவு இல்லாமலே பாதியிலேயே காணாமற் போனவையாகவும் இவை காணாமற் போனவையாகவும் இவை காணப்பட்டமை. மலையகச் சமூக மாற்றத்தையோ அல்லது அரசியலையோ அல்லது வாழும் முறையையோ இவர்கள் பொதுவாகத்தானும் பதிவுசெய்யவில்லை. இவர்கள் நாவலைப் பொழுதுபோக்காகவே கருதினர். ஆகவே, மலையகத் தமிழ் இலக்கியம் என்ற வகையிலும் இவற்றுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. சாதாரணத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வியை வளர்ப்பதற்குப் பப்டிஸ்ட் மதத்தினரும் சேர்ச் மிசன் சபையினரும் அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தனர். பல தோட்டங்களில் பெரிய கங்காணிமார் சிலர் திண்ணைப் பள்ளிகளைத் தொட்டங்களில் ஆரம்பித்து எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் சிறு பிள்ளைகளக்குப் படிப்பித்திருக்கிறார்கள். காலப்போக்கில் தோட்ட நிர்வாகிகளின் தூண்டுதலின் பேரில் அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் தோட்டங்களில் பிள்ளை மடுவங்கள் உருவாக்கப்பட்டன.


1. வேலுப்பிள்ளை, ஸி.வி. வாழ்வற்றவாழ்வு, சாரல் வெளியீட்டகம், (பத்திரிகையில் - 1959) கொட்டக்கலை, 2001.
2. வேலுப்பிள்ளை, ஸி.வி., வீடற்றவன், வைகறை வெளியீடு (பத்திரிகையில் - 1962) (குறுநாவல்), யாழ்ப்பாணம், 1981.
3. நந்தி மலைக் கொழுந்து, ஆசிர்வாதம் அச்சகம் (பத்திரிகையில் - 1963) யாழ்ப்பாணம், 1964.
4. கோகிலம் சுப்பையா, தூரத்துப் பச்சை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை , 1964.
5. பெனடிக்ற்பாலன், யோ., சொந்தக்காரன் பாரிநிலையம், சென்னை, 1968.
6. தெளிவத்தை ஜோசப், காலங்கள் சாவதில்லை, வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1974.
7. டேவிட், கே.ஆர்., வரலாறு அவளைத் தோற்றுவிட்டது, வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1976.
8. ஞானசேகரன், தி., குருதிமலை, வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1974.
9. சதாசிவம், க., மூட்டத்தினுள்ளே, வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1983.
10. வேலுப்பிள்ளை, ஸி.வி., இனிப்பட மாட்டேன், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1984.

11. மாத்தளை சோமு, அந்த உலகத்தில் இந்த மனிதர்கள், நர்மதா பதிப்பகம், சென்னை, 1984.
12. மாத்தளை சோமு, அவள் வாழத்தான் போகிறாள், தமிழ்க் குரல் பதிப்பகம், (பத்திரிகையில் - 1986), திருச்சி, 1996.
13. ராஜகோபாலன், தி., கண்ணான கண்மணிக்குக் கதை கேட்க, மலையக இளைஞர் பேரவை வாசல் வீதி, கொழும்பு, 1989.
14. மாத்தளை கார்த்திகேசு, வழி பிறந்தது, இளவழகன் பதிப்பகம், சென்னை, 1992.
15. ராஜகோபாலன், தி., சிரிக்கும் மணிமேகலைப் பூ, செவ்வந்திப் பிரசுரம், சென்னை, (பத்திரிகையில் 1993) 2003.
16. ஞானசேகரன், தி., லயத்துச் சிறைகள், மலையக வெளியீட்டகம்.

மலையகம் சார்ந்தவர்கள் எழுதிய நாவல்கள், தொழில் நிமித்தம் மலையகத்தில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்கள் எழுதிய நாவல்கள் என இரண்டு வகையாகப்பிரித்துப் பார்க்கலாம். இவற்றுள் மலைக்கொழுந்து, சொந்தக்காரன், குருதிமலை, மூட்டத்தினுள்ளே, லயத்துச் சிறைகள் போன்றவை தொழில் நிமித்தம் மலையகத்தில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களால் எழுதப்பட்டவை. ஏனையவையெல்லாம் மலையகம் சார்ந்தவர்களால் எழுதப்பட்டவையாகும். இந்நாவல்களை அவை வெளிவந்த கால அடிப்படையில் மூன்றுவகைகளாகப் பிரித்தும் நோக்கலாம்.

1. **ஆரம்பக்காலம்**

தோட்டத் தொழிலாளர்கள் தென்னிந்தியாவில் இருந்துகொண்டு வரப்பட்ட போது அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும் தோட்டங்களுக்குள் வந்ததன் பின்னர் ஏற்பட்ட துன்பியல் அனுபவங்களையும் இவை காட்டுகின்றன.

2. **இடைக்காலக் கட்டம்**

தொழிலாளர்கள் எழுச்சியடைந்து தோட்டத் துரைமார்களுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவதையும், தொழிற்சங்கங்களின் ஆரம்பத்தையும் அரசின் காணிச் சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் கிளர்தெழுவதையும் காட்டுகின்றன.

3. தற்காலம்

பல்பொருள் பெற்றிப் பேசுகின்றன. முடிவாகப் பேராசிரியர் க.அருணாசலத்தின் பாணியிலே நாம் சொல்வதாக இருந்தால் மலையகத் தொழிலாளர்களின் புலம்பெயர் வரலாறு, தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து கொண்டிருந்தபோது அங்குக் காணப்பட்ட அவர்களின் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு நிலைமைகள், இலங்கையில் மலையகத்தை அடைந்தபின் அவர்கள் அடைந்த ஏமாற்றங்கள், நடத்திய வாழ்க்கைப் போராட்டங்கள், தோட்டத்து அதிகாரிகளாலும் ஆட்சியாளர்களாலும் ஏனையோராலும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், தம் அடிப்படை உரிமைகளைப் பெறும்பொருட்டுத் தொழிற்சங்கம் அமைப்பதற்காக அவர்கள் நடத்திய தீரம் மிக்க போராட்டங்கள், செய்துள்ள ஒப்பரிய தியாகங்கள், தொழிற்சங்கக் கெடுபிடிகள், பிரஜா உரிமைகள் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் பட்ட அவலங்கள் இலங்கை - இந்திய உடன்படிக்கைகள், அவற்றின் மூலம் இலட்சோபலட்சம் தொழிலாளர்கள் தாயகம் திரும்ப நிர்பந்திக்கப்பட்டமை, நாடற்றவர் பிரச்சினை, 1958, 1977, 1981, 1983, 1995 ஆகிய ஆண்டுகளைப் பிரதான எல்லைகளாகக் கொண்டு அவர்கள் மீது அடுக்கடுக்காக அவிழ்த்துவிடப்பட்ட கொடூரமான வன்செயல்கள், 1970ஆம் ஆண்டுகளில் தோட்டங்கள் தேசியமயமாக்கப்படல் என்ற போர்வையில் இடம்பெற்ற அக்கிரமங்கள், தொழிலாளர் மேற்கொண்ட இடையறாப் போராட்டங்களால் நீண்டகாலம் தோட்டங்களில் சர்வதிகாரம் விடயங்கள் மலையக நாவல்கள் பலவற்றில் முனைப்புடன் நோக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றில் இருந்து பார்க்கும்போது இம்மலையக நாவல்கள், ஈழத்துத்தமிழ் நாவல்களில் இருந்து வேறுபட்ட சூழலையும் களத்தையும் பிரச்சினைகளையும் முன்வைப்பதாகவும் அவர்களுடைய வரலாற்றை மிக நேர்த்தியாகப் பதிவுச் செய்துள்ள வரலாற்று ஆவணமாகவும் இவை காணப்படுகின்றன என்றால் அவை மிகையாகா. சமூகப் பிரச்சினைகளும் வெளிப்பாட்டு முறைமைகளும் மலையகத் தமிழ் நாவல்கள் வெறுமனே பொழுதுபோக்கு இலக்கியங்களாக அமையாது. ஒரு சமூகத்தின் இருப்பை நிலைநிறுத்தும் இலக்கியங்களாகவும் அச்சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் இலக்கியங்களாகவும் அமைந்துள்ளன. அவற்றைப் படைத்த நாவலாசிரியர்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள் பெருந்தோட்டங்களில் அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங்களைக் கருவாகக் கொண்டனர். எந்தவொரு சமூகத்தின் பிரச்சினைகள், தேவைகள் போன்றவை அவர்களாலேயே வெளிப்படுத்தப்படும்போது தான் அவை யதார்த்த பூர்வமாகவும் இயல்புத் தன்மையுடையதாகவும் அமையும். அதற்கமைய நாவலாசிரியர்கள், இலங்கைவாழ் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரச்சினைகளையும்

போராட்டங்களையும் வெளிப்படுத்த அம்மக்களின் பேச்சு வழக்கினைச் சிறந்த முறையில் கையாண்டு தம் நாவல்களைப் படைத்துள்ளனர். அந்த வகையில் மலையக் நாவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அம்மக்களின் பிரச்சினைகளைக் கீழ்வருமாறு பகுத்து நோக்கலாம்.

- ❖ தம் சுயமரியாதையை நிலைநிறுத்திக் கொள்வதற்கான போராட்டம்.
- ❖ குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்கான போராட்டம்.
- ❖ அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் 25 தோட்ட நிர்வாகிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் அடக்குமுறைகளுக்கெதிரான போராட்டம்.
- ❖ சம்பள முரண்பாடுகளுக்கெதிரான போராட்டம்.
- ❖ வறுமை நிலைக்கெதிரான போராட்டம்.
- ❖ பாலியல் வன்முறைகளுக்கெதிரான போராட்டம்.
- ❖ கல்வி கற்பதற்கான போராட்டம்.
- ❖ மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான போராட்டம்.

**இலங்கை மலையகப் பெண் படைப்பாளி**

இலங்கை மலையகச் சமூகத்தின் மூத்த பரம்பரையினர் கல்வியறிவற்றுத் தோட்டத் தொழிலாளர்களாகவே வாழ்ந்தனர். இந்தச் சமூகத்தின் உயர்வும் முன்னேற்றமும் படித்த இளம் தலைமுறையினரிடே மேதங்கியிருக்கிறது. படித்தவர்கள் அனைவருமே விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சிறு தொகையினர்தாம் என்றாலும், தமது சமூகம் அதன் உயர்வு என்று சிந்திக்கிறவர்கள் சிலரே. சமூக அக்கறை கொண்ட கற்றவர்கள் மற்றவர்களை இது பற்றிச் சிந்திக்கத் தூண்டிவிட வேண்டும். நற்சிந்தனையைத் தூண்டக்கூடிய இலக்கியங்கள், கவிதைகள், காப்பியங்கள், நாவல்கள், சிறுகதைகள் போன்றவை அகிம்சை வழியில் சமூக மறுமலர்ச்சியை உருவாக்கி வருகின்றன. இவற்றுள் நவீன படைப்புகள் எனச் சொல்லத்தக்க மிக ஆழமான முயற்சிகள் பெரும்பாலும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறுகதைகளில் தாம் என்பது மிகையாகாது. சிறுகதைகளின் வழி சமூக விழிப்புணர்வை ஊட்டுகின்றனர்.

**பெண் படைப்பாளிகள் எழுதிய சிறுகதைகள்**

நளாயினி சுப்பையா - சாபக்கேடு, கலங்கரை விளக்கு
சுகந்தி வெள்ளையக் கவுண்டர் - விடியல் எப்போது?
பாலரஞ்சனி சர்மா - பசி, சாஸ்திரம் மீறிய கீர்த்தனம்
ரோஹினி முத்தையா - சட்டி சுட்டுவிடும், தீபாவளி அட்வான்ஸ்
பேபி ரராணி இம்மானுவேல் - இது ஒன்றும் புதிதல்ல

ரூபாராணி ஜோசப் - வறுமைப் பூக்கள்

மலைமதி சந்திரசேகரன் - அவள் விட்டில் பூச்சல்ல

திருமதி அரபா மன்சூர் - வேண்டும் ஒரு பதில்

செல்வி சுந்தரி மலைசுவாமி - தொடரும் சோகங்கள்

**பெண்ணியம்**

Feminism என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பெண்ணியம் எனும் தமிழ்ச் சொல் பயன்படுத்தப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் - தமிழ் அகராதி (1965:379) Feminism என்பது பெண் உரிமை ஏற்றக் கோட்பாடு; பெண்ணுரிமை ஆதரவு என்றும் Feminist என்பதற்குப் பெண் உரிமைகளுக்காகப் பரிந்து பேசுபவர்; பெண் இயல்புகளை ஆராயும் மாணவர் என்றும் கூறுகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (2008:1009) பெண்ணியம் என்பது "ஆணுக்குச் சமமாகப் பெண் மதிக்கப்பட வேண்டும் எனும் சிந்தனைப் போக்கு" என்று கூறுகிறார்.

**பெண்ணிய படைப்புகளின் - உள்ளடக்கம்**

மலையகப் பெண் படைப்பாளிகளின் கதைகள் அனைத்திலும் பெண்களுக்குக் கல்வி என்பது அவசியமான ஒன்று என்பதனை வலியுறுத்தியுள்ளன. பெண்கள் தேயிலைத் தோட்டங்களிலும், வீடுகளிலும் மாறி மாறி வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் பொழுதே இரவில் தனது குடிகாரக் கணவன்களின் தொந்தரவுகளும் சேர்ந்து கொள்ளும்பொழுது படித்திருந்தால் இப்படி அடிமை போல் வாழ வேண்டிய அவசியம் இருந்திருக்காது என்பது போலப் பல பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன.

பெண்ணியப் படைப்பாளிகளின் படைப்புகளில் கதைக்கரு. கருத்துவெளிப்பாடு, மொழி அமைப்பு இவை அனைத்திலும் பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, சுயமரியாதை, முடிவெடுக்கும் திறன், தற்காப்பு, சட்ட உரிமைகளை அறிதல், பேசும் மொழிகளில் விழிப்புணர்வு, கருத்துச் சுதந்திரம் என அனைத்தையும் மையப்படுத்தியே பாத்திரங்கள் படைக்கப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான பழைமை வாதங்கள், இயற்றப்படாத சட்டங்கள் அனைத்தையும் தகர்த்து ஆணுக்கு நிகர் பெண் எனும் சமஉரிமையுடன் வாழவேண்டும் எனும் சிந்தனை மேலோங்கி இருப்பது பாரதிகண்ட புரட்சிப் பெண்களின் வளர்ச்சி நிலையேயாகும்.

# அலகு - 3

## மலேசியாவில் தமிழ் இலக்கியம்

குமரிகண்டம் அழிந்தபோது, சிதைந்த தீவுக்கூட்டங்களில் மலாயா என்ற நாடு தீபகற்பமாக அமைந்து நிலைப்பெற்று ஏறக்குறைய இருபதாயிரம் ஆண்டுகளாகின்றன. ஆதித்தமிழரும் அவர்தம் தாய்மொழி மரபும் இங்கு வேர்க்கொண்டு பல காலங்கள் கடந்துவிட்டன. பின்னர் காலவோட்டத்தில் பற்பல அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு மலாயா சுதந்திரம் பெற்று மலேசியா ஆயிற்று. மலைநாடு, மலாயா, சொர்ணபூமி, கடாரம், காழகம் எனப் பல பெயர்களுடன் தனித்துவம் பெற்றுத் திகழும் மலேசியா பல இனத்தவரையும் பல மொழிகளையும் கொண்ட நாடாக திகழ்கிறது. மலேசியா என்ற பெயர் வந்ததன் பின்னணியில் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தொன்மையான தொடர்புகளைக் கொண்டு தமிழர்களே இப்பெயரைச் சூட்டியிருக்கலாம் என்பது கருத்து. மலைகளை உடைய நாடு என்பதால் அங்குக் குடியேறிய தமிழர்கள் மலேசியா என்ற பெயரை வழங்கியிருக்கலாம் என்பது கூடுதல் தகவலாகும்.

ஒரு மொழி பேசும் மக்கள், மற்றொரு மொழி பேசும் மக்களோடு அரசியல், சமயம், வாணிகம், கலை முதலானவற்றில் நெருங்கி பழகுவதால் மொழிகளிடையே கலப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள் மலேசியா மக்களோடு இரண்டற கலந்திருப்பதனைக் கொண்டும், வரவாறு, அகழ்வாய்வுகள், கல்வெட்டு சான்றுகளைக் கொண்டும் மலேசிய தமிழக உறவின் பழமையை அறிந்துக் கொள்ளலாம். “அலைகடல் நடுவுள் பலகலஞ்செலுத்திச் சங்கிராம விசையோத் துங்க வர்மன் ஆகிய கடாரத் தரசனை வாகையும்” என 13-ம் நூற்றாண்டு கல்வெட்டு ராஜேந்திர சோழன் கடாரத்தைக் கைப்பற்றிய செய்தியைக் குறிக்கிறது. மேலும் இளவரசி வசந்த மாலை ஏறிச் சென்று தேர் ‘கடாரத்து’ இரும்பினால் செய்யப்பட்டது எனப் பெருந்தொகையும், “கங்கை வாரியும் காவிரிப் பயனும் ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்” எனப் பட்டினப்பாலையும் குறிப்பிட்டுள்ளதனைக் கொண்டுத் தமிழக மலேசிய உறவின் தொன்மையை ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

ஆங்கிலேய ஆட்சி காலத்தில் இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்தும் வேலைக்காக மக்களை மலேசியாவில் குடியேற்றம் செய்தனர். அதாவது நகரங்கள், துறைமுகங்களைக் கட்டுமானம் செய்வதில் முழு முனைப்புடன் செயல்பட்ட ஆங்கிலேய அரசு அதற்காக இந்தியாவில் பல்வேறு மாகாணங்களில் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த தண்டனைக் கைதிகளைப் பயனபடுத்த முடிவெடுத்தனர். இப்பணிகளுக்கு இந்திய அரசியல்

கைதிகள் மற்றும் கொடுங்குற்றவாளிகளைத் தீவாந்திரத் தண்டனைக் கைதிகளாக்கிக் கப்பலேற்றி மலாக்கா, பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றனர்.

கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டில் உலகின் தொழில் - பொருளாதார துறைகளில் புதிய மாற்றங்கள் தென்பட ஆரம்பித்தன. கரும்பு, காப்பி, தேயிலை, கோக்கோ, ரப்பர், அவுரி போன்ற பணப்பயிர்கள் அறிமுகமாயின. தோட்டத் தொழிலுக்கு கறுப்பின மக்கள் அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட அதே நேரத்தில் தமிழர்களும் அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட மக்கள் உற்ற துயரங்களும் வேதனைகளும் அளவிடற்கரியது.

மனித உரிமை அமைப்பின் பெரும் போராட்டத்தால் 1833-இல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் மனித அடிமைமுறை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அடிமை முறை ஒழிப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்ததால் தோட்ட முதலாளிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பெரும்பாலான தோட்டங்களில் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் தமிழக கிராமப்புறங்களில் இருந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்திச் செல்லும் குற்றச்செயல்கள் பெருகின. 1843-இல் இந்தியாவில் அடிமைமுறைத் தடுப்புச்சட்டம் நடைமுறைப்படுத்த பிறகு அடிமைகளாக மக்களைக் கொண்டு செல்லும் பிரச்சனைக்குத் தீர்வு கிட்டியது.

ஆனால் அடிமைமுறைக்கு மாற்றாக ஒப்பந்தக் கூலி முறை மீண்டும் துளிர்விடத் தொடங்கியது. இதன்படி மலேசியாவிலுள்ள தோட்ட முதலாளிகள் தங்களுக்குத் தேவையான தொழிலாளர்களின் எண்ணிக்கைக் குறித்து, இந்தியாவிலுள்ள தங்கள் முகவர்களிடம் தெரிவிப்பார்கள். இம்முகவர்களின் கீழ் பணிபுரியும் இடைத்தரகர்கள் கிராமங்கள் தோறும் சென்று ஆட்களைத் திரட்டுவர். திரட்டப்படும் ஆட்களிடம் ஒப்பந்தங்களில் கையெழுத்துப் பெறப்படும்.

ஒப்பந்த கூலி (1833-1910) முறையில் தொழிலாளர்கள் கட்டாயமாக ஐந்தாண்டுகள் பணியாற்ற வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பணியையும், முதலாளியையும் மாற்றிக் கொள்ளும் உரிமைத் தொழிலாளிகளுக்கு இல்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகை மட்டுமே கூலியாக வழங்கப்படும். மலேசியாவில் கடுமையாக உழைத்துத் தமிழர்களுக்கு ஒப்பந்த காலத்திற்குப் பின்னரும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. ஒப்பந்த முறையில் மலேசியாவுக்குப் போனவர்கள் சஞ்சிக் கூலிகள் எனப்பட்டனர். சஞ்சி என்றால் மலாய் மொழியில் ஒப்பந்தம் என்பது பொருள்

## மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் கவிதைகள்

புதுக்கவிதைகள் என்பன காதல் விடும் தூதுகளாகத்தான் இருக்குமென்பதில்லை. அரசியல், சமூகம், காதல், நாடு என்கிற எல்லைகளைக் கடந்து உலகப் பார்வையோடு கவிதைகளைப் படைக்கும் நிலைக்கு மலேசியக் கவிஞர்கள் உயர்ந்துள்ளனர்.

உலகத்தில் மனிதர்கள் இம்சிக்கப்படும்போது
தமிழர்கள் எங்கு பாதித்தாலும் குறிப்பாக யாழ்ப்பாண சோகம்
உலக அரசியல்
தீவிரவாதிகளால் ஏற்படும் உயிர்ப்பலிகள்
இயற்கை சீற்றத்தால் ஏற்படும் சீரழிவு

போன்றவை உலகில் எந்த மூலையில் நிகழ்ந்தாலும் இங்குள்ள கவிஞர்கள் கவிதைகளால் கண்ணீர் சிந்திய மனித நேயத்தைக் காணமுடிகிறது.

உரிமைதேடும் தமிழனின் குரலாக (கவிஞர் சீ. அருணாசலம்) இக்கவிதை இப்படி எதிரொலிக்கின்றது.

"நான் கேட்பது
என் மண்!
என் முதல் குருதி
சிந்தப்பட்ட மண்!
என் தாயின் பிணம்
புதைக்கப்பட்ட மண்!"

தனிநாடு வேண்டி உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு போராளியின் அடிமன உணர்வை நமது கவிஞரால் வெளிப்படுத்த முடிந்திருக்கிறது.

"ஊரைச் சுற்றி
அறிவிப்பு பலகைகள்
குப்பைகளை
கண்ட இடத்தில்
வீசாதீர்கள் !
இனி
குப்பைத்தொட்டியிலும்
வைக்க வேண்டும்

தயவு செய்து

குழந்தைகளை

இங்கே வீசாதீர்கள்!. . ."

சமூகத்தில் நடைபெறும் அவலத்தை ஓர் இளம் கவிஞரால் (எஸ். சற்குணன்) படம்பிடித்துக் காட்ட முடிகிறது.

"மண்ணால்

ஏன்

மனிதயுத்தம்

உங்கள்

உரிமைப்போராட்டத்தில்

உயிர் பந்தாடப்படுகிறது"

அரசியல்வாதிகளால் ஏற்படும் யுத்தங்களையும் அதன் விளைவுகளையும் உற்று நோக்கி உள்வாங்கிக் கொள்ளும் ஆற்றல் நமது கவிஞர்களின் கவிதைவரிகளில் ஆக்கிரமித்துள்ளது.

"பணம் பண்ணுதல்

வாழ்வியலாய்

ஒலி ஒளிக்குள் தொலைத்த

எங்கள்

தமிழினத்தை

மீட்டெடுப்பது

யார்? யார்? யார்?"

என்று தொலைக்காட்சிக்குள் நம் சமூகம் தொலைந்து போகும் நிலையையும்,

"தராசை மட்டுமே

தெரிந்த

எங்கள்

வாழ்வியல் கூறுகளில்

எங்களின்

வாரிசுகள் பயில்வதற்குக்

கூடாரங்களே

குருகுலமானதோ. . . !"

என்று நமது தேர்தல் வாக்குறுதிகளையும் பள்ளிச்சூழலையும் சுட்டிக்காட்ட நமது கவிஞருக்குக் (செ. குணாளன்) கவிதை துணைபுரிந்திருக்கிறது.

“ராச்சச டைனோசரில்
வந்த தேவ தூதன் ஒருவன்
இழுத்துச் சென்று
இட்டான். . . சூரியனை!
. . . . . . . . . . . . . . .
இருள் சூழ்ந்ததால்
மதச் சண்டைகள்
இல்லாமல் ஒழிந்தன
. . . . . . . . . . . . . . .
இனி குண்டுகள்
வெடிக்காதென்னும்
நிம்மதியில் தூங்கினார்கள்
லண்டன், எகிப்து மக்கள்”

சூரியன் இல்லாமல் போனால் என்னென்ன நிகழக்கூடும் என்பதை கற்பனை கலந்த உலகப்பார்வையுடன் ஆரூடக் கவிதையை நம் நாட்டுக் கவிஞர் (சை. பீர்முகம்மது) படைத்துள்ளார்.

மனித நேயமும் பரிவு காட்டும் பண்பும் மனிதர்களிடம் மட்டுமே காட்ட வேண்டுமென்பதில்லை. உயிருள்ள அனைத்து ஜீவன்களிடமும் கருணை காட்டவேண்டும் என்பதை நமது கவிஞர் (பெ.சா. சூரியமூர்த்தி) தனது கவிதையில் வெளிப்படுத்துகிறார். ஜே.இ. எனப்படும் மூளை வீக்கக் காய்ச்சல் ஆசிய நாட்டுப் பன்றிகளைத் தாக்கியபொழுது அவற்றை குற்றுயிரும் குலையுயிருமாகப் புதைத்த கொடூரம் நமது கவிஞரையும் பாதித்திருக்கிறது.

“. . . . . . .
வலிக்கிறதே. . .

ஐந்தறிவு
மிருகம்தான்

மனிதத்தனமாக
அடித்தால்

எங்களுக்கும்

வலிக்குமே

. . . . . . . . . . .

மரண பயம்

மனிதனுக்கு மட்டும்தானா

. . . . . . . . . . .

எங்கள் தீனியில்

விஷம் கலந்திடுங்கள்

வலி தெரியாமல்

வலி

தெ. . . ரி. . . யா. . .ம. . .ல். . .!"

இவ்வாறு புதுக்கவிஞர்களின் பார்வை விரிந்து விசாலமடைந்துள்ளதைக் காணமுடிகிறது. சமுதாயத்திற்கு சிந்தனை மாற்றங்களைக் கொண்டுவரும் நெம்புகோல்களாக புதுக்கவிதையைப் பயன்படுத்தும் வித்தையை நமது கவிஞர்கள் கற்றிருக்கிறார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

## கதைகள்

# வெடித்த துப்பாக்கிகள்

**- சை. பீர்முகமது**

"உங்களின் துப்பாக்கிகளை நண்பர்களின் நெஞ்சுக்கு நேரே பிடிப்பதைத் தவிர்த்து, எதிரிகளின் நெஞ்சுக்கு நேரே பிடியுங்கள்." லெப்டினண்ட் யாக்கோப் உட்பட முப்பது பேர் அணிவகுத்து நின்றார்கள். அவர்களின் கையில் 7.62 மருந்துகளைப் பாவிக்கக் கூடிய எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகள் இருந்தன. கோப்பில் அமீதின் முன் எச்.பி. தானியங்கித் துப்பாக்கி கம்பீரமாகத் தரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஒருவரின் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை. லான்ஸ் கார்ப்ரல் செல்லத்துரை, பிரைவேட் பீடின், பிரைவேட் ஜீ நாங் ஆகிய மூவரும் ஒரே வரிசையில் ஒருவன் பின் ஒருவராக நின்றிருந்தார்கள். மூவரின் முகத்திலும் ஆத்திரமும் வஞ்சம் தீர்க்கும் குரோதமும் குடிகொண்டிருந்தன. சார்ஜண்ட் யாக்கோப் இதையெல்லாம் கண்டும் காணாததுபோல் பின் வரிசையில் நின்றிருந்தான்.

"நேற்றிரவு சார்ஜண்ட் யாக்கோப்பைக் கொல்வதற்கு முயற்சி நடந்ததை நாமனைவரும் அறிவோம். ஆனால் யார் முயன்றார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் நம்மில் மூவர்தான் முயன்றுள்ளனர். இதைப் பற்றி நான் இப்பொழுது விசாரணை நடத்தப் போவதில்லை. நாமனைவரும் நமது 'யூனிட்'டுக்கு திரும்பிய பிறகு இதைப்பற்றி நான் விசாரிக்க எண்ணியுள்ளேன். ஒன்றை மட்டும் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் இங்கே எதிரிகளை அழிக்க வந்துள்ளோம். நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு அல்ல. நம்மைச் சுற்றி எதிரிகள் இருக்கிறார்கள். நாம் மூன்ற நாள் பயணத்திற்குப் பிறகு தேசப்பட எண். '473526'க்கு வந்துள்ளோம். நமக்குக் கிடைத்த தகவலின்படி எதிரிகள் இங்கிருந்து இன்னும் மூன்று மைல் தொலைவில் மறைந்திருக்க வேண்டும். எனவே அதிக கவனத்துடன் எதிரிகளை எதிர்த்துப் போரிட உங்களை நீங்கள் தயார்படுத்திக்கொள்ளுங்கள்." லெப்டினண்ட் காலீத் பேசி முடித்ததும் சார்ஜண்ட் யாக்கோப் கையை உயர்த்தினான்.

'என்ன?' என்று கேட்டார் லெப்டினண்ட்.

'நான் உடனே யூனிட்டுக்குத் திரும்ப விரும்புகிறேன் துவான்!'

‘ஏன்?’

“நான் இங்கிருப்பவர்களின் மேல் உள்ள நம்பிக்கையை இழந்துவிட்டேன். எதிரிகளைப் பார்த்ததும் முதல் குண்டை என்மேல்தான் பாய்ச்சுவார்கள். பிறகுதான் எதிரியை நோக்கிச் சுடுவார்கள். நான் ‘யூனிட்டில்’ இருக்கும்பொழுது கடுமையாக நடந்து கொண்டிருக்கலாம். அது எனது கடமை. அதற்காக இவர்கள் என்னை இங்கே பழிவாங்கப் பார்ப்பது சரியல்ல. துவான், உடனே சிக்னல் அனுப்பி என்னை அனுப்பிவிடுங்கள்.” சார்ஜண்ட் யாக்கோப்பின் குரலில் பயமும் பதட்டமும் கலந்து நின்றன.

‘சார்ஜண்ட்! நான் உன்னை யூனிட்டுக்கு அனுப்ப முடியாததற்காக வருந்துகிறேன். கம்யூனிஸ்டுகளை இந்தக் குரோ பகுதியில் அழிப்பதற்காக நாம் அனுப்பப்பட்டுள்ளோம். நமக்கு நமது சொந்தக் காரணங்களை விடக் கடமைதான் மிக முக்கியம். நேற்றிரவு நடந்தது போல் இனி நடக்காது என்று நான் நம்புகிறேன். நீ தைரியமாக உனது கடமையில் ஈடுபடு!’ லெப்டினண்ட் தனது பேச்சை நிறுத்தினார்.

‘வேறு ஏதும் கேள்விகள்…?’

‘… … …’

‘ஓகே, கேள்விகள் இல்லையென்றால் உங்களின் காலை உணவை அரைமணி நேரத்தில் முடித்துக்கொண்டு புறப்படுவதற்குத் தயாராகுங்கள். இப்பொழுது காலை 6 மணி. 6.30க்கு இங்கிருந்து நாம் புறப்பட்டு ஆக வேண்டும்.’

சார்ஜண்ட் யாக்கோப் லெப்டினண்ட் முன்னே சென்று ‘சல்யூட்’ அடித்துவிட்டு அணிவகுப்பைக் கலைக்கும் உத்தரவைப் பிரரேபித்தான்.

எல்லோரும் தேநீரைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். ‘கொம்போரேசனிஸ்’ வைக்கப்பட்டிருந்த டின்களை உடைத்து பிஸ்கட், காயா, சீனி, பால், தேத்தூள் முதலியவற்றை வெளியே எடுத்தார்கள்.

லான்ஸ் கார்ப்பரல் செல்லத்துரை, பிரைவேட் பீடின், பிரைவேட் ஜீ நாங் ஆகிய மூவரும் தனியாக அமர்ந்து தேநீரைத் தயாரிக்கத் தொடங்கினார்கள்.

‘நீ நேற்று இரவு பயந்துவிட்டாய் - இல்லாவிட்டால் இன்று காலை அவனுடைய இறுதி ஊர்வலம் புறப்பட்டிருக்கும்!’ - பிரைவேட் பீடின் ஆத்திரத்துடன் பேசினான்.

“நான் எனது துப்பாக்கியின் சேவ்ட்டி கீயை ‘ஆர்’க்குத் தள்ளும்பொழுது ஏற்பட்ட ஓசையில் அவன் டார்ச் லைட்டை அடித்துவிட்டான். அதோடு எதிரிகள்தான் புகுந்துவிட்டார்கள் என்று நினைத்து ‘ஸ்டேன்ட்டு’ ஆர்டரைப் பிரரேபித்து விட்டான். இந்த அமளியில் நான் எப்படிச் சுடுவது? நான் ஓடிவந்து எனது இடத்தில் நின்று கொண்டேன்.” லான்ஸ் கார்ப்பரல் செல்லத்துரை தனது நிலையை விளக்கினான்.

“என்னை மூன்ற முறை சி.பி. யில் தள்ளினான். ஒவ்வொரு முறையும் இருபத்தெட்டு நாட்களை நான் சிறையில் கழித்தேன். இருபத்தெட்டு நாட்களும் சம்பளம் வெட்டப்பட்டது. மூன்று முறையும் நான் பட்ட சிரமங்கள் சொல்லில் அடங்காது. நான் பட்ட சிரமங்களுக்காக அவனை என் கையால் சுட்டால்தான் என் மனம் ஆறுதல் அடையும்.” பிரைவேட் ஜீ நாங் பற்களை ‘நறநற’வெனக் கடித்தான்.

“உன்னை மூன்று முறை என்றால் என்னை இதுவரை ஐந்து முறை சி.பி.யில் தள்ளினான். செல்லத்துரையைக் கார்ப்பரல் பதவிக்கு உயர்த்தும் நேரம் பார்த்து அவன் கார்டியூட்டியைச் சரியாகச் செய்யவில்லையென்று ‘சார்ஜ்’ செய்து சி.பி.யில் தள்ளினான். அவனுடைய அத்தியாயத்தை இந்தக் குரோ காட்டிலேயே முடித்துவிட வேண்டும்.” பிரைவேட் பீடின் துப்பாக்கியை ஓங்கித் தரையில் குத்தினான்.

“டேய், ஆத்திரத்தில் அறிவை இழந்துவிடாதே. ‘சேவ்ட்டி கீயை’ ‘எஸ்’ஸில் வைக்காமல் ‘ஆரில்’ வைத்துள்ளாய். சற்று ஓங்கித் தரையில் தட்டினால் குண்டு வெளியாகி உன் உயிரையே குடித்துவிடும் ஜாக்கிரதை.” லான்ஸ் கார்ப்ரல் செல்லத்துரை பீடினை எச்சரித்தான்.

பீடின் துப்பாக்கியை எடுத்துப் பார்த்தான். “நல்ல வேளையாகத் துப்பாக்கி ‘கோக்’ செய்யப்படவில்லை.” ஜீ நாங் பெருமூச்சு விட்டான்.

பீடின் சேவ்ட்டி கீயை ‘ஆர்’ என்ற இடத்திலிருந்து ‘எஸ்’ என்னும் இடத்திற்குத் தள்ளினான்.

எல்லோரும் சாமான்களைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள்.

‘கிப் பேக்’கை முதுகில் எடுத்து மாட்டிக்கொண்டு தங்களின் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு புறப்படுவதற்கு முன்பு தாங்கள் அங்கே தங்கி உணவருந்தியதற்கான எந்த அடையாளமும் இல்லாமல் எல்லாவற்றையும் குழிதோண்டிப் புதைத்தார்கள். அதன் மேல் சருகுகளைக் கொட்டினார்கள்.

லெப்டினண்ட் காலீத் திசைகாட்டும் கருவியைக் கையில் எடுத்துப பார்த்தார். 'நியூம்லஸ் லைன்' 360 மில்ஸ்சைக் காட்டியது. தேசப் படத்தை எடுத்துப் பிரித்து இடத்தைச் சரி பார்த்துக்கொண்டு சிப்பாய்களை முக்கோண வடிவத்தில் போகச் சொன்னார். எல்லோரும் நடக்கத் தொடங்கினார்கள். சைகைகள் மூலமே பேசிக்கொண்டார்கள்.

மாலை மங்கிய நேரம். கொசுக்கள் படையெடுக்கத் தொடங்கின. காட்டுப் பூச்சிகளின் அதி பயங்கர ஓசை. மழை இலேசாகத் தூறத் தொடங்கியது. காட்டுக்குள் அதிகமாக இருட்டத் தொடங்கியது.

பிரைவேட் சாலே திடீரென்று கையைத் தூக்கினான். அனைவரும் நின்றுவிட்டார்கள். பிறகு கையைப் பெருக்கல் குறியிட்டுக் காட்டினான். அதன் அர்த்தம் முன்னே பெரிய ஆறு ஓடுகிறது என்பதாகும். முப்பது பேர் கொண்ட அந்த 'பிளாட்டூ'னுக்கு பிரைவேட் சாலேதான் வழிகாட்டி (ஸ்கவுட்).

எல்லோரும் ஆற்றில் இறங்கினார்கள். குளிர் வாட்டியது. துப்பாக்கிகளைத் தலைக்குமேல் தூக்கிக்கொண்டு நீரைக் கிழித்துக்கொண்டு முன்னேறினார்கள்.

லான்ஸ் கார்ப்பரல் செல்லத்துரை, பிரைவேட் பீடின், பிரைவேட் ஜீ நாங் மூவரும் சார்ஜண்ட் யாக்கோப்பின் மேல் கண் வைத்தவாறு நடந்தார்கள். அவர்கள் மூவரும் தனியாகக் கூடிப் பேசுவதையும் தன்னை முறைத்து முறைத்துப் பார்ப்பதையும் 'சார்ஜண்ட்' கவனிக்கத் தவறவில்லை.

எல்லோரும் ஆற்றைக் கடந்து கரையேறினார்கள். உடைகள் நெஞ்சின் அளவுக்கு நனைந்திருந்தன.

குளிர் வாட்டத் தொடங்கியது.

"நாம் இன்றிரவை இங்கே 'பேஸ்' அமைத்துக் கழிக்க வேண்டும்." லெப்டினண்ட் கட்டளையைப் பிரரேபித்தார்.

நான்கு அடி ஆழமும் - இரண்டடி அகலமும் நான்கு அடி நீளமும் கொண்ட குழிகளை இருவர் இருவராகத் தோண்டத் தொடங்கினார்கள். அந்தச் சிறிய குழியில்தான் இருவர் தூங்கவேண்டும். அதுவும் உட்கார்ந்து கொண்டு தூங்கவேண்டும். குழிக்கு மேலே இருபக்கமும் கவண் கம்புகளை நட்டுப் பிறகு குறுக்காக ஒரு நீண்ட கம்பைப் போட்டு அதன் மேல் மழைக் கோட்டை விரித்து நான்கு பக்கமும் மழைக்கோட்டை இழுத்துக் கட்டிவிட வேண்டும். குழியில்

இருந்து தோண்டி எடுக்கப்படும் மண்ணை எதிரி இருக்கும் திசை என்று அனுமானிக்கும் திசையில் குழியை ஒட்டி மேடாகக் கொட்டி வைக்க வேண்டும்.

“என் தாயார் தலையில் அடித்துக் கொண்டாள். ராணுவத்தில் சேர வேண்டாமென்று. நான் இப்பொழுது படுகிறேன் பார்! கருமம் கருமம்!” மண்ணை அள்ளி வெளியே கொட்டியவாறு முணுமுணுத்தான் பிரேவேட் அபுபக்கர்.

காலையில் இருந்து காட்டில் பல மலைகளைக் கடந்து அவர்கள் நடந்து வந்துள்ளார்கள். பற்றாக்குறைக்கு ஆற்றை வேறு கடக்க வேண்டியிருந்தது. அவர்கள் மிகவும் களைத்த நிலையில் இருந்தார்கள். என்ன செய்வது? அந்தக் குழியை அவர்கள் வெட்டித்தான் ஆக வேண்டும்.

எல்லோரும் குழி வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது சிலர் அந்த இடத்தைக் காவல் காத்தார்கள். லான்ஸ்கார்ப்பரல் செல்லத்துரை, பிரைவேட் பீடின், பிரைவேட் ஜீ நாங் ஆகிய மூவரும் ஒரு மறைவான இடத்தில் அமர்ந்து சிகரெட்டைப் பற்ற வைத்தவாறு பேசிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று அவர்களுக்குப் பின்னே ஒரு சலசலப்பு சத்தம் கேட்டது. காட்டு பச்சை நிற உடை அணிந்த ஒருவன் கையில் துப்பாக்கியுடன் அவர்களை நோக்கி நின்று கொண்டிருந்தான். மூவராலும் ஏதும் செய்ய முடியவில்லை. சற்று கவனக்குறைவாக இருந்ததால் எதிரியின் துப்பாக்கி முனையில் மூவரும் நிறுத்தப்பட்டு விட்டார்கள்.

“நமது ராணுவ வீரர்கள் களைத்திருக்கும் நேரத்;தில்தான் கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் தாக்குவார்கள் என்பது எவ்வளவு உண்மையாகிவிட்டது” என்று பிரைவேட் பீடின் நினைத்தான்.

சத்தம் போட்டால் சுட்டுவிடுவேன் என்று சைகை செய்தவாறு அவர்களை முன்னே நடக்கச் சொன்னான் அந்தக் கம்யூனிஸ்டு.

மூவருக்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் அவர்கள் இதற்கு முன் மாட்டியது இல்லை. எதிரி துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தினான். மூவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

திடீரென்று பறந்து வந்த குண்டு எதிரியைத் தாக்கியது. இரண்டாவது குண்டைத் தனது துப்பாக்கியிலிருந்து வெளியாக்குவதற்குத் தயாராக சார்ஜண்ட் யாக்கோப் நின்று கொண்டிருந்தான். கண் இமைக்கும் நேரத்தில் எல்லாம் நடந்துவிட்டது.

முதல் வேட்டைக் கிளப்பியபிறகு அங்கே ஒளிந்திருந்த எதிரிகள் நான்கு திக்குகளிலும் சுடத் தொடங்கி விட்டார்கள்.

குண்டுகளின் ஒலி அந்தக் காட்டை அதிரச் செய்தது. துப்பாக்கி முனைகளிலிருந்து குண்டு வெடிக்கும் பொழுது நெருப்புப் பொறிகள் கிளம்பின.

காட்டில் கூடுகளில் உறங்கிய பறவைகள் பெரு ஒலி எழுப்பிப் பறந்தன.

தானியங்கித் துப்பாக்கி ‘எவ்வி பேரல்’ விடாது குண்டு மழை பொழிந்தது. எதிரிகள் ஓடுவதற்குத் தொடங்கினார்கள். லெப்டினண்ட் காலீத் கையெறி குண்டு எண்.28 ஐ தூக்கி வீசினார். பெரு ஓசையோடு அது வெடித்தது. அதன் பிறகு எங்கும் நிசப்தம் நிலவியது.

லெப்டினண்ட் காலீத் சிறிது நேரத்தில் ‘எல்லாம் சரியாகிவிட்டது திரும்பலாம்’ என்பதற்கு அடையாளமாக வானில் பச்சைக் குண்டை வெடித்தார். காட்டின் பல திசைகளிலும் முக்கலும் முனகலும் கேட்டன.

பொழுது புலர்ந்தது.

சண்டை நடந்த இடத்தில் மூன்று பிணங்களைத் தனியாகவும் ஒரு பிணத்தைத் தனியாகவும் கிடத்தியிருந்தார்கள்.

“நாம் ஓர் உயிரை இழந்து மூன்று உயிர்களை வாங்கியுள்ளோம். நமக்கு வெற்றிதான். ஆனால் இந்த வெற்றிக்காக நாம் அதிக விலையைக் கொடுத்துள்ளோம்! நமது வழிகாட்டி இறந்துவிட்டார். நமது சார்ஜண்ட் யாக்கோப்பின் காலில் குண்டு பட்டு அவர் நடக்க முடியாதவராகிவிட்டார். ஆனால் சார்ஜண்ட் தனது முதல் குண்டை வெடிக்காமல் இருந்திருப்பாரேயானால் லான்ஸ் கார்ப்பரல்; செல்லத்துரை, பிரைவேட் பீடின், பிரைவேட் ஜீ நாங் ஆகிய மூவரும் நாம் இழந்திருப்போம். அவர் பெரும் வீரர். அவரின் காலில் குண்டடி பட்டதை எண்ணி நான் மிகவும் வருந்துகிறேன்.” லெப்டினண்ட் காலீத் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

வீரர்கள் அனைவரும் தரையில் அமர்ந்து அவரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

“கம்யூனிஸ்டுகள் அடர்ந்த காட்டுக்குள் மறைந்து விட்டார்கள். இனி அவர்களோடு சண்டை போட இயலாது. எனவே நாம் திரும்புவோம். நமது ‘சிக்னல் செட்’ எதிரியின் குண்டு பட்டு உடைந்து விட்டது. நாம் சார்ஜண்ட் யாக்கோப்பைத் தூக்கிக் கொண்டுதான் செல்ல வேண்டும்.

ஹெலிகாப்டரை வரவழைக்க முடியாது. எனவே 'சார்ஜண்டை'த் தோளில் சுமந்து செல்வோம். நான் ஆரம்பத்திலேயே சொன்னதையே சொல்கிறேன் நமது கையில் துப்பாக்கி தரப்பட்டிருப்பது எதிரிகளைக் கொல்வதற்குத்தான்; நம்மையே நாம் அழித்துக் கொள்வதற்கல்ல. நமது சக்திகளை எதிரிகளுக்கு எதிராகத் திருப்புங்கள். நாம் வெற்றியடைவோம்! இதோ மண்ணில் கொட்டிக் கிடக்கிறதே நமது தோழரின் ரத்தம். அதன் மேல் ஆணையாக நாம் ஒன்றுபடுவோம்! நாட்டையும் மக்களையும் காப்போம்!" காலீத்தின் கண்களில் நீர் வழிந்தது.

'ரைப்பில் சிலிங்' (துப்பாக்கியைத் தொங்க விடும் வார்) அதை அவிழ்த்து இரண்டு கம்புகளுக்கு இடையே கட்டினார்கள். அதில் 'சார்ஜண்ட்' யாக்கோப்பைப் படுக்க வைத்தார்கள். நான்கு பேர் அந்த மாவீரனைத் தூக்கினார்க்ள. அந்த நான்கு பேரில் அவனைக் கொல்ல நினைத்த மூவரும் அடங்கியிருந்தார்கள். மாபெரும் வெற்றிக்குப் பிறகு அந்த வீரர் படை யூனிட்டுக்குத் திரும்பியது.

## மாணிக்கம் காணாமல் போகிறான்

**- ரெ. கார்த்திகேசு**

“காணமால் போனவன் உனக்கு என்ன உறவு?”

“தம்பி”

-பெயர் என்ன? எழுத்துக்கூட்டிச் சொல்!”

முத்துசாமி ஒவ்வொரு எழுத்தாக மலாயில் எழுத்துக்கூட்டிச் சொல்ல அந்தக் கார்ப்பரல் எழுதினார். பின்னர் படித்தார். “மாணிக்கம் அனாக் லெலாக்கி .மாடசாமி.”

“மாணிக்கம் அனாக் லெலாக்கி மாடசாமி” என்று திருத்திச் சொன்னார் முத்துசாமி.

“நீங்கள் இந்தியர்கள் ஏன் இவ்வளவு நீளமாகப் பெயர் வைத்துக் கொள்கிறீர்கள்?”

முத்துசாமி இருந்த மனநிலையில் இந்தியர்கள் நீளமாகப் பெயர் வைத்துக் கொள்ளும் காரணத்தை விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை.

“நன்றாகத் தேடிப் பார்த்தீர்களா? ஒருவேளை நண்பர்கள் வீட்டுக்குப் போய்த் தங்கி இருப்பானா?”

“நண்பர்களையெல்லாம் கேட்டுவிட்டேன். யார் வீட்டிலும் இல்லை. வெள்ளிக்கிழமை மாலையில் போனவன். இன்றைக்குச் செவ்வாய்க்கிழமை ஆகிவிட்டது.”

“குடும்பத்தில் சண்டையா? ஏசினீர்களா? அடித்தீர்களா?”

“அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!”

“ஒரு வேளை உனக்குத் தெரியாமல் உன் குடும்பத்தில் வேற யாராவது அவனை ஏசிவிட்டீர்களா? உன் மனைவி?”

“இல்லை! அவள் அப்படிப்பட்டவள் அல்ல!”

“பரீட்சையில் சரியாகப் பாஸ் செய்யாததால்தான் அவன் வீடு திரும்பவில்லை என்கிறீர்கள். தற்கொலை செய்துகொள்ளும் மனநிலை உள்ளவனா? எப்போதும் கவலைப்படும் பையனா?”

முத்துசாமியின் விழிகளுக்குள் கண்ணீர் குப்பென்று பெருகியது. அடக்கிக் கொண்டார்.

“தெரியவில்லை. அப்படி இருக்காது.”

“இந்தக் காலத்துப் பையன்கள் கோழைகள். பரீட்சையில் பெயிலானால் தற்கொலை! அப்பா அம்மா ஏசினால் தற்கொலை! கேர்ல்பிரண்ட் ஏமாற்றிவிட்டால் தற்கொலை! அதிலும் நீங்கள் இந்தியர்கள் ரொம்ப மோசம்!”

கார்ப்பரல் பாதி முத்துசாமிக்குச் சொல்லி பாதி தானாகப் பேசிக் கொண்டார். முத்துசாமியின் உள்ளத்தைக் குற்ற உணர்வு போட்டு அறுத்தது. அப்படித்தான் இருக்குமோ? எஸ்.பி.எம். ரிசல்ட் சரியாக இல்லை என்பதால் என் முகத்தில் விழிக்கப் பயந்து தற்கொலை பண்ணிக் கொண்டிருப்பானா? அந்த அளவுக்கு அன்பும் பரிவும் காட்டாமல் நான்தான் அவனை அந்த நிலைக்க விரட்டி விட்டேனா?

கார்ப்பரல் வயது, நிறம், உயரம், கனம் எல்லாம் கேட்டு எழுதினார். மீண்டும் ஒரு முறை எழுதியதை எல்லாம் சரிபார்த்தார்.

“கொஞ்சம் இரு! ஆஸ்பத்திரி ரிப்போர்ட் ஏதும் வந்திருக்கிறதா என்று பார்த்து வருகிறேன்!” என்று உள்ளே போனார்.

அந்த நேரத்தில் அந்தப் போலீஸ் நிலையத்தில் நிற்பது நெருப்த் தணல்களின் மேல் நிற்பதைப் போல் இருந்தது முத்துசாமிக்கு. மூன்று நாட்கள் மாணிக்கத்தைத் தேடியலைந்தாயிற்று. இரண்டு நாள் ஆபீசுக்கு அவசர லீவு. அவன் எங்குமே கிடைக்கவில்லை.

பள்ளிக்கூடத்தில் அவன் ரிசல்டு பார்க்க வந்ததாகவும், தொங்கிய முகத்துடன் திரும்பிப் போனதாகவும் பார்த்த நண்பர்கள் சொன்னார்கள். அன்றிலிருந்து ஆளைக் காணவில்லை. அது என்ன அவ்வளவு பெரிய தோல்வியா? பி.எம். (P.M) யில் பி8 (P8) வாங்கியிருந்தான். மூன்றாம் கிரேடில் பாஸ் செய்திருந்தான். ஆறாம் படிவத்தில் இடம் கிடைக்காது. அதனால் என்ன?

கொஞ்சம் பணம் செலவழித்தாவது தனியார் பள்ளியில் படிக்கலாம். வேலை செய்துகொண்டே படிக்கலாம். அதைவிட்டு ஏன் ஓடி ஒளிய வேண்டும்? என் முகத்தில் விழிக்க முடியாத அளவுக்கு நான் அவ்வளவு கொடுமைக்காரனா?

கார்ப்பரல் திரும்பி வந்தார்.

“என்னோடு பெரிய ஆஸ்பத்திரிக்கு வருகிறாயா?” என்று கேட்டார்.

“ஏன்?” திகிலுடன் கேட்டார் முத்துசாமி.

“காடியில் அடிபட்ட அடையாளம் தெரியாத பிணம் ஒன்று இருக்கிறதாம். உயரம், எடை ஒத்திருக்கிறது. நீ பார்த்தால் உன் தம்பிதானா என்று கண்டுபிடிக்கலாம்.”

அடிவயிற்றில் உதைத்துப் பிறந்த ஓர் அதிர்ச்சி தொண்டை வரை ஏறியது. முகத்தில் குப்பென்று பரவியது.

“என்ன சொல்கிறீர்கள்? என் தம்பியா?”

“என்னைக் கேட்டால் எப்படித் தெரியும்? நீ வந்து பார்!” என்றார் கார்ப்பரல். “என்னுடன் போலீஸ்காரில் வருகிறாயா?” என்று கேட்டார்.

“நான் மோட்டார் சைக்கிள் வைத்திருக்கிறேன். நானே அங்கே போகிறேன்” என்றார் முத்துசாமி.

“சரி பிணக்கிடங்கு வாசலில் எனக்காகக் காத்திரு!” என்று சொல்லிக் காரை நோக்கி நடந்தார் கார்ப்பரல்.

பினாங்கு பெரிய மருத்துவமனையை நோக்கி மோட்டார் சைக்கிள் பறந்தது. ஆனால் முத்துசாமிக்கு மனம் மோட்டார் சைக்கிளில் இல்லை. அப்படியா செய்து விட்டான்? ஏன் செய்தான்? என்று மனம் கேட்டுக் கொண்டிருந்தது. தம்பி மீது அவர் உள்ளத்தில் உண்மையான அன்பு இருந்தது. அவன் படித்து முன்னேற வேண்டும் என்பதில் அக்கறை இருந்தது. ஆனால் அதையெல்லாம் வெளிக்காட்டவோ கண்டு கொள்ளவோ நேரம்தான் இல்லை. வீட்டுக்குப் போனால் பலவிதக் கடமைகள்.

பொருளாதாரச் சிக்கல்கள். வருமானம் செலவுக்குப் போதவில்லை. பற்றாக்குறைக்குக் கடன் வாங்க வேண்டியிருந்தது. கடனும் கூட்டும் தவணைப்பணமும் வீட்டு ரிப்பேரும் எப்போதும் மனத்தில் இருந்தன. பிள்ளைகள் படிப்பு, நோய்கள், மருத்துவம், தீபாவளிச் செலவு, தைப்பூசச் செலவு, ஆண்டு முடிந்தால் குழந்தைகளுக்கு யூனிபார்ம். சாப்பாத்து எல்லாம் மாறி மாறி மனத்தில் நின்றன. தம்பி தன்னம்பிக்கை உள்ளவன். அவனைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்ற எண்ணமும் இருந்தது. அந்த எண்ணம் புறக்கணிப்பாக மாறித் தம்பியைப் பாதித்துவிட்டதா? அதனால்தான் நன்றாகப் படித்துக் கொண்டிருந்தவன் கோட்டை விட்டானா? அதனால் மனம் உடைந்து

தற்கொலையா? அட தம்பி நானா உன்னைக் கொன்றுவிட்டேன்? கண்கள் கலங்கின. ஒரு கையால் கண்களைக் கசக்கிக் கொண்டே மோட்டார் சைக்கிளை ஓட்டினார்.

கார்ப்பரல் முன்னே நடக்க முத்துசாமி பின்னால் நடந்தார். பிணக்கிடங்கின் ரசாயன வீச்சு குமட்டியது. ஒரு மேசையில் வெள்ளைத்துணி போர்த்தப்பட்ட ஒரு பிணம் கிடந்தது. உள்ளங்கால்கள் வெளுத்து விரல்கள் பிரிந்து இரண்டு பாதங்களும் துணிக்க வெளியில் பிளந்தவாறு நீட்டிக் கொண்டிருந்தன.

பிணக்கிடங்கு அட்டன்டன் இருவரையும் மேசையின் அருகே அழைத்துச் சென்றார். முத்துசாமியின் கைகள் ஆடின. கால்கள் நிற்கமாட்டாமல் மடங்குவது போல ஓர் உணர்வு. வெளியே தெரிந்த பாதங்கள் வெள்ளையாக இருந்தன. மாணிக்கம் கருப்பு. ஆனால் செத்தபின், இரத்தம் நின்றபின் வெளுத்திருக்குமோ?

முகத்தை மறைத்திருந்த துணியை அகற்றினார் அட்டன்டன். மீசை வந்திருந்த மலாய்க்காரர் பிணம். முத்துசாமி கார்ப்பரலைப் பார்த்தார் “இல்லை” என்றார்.

“இது என்ன? ஓராங் மிலாயு தெளிவாகத் தெரிகிறது. ஏன் சொல்லவில்லை?” என்று கார்ப்பரல் அட்டன்டனைக் கேட்டார்.

“என்னைக் கேட்காதீர்கள். நான் என்ன டாக்டரா?” என்று எதிர்கேள்வி கேட்டார் அட்டன்டன்.

“என்ன வேலை பார்க்கிறீர்களோ? வீணாக ஒரு டிரிப்” என்று அலுத்துக் கொண்டார் கார்ப்பரல். “சரி நீ வீட்டுக்குப் போகலாம். வேறு புதிய தகவல் இருந்தால் வந்து சொல்” என்று முத்துசாமியிடம் சொல்லிவிட்டு அவர் திரும்பினார்.

சவக்கிடங்கின் வெளியே மரத்தடியில் இருந்த பெஞ்சில் உட்கார்ந்தார் முத்துசாமி. பிணம் தம்பியுடையதல்ல என்பதில் பெரும் ஆறுதல் இருந்தது. ஆனால் எங்கே போனான் மாணிக்கம்.

ஒருவேளை எஸ்டேர்டில் தன் பெற்றோர் வீட்டுக்கே திரும்பியிருப்பானோ என்று ஏற்கனவே எஸ்டேட்டில் தனக்குத் தெரிந்த கிராணியாருக்குப் போன் செய்து விசாரித்திருந்தார் முத்துசாமி. மாணிக்கம் அங்கேயும் வரவில்லை என்ற தகவல் வந்தது. இருந்தாலும் அப்பாவும்

அம்மாவும் விஷயம் கேள்விப்பட்டுப் பெரிய கூச்சல் போட்டதாகவும் ஒரு வேளை பினாங்கக்கு வரக்கூடும் என்று கிராணி நண்பர் சொன்னார்.

அப்பா அம்மா தன் வீட்டுக்கு வரப்போகிறார்கள் என்ற நினைவு வந்ததும் முத்துசாமி ஒரு கணம் அதிர்ச்சி அடைந்து போனார். அவர் பெற்றோர்கள் அவர் வீட்டுக்கு மிக அரிதாகத்தான் வருவார்கள். ஆனால் வரும் ஒவ்வொரு முறையும் ஒரு பெரிய புயலை எழுப்பாமல் போவதில்லை. இன்றைக்கு வந்திருப்பார்களா? வீட்டில் கமலா தனியாக இருக்கிறாளே! அவளைப் பிய்த்து எடுத்துவிடுவார்களே!

எழுந்து மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்தார். உதைத்துக் கிளப்பி வீட்டை நோக்கி ஓட்டினார்.

கீழே மோட்டார் சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு லிப்டில் ஏறி ஆறாவது மாடியில் இறங்கி வராந்தவை அடைந்த போதே, தன் வீட்டுக் கதவின் வெளியே சுருட்டுப் பிடித்தவாறு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் அப்பாதான் என்பது தெரிந்துவிட்டது. அவர் பக்கத்தில் அவர்கள் குடும்ப நண்பரான டிரைவர் பெரியசாமி நின்றுகொண்டிருந்தார்.

முத்துசாமியைப் பார்த்ததும் பாராததுமாக முகத்தைத் திருப்பிக் கொண்டார் அப்பா. “எப்ப வந்தீங்க அப்பா? ஏன் வெளியே உட்கார்ந்திருக்கீங்க? உள்ள வாங்க!” என்றார் முத்துசாமி.

“ஏன் உள்ள வரணும்? உன் வீட்டு வாசல கூட நான் மிதிக்க மாட்டேன்!” என்றார் அவர் அப்பா.

ஒரு சண்டைக்குத் தயாராக வந்திருக்கிறார்கள் என்ற தெரிந்தது. உள்ளே போனார். அம்மா ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். முத்துசாமியைக் கண்டவுடன் ஆரம்பித்தான்.

“அய்யோ பாவி மகனே! என் புள்ளைய கண்ணுக்குக் கண்ணா வளத்து உங்கிட்ட ஒப்படச்சேனே! என்னடா பண்ணுன என் மாணிக்கத்த? என் புள்ளய கண்ணால பாத்தே ரெண்டு வருஷமாச்சே? என்ன பண்ணுன என் புள்ளய?” கத்தினாள். ஒப்பாரி வைத்தாள்.

“ஏம்மா கத்தறே? தேடிகிட்டுத்தான் இருக்கேன். போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணியிருக்கேன். சும்மா இரு!” என்றார் முத்துசாமி. “சும்மா இங்கிறானே! என் புள்ளய எங்கயோ வெரட்டிட்டு, நீயும் இந்தச் சிறுக்கியும் என்ன

சும்மா இருங்கிறீங்களா! இதுக்குத்தானா எம் புள்ளய ஒங்கிட்ட தாரவாத்துக் கொடுத்தேன்?"

கமலா அடுப்பங்கரையிலிருந்து தலையைக் காட்டினாள். அவளை நோக்கிப் போனார். அழுது முகம் வீங்கியிருந்தாள். முகம் கறுத்திருந்தது.

"என்ன கமலா?" என்றார்.

"வந்ததில இருந்து இப்படித்தாங்க! அடுத்தடுத்த வீட்டுச் சீனக் குடும்பங்க வந்து வேடிக்கை பார்க்குது. கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கன்னு சொன்னா என் வாய மூடச் சொல்றியான்னு இன்னம் கூச்சல் போடுறாங்க! உங்கப்பா உள்ளவே வரமாட்டாராம். வராந்தாவிலேயே நின்னு கூச்சல்!" என்றாள்.

முத்துசாமிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. இதற்காகத்தான் தன் அப்பா அம்மாவை அவர் அழைப்பதே இல்லை. ஏதாகிலும் சிறு காரணத்திற்கெல்லாம் சண்டை பிடிப்பார்கள். நாகரிகமில்லாமல் கூச்சல் போடுவார்கள். இன்றைக்குக் காரணம் இருக்கிறது. கூச்சலுக்குக் கேட்கவா வேண்டும்? உண்மையான அன்பு கொண்டுதான் இவர்கள் மாணிக்கத்தைத் தேடி வந்திருக்கிறார்களா? இத்தனை நான் அவன் இருக்கிறானா படிக்கிறானா என்று கேட்டதில்லையே? அவன் இல்லாமல் போய்விட்டதும் இந்த அன்பு ஏன் இப்படி விகாரமாகச் சுரக்கிறது.

"அப்பா வெளியிலிருந்து கத்தினார். என்னமோ பட்டணத்தில கவர்மெடு உத்தியோகம் பாக்கிறானேன்னு என் புள்ளய காப்பாத்துவான்னு அனுப்பினேன். புள்ளக்கி ஒழுங்காச் சோறு போட்டானா, துணி வாங்கிக் குடுத்தானா தெரியல! கஷ்டத்த தாங்க மாட்டாம புள்ள எங்க ஓடினானோ எங்க செத்தானோ யாருக்குத் தெரியும்?"

முத்துசாமி வெளியே வந்தார். "அப்பா! கொஞ்சம் நிதானமாப் பேசுங்க! நீங்க நெனைக்கிற மாதிரி நான் கவர்மென்டில இருந்து சம்பளத்தை அள்ளிக் கொட்டிக்கில, என் பொண்டாட்டி புள்ளய காப்பாத்தவே என் சம்பளம் பத்தாது. இதுக்கிடையில் மாணிக்கத்தையும் என் மகனா ஏத்துச் சோறு போட்டுப் படிக்க வச்சேன். நீங்க என்ன பண்ணினீங்க அவனுக்கு? 55 வயசில ஈ.பி.எப். எடுத்தீங்களே. அதில ஒரு பகுதிய அவன் படிப்புக்குக் கொடுத்திருக்கலாமில்ல!" என்று கேட்டார்.

ஈ.பி.எப். பணம் வந்ததும் ஆயிற்று என முத்துசாமிக்குத் தெரியும். பணம் வந்ததும் சில நண்பர்கள் வந்தார்கள். குடியுடன் விருந்துகள் நடந்தன. எங்கேயோ ஒரு ரப்பர் தோட்டத்தின் பகுதி விற்பனைக்கு வருகிறது என அந்தப் பணத்தில் முக்கால்வாசியை முன் பணமாகப் பறித்துக் கொண்டார்கள். பின்னர் அவர்கள் போன இடம் தெரியவில்லை. எல்லாப் பணத்தையும் இழந்து இப்போது அம்மாவின் சம்பாத்தியத்தில்தான் அவர்கள் பிழைப்பு நடக்கிறது. ஆனால் இந்தக் கேள்வியைக் கேட்டதும் கிழவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

“ஓ! எம் பணத்த எடுத்து ஒனக்குக் கொடுக்கணுமா? ஏன்? அப்பன் அம்மா பேச்சுக் கேக்காத தறுதலைங்க நீங்க! அப்பன்னு கொஞ்சமாவது மரியாதை இருக்கா? அப்படிப்பட்ட புள்ளங்களுக்கு ஏன் குடுக்கணும்? ரோஷம் மானமில்லாம கேட்கிறாயா?” என்றார்.

முத்துசாமி மனத்துக்குள் குமைந்தார். ஆமாம் ரோஷம் மானம் இல்லாமல்தான் கேட்கிறேன். பணமும் வசதியும் இல்லாதவர்கள்தான் ரோஷத்தையும் மானத்தையும் பெரிதாக மதிக்கிறார்கள். இந்த அப்பாவும் அம்மாவும் வாழ்க்கையில் கல்வி பெறவில்லை. பணம் சேர்க்கவில்லை. குடும்பத்தையும் ஒழுங்காகக் கொண்டு வரவில்லை. ஒன்றுமில்லாதவர்கள். ஏமாந்தவர்கள், இயலாதவர்கள், முயலாதவர்கள். இருந்தாலும் இவர்களுக்கு மட்டும் ஏன் இவ்வளவு மானமும் ரோஷமும் இருக்கிறது? ஏன் சின்னச் சின்ன காரணத்துக்கொல்லாம் இவர்கள் மனம் புண்படுகிறது? ஏன் அற்பக் காரணங்களுக்கெல்லாம் ரோஷப்படுகிறார்கள்?

பையன்கள் தனக்குப் பணியவில்லையே என்பதில் உள்ள ரோஷம், அவர்களைக் கவனமாகப் படிக்க வைக்கவேண்டுமே என்பதில் இல்லை. மருமகள் தனக்கு மரியாதை காட்டவில்லையே என்பதில் உள்ள மானம், அவள் குடும்பத்தில் தாங்களும் அக்கறை கொள்ள வேண்டுமே என்பதில் இல்லை. எங்கிருந்து இந்தப் பாமரர்களுக்கு மானமும் ரோஷமும் வருகிறது?

வார்த்தைப் போட்டிகள் உச்சக்கட்டத்தில் நடந்தன. அக்கம் பக்கத்து வீட்டார் வேடிக்கை பார்த்தார்கள். கமலா சமையல் செய்ய முயற்சி செய்தாள். “ஒன் வீட்டில ஒரு பருக்க கூட எடுத்து வாயில வைக்க மாட்டேன்” என்று கிழவி மறுத்துவிட்டாள். குழந்தைகள் பசியிலும் பயத்திலும் அடங்கிப் பதுங்கிக் கிடந்தார்கள்.

டிரைவர் பெரியசாமி ஒருவாறு கிழவனையும் கிழவியையும் கிளப்பிக் கொண்டு போனார். வாரந்தாவிலும் லிப்டிலும் கூச்சல் போட்டுக் கொண்டே போனார்கள்.

கமலாவின் பெயர் போட்டு வீட்டு முகவரிக்கு வந்திருந்த அந்தக் கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் படித்தான் கமலா.

"அன்புள்ள அண்ணிக்கு,

என்னைச் சிறிது காலத்திற்குத் தேட வேண்டாம் என்று அண்ணனிடம் சொல்லுங்கள். ஒருநாள் திரும்பி வந்தால் விளக்கம் சொல்லுகிறேன். நான் சொல்லாமல் ஓடிப் போனதால் உங்களுக்கு ஏதும் சிரமம் ஏற்பட்டிருந்தால் மன்னித்து விடுங்கள்".

உங்கள் தம்பி மாணிக்கம்.

# அலகு - 4

# சிங்கப்பூரில் தமிழிலக்கியம்

## சிங்கப்பூர்ப் பொன்விழா சிறுகதைகள்

## கைம்மாறு

**- மா. அன்பழகன்**

வழக்கறிஞர் நிறுவனத்தின் பார்வையாளர்கள் அறை. ஒரு மூத்த வழக்கறிஞர் வந்து அமர்ந்தார். உதவி வழக்கறிஞர் நற்றிணை அருகிலிருக்க பிரதிவாதியாக வழக்கைக் கொண்டு வந்திருந்தவரைப் பார்த்து,

"திருமதி ஜுவான் (Juvan). இந்த வழக்கு விவரங்களை நற்றிணை சொன்னார். கொஞ்சம் சிக்கலானதுதான். இதற்கு நிறைய ஆதாரங்களைத் தேடிச் சமர்ப்பிக்கவேண்டும். நீதிமன்றத்திற்கு ஒரு கட்டணம் கட்ட வேண்டும். இந்த வழக்கிற்கு உதவி வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும். இதைப்போலப் பல செலவுகள் இருக்கின்றன. வழக்கை முடித்துக் கொடுப்பதற்கு மொத்தம் முப்பதாயிரம் வெள்ளிகள் செலவாகும். முன்பணமாகப் பத்தாயிரமும், இந்த வழக்குத் தொடர்பான அனைத்து ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவுடன் பத்தாயிரமும், இறுதி வாதத்திற்கு முன் மீதிப் பத்தாயிரமும் கொடுக்கவேண்டும். அத்துடன் படி எடுப்பது, தகவல் தொடர்புகள், போன்ற செலவுகள் வேறு தரவேண்டியிருக்கும். இதற்கு நீங்கள் ஒத்துக்கொண்டால் நாங்கள் வழக்கை எடுத்துக்கொள்கிறோம். நன்கு யோசித்துச் சொல்லுங்கள் ன லிங் ரூ லியாங் லா கார்பரேஷனின் (Ling & Liang Law Corporation) வழக்கறிஞர் ஹோ எடுத்துச் சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போய்விட்டார். மேற்கொண்டு ஏதேனும் ஐயமிருப்பின் உதவியாளர் தீர்த்து வைப்பார். இது அவர்களின் வழக்கம். ஜுவான், இதைப்போல் வழக்கறிஞரைப் பார்க்கப் போகிறாள் எனத் தெரிந்தவுடன் பக்கத்துவீட்டு குடியிருப்பாளர் சொன்னது சரியாகத்தான் இருந்தது. சிங்கப்பூரில் ஆடிட்டர், மருத்துவர்களைவிட, வழக்கறிஞர் கட்டணம் அதிகமாயிருக்கும் என்றது நினைவுக்கு வந்தது. வழக்கில் தொடர்பான சொத்தின் அல்லது பிரச்சினைக்குரியதன் மதிப்புக்கு ஏற்ப கட்டணத்தைத் தீர்மானிப்பார்கள் என்று சொன்னதும் உண்மையாகிவிட்டது. கட்டணத் தொகையைக் கேட்டவுடன் அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டார் ஜுவான். பக்கத்தில் உட்கார்ந்திருந்த

செல்வி நற்றிணை கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவ்வளவு தொகைக்கு ஜுவான் எங்கே போவார். இருப்பதோ ஒரே தனியார் அடுக்குமாடி வீடு. அதில் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு வரும் பணத்தைக் கொண்டுதான் தன் செலவுகளைக் கடந்த ஓராண்டாகச் செய்துகொண்டு வாழ்க்கையை ஓட்டுகிறார். முழுவீடும் தனக்குரியது என வழக்குப் போட்டிருக்கிறாள் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த ஜுவானின் ஒரே மருமகள். ஆயிரம் வெள்ளிக்கே வழியில்லாதவரிடம் முன்பணமாகப் பத்தாயிரம் உடனடியாகக் கேட்டவுடன் அழுகையே வந்துவிட்டது. அதை நினைத்து வேதனைப்பட்டாள். சென்ற ஆண்டு தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டு ஒரே விபத்தில் மாண்ட கணவனையும், மகனையும் நினைக்கத் தொடங்கிவிட்டாள்.

ஜுவானின் கணவர் மின்தொடர்பு, மின் சாதனங்கள் பொருத்தும் தொழில் செய்துவந்தார். குடியிருப்பு, கடை, கட்டடம், தொழிற்சாலை போன்று புதிதாகக் கட்டப்படும் இடங்களைக் கட்டுமானக் குத்தகைக்கு எடுக்கும் மொத்த ஒப்பந்தக்காரரிடம் துணை ஒப்பந்தத்தில் அந்த வேலையை எடுத்து ஆட்களை வைத்து செய்து முடிப்பதுதான் இவர் தொழில். நல்ல வருமானம் கிடைத்து, வரும் வருமானத்தை மரினா பேசாண்ட்ஸில் உள்ள சூதாட்டக் கூடத்திலேயே பெரும் பகுதி பணத்தைச் செலவழித்து வந்தார். ஒருமுறை 164 அடுக்குமாடி வீடுகளைக் கொண்ட எமிலி அபார்ட்மெண்ட்ஸ் எனும் தனியார் கண்டோமினியத்திற்கு, ஜுவானின் கணவர் மின் துணை ஒப்பந்தம் எடுத்து பெரிய அளவில் செய்துகொண்டிருந்தார். அப்போது ஒரு வீட்டுக்கு முன் பணம் கொடுத்த இந்தோனேசிய வாடிக்கையாளர் ஒருவர், கட்டுமானம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது பார்வையிட வருகை தந்தார். அப்போது ஒரு அறைக்கு பால்கனி என்கிற மாடத்தை உருவாக்கித் தருமாறு கேட்டார். அதற்கு அந்த வீடுகட்டி விற்பனை செய்பவர், “உடனே எல்லாம் முடியாது, நமது வரைபடத்தில் இல்லாததைக் கட்டுவது சட்டப்படி குற்றமாகும். வேண்டுமானால் முறைப்படி மனுச்செய்து அதற்கான துறை ஒத்துக்கொண்டால் கட்டித்தருகிறேன். அனேகமாக தொண்ணூறு விழுக்காடு ஒத்துக்கொள்ளமாட்டார்கள்” என்றார்.

“இதற்கு ஏன் அனுமதி கேட்கவேண்டும். கட்டுங்கள். நான்தானே குடிவரப்போகிறேன். இந்த வீட்டுக்கு நான்தானே உரிமையாளர். நான் பார்த்துக்கொள்கிறேன்” என்றார் அந்த வாடிக்கையாளர்.

"நீங்கள் சொல்வது தவறு. அப்படி ஏதேனும் நடந்தால் நானும் குற்றவாளியாகிவிடுவேன். சிங்கப்பூர் சட்டம் தெரியாமல் பேசுகிறீர்கள். என்னால் முடியாது" என்றார் உறுதியாக. இப்படிச் சொன்னதால் சினமுற்ற வாடிக்கையாளர் "அப்படியெனில் எனக்கு இந்த வீடு வேண்டாம். நான் கட்டிய பணத்தையெல்லாம் திருப்பிக்கொடுங்கள்" என்று கேட்டவுடன்,

"எங்கேயிருந்து உடனே கொடுக்க முடியும்? அதற்கென்று நிறைய சட்ட வழிமுறைகள் இருக்கின்றன. உங்களுக்கு கடன் கொடுத்துவரும் வங்கி ஒப்புக்கொள்ளவேண்டும். உங்களுக்கு நிறைய பணம் கழிவில் வீணாகும். தேவையில்லாமல் கோபத்தை விட்டுவிட்டு பொறுமையாய் இருங்கள்" என்று சொல்லி சமாதானப்படுத்த முற்பட்டார். ஆனால் அந்த வாடிக்கையாளர் சாந்தமாகியாதாகத் தெரியவில்லை. "எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கழித்துக்கொண்டு என் பணத்தைத் திருப்பிக்கொடுங்கள். இனி இந்தக் குடியிருப்புப் பகுதிக்குள்ளேயே காலடி எடுத்து வைக்கமாட்டேன்" எனச் சொல்லிவிட்டு இறங்கிப் போய்விட்டார்.

இந்த காட்சியைப் பார்த்துக்கொண்டு நின்ற ஜுவானின் கணவரைப் பார்த்து,

"ஏன் நீங்கதான் இந்த வீட்டை வாங்கிப் போடுங்களேன். வீணாக சூதாட்டத்தில் கொண்டுபோய் கொட்டுகிறீரே? உருப்படியான முதலீடாக இருக்குமல்லவா? உங்களுக்குப் பிறகு உங்கள் பேரனுக்குப் பயன்படுமே? அத்துடன் இது ஒரு நல்ல வாய்ப்பு. இந்த கோபக்காரரிடம் விலை குறைத்து வாங்கிவிடலாம்" என்று சொன்னவுடன், கொஞ்சம்கூட யோசிக்காமல் சரியென்று சொல்லி வாங்கிய வீடுதான் இது.

இந்தத் தனியார் வீட்டை வாங்குவதற்காக, அவர் தன் வீட்டு வசதிக் கழக வீட்டை விற்றுவிட்டார். சேமிப்பில் இருந்த பணம் எல்லாவற்றையும் ஈடுகட்டி வாங்கினார். இதில் ஜுவானுக்கு இன்னொரு மகிழ்ச்சி என்னவென்றால், சூதாட்டக் கூடத்திற்குப் போவதை அன்றிலிருந்து நிறுத்திவிட்டு, கடந்த பல ஆண்டுகளாக இந்த வீட்டின் மீதிருந்த கடனை அடைத்து முடித்துவிட்டார். இவர்களுக்கு ஒரே மகன். அவன் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிக்கொண்டிருந்த போதுதான் அந்த வியட்நாம் நாட்டைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்து வந்தான். பின்னர் சில காரணங்களால் திருமணத்திலிருந்து பின்வாங்கிவிடலாமா என்கிற எண்ணம் அவனுள் எழுவதைப் புரிந்துகொண்ட அவள் அவனைக் கட்டாயப்படுத்தி, இன்னும் சொல்லப்போனால்

மிரட்டித் திருமணம் செய்துகொண்டாள். திருமணம் ஆனவுடன் மனைவி வற்புறுத்தலின் பேரில் தனியே வீடு வாங்கிக்கொண்டு குடிபோய்விட்டான். தந்தைக்கு வயது ஆகிவிட்டதால் அவர் தொழிலில் கணிசமான வருவாயும் இருந்ததனால், அப்போது பணியாற்றிவந்த நிறுவனத்திலிருந்து விடுபட்டுத் தந்தையோடு மின் ஒப்பந்தத் தொழிலில் ஈடுபட்டார். கடைசிச் சில ஆண்டுகளில் முன்பு போல் வருமானம் இல்லாவிட்டாலும் இருவரும் நிறைவாகவே வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்த நாள்களில் இருவரும் காரில் வழக்கம்போல் ஜோகூர்பாருவுக்குச் சென்று மின் சாதன உதிரிப் பாகங்கள் வாங்கிக்கொண்டு வரும் வழியில் மலேசிய எல்லைக்குள்ளேயே விபத்துக்குள்ளாகி, இருவரும் விபத்து நடந்த இடத்திலேயே இறந்துவிட்ட கொடூர சம்பவம்தான் ஜுவானின் நெஞ்சை அடைத்தது. வருத்தம் மிகக்கொண்டவராய்க் கண்களைத் துடைத்துக்கொண்டு சுய நினைவுக்கு வந்த ஜுவானைப் பார்த்து,

“ஆமாம், உங்கள் வீடு மவுண்ட் எமிலி சாலையில் உள்ள கண்டோமினியமா? நீங்கள் மலையில் ஹொய்ச்சுன் (Hui Chun) உடற்பயிற்சி தினம் செய்வீர்களல்லவா?” என்று கேட்டாள் நற்றிணை.

“ஆமாம்! அதெல்லாம் ஒருகாலத்தில்.. இப்போ எங்கேம்மா, படியேற முடியவில்லை. மலைக்குப் போய் பத்து ஆண்டுகளாகின்றன. எனக்கும் இந்தப் பெருநாள் வந்தால் எழுபத்தெட்டு வயது ஆகப் போகிறது” என்றார். “சரிம்மா! நீங்கள் வீட்டுக்கு இப்போது புறப்படுங்கள். இதற்கு ஏதாவது ஒரு தீர்வைக் கண்டுபிடிப்போம். நான் உங்கள் வீட்டுக்கு நாளை வருகிறேன்” என்று சொல்லி நற்றிணை மின்தூக்கிவரை சென்று வழியனுப்பி வைத்தாள்.

மறுநாள் கொடுத்த முகவரியை வைத்துக்கொண்டு ஜுவான் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்துவிட்டாள் நற்றிணை. “எங்கள் நிறுவனத்தைத் தேடி வந்த வாடிக்கையாளரை இப்படித் தனியே சென்று ஓர் உதவி வழக்கறிஞர் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டால் நிர்வாகத்திடம் அனுமதி பெற்றாக வேண்டும். சரியான காரணம் இருந்தால்தான் அனுமதியையும் கொடுப்பார்கள். அதனால்தான் நான் நேற்று மற்ற விவரங்களை விளக்கமாகக் கேட்கவில்லை” என்று நற்றிணை தன்னிலை விளக்கம் தந்தாள். விபத்து தொடர்பான பத்திரங்கள், மரணச் சான்று, மருமகள் வேலை செய்யும் இடம், அவருடைய ஊதியம், வீட்டுக் கடனைப் பைசல் செய்திருந்த சான்று, வேறு வருமானம் ஜுவானுக்கு இல்லை, வீடு ஜுவான் மீதும் கணவர் மீதும் பதிவானதற்கான ஆதாரங்கள், மருமகள் வீட்டைத் தன்னிடம் கொடுத்துவிட்டு

முதியோர் இல்லத்திற்குச் சென்றுவிட்டால் மாதச் செலவைத் தான் தருவதாகச் சொன்னது, இந்த வீட்டைக் கைப்பற்றிய பின் விற்றுவிட்டு வியட்நாம் நாட்டுக்கே செல்லத் திட்டமிட்டுள்ளது போன்ற அனைத்து விவரங்களையும் எடுத்துக்கொண்டாள் நற்றிணை.

"வருமானம் இல்லாதவர்களுக்கு இலவசமாக உதவிடும் இலவச சட்ட உதவி மையம் (Legal Aid Bureau) என ஒன்று இந்த நாட்டில் இருக்கிறது. அதில் பணியாற்றுபவர்கள் இருவரை எனக்குத் தெரியும். அவர்கள் வேலை செய்யும் கிளைகள் இருக்கும் இடத்தைப் பார்த்து அங்கு நான் கூப்பிடும்போது வாருங்கள்" என்று நற்றிணை ஆறுதலாகச் சொல்லிவிட்டு விடைபெற்றாள். ஒருநாள் நற்றிணை தொலைபேசி வழி தொடர்புகொண்டு ஜுவானைப் புறப்படத் தயாராக இருக்கும்படி சொல்லிவிட்டு மவுண்ட் எமிலி அப்பார்ட்மெண்ட் வீட்டுக்கு வந்து அந்த அம்மையாரை அழைத்துச் சென்றாள். நேராக அந்த இலவச சட்ட உதவி மையத்திற்குச் சென்று தனக்குத் தெரிந்தவரிடம் எல்லா விவரங்களையும் சொல்லி அனைத்துத் தரவுகளையும் கொடுத்து ஜுவானையும் அறிமுகப்படுத்தினாள். அங்கிருந்த அந்த வழக்கறிஞரும் தரவுகளை நன்கு படித்துவிட்டு, மேற்கொண்டு சில சந்தேகங்களை வாய்மொழியாகக் கேட்டுத் தெரிந்துகொண்டார். பின்னர் கையெழுத்து வாங்கவேண்டிய அனைத்தையும் வாங்கிக்கொண்டார்.

நற்றிணையின் உதவியுடன் இலவச வழக்கறிஞரும், வாதியின் வழக்கறிஞரும் வழக்குத் தொடுப்பையும், அதற்கான பதிலையும் பின்னர் அவரவர் ஆதாரங்கள் அனைத்தையும் பரிமாறிக்கொண்டனர். இடையிடையே நீதிமன்றம் நடைபெற்ற நாள்களில் இரண்டு முறை ஜுவான் நேரில் முன்னிலையாகி இரு தரப்பு வழக்கறிஞர்கள் கேட்ட கேள்விகளுக்குச் செல்வி நற்றிணை சொல்லியவாறு கவனமாகப் பதில் சொன்னார். இறுதியில் இருதரப்பு வாதங்கள் தொடங்கியது. இரண்டு நாள்களிலேயே வழக்கறிஞர்கள் தங்கள் வாதங்களை முடித்துக்கொண்டனர். தீர்ப்புக்கான நாள் சொல்லப்பட்டுவிட்டது. அப்படி இப்படியாக இந்த வழக்கு முடிய பதின்மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. தீர்ப்பு நாளன்று மேடம் ஜுவானுடன் நீதி மன்றத்திற்கு நற்றிணையும் வந்திருந்தாள். வழக்கைத் தொடுத்த அந்த மருமகளும் வந்திருந்தாள். மருமகளுடன் வந்திருந்த பேரன் ஜுவானைப் பார்த்தவுடன் ஓடிவந்து பாட்டியைக் கட்டிப்பிடித்துத் தழுவிக்கொண்டான். ஜுவானுக்கு அழுகை அழுகையாய் வந்தது. வேறு எந்த அசம்பாவிதக் காட்சிகளும் உருவாகிவிடாமல் பக்கத்திலிருந்த நற்றிணை

ஜுவானிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே கவனமாகப் பார்த்துக்கொண்டாள். நீதிபதி தீர்ப்பை வாசித்து முடித்தார். பக்கத்திலிருந்த நற்றிணை,

"அம்மா! வழக்கு நமக்கு வெற்றியுடன் முடிந்திருக்கிறது. நீங்கள் இருக்கும் வரை உங்கள் மருமகளால் எந்தத் தொந்தரவும் இனி வராது. வீடு உங்களுக்குத்தான். மருமகளுக்கு வருமானம் இருந்ததாலும் வியட்நாம் நாட்டுக்குப் போய்விடத் திட்டமிட்டதற்கான ஆதாரம் இருந்ததாலும் வழக்கு நமக்குச் சாதகமாகிவிட்டது. உங்கள் விருப்பப்படி உங்களுக்குப் பிறகு உங்கள் பேரனுக்கு இந்த வீடு உரிமையாகும். போதுமா?" என்று கூறி கட்டியணைத்து "அதற்கான தீர்ப்பின் நகல் பத்திரங்கள் பின்னர் நமக்கு வந்து சேரும்" என்றாள். இதைக் கேட்டவுடன் ஜுவான் கண்களில் நீர் வழியத் தொடங்கியது. "வாம்மா! நாம் வீட்டுக்குப் போவோம்" என்று ஜுவான் சொல்லித் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தார். வீட்டுக்கு வந்தவுடன் கையை எடுத்து நற்றிணையைப் பார்த்துக் கும்பிட்டவாறே,

"மிக்க நன்றியம்மா! கடவுள் எனச் சொல்கிறார்களே! அது உன் வடிவில் இருக்குமா? நீ ஏன் எனக்கு உதவி செய்ய வேண்டும்? என் உறவினர்களிடமெல்லாம் உன்னைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தேன். சின்னச் சின்ன செலவுகள் இருக்கும் என்றாயே? எவ்வளவு தாயே?"

"அதெல்லாம் பரவாயில்லை. நானே செய்துவிட்டேன்"

"அப்படியா. வேண்டாம்மா. இப்போது நீ செய்த உதவியின் பெறுமானம் முப்பதாயிரம். அதற்கு மேல் நீ ஏன் உன் கையிலிருந்து செலவு செய்ய வேண்டும்? வாங்கிக்கொள்"

"பரவாயில்லை. எனக்கு வேண்டாம்"

"எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவேண்டும் என்றால் வாங்கிக்கொள்ளம்மா!"

"அப்படியானால் ஒரு ஜாமெண்டரி பெட்டி உங்களிடம் இருந்தால் கொடுங்கள்"

"இப்போதா? ஒரு காலத்தில் வாங்கியது எங்கேயோ கிடந்தது. இரு, நான் போய்த் தேடிப்பார்க்கிறேன்.. ம்.. இல்லை.. இல்லை அதை எப்போதோ ஒரு சிறுமிக்குக் கொடுத்தது நினைவுக்கு வருகிறது"

“ஏன்? எதற்காகக் கொடுத்தீர்கள்?”

“என் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் எமிலி பார்க்கைத் தாண்டி செயிண்ட் மார்கரேட் பள்ளி ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு நிறைய பிள்ளைகள் இந்த வழியாகச் செல்வார்கள். அப்படிப் போய்க்கொண்டிருந்த ஒரு சிறுமி பள்ளிக்கு ஜாமெண்டரி பெட்டியை எடுத்துவர மறந்துவிட்டாளாம். அவள் பொங்கோல் பகுதியிலிருந்து விரைவு வண்டியில் வருகிறவள். திரும்பப் போய் எடுத்துவர நேரமில்லை. கொண்டுபோகாவிட்டால் வகுப்பாசிரியை தண்டிப்பார். அதற்குப் பயந்துகொண்டு உடன் துணைக்கு வந்த பணிப்பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு ஓவென அழுது அடம்பிடித்தாள். அப்போது மலையில் நாங்கள் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தோம். செய்தி எனக்கு வரவே ‘அழாதம்மா’ என்று ஆற்றுப்படுத்திவிட்டு வீட்டுக்குப் போய் எடுத்து வந்து அந்த ஜாமெண்டரி பெட்டியை அந்த இந்தியச் சிறுமிக்குக் கொடுத்தது நினைவுக்கு வருகிறது. இரும்மா.. பக்கத்து பீஸ் சென்டரில் கடை இருக்கும்.. இதோ நான் போய் வாங்கிவருகிறேன்” என்று சொல்லி அவசரமாக எழுந்தார்.

“இல்லம்மா! உங்களுக்கு நினைவு இருக்கிறதா என சோதிப்பதற்காகத்தான் கேட்டேன். அந்தச் சிறுமி வேறு யாருமல்ல. நான்தானம்மா!”

வியப்பில் அதிர்ந்துபோன ஜுவான் கட்டித் தழுவி கண்ணீரால் நற்றிணையை நனைத்துவிட்டார்.

# முறைமாப்பிள்ளை

**- க.து.மு. இக்பால்**

அன்வரின் உள்ளம் வேதனையால் குமுறியது. இத்தனை நாளாக அவன் கனவிலும் எண்ணாத பயங்கரச் சம்பவம் இன்னும் கொஞ்ச நாட்களில் நடக்கவிருக்கிறது. அந்த வேதனையை அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. நெஞ்சை அமுக்கிப் பிடித்துக் கொண்டான். பொலபொலவென்று கண்கள் நீரைச் சொரிந்தன. அருகில் கிடந்த படுக்கையில் போய்க் குப்புற வீழ்ந்தான். தாங்க முடியாத வேதனையில் அவன் உடலெல்லாம் குலுங்கியது. தலையில் அடித்துக் கொண்டு கதற வேண்டும் போல் தோன்றியது. பாவம்! அவனால்தான் என்ன செய்ய முடியும்?

மனமொத்த திருமணத்தையே ஆதரிக்கும் இஸ்லாத்தின் புனிதக் கொள்கைக்கு மாறு செய்யும் சிலரால் எத்தனை இளம் உள்ளங்கள் கருகிக் போகின்றன! அன்வரின் மனக் கண்ணில் ஹஸினாவை அவன் முதன் முறையாகச் சந்தித்த இன்ப நிகழ்ச்சி நிழலிட்டது.

தன் முதலாளி கொடுத்தனுப்பிய இரண்டு பட்டுப்புடைவைகளை அப்துல் காதரிடம் கொடுத்துவிட்டு விடைபெற்றுக்கொள்ள வாய்திறந்த அன்வரை, "இரு தம்பி, கொஞ்சம் காப்பி குடித்துவிட்டுப் போகலாம்" என்றார் அப்துல் காதர்.

"பரவா இல்லிங்க, இப்ப கொஞ்ச முன்னதான் சாப்பிட்டேன்..." என்ற அன்வரின் பதிலைக் காதில் போட்டுக் கொள்ளாதவர் போல சமையற்கட்டை நோக்கி நடந்தார் அப்துல் காதர். சென்றவர் சிறிது நேரத்தில் திரும்பி வந்து அன்வரின் எதிரில் அமர்ந்தார்.

சில வினாடிகள் அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்துக் கொண்டு "அத்தா..." என்கிற குரல் தென்றலில் கலந்து வந்தது. அந்தக் குரலில்தான் எத்தனை குழைவு! இனிமை! குளிர்ச்சி! அன்வருக்குக் காதில் இன்பத்தேன் பாய்ந்தது போன்ற உணர்வு. குரல் வந்த திக்கை நோக்கிய அவன் கண்கள் நிலைகுத்தி நின்றன! சமையற்கட்டின் திரையை நீக்கிக்கொண்டு மெள்ளப் பார்த்த ஹஸினாவின் சேல்விழிகள், அந்த இமைப்பொழுதில் அன்வரின் விழிகளோடு கலந்து ஏதேதோ பேசுவது போல் மருட்சி அடைந்தன. அன்வர், மின்சாரம் தாக்குண்டவன் போன்று அமர்ந்திருந்தான், ஹஸினாவின் கூரிய பார்வைபட்டு. "தம்பி, அன்வர், இந்தா..." என்ற அப்துல் காதரின் அழைப்பு அவனுக்கு சுயநினைவைக் கொடுத்தது. மகள் போட்டுக் கொடுத்த காப்பிக்

குவளைகள் இரண்டில் ஒன்றை அன்வரிடம் நீட்டினார். கையில் வாங்கிக் கொண்ட அன்வர், ஒரே மூச்சில் குவளையைக் காலி செய்தான். ஹஸினாவின் கைகள் தயாரித்த காப்பி அன்வருக்குத் தேனாக இனித்தது போலும்.

விடைபெற்றுக் கொண்டு எழுந்தான் அன்வர். அவனது திருட்டுக் கண்கள் அவனைக் கேட்காமலே சாளரத்தை நோக்கி ஊடுருவின. அங்கே பாதிமுகம் தெரிய அன்வரைப் பார்த்து நின்ற ஹஸினா நாணத்தால் மெள்ள உள்ளுக்கு மறைந்தாள்... அன்வர் ஏக்கம் கலந்த பெருமூச்சை விட்டபடி வெளியேறினான்.

சிறு வயதிலே தாயை இழந்தவன் அன்வர். குடும்பத்தினர் கஷ்டத்தைத் தாங்க முடியாத அன்வரின் தந்தை பொங்கியெழுந்த பாசத்தையெல்லாம் கட்டுப்படுத்திக் கொண்டு அன்வரைத் தனது உற்ற நண்பரான முஸ்தபா சாஹிபோடு சிங்கப்பூருக்கு அனுப்பி வைத்தார். சம்பாதித்துப் பணம் அனுப்புவதற்காக சிங்கப்பூர் வந்த அன்வருக்கு அப்துல் ஹமீதின் புடைவைக் கடையில் வேலை கிடைத்தது. எல்லாம் முஸ்தபா சாஹிபின் சிபாரிசுதான். அதோடு அன்வரையும் தன்னோடு வைத்துக் கொண்டார். முஸ்தபா சாஹிபு இங்கே தனிமரம். குடும்பமெல்லாம் ஊரில். அன்வருக்குக் கிடைக்கும் ஊதியத்தில் முக்கால் பங்கையும் அவனுடைய தகப்பனாருக்கு மாதம் தவறாமல் அனுப்பி வைத்து விடுவார்.

இரண்டு பெண்மக்களை வைத்துக் கொண்டு அன்றாடப் பொழுதைக் கழிக்க அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த அன்வரின் தந்தை, மகனிடம் இருந்து வரும் சிறு தொகையால் ஆறுதலடைந்தார். எப்படியோ பத்து வருடங்கள் கழிந்து விட்டன. இந்தப் பத்து வருடங்களில் அன்வரோடு ஒன்றித்து வாழ்ந்துவிட்டுச் சென்ற ஆண்டு இறைவனடி சேர்ந்து விட்டார் முஸ்தபா சாஹிப்.

அன்வர் கலங்கினான். முஸ்தபா சாஹிபின் பிரிவு அவனுக்கு இதயத்தில் சொல்லலொணா வேதனையை ஏற்படுத்தியது. இந்த வேதனையை மறக்கச் செய்யும் மருந்தாக அவன் இதயத்தில் குடியேறினாள் ஹஸினா. முஸ்தபா சாஹிபின் பிரிவு ஏற்படுத்திய புண், ஹஸினாவால் இலேசாக மறையத் தொடங்கியது. ஹஸினாவை எண்ணாத நேரமில்லை. அவளை எதிர்கால மனைவியாக வரித்துக் கொள்ள எண்ணிய அன்வர், தினம் தினம் ஆயிரக்கணக்கான இன்பக் கோட்டைகளை இதயத்திலே கட்டி மகிழ்ந்தான்.

இதுவரை அவன் கட்டி மகிழ்ந்த இன்பக் கோட்டைகளை எல்லாம் தகர்த்துத் தரை மட்டம் ஆக்குவதுபோல் ஹிம்ண்டு ஒன்றைத் தூக்கி எறிந்தான்

அவன் நண்பன் சிராஜ். நண்பன் சிராஜின் வார்த்தைகள் அன்வரை நிலைகுலையச் செய்தன. நீர் படர்ந்த அவன் கண்கள் ஒளி இழந்தன. தன் குரல் வளையை யாரோ பிடித்து நெருக்குவது போன்ற பிரமை அவனுக்கு ஏற்பட்டது.

சிராஜிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு நோக்கி நடந்தான் அன்வர். அப்போது அவன் செவிகளில் சிராஜ் கூறிய அந்தப் பயங்கர வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்தன. அவன் சிந்தை குழம்பியது.

"ஹஸினாவை அவங்க அத்தா ரஹிமுக்குக் கொடுக்கப் போவுதாமே...!! சே... சே... ரஹிம் என்னதான் ஹஸினாவுக்கு முறை மாப்பிள்ளேண்ணாலும், ஹஸினாவுடைய இஷ்டத்துக்கு மாறாக அவளை ரஹிமுக்குக் கொடுக்கிறதா!"... அன்வர் தனக்குள் பேசிக் கொண்டே வீட்டையடைந்தான்.

ஒரு வாரம் கழிந்ததும், அவன் அத்தாவிடமிருந்து தபால் ஒன்று வந்தது. தபாலைப் பிரித்துப் பார்த்த அன்வருக்குத் தலைவலி வந்து விட்டது போலும்! தலையில் கைவைத்துக் கொண்டான். உலகமே கண்முன் சுழல்வதாக உணர்ந்தான் அன்வர். பத்து வருடங்கள் பிரிந்திருக்கும் அன்வரைப் பார்க்கப் பிரியப்படுவதாகவும், கூடிய விரைவில் புறப்பட்டு ஊர் வரும்படியும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அன்வர் குழம்பினான். தந்தையைக் காண அவனுக்கு மட்டும் ஆவல் இல்லாமலா இருந்தது! ஹஸினாவோடு சென்று காணவேண்டும் என்றல்லவோ அவன் கனவு கண்டான்! அவன் எண்ணமெல்லாம் கல்மீது போட்ட மண்கலமாகவா ஆக வேண்டும்!

எதிரில் சிராஜ் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டான். "வா சிராஜ்... உட்கார்" என்ற அன்வரின் குரல் கம்மியது. ஊரிலிருந்து வந்த கடிதத்தை சிராஜிடம் நீட்டினான். வாங்கிப் பார்த்த சிராஜின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. சிராஜ் பேசினான். "அன்வர், ஊருக்குப் புறப்படு.. இருக்கும் கவலையை மறக்க இதுதான் வழி... வீணே இங்கிருந்து கொண்டு கவலைப்படுவதால் எந்தவிதப் பயனும் இல்லை.

ஒன்றுபட்ட உள்ளங்களின் உறவைவிட, அப்துல் காதருக்கு தங்கை மகன் என்ற உறவுதான் பெரிசாத் தெரியுது! அதனால்தான் அன்று

நானும், என் அத்தாவும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கடைசிவரை அப்துல் காதர் மறுத்துட்டாரு.” சிராஜ் பேச்சை நிறுத்திவிட்டு அன்வரைப் பார்த்தான்.

“ஆமாம் சிராஜ், ஊருக்குப் போறதா தீர்மானிச்சுட்டேன். வேறு வழியில்ல” என்றான் அன்வர்.

“சரி, அப்போ நான் வருகிறேன்...” என்று சொல்லிவிட்டு சிராஜ் கிளம்பினான்.

ஊருக்குப் போவதற்குண்டான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டான் அன்வர். வாரங்கள் இரண்டு தேய்ந்தன. நாளை பயணம்... நண்பன் சிராஜ் வீட்டிற்குச் சென்று விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான் அன்வர். ஹஸினாவின் வீடும் சிராஜ் குடியிருக்கும் அதே தெருவில்தான் இருந்தது. மாலை நேரம். மஞ்சள் வெயில் நீங்கி இருள் பரவிக் கொண்டிருந்தது.

அன்வர் ஹஸினாவின் வீட்டை அண்மிக் கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் திடீரென ஓர் எண்ணம் தலைநீட்டியது. அப்துல் காதரின் வீட்டை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான். மறுகணம் அவன் உடலே ஒரு குலுங்கு குலங்கி நின்றது. நெஞ்சு ‘படபட’வென்று துடித்தது. அங்கே, சாளரத்தின் கம்பிகளைப் பிடித்தபடி வெளியுலகை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள் ஹஸினா. அவள் முகத்தில் பழைய மலர்ச்சி இல்லை. வாடியிருந்தது. அவன் அன்வரை நோக்கினாள். அந்த ஒரு கணத்தில் அவனது கண்கள் நீரைத் தேக்கின. அன்வர் இமை நேரப் பொழுதுகூட அங்கு நிற்க விரும்பவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டான். கால்களைத் துரிதப்படுத்தினான். எப்படித்தான் வீடு வந்து சேர்ந்தானோ, அவனுக்கே புரியவில்லை. அன்றிரவைத் தூக்கத்தோடு போராடிக் கழித்தான். மறுநாள் ஊருக்குக் கப்பலேறினான்.

ஊர் வந்த அன்வருக்குப் புதுச் செய்தி ஒன்று காத்திருந்தது. ஒருவாரம் கழிந்தபின் அவனது கல்யாணப் பேச்சைத் தொடங்கினார் அவன் தந்தை. ஆரம்பத்தில் மறுத்தான். இறுதியில் அத்தாவின் பிடிவாதத்திற்கு மறுப்புக் கூறாமல் சரியென்று ஒப்புக் கொண்டான். அவன் அவ்வளவு சீக்கிரம் ஒப்புக் கொள்வதற்கும் காரணமிருந்தது. அவனுக்கு மனைவியாக வரப் போகிறவள் அவன்மீது அணையாத அன்பு காட்டி சிங்கப்பூரில் ஒன்பது ஆண்டுகள் அவனைப் பாதுகாத்த அவனது நன்றிக்குரிய முஸ்தபா சாஹிபின் மகள் ஜுவைகாதான். ஜுவைகாவின் குடும்பம் ஏழ்மையில் வாடியதால் அவளை யாரும் பெண்கேட்டு வரவில்லை. முஸ்தபா சாஹிப் தனக்குச் செய்த

பேருபகாரத்திற்குத் தான் இந்த நன்றியையாவது செய்ய வேண்டும் என மனம் தேறினான் அன்வர்.

காலை பத்து மணி. அன்வர் வீட்டிற்கு நிறையப் பேர் வந்திருந்தார்கள். அன்வர் நிக்காஹ் முடிந்து மணக்கோலத்துடன் வீற்றிருந்தான். வெளியில் தபால்காரர் கொடுத்துச் சென்ற கடிதத்தை ஜுவைகாவின் தம்பி அஜீஸ் அன்வரிடம் கொண்டுவந்து நீட்டினான். தபால் சிராஜிடமிருந்து வந்திருந்தது. அன்வர் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

"அன்புள்ள அன்வருக்கு அஸ்ஸலாமு அலைக்கும்... நீ ஊருக்குப் போன மறுவாரம் ஹஸினாவின் முறை மாப்பிள்ளை ரஹிம் கடுமையான ஜுரத்தால் பீடிக்கப்பட்டு இறையடி சேர்ந்து விட்டான். (இன்னா)... எப்படியும் தன் மகளைத் தன் முறைமாப்பிள்ளை ரஹிமுக்குத்தான் கொடுப்பேன் என்று பிடிவாதம் செய்த அப்துல் காதர்... இரண்டு நாட்களுக்கு முன்பாக என்னை வழியிலே சந்தித்து, ஹஸினா நாளுக்கு நாள் உடல் மெலிந்து போவதாகவும், தான் செய்த தவறை மன்னித்து, திரும்பி வந்து தன் மகளுக்கு நீ வாழ்வளிக்கும்படி செய்ய வேண்டும் என்றும் என்னிடம் உருக்கமாக வேண்டிக் கொண்டார். இல்லையென்றால் ஹஸினா பிழைப்பதே அரிதென்றும் கண்களில் நீர் மல்கக் கூறினார். அவரிடம் நான் உனக்குத் தபால் எழுதுவதாகக் கூறிச் சமாதானப்படுத்தி அனுப்பினேன். வேறு விஷயங்கள் இல்லை. உனது தபாலை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்."

வஸ்ஸலாம்

சிராஜ்

கடிதத்தைப் படித்து முடித்த அன்வரின் கண்களில் நீர்த்திரை படர்ந்தது. இனி தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று எண்ணிய அவன், ஹஸினாவின் வாழ்வை நினைத்து வடித்த இரு துளிக் கண்ணீரை யாருக்கும் தெரியாதபடி துடைத்துக் கொண்டான்.

யடியடி

## சிகிச்சை

**- ஜே.எம்.சாலி**

பெண் பார்ப்பதற்கு அழகாக இருந்தாள். கொடி மாதிரி உடல்வாகு. அதற்காகவே மலர்க்கொடி என்று பெயர் வைத்திருப்பார்கள் போல் இருக்கிறது.

ராஜம் அப்படித்தான் நினைத்தாள்.

மலர்க்கொடியை அவளுக்குப் பிடித்துவிட்டது. தாய்க்குப் பிடித்தால் சேகருக்குப் பிடித்த மாதிரிதான். மறுக்கமாட்டான். தாய் சொல்லைத் தட்டக்கூடிய பிள்ளை இல்லை.

இரண்டு மூன்று மாதமாகவே ராஜத்திற்கு இதே வேலை. மகனுக்கப் பெண் பார்க்கும் வேட்டையில் ஈடுபட்டு இருக்கிறாள். டாக்டராகத் தொழில் புரியப் போகிற மகனுக்கு பொருத்தமான பெண்ணைத் தேடுகிறாள்.

பெண்ணைப் பார்க்க வரச் சொல்லி சிங்கப்பூரில் மட்டுமல்ல மலேசியாவிலும் பலர் அழைத்தார்கள். ராஜம் அவ்வப்போது போய் வந்தாள். சில நிபந்தனைகள் ஒத்து வராததால் இதுவரை ஏழெட்டு இடங்களை உதறித் தள்ளிவிட்டாள்.

இதில் எல்லாம் சேகர் தலையிடவில்லை. அம்மாவின் விருப்பத்துக்கு விட்டு விட்டான்.

படிப்பு முடியும் வரை வேறு எதிலும் அவன் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. தலைக்குமேல் பொறுப்பு இருப்பதாக அவனுக்கு நினைப்பு.

சில ஆண்டுக்கு முன்பு அப்பா கண்ணை மூடிவிட்டார். அந்த நிகழ்ச்சி அவன் கண்ணை அகலத் திறந்து வைத்துவிட்டது.

வெகு சிரமப்பட்டு மருத்துவக் கல்லூரியில் இடம்பிடித்துக் கொடுத்தவர் அவர்தான். எவ்வளவோ சிரமங்களை அவர், தாங்கிக் கொண்டிருந்தார், மகனுக்காக.

“சேகர் எனக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் உனக்கு இருக்கக் கூடாது. நீ செழிப்பா இருக்கறதைப் பார்த்துட்டா எனது இலட்சியம் பூர்த்தி

அடைஞ்சிட்டதா நினைப்பேன். உன்னை டாக்டர் ஆக்கிப் பார்க்மீறும்கிறதுதான் என் குறிக்கோள்...!” என்பார்.

அப்பாவுக்குப் பிறகு ராஜம்தான் அவனுக்கு எல்லாம். அம்மா கிழித்த கோட்டை சேகர் தாண்டியது இல்லை.

மலர்க்கொடியை மேலும் ஒரு முறை ஊடுருவிப் பார்த்தாள். நல்ல பெண். தனக்கு மருமகளாக இருக்கத் தகுந்தவள். இவளைப் பார்த்தால் சேகர் சந்தோஷப்படுவான்.

இந்த இடத்துக் வரச் சொன்னதே அவன்தானே! முகவரியைக் கொடுத்து பெண்ணைப் பார்த்துவிட்டு வரச்சொன்னான்.

ராஜத்துக்கு வியப்பாக இருந்தது.

“அம்மா... ஒருத்தருடைய நச்சரிப்பு தாங்க முடியவில்லை... இந்த விலாசத்திலே உள்ள பெண்ணைப் பார்த்துவிட்டு வரச்சொல்லி அம்மாவை அனுப்பு அப்படீன்னு அரிச்சுக்கிட்டிருக்கார். விருப்பம் இருந்தால் பாத்துட்டு வாங்கம்மா!” என்றான்.

“நீயும் வாயேன். உனக்கும் அந்தப் பெண் பிடிக்மீறும், இல்லையா?”

“நீங்கள் பாத்துட்டு வந்தால் போதும்... நான் கல்யாணத்துக்கு அவசரப்பட்டுக்கிட்டா இருக்கேன்?-” என்று பேச்சை முடித்துக் கொண்டு விட்டான், பிள்ளை.

அந்த அங்மோகியோ முகவரியில் தான் மலர்க் கொடியை இப்பொழுது ராஜம் பார்த்துக் கொண்டிருக்கிறாள். இவளும் சேகரும் இனிமையான ஜோடியாக இருப்பார்கள் என்று நினைத்துக் கொள்கிறாள்.

ஜோடிப் பொருத்தம் சரி, மற்ற பேரங்கள் ஒத்து வரவேண்டுமே! மலர்க்கொடியை உள்ளே அனுப்பிவிட்டு வீட்டுப் பெரியவர்களுடன் பேச ஆரம்பித்தாள், ராஜம்.

அவர்கள் பெரிய வசதியுள்ளவர்களாய்த் தெரியவில்லை. அதனால் என்ன? இருப்பு வைத்திருப்பார்கள். பெண்ணுக்கு ஏராளமாக நகை வைத்து வசதியுள்ளவர்களாய் இருப்பார்கள். தாராளமாகச் செய்ய வேண்டியதைச் செய்வார்கள்.

ராஜம் மனக் கணக்குப் போட்டாள்.

பிறகு அந்தக் கணக்கை ஒரு வாத்தியாரம்மாவைப் போல எடுத்துச் சொன்னாள்.

பெண் வீட்டுக்காரர்கள் அதிகமாகப் பேசவில்லை. அது சம்மதத்தின் அடையாளமாகத் தோன்றியது ராஜத்துக்கு.

“டாக்டர் மாப்பிள்ளைக்கு என்ன செய்யணுமோ, அதைச் சொல்லி விட்டேன். சீக்கிரமா முடிவைச் சொல்லி அனுப்புங்கள். வசதிப்படலேன்னு தெரிஞ்சா நான், வேற இடம் பார்க்கத் தோதுப்படும் இல்லையா?”

சுருக்கமாகப் பேசி விட்டு ராஜம் திரும்பிவிட்டாள்.

சேகர் மருத்துவமனையிலிருந்து திரும்பியிருந்தான்.

“மலர்க்கொடியைப் பார்த்துவிட்டு வந்தேன், சேகர்?”

“அதுக்குள்ளே போய் விட்டு வந்துட்டீங்களா, அம்மா?”

“எத்தனையோ இடத்தைப் பார்த்தேன். ஆனால், இந்த மலர்க்கொடியைப் பார்த்ததும் ரொம்ப அசந்து போயிட்டேன்...”

“ஏன், ரொம்ப அழகோ?”

“அழகு மட்டுமில்லே... அடக்கம்... இது கடவுள் போட்ட முடிச்சு. அப்படீன்னு நினைச்சுக்கிட்டேன். மலர்க்கொடிதான் எனக்கு மருமகளா ஷீஷீபும்னு ஆசை. ஆனால்...”

“என்னம்மா சொல்றீங்க?” என்று சற்றே ஆவலோடு கேட்டான், சேகர்.

“ஜோடிப் பொருத்தம் சரிதான். ஆனால், மத்த விஷயங்கள்..!”

“எதைச் சொல்றீங்க?”

“நான் போட்ட நிபந்தனைகளுக்கு ஒத்து வரணுமே!”

அவன் நிபந்தனைகளைக் கேட்டான்.

“ரொக்கமா தரவேண்டிய வெள்ளி!”

“அப்பறம்?”

“நூறு சவரனுக்குக் குறையாமல் பெண்ணுக்கு நகை போடணும்!”

“பிறகு?”

“சீர்வரிசை, பண்டம், பாத்திரம், அப்பறம் உனக்கு கிளினிக் வைத்துத் தரணும்னு சொல்லியிருக்கேன்..!”

“சம்மதிச்சிட்டாங்களா?” என்று சேகர், கேட்டான்.

“சம்மதிக்கலேன்னா, எப்படிச் சம்பந்தம் பண்ணிக்க முடியும்?”

“அதுக்கெல்லாம் அவங்க கிட்டே வசதி இருக்காம்மா?”

“இல்லேன்னாலும் கடனோ உடனோ வாங்கி காரியத்தை முடிச்சிட மாட்டாங்களா? காலம் இப்ப எவ்வளவோ மாறிட்டது இல்லையா? அதுக்குத் தகுந்த மாதிரி நாமும்.”

“ஆமாம்மா... காலம் ரொம்பத்தான் மாறியிருக்கு... இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இருந்த மாதிரி இல்லே...”

“அது என்னப்பா இருபத்தஞ்சு வருஷம் புதுக்கணக்கு மாதிரி சொல்றியே?”

“ஆமாம்மா... அப்பா உங்களை அப்பத்தானே கல்யாணம் பண்ணிக்கிட்டார்னு சொல்லியிருக்கிறீங்க...”

“இப்ப எதுக்கு அந்த நினைப்பு உனக்கு?”

“மனதிலே அப்படியே பதிஞ்சு போயிருக்கும்மா நீங்கள் சொன்னது எல்லாம்...!”

ராஜம் எவ்வளவோ சொல்லியிருக்கிறாள்.

இவன் அப்பா ஒரு டாக்டரிடம் குறைந்த சம்பளத்தில் கம்பவுண்டராக இருந்தார். கண்ணியமான இளைஞன் என்று பெயர் எடுத்திருந்தார். ரேஸ்கோர்ஸ் சாலையில் மாதப் பணம் கொடுத்து ஒரு விதவைத் தாயிடம் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார். இன்னும் சில பேரும் அதே வீட்டில் சாப்பிட்டார்கள். அந்தத் தாய்க்குத் திருமண வயதில் ஒரு மகள். சோற்றுக் கவளத்தை விழுங்கியபடி அந்த வயதுப் பெண்ணையும் பார்வையால் விழுங்கிக் கொண்டு இருந்தார்கள் பல பேர்.

கம்பவுண்டருக்கு இது சங்கடமாக இருந்தது. அந்தப் பெண்ணைப் பார்ப்பதற்காகவே சிராங்கூன் ரோடு வட்டாரத்திலுள்ள சிலர் சாப்பிட வருகிறார்கள் என்று நினைத்தார். ஒரு வசதியும் இல்லாத அந்தப் பெண்ணை மணந்து கொள்ள முடிவு செய்தார். இதைக் கேட்டபோது, தாயும் மகளும் கண்ணீர் விட்டார்கள், மகிழ்ச்சிப் பெருக்கில்.

“என்னம்மா யோசிக்கிறீங்க?” என்றான், சேகர்.

ராஜம் பதில் சொல்ல முடியாமல் தவித்தாள்.

“காலம் மாறியிருக்குன்னு சொன்னீங்களே... உண்மைதான்... ஒரு காசு வரதட்சணை, சீர்வரிசை அது இதுன்னு கேட்காமல் இருபத்தஞ்ச வருஷத்துக்கு முந்தி அப்பா உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார். இப்ப எனக்கு இலட்சம் இலட்சமா விலை கேட்கறீங்க? பாவம், மலர்க்கொடி...! அவளுக்கு இவ்வளவு பெரிய அபராதத் தொகையா விதிக்கிறீங்க?”

ராஜம், தலைகுனிந்து விட்டாள்.

“அம்மா... நான் அப்பா பிள்ளை. அவரைப் போல மனிதாபிமானம் உள்ளவன். இரக்கம் உள்ளவன். மலர்க்கொடியை ஒரு காசு வாங்காமல் கல்யாணம் பண்ணிக்கிறதா நான் எப்பவோ முடிவு பண்ணிவிட்டேன். எனக்குப் பிடிச்ச பெண்ணை நீங்களும் ஒரு தரம் பாத்துட்டு வரணும் என்கிறதுக்காகத்தான் உங்களை அனுப்பி வச்சேன்.”

“சேகர்... மலர்க்கொடிதான் என் மருமகள். நிபந்தனை விதிக்கிற அருகதை எனக்கு இல்லேப்பா. நான் உன்னோட அம்மா மட்டுமில்லே ஒரு சமையல்காரப் பெண்ணின் மகள். தாய்க்கே அதிர்ச்சி வைத்தியம் பண்ணி தெளிய வச்சிட்டேப்பா... எனக்குப் பெருமையா இருக்கு!” என்றாள், ராஜம்.

## மூடிய கதவுக்குள்ளே

**- இலட்சுமி**

அன்று ஆகஸ்ட் ஒன்பதாம் நாள். நம் நாடு சுதந்திரம் பெற்ற தினம். வீதியெங்கும் நம் தேசியக் கொடி பட்டொளி வீசிக் கொண்டிருந்தது. விழாக்கோலம் பூண்ட நங்கையாய் நம் நாடு புதுப்பொலிவுடன் காட்சியளித்தது. சுதந்திர விழாவில் கலந்துகொள்ள முடியாத பலர், தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பில் இடம்பெறவிருக்கும் அணிவகுப்பைக் காணும் ஆவலில் வீட்டில் காத்திருந்தனர். “அம்மா, தேசிய தின அணிவகுப்பு தொடங்க இன்னும் ஐந்தே நிமிடம் தான் இருக்கிறது” என்கிற அன்புமணியின் குரல் வரவேற்பறையிலிருந்து கேட்டது. சமையலறையில் வேலையாய் இருந்த சாரதா “இதோ வந்துட்டேன்” எனக் கூறியபடி தனது வேலையைத் துரிதமாக முடித்தாள்.

கூடத்தை நோக்கி விரைந்து வந்த அவள் தொலைக்காட்சியின் முன்னே தன் கணவர் பார்த்திபனும் மகன் அன்புமணியும் தேசிய தின அணிவகுப்பைக் காணும் ஆவலில் அமர்ந்திருப்பதைக் கண்டாள். வண்ணத்திரையில் அணியணியாகச் சீருடைப் படையினர்கள் அதிபரின் வருகைக்காகக் காத்திருந்த கம்பீரத் தோற்றம். ஒரு கணம் சாரதாவை மெய்சிலிர்க்க வைத்தது. வைத்த கண் வாங்காமல் அவர்களைப் பார்த்த வண்ணம் சோபாவில் அமர்ந்தாள் சாரதா.

“டாண்... டாண்... டாண்...” சரியாக மாலை மணி ஆறு என்பதை நாடாளுமன்றக் கட்டிடத்திற்கு எதிரே இருந்த மணிக்கூண்டு பறைசாற்றியது. அதிபர் வருவதற்கு அறிகுறியாக மோட்டார் சைக்கிளில் காவலர்கள் மிடுக்குடன் முன்னே வர, அதிபரின் வண்டி பின்னே தொடர்ந்தது. அதிபர் வந்திறங்கினார். அவருக்குரிய மரியாதை செலுத்தப்பட்டது. இப்படியே ஒவ்வோர் அங்கமாக நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் சாரதாவின் மனமோ “போன வருடமும் இப்படி அணிவகுப்பைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது தானே அந்தச் சம்பவம் நடந்தது” என எதையோ நினைத்துக் கொண்டது. அவள் பார்வை எதிர் வீட்டின் மீது நோட்டமிட்டது.

வழக்கம் போல் வாசல் கதவு மூடியிருந்தது. வீட்டில் ஆள் இருக்கின்றனர் என்பதற்கு அடையாளமாக உள்ளிருந்து எரிந்த விளக்கொளி சன்னல் வழியே மெல்ல எட்டிப்பார்த்தது. மற்ற சமயமாக இருந்திருந்தால்,

“விளக்கு வைக்கிற நேரமும் அதுவுமா இப்படியா கதவை அடைச்சி வைக்கிறது” எனப் பொறிந்து தள்ளியிருப்பாள். ஆனால் இன்று அவள் முகத்தில் எந்தக் கடுகடுப்பும் இல்லை. முகச்சுளிப்பும் இல்லை. அதற்கு மாறாக இதமான புன்சிரிப்பு அவள் முகத்தில் இழையோடியது.

அந்தப் புன்சிரிப்புக்கான அர்த்தத்தைப் புரிந்துகொண்ட பார்த்திபன் “என்ன சாரதா, பழைய ஞாபகமா?” எனக் கேள்விக்கணையைத் தொடுத்தாள். “ஆமாங்க” எனத் தலையை ஆட்டினாள் சாரதா. அவள் பார்வை மீண்டும் எதிர் வீட்டுப்பக்கம் சென்றது. அங்குக் கதவு மூடியே இருந்தது. ஆனால் சாரதாவின் மனக்கதவோ கடந்தகால தேசிய தினத்தன்று நிகழ்ந்த சம்பவத்தைத் திறந்து பார்த்தது.

“சாரதா... சாரதா...” எனச் செல்லமாக அழைத்தபடி வீட்டினுள் நுழைந்தாள் மேரி. குளியலறையில் சாரதா அன்புமணியைக் குளிப்பாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு-வந்த விஷயத்தைச் சொல்ல மறந்தவளாய், “டேய் போக்கிரிப் பயலே குளிக்கிறியா?” என அன்புமணியின் தாடையைத் தட்டிக் கொஞ்சினாள். அன்புமணியும் தன் பொக்கை வாயைத் திறந்து மெல்லச் சிரித்தான். “சாரதா நீ போ. நான் இவனைக் குளிப்பாட்டிட்டு அழைச்சிட்டு வரேன்” என உரிமையுடன் சாரதாவிடமிருந்து குழந்தையை வாங்கிக் குளிப்பாட்டினாள். அதன்பிறகு அவளே அவனுக்குப் பவுடர் பூசி, நெப்கினை மாட்டி, சட்டையை அணிவித்து, அழகாக திருஷ்டிப் பொட்டும் சூட்டி அழகுபடுத்தினாள். அதற்குள் சாரதாவும் பால் கலக்கி ரெடியாகக் காத்திருந்தாள்.

மேரி குளித்துவிட்டுப் பசியோடு இருந்த அன்புமணிக்காக கலக்கி வைத்திருந்த புட்டிப் பாலைக் கொடுக்கத் தொடங்கினாள். “என்ன மேரிக்கா, வந்த விஷயத்தைச் சொல்லாம பையனோட ஐக்கியமாயிட்டீங்களே” எனச் சாரதா கேட்ட பிறகுதான் மேரிக்கே தான் அங்கே வந்த விஷயம் நினைவுக்கு வந்தது. “ஆமாடியம்மா மறந்தே போயிட்டேன். நானும் ஜார்சும் டிக்கெட் விஷயமா ஏஜெண்டைப் போய்ப் பார்க்கனும். ஸ்டெல்லா வந்தா இந்த வீட்டுச்சாவியைக் கொடுத்திடு” என்று கூறியவாறு மேரி சாவிக் கொத்தை நீட்டினாள். அதை வாங்க ஏந்திய சாரதாவின் கை ஏனோ நடுங்கியது. அதனைத் தொடர்ந்து “மேரியக்கா... வந்து... வந்து...” என நாத் தழுதழுத்தது. விழியோரத்தில் கண்ணீர்த்துளி வழிந்தோடியது. “என்ன சாரதா இது, சின்னக்

குழந்தை மாதிரி ம்...  கண்ணைத் துடைச்சுக்க...” என்றபடி விழியோரம் வழிந்த நீரைத் துடைத்தாள் மேரி.

அவள் கையைப் பற்றியபடி “மேரியக்கா, இந்த ஆறுதலான வார்த்தையை இனிமேல் நான் எப்போ கேட்கப் போறேன். உங்க அன்பு முகத்தை நான்...” அதற்கு மேல் பேச முடியாதவளாய்ச் சாரதா விக்கி விக்கி அழுதாள். “அட அசடே! சிட்னி என்ன நீ வர முடியாத தூரத்திலேயா இருக்கு? இல்லை நாங்க தான் இங்கே வர மாட்டோமா? பிளேன் எடுத்தா ஒரே நாளுல இங்கே வந்திடலாம். அடிக்கடி போன்ல பேசலாம்” எனப் பாசத்தோடு அவளை அணைத்துக் கொண்டாள். அந்த அரவணைப்பில் சாரதா ஆறுதலடைந்தாள்.

திருமணமான புதிதில் மற்ற இளம் ஜோடிகளைப் போல தனிக்குடித்தனம் நடத்த பார்த்திபனும் சாரதாவும் முடிவெடுத்தனர். யீசூன் வட்டாரத்தைத் தேர்ந்தெடுத்து மறு விற்பனை வீடுகளையெல்லாம் வலம் வந்தனர். இறுதியில் அவர்கள் எதிர்பார்த்த அத்தனை வசதிகளும் நிறைந்த ஒரு போயிண்ட் புளோக்கைத் தேர்ந்தெடுத்தனர். அது போயிண்ட் புளோக்காக இருந்தால் எதிரெதிரே இரு வீடுகள், ஒன்று பார்த்திபனுடையது. மற்றது ஜார்ச் குடும்பத்தினருக்குரியது.

“அண்டை வீட்டார் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்” என்கிற பாடல் வரிகளுக்கு ஏற்ப ஜார்ச் குடும்பத்தினர் உற்ற துணையாகப் பார்த்திபன் சாரதா தம்பதிகளுக்கு விளங்கினர். இரு குடும்பத்தினர்-களுக்கிடையே இருந்த அணுக்கமான உறவு அவர்களை உடன்பிறப்புகளோ என எண்ணத் தோன்றியது. இந்த நெருக்கம் பார்த்திபனுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. ஆம்! வியாபார விஷயமாக அடிக்கடி வெளியூர் சென்றுவரும் பார்த்திபனுக்கு அது அனுகூலமாக இருந்தது. பார்த்திபனின் மனபாரமும் நீங்கியது.

மறு ஆண்டு அன்புமணி பிறந்தான். அன்புமணியின் பிறப்புக்குப் பிறகு அவர்களின் உறவில் மேலும் நெருக்கம் ஏற்பட்டது. யாருடைய கண் பட்டதோ தெரியவில்லை. இவர்களுக்கிடையே பிரிவு என்கிற பெருஞ்சுவர் ஜார்ச் ரூபத்தில் வந்தது. ஜார்ச் வேலை செய்யும் கம்பெனியின் கிளை நிறுவனம் ஒன்று சிட்னியில் உள்ளது. பதவி உயர்வு பெற்ற ஜார்ச் சிட்னிக்கு மாற்றலாகிப் போகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஜார்ச்சுடன் மேரியும் ஸ்டெல்லாவும் செல்ல வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாயினர். பிறகு என்ன? வீடு விற்கப்பட்டது. மூட்டை முடிச்சுகள் கட்டப்பட்டன. ஜார்ச் குடும்பத்தினரும் சிட்னிக்குச் சென்றுவிட்டனர்.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் எல்லாக் காரியங்களும் நடந்து முடிந்தன. மேரியின் பிரிவைச் சாரதாவால் அவ்வளவு எளிதில் ஜீரணிக்க முடியவில்லை. பல சமயங்களில் அவர்களை எண்ணிக் கண்ணீர் விடுவாள். காலம் யாருக்கும் காத்திராமல் தன் கடமையைச் செவ்வனே ஆற்றியது. மூன்று மாதம் கழித்து ஜார்ச் வீட்டுக்குத் திரு லீ குடும்பத்தினர் குடியேறினர்.

மேரியின் பிரிவைத் திருமதி லீ மூலம் ஈடுகட்ட நினைத்தாள் சாரதா. ஆனால் அதற்கு நேர்மாறாக எல்லாமே நடந்தது. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வத்தை நாம் மறந்துவிடுவோம் அல்லவா? அப்படியே எல்லாமே தலைகீழாக நடந்தது. திரு லீ, திருமதி லீ அவர்களின் இரு குமாரர்கள் ஆக மொத்தம் நான்கே நான்கு பேர் அடங்கிய கச்சிதமான குடும்பம். குடி வந்த புதிதல் தெரிந்து கொண்ட விவரம் இது. அதன் பிறகு அவர்களைப் பார்ப்பதே அரிதாக இருந்தது.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர் திரு லீ. அவர் மனைவி டான் டோக் செங் மருத்துவனையில் குமாஸ்தாவாக வேலை பார்க்கிறார். பிள்ளைகளில் ஒருவன் தேசிய சேவை புரிகிறான். சின்னவன் தொழில் நுட்பப் பிரிவில் படிக்கிறான். இதுவே அவர்களைப் பற்றிய விவரம், வந்த புதிதில் வழிய வழியப் போய் சாரதாவே துப்புத் துலக்கியதில் கிடைத்த விவரங்கள் இவை. மற்றபடி இரு வீட்டாருக்கும் இடையே எவ்வித ஒட்டும் இல்லை; உறவும் இல்லை.

ஜார்ச் குடும்பத்தினரைப் போல இவர்களும் சீனர்கள். எல்லா சீனர்களும் ஜார்ச் குடும்பத்தினர் போல் நட்புடன் பழகுவர் என நம்பியிருந்த சாரதாவுக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்தது. லீ வீட்டு வாசல் கதவு எப்போதும் மூடியே இருந்தது. தப்பித் தவறி அக்கதவு திறந்திருந்து அன்புமணி அப்பக்கமாக எட்டிப் பார்த்தால் “ஹலோ பாய்” என்கிற குரல் கேட்கும். அதனைத் தொடர்ந்து “ஆன்ட்டி, குழந்தை விழுந்திடப் போறான். உள்ளே அழைத்துச் செல்லுங்கள்” எனச் சாரதாவைக் கூப்பிட்டு மகனை அவள் கையில் ஒப்படைத்துவிட்டுச் செல்வார்கள். இந்த வம்பே வேண்டாம் என எண்ணி அவர்கள் எப்பொழுதும் கதவை மூடியே வைத்திருப்பர்.

ஆரம்பத்தில் இது சாரதாவுக்குப் பெருங்குறையாக இருந்தது. கணவர் பார்த்திபனிடம் சொல்லிக் குறைபட்டுக் கொள்வாள். காலப்போக்கில் அது பழகிப் போய்விட்டது. இருப்பினும் ஏதோ ஒரு குறை அவள் உள்மனத்தை ஆட்கொண்டது. “ஏன் இவர்கள் இப்படி ஒட்டாமல் இருக்கிறார்கள். நமக்கு

ஏதாவது ஒன்னுனாகூட கேட்பதற்கு நாதி இல்லையே? புறாக் கூண்டில் அடைப்பட்டு இருப்பது போல் வாழ்கிறோமே” என எண்ணி வருந்துவாள். அவள் வருத்தம் விசுவரூபம் எடுக்கும் என அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அன்று ஆகஸ்ட் ஒன்பதாம் நாள். நம் நாட்டின் சுதந்திர தினம். நாடே குதூகலக் கொண்டாட்டத்தில் மிதந்து கொண்டிருந்தது. சாரதாவும் தேசிய தின அணிவகுப்பைக் காணத் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து கொண்டிருந்தாள். அப்போது “ம்மா... ம்மா...” என்ற முணுகல் ஒலியுடன் அன்புமணி பேச முடியாமல் தடுமாறினான்! அவன் கண்களின் கருமணிகள் மேல் நோக்கிச் சென்று கொண்டிருந்தன. “அன்பு என்னடா... என்ன செய்யுது? ஐயோ! அவரும் ஊருல இல்லையே? நான் என்ன செய்வேன்?” எனப் பதறினாள் சாரதா. லொக்... லொக்..! என அன்புணி இருமினான். வாயிலிருந்து நுரை தள்ளியது.

அப்போதுதான் அன்புமணியின் கையிலிருந்த வண்டியைக் கவனித்தாள். பொம்மை வண்டியிலிருந்த சக்கரத்தைக் காணவில்லை. அது அவன் தொண்டையில் சிக்கி இருப்பதை அறிந்தாள். அதற்கு மேல் அவளால் எதையும் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. மகனின் உயிர் ஊசலாடும் நிலை. உள்ளம் தடுமாறியது. கை வெட வெடத்தது. உடல் நடுங்கியது. “ஆண்டவா! என் மகனைக் காப்பாற்று” எனக் கத்தியபடி வாசல் பக்கம் வந்தாள். பட பட எனக் கை ஓயும் வரை பலமாகப் பக்கத்து வீட்டுக் கதவை வெறி கொண்டு தட்டினாள்.

இப்படி ஒரு தட்டலை அவர்கள் கேட்டிருக்க மாட்டார்கள். என்றுமில்லாத திருநாளாகச் சாரதா கதவைத் தட்டியதில்லை. இல்லை கதவை உடைத்த விதம் திரு லீக்குப் புதுமையாக இருந்தது. அதைவிடச் சாரதாவின் தோற்றம் ஏதோ விபரீதம் ஒன்று நடந்துள்ளது என்பதைப் பறை சாற்றியது.

விஷயத்தை அறிந்த அவர் தாமதிக்காமல் டாக்ஸியைப் பிடித்து மருத்துவமனைக்கு ஓடிய வேகமும் அவர் மனைவி சாரதாவுக்கு ஆறுதல் வார்த்தை கூறிய விதமும் சாரதாவுக்கு ஜார்ச் தம்பதிகளை மீண்டும் நினைவுபடுத்தியது. லீ குடும்பத்தினர் ஜார்ச் குடும்பத்தினர் போல் இல்லையே என்கிற குறை அன்றுதான் நிவர்த்தியானது. ஜார்ச் மேரி தம்பதியினரை நேரில் பார்ப்பது போன்றதோர் உணர்வை அவள் அப்போதுதான் பெற்றாள்.

“கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது” என்பதற்காகத்தான் தாயைப் படைத்தார் என அவள் படித்திருந்தாள். ஆனால் அந்த அன்பு

கொண்ட உள்ளம் சில நல்லவர்கள் மத்தியிலும் இருக்கக் கூடும் என்கிற உண்மையை அன்றுதான் உணர்ந்து கொண்டாள். அன்புமணியைப் பெற்றவள் அவளாக இருக்கலாம். ஆனால் அவனுக்கு மறுஜென்மம் கொடுத்தவர்கள் லீ குடும்பத்தினர். இந்த நினைப்பு அவள் உயிர் உள்ள வரை நிலைத்திருக்கும். "பேசிப் பழகினால்தான் நல்ல அண்டை வீட்டுக்காரர்களா? ஆபத்து வேளைகளில் உதவுபவர்களே நல்ல அண்டை வீட்டார் என்பதை உணர்ந்து கொண்டாள்.

"வீ ஆர் சிங்கப்போ. வீ ஆர் சிங்கப்போ. வீ ஆர் சிங்கப்போரியன்" என்று அன்புமணி உரக்க பாடியதைக் கேட்ட சாரதா தன் பழைய நினைவிலிருந்து மீண்டு வந்தாள். தொலைக்காட்சியில் இடம் பெற்ற அப்பாடல் காட்சியில் தேசிய அரங்கத்தில் இருந்த அனைவரும் தங்கள் கைகளைக் கோ(ர்)த்து.

# அலகு - 5

## புலம்பெயர்வும் இலக்கியங்களும்

### புலம் பெயர்ந்தோர் இலக்கியம் : வரையறைகளும் கூறுகளும்

மனிதன் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு புலம்பெயர்ந்து செல்லுதல் (நிலம்பெயர்தல்) வரலாற்றுக்கு முந்தைய காலந்தொட்டே நிகழ்ந்து வருகிறது. வரலாற்றுக் காலத்தில் போர், வணிகம், இயற்கை மாறுதல் இயற்கைப் பேரிடர் காரணமாக மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் புலம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு புலம்பெயர்ந்து செல்லும் மக்களை 'புலம் பெயர் மாக்கள்' என்று சங்க இலக்கியம் அடையாளப்படுத்துகிறது.

"புலம் பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்" (பட்டினப்.217-218)

கிரேக்கம், ரோம், அரேபியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து வணிகம் காரணமாக புகார் நகரில் வந்து தங்கி பல மொழிகளைப் பேசும் மக்களைக் குறிக்க இச்சொற்றொடர் கையாளப்பட்டுள்ளது. இதேபோன்று தமிழ் நிலப்பரப்புக்குள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நிலம் பெயர்ந்து சென்றவர்களைக் குறிக்கவும் இச்சொற்றொடர் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது.

"புலம்பெயர்புலம்பொடு கலங்கி" (நெடுநல்வாடை. 5)

"புலம்பெயர் புதுவீர்" (மலைபடுகடாம். 392)

தேசங்கள் உருவானதற்குப் பிந்தைய நவீன காலத்தில் ஒரு நாட்டிற்குள் இத்தகைய இடப்பெயர்வுகள் நடக்கின்றன. வணிகம், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கும் இடப்பெயர்வுகள், குடியேற்றங்கள் நடக்கின்றன. ஆயின் இவையெல்லாம் இடப்பெயர்வுகள் என்ற அளவிலேயே கருதப்படுகின்றன. புலப்பெயர்வுகளாகக் கருதப்படுவதில்லை.

வரலாற்றுப் பூர்வீகமுடைய தாயகத்திலிருந்து சமூக, அரசியல், பொருளாதாரக் காரணங்களால் வேறொரு நாட்டிற்கு வெளியேறிச் சென்று அங்குக்

குடியேறியவர்களைப் புலம் பெயர்ந்தோர் என்று அழைக்கிறோம். மேற்குலகில் முதலில் திகழ்ந்த புலப் பெயர்வாக யூதர்களின் புலப்பெயர்வு குறிப்பிடப்படுகிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் யூதர்கள் தங்களது சொந்த மண்ணான பாலஸ்தீனத்திலிருந்து (இஸ்ரேல்) பாபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்டார்கள். விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் பதிவாகி இருக்கும் இப்புலப் பெயர்வே வரலாற்றின் முதல் புலப்பெயர்வாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. அதன் பிறகு காலனி ஆட்சிக்காலத்தில் அடிமை வணிகத்தை முன்னிட்டு 16ஆம் நூற்றாண்டிலிருந்து ஏராளமான ஆப்பிரிக்கர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கப்பட்டு நாடுகடத்தப்பட்டனர்.

தமிழர்களின் புலப்பெயர்வு என்பது கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவிலேயே நிகழ்ந்துள்ளது. கிரேக்க உரோமானியப் பயணியர்களின் குறிப்புகளிலும் சங்க இலக்கியங்களிலும் வணிகத்திற்காகத் தமிழர்கள் கிரேக்க உரோம நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றதை அறியமுடிகின்றது. சங்க காலத்தில். பொருள்வயின் பிரிவிற்காகத் தமிழர்கள் வடவேங்கடத்திற்கு அப்பால் இருக்கும் மொழிபெயர்த்தேயங்களுக்கு - வேறு மொழி பேசக்கூடிய பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றார்கள் என்பதைச் சங்கப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது. தமிழக வரலாற்றில் நிகழ்ந்த இம்முதல் புலப்பெயர்வு வணிகத்தின் பொருட்டும் பொருளீட்டலின் பொருட்டும் நிகழ்ந்துள்ளது. இரண்டாவது புலப்பெயர்வு தமிழ்ச் சமூகத்தில் பிற்காலச் சோழர்காலத்தில் இராஜராஜ சோழன் இராஜேந்திர சோழன் ஆகியோரது அயலகப் படையெடுப்புகளின் போது இலங்கை (ஈழம்), மலேசியா (கடாரம்), தாய்லாந்து (சயாம்) உள்ளிட்ட கீழ்த்திசை நாடுகள் முழுவதிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து பரவினர். இப்புலப்பெயர்வு அரசியல் காரணத்தால் நிகழ்ந்தது. தமிழ்ச் சமூக வரலாற்றில் மூன்றாவது புலப்பெயர்வு காலனி ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது. ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி, தனது பொருளாதார நலனை மேம்படுத்துவதற்காக இலங்கை மலையகத் தேயிலைத் தோட்டங்கள் (கண்டி), மலேசிய ரப்பர்க் காடுகள், பர்மா நெல் வயல்கள், பிஜித்தீவின் கரும்புத் தோட்டங்கள்,

தென்னாப்பிரிக்காவின் சுரங்கங்கள் ஆகியவற்றிற்குத் தமிழர்களைச் கூலிகளாக அழைத்துச் சென்றது. முதல் இரண்டு புலப்பெயர்வுகளில் தமிழர்கள் மானமிக்க நிலையிலிருந்தனர். பிறகு இழிந்து, கூலி எனும் சொல் ஆங்கில அகராதியில் இடம்பெறுகின்ற அளவிற்குத் தரம் தாழ்ந்த நிலையில் இம்மூன்றாம்

புலப்பெயர்வு நிகழ்ந்தது. இதில் ஏராளமான தமிழர்கள் கடும் குளிரிலும் காலராவிலும் அட்டைக்கடியிலும் மலேரியாக் காய்ச்சலிலும் இறந்து போனார்கள். இம்மூன்றாம் கட்டப்புலப் பெயர்வில் பர்மாவிலிருந்து தாய்லாந்திற்கு அமைக்கப்பட்ட சயாம் மரண இரயில் பாதையில் ஏராளமான தமிழர்கள் செத்து மடிந்தனர்.

காலனி ஆட்சிக்காலத்தில் நடந்த இப்புலப்பெயர்வுகள் பற்றி, ‘கண்டி தேயிலைத் தோட்டப்பாட்டு’, ‘ரங்கோன் அதிசயக் காவடிச் சிந்து’ முதலான நாட்டார் பாடல்கள் பதிவு செய்துள்ளன. ‘பிஜித் தீவிலே ஹிந்துஸ் திரிகள்’ கவிதையில் பதரதியார் பிஜித்தீவிலுள்ள கரும்புத் தோட்டங்களில் இந்திய - தமிழ்ப்பெண்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளை விவரித்துள்ளார். தென்னாப்பிரிக்கப் புலப்பெயர்வுகள் பற்றிக் கவிஞர் தமிழ்ஒளி தனது ‘வீராயி’ எனும் குறுங்காப்பியத்தில் பதிவுச் செய்துள்ளார். மலேசிய ரப்பர் தோட்டங்களில் தமிழர்கள் சந்தித்த இன்னல்களை அகிலன் தனது ‘பாஸ்மரக் காட்டினிலே’ என்ற நாவலில் விவரித்துள்ளார். புதுமைப்பித்தனின் ‘துன்பக்கேணி’ சிறுகதை, இலங்கை மலையகத் தேயிலைத் தோட்டங்களில் தமிழ்ப்பெண்கள் அனுபவித்த கொடுமைகளைப் பறைசாற்றுகின்றது. இந்தியா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளின் விடுதலைக்குப் பின்னர் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் காலனி ஆட்சிக்காலக் கொடுமைகளை வாய்மொழி இலக்கியங்களாகவும் ஏட்டு இலக்கியங்களாகவும் பதிவு செய்துள்ளனர்.

## புலம்பெயர்ந்தோர் கவிதைகள் : காலமும் வெளியும்

இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் தனித்ததொரு வகையாக விரிவான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. புலம்பெயர்ந்தோர் என்னும் சொல் இன்றைய தமிழ் இலக்கியச் சூழலில் பெரிதும் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் பெற்றவர்களைக் குறிக்கின்றது. சிறுகதை, நாவல், கவிதை, பத்தி எழுத்து எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது வாழ்வைப் பதிவு செய்து வருகின்றனர். இவற்றுள் ஈழத்தமிழர்களுடைய புலப்பெயர்வு வாழ்வின் அவலங்களை, வேதனைகளை அவர்களுடைய கவிதைகள் கூர்மையாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. பெண்ணிய, தலித்திய கவிதைகளைப் போல் வலியின் மொழியில் அமைந்த கவிதைகளாக இவை இருக்கின்றன. இக்கவிதைகளை ஈழத்துக் கவிஞர் அகிலன் பாக்கியநாதன் ‘அடிவேதனை இலக்கியங்கள்’ எனக் குறிப்பிடுகின்றார். இக்கவிதைகள் ஜெர்மனி, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஆஸ்திரேலியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசுபவையாக இருக்கின்றன. இக்கவிதைகள் அந்நாடுகளிலிருந்து வெளிவரும் தாயகம், காலம், எக்ஸில், தாகம், சுவடுகள், காகம், அக்னிக்குஞ்சு, அஆஇ முதலான இதழ்களில் வெளிவருகின்றன. இக்கவிதைகள் நமது வழமையான தமிழ்நாட்டுக் கவிதைகளில் உருவ உள்ளடக்க வெளிப்பாடுகளிலிருந்து வேறுபட்டவையாக இருக்கின்றன. வேதனையில் மலரும் இக்கவிதைகள் பழங்காலத்தில் இறந்தோருக்கு வருந்திப் பாடும் சரமக் கவிதை (இரங்கற்பா) வடிவத்தையும் பெறுகின்றன. இக்கவிதைகளின் காலமும் வெளியும் தமிழ்நாட்டுக் கவிதைகளின் தன்மையிலிருந்து மாறுபட்டவையாக இருக்கின்றன. ஐரோப்பிய மண்ணிலிருந்து இவை எழுதப்படுவதால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்கிற தமிழ்த் திணைகளில் கால, நில வெளிகளைக் கடந்து ஆறாம் இணையைச் சார்ந்தவையாக இருக்கின்றன.

தமிழ்த் திணை மரபு தொல்காப்பியத்திலிருந்தே தொடங்குகிறது. திணைநிலைக் கவிதைகளின் கூறுகளையும் ஆக்கத்தையும் தொல்காப்பியம் விரிவாகப் பேசுகிறது. சங்கக் கவிதைகளில் முதற்பொருள் என்ற வகையில் நிலமும் பொழுதும் விரிவான சித்திரிப்புக்கு உள்ளாகின்றன. காலம்,

நிலவெளிகளோடு மனித உணர்ச்சிகளை இணைத்துக் காட்டுவது சங்கக் கவிதையின் அடிப்படையாக அமைந்துள்ளது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ள அகத்திணை சார்ந்த நூல்களில் நிலம் பொழுது பற்றிய சித்திரிப்பு சங்க இலக்கியத்தின் போலச் செய்தலாக அமைந்துவிட்டது. தமிழ்க் காப்பியங்களில் சம்பிரதாயமாக இடம் பெற்றுள்ள நான்கு நில வருணனை செயற்கை அலங்கரிப்பாக மாறிவிட்டது. இதன்தொடர்ச்சியாகவே இடைக்காலத் தமிழ்க் கவிதையிலும் (சிற்றிலக்கியங்கள்) நிலம்பொழுதை உள்ளடக்கிய இயற்கை வருணனை செயற்கையான அலங்கரிப்போடும் வினோதப் புனைவோடும் (Fancy) அமைந்துள்ளது. நவீன கவிதை வடிவமான புதுக்கவிதையில் 'நகர்'த்திணை அழுத்தம் பெற்றுள்ளது. புலம் பெயர்ந்தோர் கவிதைகளில் அயல்திணையான ஐரோப்பிய நிலம் விவரிப்புக்குள்ளாகி உள்ளது. பனிமலைகளும் பனித்தூறல்களும் உறைந்த பனிப்பாளங்களும் பனிபடர்ந்த நிலங்களும் இத்திரிக்கப் பட்டுள்ளன. பொழுதைப் பொறுத்த அளவில் குளிரால் வாடும் ஐரோப்பியர்களால் வரவேற்கப்படும் கோடையும் இளவேனிலும் புலம்பெயர்ந்தோர் தமிழ்க் கவிதைகளில் வரும் பொழுதுகளாய் இடம்பெற்றுள்ளன. புலம்பெயர்ந்த தமிழர்கள் பகல்முழுவதும் உழைப்பில் ஈடுபடுவதால் அவர்களது ஓய்வுக் காலமான மாலையும் யாமமும் சிறுபொழுதுகளாய் சித்திரிக்கப்படுகின்றன. அதே சமயத்தில் உறையும் குளிரின் கொடூரமும் விவரிக்கப்பட்டுள்ளது. மரபான தமிழ்க்கவிதையில் வியந்து பாராட்டப்படும் நிலவின் அழகிற்குப் பதில் குளிரின் இதந்தரும் சூரியன் விதந்து போற்றப்படுகன்றது. இதற்குச் சில கவிதைகளைச் சான்றாகக் காண்போம். செல்வமதீந்திரன் சுவிஸ் நாட்டை நிலவு விழாத தேசமாகத் தனது கவிதை ஒன்றில் அடையாளப்படுத்துகிறார்.

"நிலவு விழாத தேசம்
துண்டு துண்டாகிப்போன தொலைவு
பனிப்பூக்களில் மகரந்தம் கொள்ளும் விஞ்ஞானம்
கன்னிப் பெண்கள் நீராடுவதை
சூரியக் கிழவன் ஒளிந்தொளிந்து பார்ப்பது போல்
யன்னல் களுக்குள்ளால்
உறையணிந்த விரல்களைத் துழாவவிடும் நான்
எங்கோ தூரத்தில் புள்ளியளவு பூச்சி தெரிகிறது
புயற்காற்று அதைத் தூக்கிவந்து நிறுத்தியது
பூச்சி பூப்படைந்த பெண்ணாக என் முன் தோன்றிற்று

மாபெரும் வெள்ளை அழகியாய் அவள் தெரிந்தாள்.
ஆசியனான எனக்கு அவளுடன் கை குலுக்கும் பாக்கியம்
மீளவும் புயற்காற்றும் பூச்சியாக்கி
அவளை அடித்துச் சென்றது"

இதே போன்று மைத்ரேயி, நார்வே நாட்டின் குளிர்கால முகத்தைப் பின்வருமாறு படம்பிடித்துக் காட்டுகிறார்.

"பருவகால தரிசனங்கள்
வெயில் வரும், இலை உதிரும்
வெண்பனி தழுவும் நிலமகளை,
பிரபஞ்சமே உறைந்து போகும்.
எலும்புக் குருத்தை
ஊடறுக்கும் குளிரில்
வசந்தத்தை எதிர்பார்த்து
வெளிநாட்டு வாழ்வில் அள்ளுண்டு..." (ஊரிலிருந்து ஒரு கடிதம்)

இவ்வாறு உறை பனிநிலமும்அதன்ஊரிக்குளிரும் பல கவிஞர்களின் கவிதைகளில் விரிவான சித்திரிப்பிற்குள்ளாகியுள்ளன. குளிர்காலத்திற்குப் பின்வரும் ஐரோப்பிய நாட்டு இளவேனில் காலத்தை நார்வே கவிஞர் பார்கவி தனது 'பண்டமாற்று' என்னும் கவிதையில் வரவேற்றுப் பாடியுள்ளார். அயல்திணை சார்ந்த நிலமும் பொழுதும் அக்கவிதையில் விரிவான சித்திரிப்பைப் பெற்றுள்ளது.

"கோர்த்து வைத்த மணிகளைப்போல்
நால்புறமும் மலைத் தொடர்கள்
வெண்பளியை உருகவிட்டு புன்னகைக்கும்
செம்மஞ்சள் நிறக் கதிரவன்.
கோடைக்கால வருகைக்காகக் காத்திருக்கும்
பனிபடர்ந்த வெண்நிலங்கள்
மொட்டுவிட எதிர்பார்த்திருக்கும் இலை
உதிர்ந்த சிறு செடிகள்
தீண்டாமல் தீண்டுகின்ற இன்பசுக
இளந்தென்றல்
மழலைகள் விளையாட மரத்தடியில்
நிற்கிறார்கள் தாய்மார்கள்
ஓ... இளவேனில்காலம்இது!"

ஐரோப்பிய நாட்டு இயற்கை, தமிழ்நாட்டு இயற்கையைப் போல் பல்வகையினதாய் - பல்வண்ணம் கொண்டதாய் - கிளர்ச்சி ஊட்டுவதாய் - இல்லாமல் கிளர்ச்சியற்ற வறிதான (Sober) தன்மை கொண்டிருக்கிறது எனும் தனிநாயகம் அடிகளின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையிலேயே இக்கவிதைகள்அமைந்துள்ளன. இளவேனில் முடிந்து வருகிற ஐரோப்பியருக்கு இனிக்கின்ற கோடையின் வரவை, நார்வே நாட்டு அர்ச்சுனா "ஒரு அகதி விண்ணப்பம்" எனும் கவிதையின் தொடக்கத்தில் வரவேற்றுப் பாடுகிறார்.

"குளிருக்கு அஞ்சி
தொலைதேசம் போன சூரியன்
துருவம் வந்து மீண்டும்
வெட்கத்துடன் ஜன்னலிடை முகம் காட்டி
துயில் எழுப்பி
எத்தனை நாளாயிற்று என்று சொல்லிப்போனது அது.
காணுமிடங்களில் ஒளிதுலங்க
துயில்கலைந்து எழுகிறது கோடை காலத்து
துருவ உலகம்
பனிபோர்த்தி நின்ற மரங்களின் தேசம்
மீண்டும் பூக்களின் வாசகம் தரும்
மனிதரைப் போலவே
மரங்களும் செடிகளும் நிலமும் காற்றும்
கோடையில் உயிர்பெறும்
ஆடைவிலக்கி வெய்யிற்சூடு காணும்
பெண்கள் அழகு காணலாம் இந்தக்கோடையிலும்
காற்று வெளியில் நின்று உலாவலாம்
கடல்நீரில் விழுந்து மகிழலாம்
கோடை காலத்துத் துருவம் இப்படித்தான்
நள்ளிரவுச் சூரியனோடு
குளிரை மறந்து அழகு துலங்கும்"

சூரியனின் எழுச்சியைக் காட்டும் இக்கவிதையில் இடம்பெறும் நள்ளிரவுச் சூரியன், மாலையில் சூரியன் மறைவதை மரபாகக் காணும் தமிழனுக்கு ஓர் அதிசயம் தான். நார்வே நாட்டில் கோடைக்காலத்தில் இரவு பத்துமணிக்கும் சூரியன் வாயில் கதவை வந்து தட்டி நிற்பதை தம்பா தனது 'இரவுகள் துயில் கொள்ளா' என்னும் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

## புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் - ஒரு மதிப்பீடு

புலம்பெயர்ந்தோர் என்ற சொல்லை ஆங்கிலத்தில் உள்ள 'னுயைளிழசய' என்ற சொல்லுக்கு இணையாக இப்போது பலரும் ஏற்றுக்கொண்ட ஒரு கலைச்சொல்லாகக் கையாளுகிறோம். சிலர் இதனை அலைவு இலக்கியம் என்று சொல்கிறார்கள். புலம்பெயர்ந்தோர் என்ற சொல்லைவிட 'புகலிட இலக்கியம்' (Exile Literature) என்ற தொடர் பொருத்தமானது என்று சிலர் விவாதிக்கின்றனர். ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெருக்கடியால் வேறொரு நாட்டிற்குச் சென்று புகலிடமாக தஞ்சம் அடையக்கூடியவர்களால் எழுதப்படக்கூடிய இலக்கியம் என்கின்றனர். உலகளாவிய நிலையில் யூதர்கள் இஸ்ரேலில் இருந்து பாபிலோனியாவுக்குப் புலம்பெயர்ந்ததுதான் உலக வரலாற்றில் முதல் புலம்பெயர்வு என்று ஐரோப்பிய மரபில் சொல்லப்படுகிறது. ஆனால் நம்முடைய இந்தியமரபில் - தமிழ் மரபில் புலம்பெயர்வு என்பது சங்ககாலத்திலேயே அயலக வாணிகம் சார்ந்து இங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு, குறிப்பாக கிரேக்க ரோமானிய நாடுகளுக்கு நிகழ்ந்துள்ளது. சோழர் காலகட்டத்தில் அரசியல் ரீதியாக, அரசியல் ஆதிக்கம் காரணமாகக் கீழ்த்திசை நாடுகள் முழுவதும் தமிழர்கள் மானமிக்க நிலையிலேயே புலம்பெயர்ந்துள்ளதைப் பார்க்கிறோம். காலனிய ஆதிக்க காலகட்டத்தில் உலக வரலாற்றில் அகராதியில் தமிழன் கூலியாக அடையாளப்படுத்தப்பட்டு கீழ்த்திசைநாடுகள் தென்ஆப்பிரிக்கா உள்பட பலதேசங்களுக்குத் தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டனர். தமிழர்களுடைய உழைப்பு சுரண்டப்பட்டு மிகப்பெரிய வானளாவிய கட்டடங்களும், மலையகத் தேயிலைத் தோட்டங்களும் கா∴பி எஸ்டேட்களும் இரப்பர் தோட்டங்களும் உலகெங்கும் உருவாக்கப்பட்டன. எனவே காலனிய காலத்துப் புலப்பெயர்வு என்பதும் தமிழர்களுடைய புலப்பெயர்வுகளுள் மிக முக்கியமானது. இந்தக் காலனியப் புலப்பெயர்வு குறித்து பாரதி 'பிஜித்தீவில் ஹிந்து ஸ்திரிகள்' என்ற கவிதையினை எழுதியுள்ளார். புதுமைப்பித்தன் 'துன்பக்கேணி' சிறுகதையில் இலங்கைக்குச் சென்று கண்டித் தேயிலைத்தோட்டத்தில் தம் உடலையும் உயிரையும் பறிகொடுத்த தென்தமிழக மக்களின் அவலநிலையினைப் பதிவு செய்துள்ளார். அகிலன் தனது 'பால்மரக் காட்டினிலே' எனும் நாவலில் மலேசிய இரப்பர் காட்டில் தமிழக மக்களின் இரத்தம் எவ்வாறு உறிஞ்சப்பட்டது என்பதைப் பதிவு செய்துள்ளார். இவையெல்லாம் இந்திய விடுதலைக்கு முந்திய மற்றும் 1970கள் வரையிலான

தமிழ் இலக்கியத்தில் உள்ள புலம்பெயர்ந்தோர் வாழ்வியல் பதிவுகள். ஆனால் எழுபதுகளில் ஈழத்தமிழர்கள் உலகெங்கும் புலம்பெயர்ந்தனர்.

இலங்கையில் ஏற்பட்ட ஒரு கடுமையான அரசியல் நெருக்கடி காரணமாக இனவெறிவாதம் தலைதூக்கியதால் ஈழத் தமிழர்கள் உலகில் உள்ள பல பாகங்களில் புலம்பெயர்ந்து சென்றார்கள். ஏறத்தாழ ஐரோப்பாவின் பெரும்பகுதிகளுக்கு இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். குறிப்பாக ஆஸ்திரேலியா, நார்வே, ப்ரான்ஸ், கனடா, ஜெர்மனி, இலண்டன், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுடைய படைப்புகள்தான் இன்றைக்கு உலகளாவிய நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளாகப் பெரிதும் அடையாளப்படுத்தப்படுகின்றன.

இன்றைக்குப் புலம்பெயர்ந்து எழுதக்கூடிய ஈழத்து எழுத்தாளர்கள் எனப் பட்டியல் போட்டால், இங்கிலாந்திலிருந்து இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் என்ற எழுத்தாளர் மிக முக்கியமான கதைகளை எழுதி வருகிறார். விமல்குழந்தைவேல் சிறந்த சிறுகதைகளை, நாவல்களை எழுதி வருகிறார். பிரான்ஸ் நாட்டைப் பொறுத்தவரையில் ஷோபாசக்தி, கலாமோகன், சக்கரவர்த்தி இவர்களெல்லாம் ஒரு புதியபாணியில் கதைகள் எழுதுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் மாத்தளை சோமு மிக முக்கியமான எழுத்தாளர். அதுபோக இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள வ.ஐ.ச.ஜெயபாலன் நார்வேயில் இருந்தபோது சில கதைகளை எழுதியிருக்கிறார். நார்வேயில் இருந்து தமயந்தி என்பவரும் சில கதைகள் எழுதியுள்ளார். வானம்பாடி டென்மார்க்கில் இருந்து எழுதி வருகிறார். கனடாவிலிருந்து எழுதிவரும் சிறுகதையாசிரியர்களுள் அ.முத்துலிங்கம் மிக முக்கியமானவர். புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் என்று நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்கின்றபோது, இவர்களெல்லாம் தவிர்க்கமுடியாத படைப்பாளிகளாக இருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்பது வலியின் இலக்கியமாக இருக்கிறது. எவ்வாறு விளிம்புநிலை மக்களான தலித் மக்களின் எழுத்துகளும் பெண் எழுத்தும் வலியின் மொழியில் அமைந்து இருக்கிறதோ, அதுபோலப் புலம்பெயர்ந்தோர் இலக்கியமும் வலியின் மொழியில் எழுதப்பட்டதாக அமைந்துள்ளது. இந்த எழுத்தாளர்கள் கடுமையான நெருக்கடிகளுக்கு ஆட்பட்டு வெவ்வேறு நாடுகளுக்குச் செல்கிறார்கள். எனவே, வரலாற்றுத் தொடர்புடைய பூர்விகமான சொந்த நிலத்தில் இருந்து துண்டிக்கப்பட்டு வேறொரு இடத்திற்குச்

சென்று தங்களுடைய புலம்பெயர்வு வாழ்க்கை அனுபவங்களை இந்தக் கதைகளில் பதிவு செய்கின்றனர்.

புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் பெரும்பாலும் யதார்த்தம் என்று சொல்லக்கூடிய நடப்பியல் போக்கில் கருத்து மெய்ம்மையியல் (Realism) என்று எழுதப்பட்டுள்ளன. ஆனால் பாரிஸில் இருந்து எழுதக்கூடிய எழுத்தாளர்கள் பின்நவீனத்துவப் பாணியில் எழுதுகின்றனர். குறிப்பாக கலாமோகன், சக்கரவர்த்தி போன்றோர் பின்னைநவீனத்துவம் போன்ற புதியமுறைகளில் எழுதக்கூடிய படைப்பாளிகளாக இருக்கின்றனர்.

இனி புலம்பெயர்ந்தோர் சிறுகதைகளின் பொதுவான தன்மைகளைப் புரிந்துகொள்ளுவதற்காக சில கதைகளை மட்டும் எடுத்துக்காட்டுக்களாகக் காணலாம். முதலில் மாத்தளை சோமுவின் ‘முகம்’ என்ற கதையைப் பார்ப்போம். ஒரே முகம் இரண்டு நாடுகளில் இரண்டு விதமான மதிப்பீட்டைப் பெறுகிறது. இக்கதையின் நாயகர் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு நெருக்கடி காரணமாக ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து செல்கிறார். யாழ்ப்பாணத்தில் அவர் முகத்துக்கு மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. இவர் ஒரு சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர் என்றாலும், அழகான சுருட்டை முடி, வட்டமான முகம். அவர் முகத்தின் அழகைப் பார்த்து முடியைப் பார்த்து பல இலட்ச ரூபாய்கள் வரதட்சணையாகக் கொடுக்கிறார்கள். பெண்ணும் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட அழகான முகம் ஆஸ்திரேலியாவுக்குப் போகும்போது அங்கு யாருக்கும் பிடிக்கவில்லை. ஏனென்றால் அது கறுப்பு முகமாக இருக்கிறது. ஆக, தன்னுடைய ஊரில் அழகாகச் சொல்லப்பட்ட அந்த முகம் ஐரோப்பிய நாட்டில் நிராகரிப்பதைக் கண்டு அக்கதையின் நாயகன் மனம் நொந்து போகிறான். மாத்தளை சோமு இன்னொரு கதையிலும் இந்நிறவெறியின் கொடூரத்தைப் பற்றிச் சொல்லியுள்ளார். ஒரு தமிழ்ப்பெண் வேலைக்குச் செல்வதற்காக அதிகாலையில் ஐந்தரை மணிக்குக் குளித்துத் தயாராகி தெருவில் வாகனத்திற்காகக் காத்திருக்கிறாள். அப்போது அதே வழியில் இன்னொரு வண்டியில் வந்த வெள்ளைக்காரப் பெண் அவளுடைய முகத்தில் காறி உமிழ்கிறாள். ஏனென்றால் அது கறுப்பு முகம். மாத்தளை சோமுவின் ‘சொந்த சகோதரர்கள்’ என்ற கதை ஒரு ஈழத்தமிழன் வேறொரு நாட்டிற்குப் புலம்பெயர்ந்து போனபோது அவனைக் குடிஅமர்த்த ஏற்பாடு செய்கின்ற அவனது நாட்டைச் சேர்ந்த தமிழன், அவனிடமே பணத்தை ஏமாற்றுவதைப் படம் பிடித்துள்ளது.

அடுத்து குறிப்பிடப்பட வேண்டியது இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'றோஸா லஷ்சம்பெர்க் வீதி' எனும் கதை. இது ஜெர்மன் நாட்டில் பெர்லின் நகரத்தில் றோஸா லஷ்சம்பெர்க் தெருவில் நடக்கக் கூடிய கதை. ரோஷா லஷ்சம்பர்க் மிக முக்கியமான ஒரு புரட்சிப்பெண்மணி. அவர் போலந்தில் பிறந்து பல நாடுகளுக்குச் சென்று, ஜெர்மனியில் வந்து மிகப் பெரிய புரட்சியை நடத்திய மார்க்சியப் பெண்ணியவாதி. அவரது நினைவாக இருக்கக்கூடிய வீதியில் ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு நடைபெறும் துயரம் தான் இந்தக் கதை. இலங்கையில் சொந்த நாட்டில் மிகச் சுகமாக வாழ்ந்த பெண், கணவனுக்காகத் திருமணம் முடித்த இடத்திலேயே ஜெர்மன் வந்தபோது, நள்ளிரவில் ஒரு மணிக்கு எழுந்து பாலூட்டும் கைக்குழந்தையை வீட்டிலேயே போட்டுவிட்டு, பேப்பர் போடுவதற்காக சைக்கிளில் ஒன்றரை மணிக்கு றோஸா லஷ்சம்பெர்க் தெருவில் 'கொள்ளிவாய் பேய்' போல் செல்கிறாள். பல நாட்டினர்கள் திரியும் அந்தத் தெரு மிகவும் அச்சம் தருவதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆணாதிக்க சமூகத்தில் பாலியல் வன்முறை சார்ந்த அச்சம் ஒருபக்கம். சைக்கிளை வழிமறிக்கும் காமவெறியர்களிடமிருந்து தப்பினாலும் நிறவெறி சார்ந்த அச்சம் மறுபக்கம் இருக்கிறது. ஏனென்றால் முதல் நாள் ஒரு துருக்கிப்பெண் அங்கு எரிக்கப்பட்டுள்ளார். கறுப்பர்கள் வெளியில் வர முடியாது. இப்பிரச்சினையைப் பற்றி தம்பா ஒரு அழகான கவிதை எழுதியுள்ளார். அக்கவிதை வருமாறு:

"போதை ஏறிய சனிநாள் ஒன்று
மாலையோரம் ஐரோப்பிய வீதியில்
சொர்க்கம் காணும் வெண்மனிதர்கள்.
. . . . . . . . . . . . . .
கற்றுக்கொள் கறுப்பு நாயே!
சாகப் பிறந்த பன்றியே
தொழுவத்தைவிட்டு ஏன் வந்தாய் வெளியே
கறுப்பு அழிந்தால் மட்டும்
புனிதம் அடையும்.
நெற்றி பிளந்து
பிடரிதெறித்து
கொட்டிப் பரவியது இரத்தம்!"

நிருபமாவின் பின்வரும் கவிதையும் இதே பிரச்சினையைப் பேசுகிறது.

“அம்மா

நாங்கள் ஏன் அகதிகளானோம்?

என் தாய் நாடு எங்கே?

என் தாய் மொழி எது?

நாங்கள் ஏன் கறுப்பர்களாயிருக்கிறோம்?

அவர்களால் ஏன்

ஒதுக்கப்படுகின்றோம்

துருக்கித் தோழி ஏன் எரிக்கப்பட்டாள்?”

நிருபமா கவிதையில் மகள் அம்மாவைப் பார்த்து கேட்கக்கூடிய கேள்வி ‘றோஸா லஷ்சம்பெர்க் வீதி’ கதையில் இருப்பதைப் பார்க்கிறோம். சொந்த நாட்டிலிருந்து உயிருக்குத் தப்பிய இவர்களின் உயிர்ப் போராட்டம் புலம்பெயர்ந்த நாட்டிலும் தொடர்கிறது. இக்கதையின் தலைவி சுமதி ‘சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்தது மாதிரி’ தன் நிலையை உணர்கிறாள்.

வ.ஐ.ச. ஜெயபாலன் ‘செக்கு மாடு’ என்ற கதையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐரோப்பியநாடுகளில் பேப்பர் போடக்கூடியவர்களாக கூலித் தொழிலாளிகளாக அலைந்து திரிகிறார்கள் என்பதைப் பதிவு செய்துள்ளார். அதேபோல வானம்பாடி எனும் எழுத்தாளர் ஜெய பாலன் வாழ்ந்த நார்வே நாட்டு ‘ஓஸ்லோ’ நகரத்தில் இருந்து எழுதிய ‘வேப்பம்பூ’ என்ற கதையும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கதையில் தாயின் தாலியை விற்று தங்கைகளின் திருமணத்திற்காக நார்வே வந்த ஒருவன் சொந்த நாட்டைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் போது, அவளுடைய தங்கை அங்கிருந்து வேப்பம்பூ கலந்த வெங்காய வடகத்தை அனுப்பி வைப்பதாக கதையில் சொல்லப்படுகிறது. இதேபோல வான் நிலாவின் ‘அன்னைபூமி’ என்ற கதையில் புலம்பெயர்ந்த குழந்தைகள் யாழ்ப்பாணம் போய் வீட்டுக் கிணற்றில் கல்போட்டு விளையாடுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தேசங்களில் முறையான நுழைவுரிமை, கடவுச்சீட்டின்றி, ஈழத்தமிழர்கள் படும் இன்னல்களும் பல சிறுகதைகளில் பதிவாகியுள்ளன. மறைந்து வாழ்தல், தப்பிச் செல்லுதல் ஆகிய நிலைகளில் அவர்கள் படும் துயரங்கள் வேதனைகள் அளவிடற் கரியன. ஜெர்மனியிலிருந்து கனடாவிற்கு அமெரிக்கக் கறுப்பன் ஒருவனின் கடவுச்சீட்டில் தப்ப முயன்று நடுவானில் விமானம் வெடித்துச் சிதறி இறக்கும் தமிழன் ஒருவனின் அவலநிலையை பார்த்திபன் ‘தெரியவராதது’ என்ற கதையில் குறிப்பிட்டுள்ளார்.

## ‘சயாம் மரண ரயில்’ நாவல் - ஓர் அறிமுகம்

1290 முதல் தமிழ் நாவல் வரலாறு என்பது தாய்த்தமிழகத்தின் எல்லையைத் தாண்டி உலகம் முழுவதும் பரவியுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் எழுதிய நாவல்களையும், உள்ளடக்கியதாக விளங்குகிறது. புலம் பெயர்ந்தோர் நாவல்கள் தமிழ் நாவல் இலக்கியத்தில் தனித்த ஒரு வகையான இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. ஆஸ்திரேலியா (மாத்தளை சோமு), இங்கிலாந்து (விமல் குழந்தைவேல்), கனடா (அ. முத்துலிங்கம்), பிரான்ஸ் (ஷோபா சக்தி) என்று உலகின் பல பகுதிகளில் புகலிட வாழ்க்கையை மேற்கொண்டுள்ள ஈழத்தமிழர்களின் நாவல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. மட்டுமல்லாது, காலனியாட்சிக் காலத்தில் தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து சிங்கப்பூர், மலேயா சென்ற தமிழர்கள் தற்போது அங்குள்ள வாழ்க்கையை மையமாக வைத்து காத்திரமான பல நாவல்களை அண்மையில் எழுதிவருகின்றனர். சிங்கப்பூர் நாவல் இலக்கியம், மலேசிய நாவல் இலக்கியமௌ தனியாகச் சொல்லத்தக்க அளவில் மலேசிய, சிங்கப்பூர் இலக்கியங்கள் வளர்ச்சியைப் பெற்றுள்ளன. தொடக்கக்கால மலேசிய இலக்கியத்தில், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஆசிரியர்களாக, அரசு அதிகாரிகளாகப் பணியாற்றிய ஈழத்தமிழர்கள் குறிப்பிடத்தக்க படைப்புகளை உருவாக்கியுள்ளனர். வெங்கட்ரத்தினம் எழுதிய ‘கருணாசாகரன்’ அல்லது காதலின் மாட்சி (1917) முதல் மலேசியத் தமிழ் நாவலாகும். இதனைத் தொடர்ந்து பலோலி க. சுப்பிரமணியன் எழுதிய பாலசுந்தரம் அல்லது சன்மார்க்க ஜெயம் (1918) வெளிவந்தது. தொடக்கக்கால மலேசியத் தமிழ் நாவல்கள் ஈழம், தமிழகத்தைப் பின்னணியாகக் கொண்டு அமைந்தவை. அவை பெரிதும் துப்பறியும் நாவல்களாகவும், சாகசகற்பனைத் தன்மை கொண்டவையாகவும், அமைந்திருந்தன.

மலேசிய விடுதலைக்குப் பின்னர் 1950களில் புதிய இலக்கிய முயற்சிகள் தோன்றின. தமிழ்நேசன், தமிழ்முரசு, வானம்பாடி, சங்கமணி, இருமுகம், மலைமகள் போன்ற பல இலக்கிய இதழ்கள் நாவல் இலக்கியத்தை வளர்க்கும் விதமாகப் பல போட்டிகளை, கூட்டங்களை, மாநாடுகளை நடத்தின. இதன்விளைவாக மலேசிய இரப்பர் தோட்டப்புற வாழ்க்கையினையும் நகர்ப்புற வாழ்க்கையினையும் மையமாக வைத்து, பல நாவல்களை எழுதத்தொடங்கினர். இவ்வகையில் க. பெருமாள் தோட்டப்புறத் தொழிலாளர் வாழ்க்கையை மையமாக வைத்து துயரப்பாதை (1958) என்ற நாவலை வெளியிட்டார்.

அறுபதுகளில் மா.இராமையா (மூங்கில் பாலம் 1963), இளவழகு (நெஞ்சமே நீ வாழ்க 1969) முதன்மை எழுத்தாளர்களாக உருப்பெற்றனர். எழுபதுகளில் தோட்டப்புற வாழ்க்கையை மையமாக வைத்து ப. சந்திரகாந்த் (அழுதால் உன்னைப் பெறலாமே), அ. கந்தன் (ஒரு தொண்டனின் பார்வை தொடர்கிறது 1979) முதலான பல புதிய எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கி எண்பதுகளில் தனிமனித உறவு, நட்புக்காதல், பாசம் முதலிய உணர்ச்சிப் போராட்டங்கள் மலேசிய நாவல்களில் முக்கியத்துவம் பெற்றன. இக்காலக்கட்டத்தில் வார, மாத இதழ்கள் பெருகின. மருத்துவத்துறையைச் சார்ந்தவர்கள், பெண்கள், பேராசிரியர்கள், நாவல் துறையில் நுழைந்தனர். ரெ. கார்த்திகேசு (வானத்து வேலிகள் 1981), ந. மகேஸ்வரி (புதிய வாரிசு 1980), மருத்துவர் சி. சொக்கலிங்கம் (கோயில் முழுவதும் கண்டேன் 1986) ஆகியோர் இக்காலப்பகுதியைச் சார்ந்த குறிப்பிடத்தக்க நாவலாசிரியர்கள் ஆவர்.

எண்பதுகளில் மலேசிய வரலாற்றை (மலாக்கா மையமாக வைத்து மன்னர்கள்) ப. சந்திரகாந்தம் (ஆடும் மஞ்சள் ஊஞ்சல் 1985), சு. கமலா (தீ மலர் 1986) ஆகியோர் நாவல்களை எழுதினர்.

1990களில் கோலாநங்காட் ரெங்கசாமி ஜப்பானியர் ஆட்சிக்கால மலேசியாவை மையமாக வைத்து ‘புதியதோர் உலகம்’ என்ற நாவலை எழுதினர். இதே காலகட்டத்தில் ஆர். சண்முகம், “சயாம் மரண ரயில்” (1993) நாவலை எழுதினார். இந்நாவலின் இந்தியப் பதிப்பு, கோவை தமிழோசை பதிப்பக வெளியீடாக 2007இல் வெளிவந்தது. ஆர். சண்முகம் மலேசிய இலக்கியத்தின் மூத்த எழுத்தாளர். ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர் 300க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் 7 நாவல்களையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பல இதழ்களில் பணியாற்றிய இவர், “கதை மாமணி” உட்பட பல விருதுகளையும், பரிசுகளையும் வென்றுள்ளார். “சயாம்மரண ரயில்” என்ற இந்நாவல் 1943-1945 காலகட்டத்தில் ஜப்பானியர்கள் மலேசியாவை ஆண்டபோது தமிழர்கள் அடைந்த இன்னல்களைப் பதிவு செய்துள்ளது. இங்கிலாந்தின் காலனியாக இருந்த மலேசியா இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானியர் வசமானது. தாய்லாந்து, பர்மா, மலேசியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றிய ஜப்பானியர் இந்தியாவையும் கைப்பற்றத் திட்டமிட்டனர். பர்மாவிலிருந்து கடல்வழியாக அந்தமான்நிக்கோபர் வழியாகத்தான் இந்தியாவை அடையமுடியும். இது கடினமானது. எனவே தரைவழியாக இந்தியாவிற்குள் இராணுவத் தளவாடங்களையும் படைகளையும் கொண்டு செல்வதற்கு ஒரு திட்டம் தீட்டினர். அதுதான சயாம் மரண ரயில் பாதைத் திட்டம். சயாம் எனப்படும் தாய்லாந்து நாட்டின் பாங்காக், காஞ்சனபுரி

நகரங்கள் வழியாக பர்மாவின் தென்மேற்கு எல்லையில் உள்ள நகர் வழியாக ‘தன்பியூஜயாட்’ வரை 415 கி.மீ. தொலைவிற்கு இந்த ரயில் பாதை திட்டமிடப்பட்டது. இந்த ரயில்பாதை முடிந்தால் தென்மேற்கு பர்மா வழியாக இம்பாலுக்குள் நுழைந்து இந்தியாவைக் கைப்பற்றிவிடலாமென்பது ஜப்பானியர் திட்டம். 1942 சூன்மாதம் தொடங்கப்பட்ட இத்திட்டம் இரண்டாம் உலகப்போருக்கிடையில்1943 அக்டோபர் மாதம் நிறைவுற்றது. ஆறுகளின் மீதும் மலைக் கணவாய்களுக்கிடையிலும் (நர்கத்தீ கணவாய்) ரயில் பாலங்களும் பாதைகளும் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தில் 60,000 ஐரோப்பிய அமெரிக்கப் போர்க் கைதிகளும், 1,80,000 ஆசியத் தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். இத்திட்டம் முடிவுற்றபோது ஏறத்தாழ ஒரு இலட்சம்பேர் இறந்து போயினர். அவர்களுள் 90,000 பேர் ஆசிய மக்கள். ஆசியத் தொழிலாளர்களுள் மலேசியர்கள், சீனர்கள், தமிழர்கள் இடம்பெற்றிருந்தனர்.

லட்சம் பேர்களின் உயிரை வாங்கிய சயாம் மரண ரயில் பாதை குறித்து வரலாற்று நூல்களும் நாவல்களும் வெளிவந்துள்ளன. ஆனால் அவை பெரிதும் ஐரோப்பிய நோக்குநிலையிலேயே எழுதப்பட்டவை. “பவுல்பியரே” “Boulle Pierre” எழுதிய “குவாய்” ஆற்றுப்பாலம் (Bridge on the river Kwai, 1954) நாவல் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. இந்நாவல் சில ஆண்டுகள் கழித்து ஆங்கிலத் திரைப்படமாகவும் வெளிவந்தது. இப்படைப்புக்கள் குவாய் ஆற்றின் மீது கட்டப்பட்ட 277 ஆம் எண் பாலம் பற்றிய புனைவுகள் ‘ஜான்கோஸ்ட்’ என்பார் அண்மையில் மரண ரயில் பாதை (Rail Road of the death 2014) எனும் நூலினை வெளியிட்டுள்ளார். இம்மரண ரயில்பாதை உருவாக்கத்தில் இறந்த தமிழர்களைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் பெரிதும் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் காமன்வெல்த் நாடுகளின் “போர் விசாரணைக்குழு” அறிக்கையில் சில தனிநபர் வாக்குமூலங்கள் பதிவாடியுள்ளதை இதுபோன்று இப்பாதைப் பணியில் ஈடுபட்ட பலரின் வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு ச. அருண் என்ற மலேசியத் தமிழர் “சயாம்பர்மாமரண ரயில்பாதை” (மறைக்கப்பட்ட வரலாற்றின் உயிர்ப்பு) என்ற நூலை வெளியிட்டுள்ளார். ஆர்.சண்முகத்தின் சயாம் மரண ரயில் நாவல் இச்சோக வரலாற்றை இலக்கியப் பதிவாக மாற்றியுள்ளது.

மாயகிருஷ்ணன் என்ற இளைஞனின் நோக்கு நிலையில் இந்நாவல் விவரிக்கப்பட்டுள்ளது. ஜப்பானியர் ஆட்சிக்காலத்தில் மலேசியாவில் உணவுப் பஞ்சமும், வறுமையும் தலைவிரித்தாடியது. பிழைப்பிற்காக பலர் மரணப்பாதை என்று அறிந்தும் சயாம்பர்மாரயில் திட்டத்தில் சேர்ந்தனர். பலர் ஜப்பானிய

அரசாங்கத்தால் வலிந்து கைது செய்யப்பட்டு ரயில்களில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட மாயகிருஷ்ணனின் தந்த முனுசாமி திரும்பி வராததால், மாயாவின் தாய் பார்வதியம்மாள் வேறொருவனிடம் பிள்ளைகளுக்காக சோரம் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனைத் தாங்கமுடியாது. மாயகிருஷ்ணன் ரயிலில் வலிந்து ஏறுகின்றான். ரயிலில் அவன் வேலு என்கிற கங்காணியைச் சந்திக்கின்றான். அவர்களோடு கந்தசாமி, பரமசிவம், நாகப்பன் என பலதரப்பட்ட மனிதர்கள் இணைந்து செல்கிறார்கள். சரக்குகளை ஏற்றும் கூண்டு ரயிலில் ஏறி இரண்டு, மூன்று இரவுகளுக்குப்பிறகு மலேசியாவின் வடஎல்லை நகரமான ‘பாடாங்புசார்’ போய்ச் சேர்கிறார்கள். பாடாங்புசாரிலிருந்து தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கை நோக்கி அவர்கள் நடந்து செல்கின்றார்கள். இரண்டு நகரங்களுக்கும் இடையில் ஏறத்தாழ 500 மைல்கள். பாங்காக்கிற்கு முன்னால் உள்ள ‘நம்செங்’ என்ற இடத்திலுள்ள ரயில்பாதை முகாமிற்கு அவர்கள் போய்ச் சேர்கிறார்கள். போகிற வழியில் பலர் பாம்பு கடித்துச் சாகிறார்கள், சிலர் வாந்தி பேதியில் சாகிறார்கள், இறப்பவர்கள் விலங்குகளைப்போல் தரையில் புதைக்கப்படுகிறார்கள். முகாமில் இவர்கள் தங்களுக்கான இருப்பிடத்தை அமைப்பது, உணவைச் சமைக்கத் தொடங்குவது, பாதை அமைக்கும் பணியில் ஈடுபடுவது, ஓய்வு நேரங்களில் அருகில் உள்ள நகரங்களுக்குச் செல்வது, படகுக் கடைகளுக்குச் செல்வது, ஆற்றில் குளிப்பது என்று வரிசையாக கதை நிகழ்வுகள் ஒரு நேர்கோட்டில் நாவலாக அடுக்கப்பட்டுள்ளன.

**நேரம் : 3 மணி** **மதிப்பெண்: 75**

## மாதிரி வினாத்தாள்

**I. பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** (15×1=15)

1. இலங்கையில் சிறுகதை வளர்ச்சிக்குக் காலூன்றியவர்

   அ) கா.சிவத்தம்பி ஆ) வைத்தியலிங்கம்

   இ) சோ.சிவபாதசுந்தரம் ஈ) கனக. செந்தில்நாதன்

2. உலகளாவியத் தமிழ் இலக்கியம் என்ற கட்டுரையை எழுதியவர்

   அ) ரெ.கார்த்திகேசு ஆ) இலங்கையர்கோன்

   இ) மாலன் ஈ) கிருஷ்ணன் மணியம்

3. ஐரோப்பிய மொழிகளுக்கு ஈடாக இன்று கணினியில் இடம்பெற்ற மொழி

   அ) ஆங்கிலம் ஆ) சீனமொழி

   இ) எபிரேயம் ஈ) தமிழ்

4. ஈழத்தில் இருந்து வெளியான முதல் நாவல் யாது?

   அ) மோகனாங்கி ஆ) இரத்தினபவானி

   இ) வீரசிங்கன் கதை ஈ) அசன்பே சரித்திரம்

5. இலங்கைத் தமிழ்க்கவிதையில் இடதுசாரிச் சிந்தனையைப் பிரதிபலித்த கவிஞர் __________

   அ) அ.ந. கந்தசாமி ஆ) யாழ்ப்பாணன்

   இ) சுரதா ஈ) மஹாகவி

6. கொடும்பாவி கட்டி இழுப்பதன் நோக்கம்

   அ) மழைவேண்டி ஆ) சுபநிகழ்ச்சி வேண்டி

   இ) துன்பம் போக்க ஈ) ஊரின் சாபம் போக்க

7. கடாரம் என்றழைக்கப்படும் கிழக்காசிய நாடு எது?

   அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா

   இ) அமெரிக்கா ஈ) மியான்மர்

8. மலேசியத் தமிழ்க்கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டவர்

   அ) சா.கந்தசாமி ஆ) சை.பீர் முகம்மது

   இ) முரசு நெடுமாறன் ஈ) மு.சையது

9. வெடித்த துப்பாக்கிகள் கதை நாயகன் யார்?

   அ) சார்ஜண்ட் யாக்கோபு ஆ) பிரைவேட் ஜீ.நாங்

   இ) பிரைவேட் பீடின் ஈ) யான்ஸ் கார்ப்ரல்

10. முறைமாப்பிள்ளை கதையில் அன்வருக்குக் கடிதம் எழுதியது யார்?

    அ) உறவினர் ஆ) முஸ்தபா சாஹிபு

இ)சிராஜ் ஈ) ரஹிம்

11. சிகிட்சை கதையின் மையம் யாது?

அ) முதலாளித்துவம் ஆ) தீண்டாமை

இ) வறுமை ஈ) வரதட்சணை

12. குழந்தை அன்புமணியைக் காப்பாற்றியது?

அ) சாரதா ஆ) ஜார்ச்

இ) லீ ஈ) எவருமில்லை

13. தமிழக வரலாற்றில் முதலில் நிகழ்ந்த புலம்பெயர்வுக்குக் காரணம்

அ) காலனியாதிக்கம் ஆ) வணிகம்

இ) பஞ்சம் ஈ) இயற்கைப்பேரிடர்

14. ரப்பர் தோட்டங்களில் தமிழர்கள் சந்தித்த இன்னல்களை வெளிப்படுத்தும் நாவல்

அ) பால்மரக்காட்டினிலே ஆ) வீராயி

இ) ரப்பர் ஈ) புயலிலே ஒரு தோணி

15. 'சயாம் மரண ரயில்' நாவல் எதைப் பற்றியது?

அ) புலம்பெயர் மக்களின் வாழ்வு ஆ) ரயில் விபத்து

இ) மலேசிய தமிழர்களின் துயரம் ஈ) காலனியாதிக்கம்

**II. பின்வரும் வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக. (5 x 4=20)**

16. அ) தமிழர்கள் புலம்பெயர்ந்ததற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியம் வளம்பெற ரெ.கார்த்திகேசு கூறுகின்ற வழிமுறைகள் யாவை?

17. அ) ஈழத்தில் இருந்து வெளியான துவக்க கால நாவல் முயற்சிகளை விளக்குக.

(அல்லது)

ஆ) சன்மார்க்காவின் 'விழிப்பு' கவிதை உணர்த்துவது யாது?

18. அ) மலேசியக் கவிதைகளின் மையம் பற்றிக் கூறுக.

(அல்லது)

ஆ) சார்ஜண்ட் யாக்கோபைக் கொல்ல வீரர்கள் கொண்டிருந்த காரணம் யாது?

19. அ) கைம்மாறு கதையின் மூலம் மா.அன்பழகன் உணர்த்தும் கருத்துகள யாவை?

(அல்லது)

ஆ) 'மூடிய கதவுக்குள்ளே' கதையின் வழியாக சாரதாவின் பாத்திரப்படைப்பினை விளக்குக.

20. அ) புலம்பெயர் கவிதைகளின் உரிப்பொருள் பற்றிக் கூறுக.

(அல்லது)

ஆ) புலம்பெயர்ந்தோர் சிறுகதை முயற்சிகளைப் பட்டியலிடுக.

**III. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை தருக. (5 x 8=40)**

21. அ) கயல் பருகிய கடல் என்ற மாலனின் கட்டுரையைத் திறனாய்க.

(அல்லது)

ஆ) உலகளாவிய நிலையில் தமிழ் இலக்கியம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

22. அ) இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துக் கவிதை வரலாற்றினை விளக்கியுரைக்க.

(அல்லது)

ஆ) தோணி கதையில் வெளிப்படும் சமூக முரண்பாட்டினை விளக்கிக் கட்டுரை வரைக.

23. அ) மலேசியத் தமிழர்களின் படைப்பாக்கச் செயல்பாடு பற்றி விவரிக்க.

(அல்லது)

ஆ) முத்துசாமி பாத்திரப்படைப்பினை விரித்துரைக்க.

24. அ) 'சிங்கப்பூர் சிறுகதையில் யதார்த்தவாதம்' என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) சிகிச்சை சிறுகதையினைத் திறனாய்க.

25. அ) புலம்பெயர்ந்தோர் கவிதைகளில் காலமும் வெளியும் பற்றி ஆராய்ந்துரைக்க.

(அல்லது)

ஆ) புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களில் வெளிப்படும் அவலச்சுவையினை விளக்கியுரைக்க.